Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 106 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 அக்டோபர் 2025

38ஆம் ஆண்டு

வீரவணக்கம்

இந்திய – சிறீலங்கா அரசுகளின் கூட்டுச்சதியினை முறியடிக்க புறப்பட்ட தளபதிகளை சிறீலங்கா சிங்கள கடற்படை கைது செய்து யாழ். பலாலி படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டபோது 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும் எமது 38ஆம் ஆண்டு வீரவணக்கம்

சங்கத்தமிழ்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203

**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது வீரர்களைச் சாவின் பொறிக்குள் தள்ளியது இந்தியா. எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றமாகும். புலேந்திரன், குமரப்பா உட்பட 12 வேங்கைகளின் வீரச்சாவு ஒருபெரும் வல்லரசை எதிர்த்து நிற்கும் நெஞ்சுரத்தை எமக்கு ஏற்படுத்தியது.

சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.

லெப். கேணல் விக்டர் விசேட கவச எதிர்ப்புப் பிரிவின் தளபதியும், தமிழீழ தேசியத் துணைப்படையின் வடபோர்முனைக் கட்டளைத் தளபதியுமான

லெப். கேணல் அக்பர்

வட போர்முனையின் கட்டளைப் பணியகம். தொலைத்தொடர்புக் கருவி அக்பரைத் தேடுகிறது. தொடர்பு இல்லை. காலையில் தான் முன்னணி நிலைகளைப் பார்த்துவிட்டு, அணித் தலைவர்களைத் தயார்படுத்துவதற்காக பின் தளத்திற்குப் போய் வருவதாகத் தளபதி தீபனிடம் கூறிச்சென்றவன். இன்னமும் வரவில்லை. மாலை 3.00 மணி அக்பரின் தொடர்பில்லை. மாலை 5.00 மணி தொடர்பில்லை. இரவு 8.00 மணி தொடர்பில்லை. தளபதியின் மனதில் ஐயம் தோன்றுகின்றது. நாளை விடிந்தால் எதிரி முன்னேறக்கூடிய நிலையில் அக்பர் ஒரு போதும் இத்தனை மணிநேரம் தொடர்பில்லாமல் நிற்கமாட்டான். நேரம் செல்லச் செல்ல தளபதியிடமும் ஏனைய போராளிகளிடமும் ஏக்கம் தொற்றிக்கொள்கிறது. அவனுக்கு ஏதும் நடந்துவிட்டதா? அவனை எப்படித்தான் நாம் இழக்கமுடியும்? எல்லோரும் அவனைத் தேடினார்கள். அவன் எத்தனை பெறுமதிக்குரிய வீரன். களங்களில் அவன் சாதித்தவைகள்தான் எத்தனை. நாளைக்கும் அவன் வேண்டு மல்லவா? அவன் எங்கே போய்விட்டான்?

அக்பர் பிறந்தது தவழ்ந்தது வளர்ந்தது எல்லாமே மட்டக்களப்பின் கதிரவெளியில்தான். போராட்டத்திற்கும் அவன் குடும்பத்திற்கும் நெருங்கிய ஒன்றிப்பிருந்தது. அண்ணன் அப்போது போராளியாய் இருந்தான். இந்திய படைகள் ஊருக்குள் நுழைந்து வீடுவீடாய் புகுந்து இளைஞர்களை வீதிக்கு இழுத்துச் துயரப்படுத்தின. இந்த அவலங்களுக்கு அக்பரும் விதிவிலக்காகவில்லை. அவனை வீட்டிற்குள் வந்து இழுத்து வெளியே தள்ளினார்கள். வண்டியில் ஏற்றி முகாமிற்குக் கொண்டு போய்க் கட்டிவைத்துச் சித்திரவதை செய்தார்கள். அண்ணன் போராளியாய் இருந்ததைச் சொல்லி அவனை கொடுமைப்படுத்தினார்கள். இந்தத் தாக்கங்கள்தான் அவனையும் போராளியாக்கியது. 1990ஆம் ஆண்டில் வன்னிக்கு வந்த அவன் அடிப்படைப் பயிற்சிகளை மணலாற்றில் பெற்றதோடு அவனின் நீண்ட போராட்டவாழ்வு முளைவிடுகின்றது.

பல இரகசியப் பணிகளிலும் கடுமையான பயிற்சிகளிலும் ஈடுபட்ட அவன், சிறிய சிறிய சண்டைகளிலும் பங்குகொண்டு தன்னை ஒரு சிறந்த போர்வீரனாக வளர்த்துக்கொண்டான். அக்பரின் இந்த வளர்ச்சித்திறன் சூரியக்கதிர் எதிர் நடவடிக்கையின்போது முழுமையாய்த் தெரிந்தது. முன்னேறிவரும் எதிரியைத் தடுத்து நிறுத்தித் தாக்குதல் செய்வதற்கான வேவு நடவடிக்கைகளில் துணிச்சலாக ஈடுபட்டான்.

அவன் பார்த்த வேவுகளின்படி தாக்குதல்களும் நடந்தது. ஒரு சாதாரண போராளியாய் சண்டைக் களங்களைச் சந்தித்த அவன், வேவு அணிகளை வழிநடத்தும் அணித் தலைவனாக வளர்ந்தான். இந்த நாட்களில்தான் முல்லைத்தீவிலிருந்த சிறீலங்கா படைத்தளம் மீது ஓயாத அலைகள் - 01 என்ற பெயரில் பாரிய படைநடவடிக்கையைத் தலைவர் அவர்கள் திட்டமிட்டுத் தயார்ப்படுத்தினார். இந்தத் தாக்குதலுக்கு இம்ரான் பாண்டியன் படையணியின் முறியடிப்பு அணியின் பற்றாலியன் உதவிக் கட்டளை அதிகாரியாக அக்பர் அமர்த்தப்பட்டான். எதிரி நினைத்திராத பொழுதில் முல்லைத்தீவுத் தளத்தில் அடிவிழுந்த போது சிங்களம் திகைத்தது. யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்குப் பலமாய் நிற்கும் முல்லைத்தீவுத் தளத்தை இழக்க விரும்பாமல் கடைசிவரை அதைத் தக்கவைக்க கடும் முயற்சி செய்வார்கள் என்பது தலைவருக்கு நன்கு தெரியும். முல்லைத்தீவுப் படைகளைக் காப்பாற்ற சிங்களப்படை தரையிறக்கம் ஒன்றைச் செய்யும் என்பதை உய்த்தறிந்த தலைவர் அவர்கள், அணிகளைத்



தயாராய் வைத்திருந்தார். எதிர்பார்த்தபடி அளம்பிலில் சிங்களப் படை வந்து தரையிறங்கியது. ஒரு தன்மானப்போர் அங்கே நடந்தது. கட்டளை வழங்கும் தளபதியாய் இருந்த அக்பர் சண்டை இறுக்கம் அடைந்த போது தானும் களத்திற்குள் புகுந்துவிட்டான். திறமையாய் அணியை வழிநடத்தினான். அளம்பில் மண்ணில் எதிரியைக் கொன்று போட்டான். முல்லைத்தீவுச் சமர் முடிந்து ஓயாத அலைகள் - 01 நடவடிக்கை வெற்றிவாகை சூடியபோது, அக்பர் ஒரு சிறந்த சண்டைக் காரனாக வெளிப்பட்டான்.

முல்லைத்தீவில் அடிவாங்கிய சிங்களப்படை, தங்கள் அவமானச் சின்னங்களை இல்லாமல் செய்வதற்காக 'சத்ஜெய' என்ற பெயரில் கிளிநொச்சியை வல்வளைப்பு படை நடவடிக்கையை தொடங்கியது. பரந்தனில் சிங்களப் படைகளை எதிர்கொண்ட புலி வீரர்கள் கடும் சமர்புரிந்தார்கள். சிங்களப்படை டாங்கிகளுடன் எங்கள் பகுதிகளுக்குள் புகுந்து கொண்டிருந்தது. சண்டை நடந்த இடத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்த அக்பர், சண்டையின் இறுக்க நிலையைப் புரிந்து கொண்டு உடனே சண்டை நடந்த இடத்தை நோக்கி ஓடினான்.

உடனடியாக முடிவெடுத்து அங்கு நின்ற ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்தி வைத்திருந்த மூன்று வீரர்களை ஒன்றாக்கி முன்னேறிவந்த டாங்கிகள் மீது ஒரு துணிச்சலான தாக்குதலை மேற்கொண்டான். இந்தத் தாக்குதலில் இரண்டு டாங்கிகள் எரிந்து அழிந்தன. இக்கட்டான ஒரு சூழ்நிலையில் அக்பரின் விரைவானதும் நுட்பமானதுமான இந்தத் திட்டம் வெற்றிகரமாய் நிறைவேறியது. அன்றைய நாளில் எதிரியின் முன்னேற்ற முயற்சியைத் தடுத்து நிறுத்தியதில் அக்பர் முக்கிய காரணமாய் இருந்தான்.

ஏ - 9 சாலையைப் பிடித்து யாழ்ப்பாணத்திற்கு தரைவழிப் பாதையைத் திறக்கும் பாரிய நில வல்வளைப்பிற்கு அப்போதைய சிறீலங்காவின் துணைப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவின் பேரிகை முழக்கத்தோடு, தொடங்கப் போகும் 'ஜயசிக்குறு' படை நடவடிகையை முறியடிக்கும் திட்டத்தில் தலைவர் அவர்கள் அதிக நேரத்தைச் செலவிட்டார். டாங்கிகளை எதிரி அதிகம் பயன்படுத்துவான் என்பதையும் தலைவர் புரிந்து கொண்டார். இந்த டாங்கிகளைச் சிதைப்பதற்காக ஒரு படையணியை உருவாக்குதவற்கு முடிவெடுத்து அதற்கான கட்டளைத் தளபதியாக யாரைத் தெரிவு செய்யலாமெனத் தேடிய போது அதற்குப் பொருத்தமானவனாய் தலைவரின் கண்ணுக்குள் தோன்றியது அக்பரின் முகம்தான். சத்ஜெய முறியடிப்புச் சமரில் அக்பரின் திறமையினைத் தலைவர் அவர்கள் இனம் கண்டுகொண்டார். அக்பரின் தலைமையின்கீழ் இம்ரான் பாண்டியன் படையணியின் சிறப்புப் பயிற்சி பெற்ற போராளிகள் விக்டர் சிறப்புக் கவச எதிர்ப்பு அணியாக உருவாகினர். இந்தப் படையணியில் நுழைந்த அனைவருக்கும் கடும் பயிற்சி. அக்பரில் தொடங்கி சாதாரண போராளி வரைக்கும் எல்லோரும் பயிற்சியெடுத்துத் தேர்வின்போது சித்தியெய்திய பின்னரே இந்த அணிக்குள் நுழைந்தனர். அக்பர் ஒரு கட்டளை அதிகாரியாய் இருந்தபோதும் ஒவ்வொரு போராளிக்குமுரிய எல்லாக் கடமையையும் தானும் நிறைவேற்றினான். ஒவ்வொரு சின்னச் சின்ன விடயங்களிலும் கவனமெடுத்தான்.

போராளிகளுக்கும் தனக்குமான இடைவெளியைக் குறைத்து ஒரு நெருக்கமான, இறுக்கமான உறவை ஏற்படுத்தினான். எல்லாக் கடினபயிற்சிகளிலும் தானும் ஈடுபட்டபடி மற்றப் போரா

ளிகளையும் ஊக்கப்படுத்துவான். பயிற்சித் தேர்வின்போது எந்தப் போராளியும் சித்தியெய்தாமல் விடக்கூடாது என்பது அவனது நோக்கமாய் இருந்தது. அப்படித் தேர்வில் சித்தியெய்தத் தவறியவர்களை மீண்டும் மீண்டும் பயிற்சியில் ஈடுபடுத்திச் சித்தியெய்த வைத்தான்.

பயிற்சியுடன் மட்டும் நின்றுவிடாமல் போராளிகளுக்கு உணவு கொடுப்பதைக்கூட தானே நேரில் நின்று உறுதிப்படுத்திக் கொள்வான். ஒருமுறை நண்பகல்வேளையில் போராளிகளுக்குக் கொடுக்கும் பசுப்பாலைக் காய்ச்சும்போது எரித்துவிட்டார்கள். அதன்பின், தான் நிற்கும் நேரங்களில் தானே பால் காய்ச்சி போராளிகளுக்குக் கொடுப்பான். போராளிகள் தவறிழைத்தால் அல்லது கவனமின்றிச் செயற்பட்டால் அவன் எடுக்கும் நடவடிக்கை போராளிகள் எதிர்காலத்தில் எந்தவேளையிலும் அத்தகைய தவறுகளை விடாதபடி படிப்பினை மிக்கதாய் இருக்கும். ஒருநாள் போராளிகள் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தார்கள். அக்பரும் குளிப்பதற்காக கிணற்றடிக்கு வந்தான். அந்தச் சூழலை அவன் மேலோட்டமாய்ப் பார்த்தபோது அன்று காலையில் கிணற்றடி சுத்தம் செய்யப்படாமல் பயன்படுத்திய பொருட்களின் தடயங்கள் அப்படியேகிடந்தது. அக்பர் ஒன்றும் பேசவில்லை. யாரையும் குறைகூறவுமில்லை. தங்ககத்திற்குப் போய்விளக்குமாறினை எடுத்துக் கொண்டுவந்து தானே கிணற்றடியைச் தூமைப்படுத்தினான். போராளிகள் அப்பொழுதுதான் விழித்துக் கொண்டவர்களாய் விளக்குமாறினை வாங்கித் தூய்மைப்படுத்த முனைந்தார்கள். அக்பர் யாரையும் அதற்கு இசையவில்லை. அன்றைய நாளில் அந்தப் பகுதியை முழுமையாய் தானே தூய்மைப்படுத்தினான். அதன் பின்புகூட அவன் அதைப்பற்றி யாரிடமும் எதுவும் பேசவில்லை.

அக்பரின் இந்தச் செயற்பாடு போராளிகளின் விழிகளைக் கசியச் செய்தது. அதன்பின் ஒரு போதும் அந்தத் தவறைப் போராளிகள் விட்டதில்லை. அக்பரின் இந்தப் பண்பும் தவறிழைத்தவர்களைக் கூட யாரிலும் நோகாமல் தன்னைமட்டுமே வருத்தி அதற்குத் தீர்வு காணும் திறனும் போராளிகளிடத்து ஒரு தந்தைக்குரிய நிலையை அவனுக்குப் பெற்றுக்கொடுத்தது. அக்பர் விளக்குமாறு பிடிப்பதில் மட்டுமல்ல களத்திலே ஆயுதம் பிடித்துச் சுடுவதுவரை இதே முடிவைத்தான் கடைப்பிடித்தான். அக்பரின் உச்சமான வளர்ச்சிகளுக்கு இதுவே அடிநாதமாய் இருந்தது.

நீண்ட எதிர்பார்ப்புகளோடு தலைவர் இந்த அணியை உருவாக்கினார். 1997ஆம் ஆண்டு மே திங்கள் 13ம் நாள். புத்பிரான் முன் சூளுரை எடுத்துக்கொண்டு வன்னி மீது 'ஜயசிக்குறு' என்ற பெயரில் பாரிய படை நடவடிக்கையை சிங்களம் தொடங்கியது. தயாராய் இருந்த விடுதலைப் புலிகளின் படையணிகள் களத்திலே எதிரியை நேருக்குநேர் எதிர்கொண்டனர். மனோபலத்திலே எங்களுக்குக் கீழே நின்ற எதிரி ஆயுத பலத்தில் எங்களுக்கு மேலே நின்றான். சண்டைகளின் போது டாங்கிகளை முன்னணிக்கு அனுப்பி டாங்கிகளின் சுடுகுழல்களால் எங்கள் காப்பரண்களைச் சல்லடை போட்டுக்கொண்டு அந்த இரும்புக் கவசங்களின் மறைவில் பதுங்கிப் பதுங்கி எங்கள் பகுதிகளுக்குள் நுழைந்தான். இந்தச் சூழலை எதிர்பார்த்து அதற்கென்றே தயாராய் இருந்த அக்பரின் அணி, களத்தை நேரடியாய் சந்தித்தது. எதிரி ஒவ்வொரு அடி நிலத்தையும் வல்வளைப்புச் செய்ய அதிகவிலை கொடுத்தான்.

25.05.1997 மன்னகுளத்தில் ஒரு கடுமையான முறியடிப்புச் சமரை எங்களது படையணிகள் நடாத்தின. டாங்கிகள் பரவலாய் முன்நகர்ந்தன. அக்பர் கட்டளை வழங்கும் காப்பரணில் நின்றபடி ஆர்.பி.ஜி ஏந்திய தனது போராளிகளை வழிநடத்திக் கொண்டிருந்தான். போராளிகள் எதிரியுடன் நெருங்கி நின்று சண்டை பிடித்தனர். சண்டை உச்சமடைந்து கைகலப்புச் சண்டையாக மாறியது. இந்த வேளையில்தான் ஆர்.பி.ஜி கொமாண்டோ வீரன் பாபு வீரச்சாவடைந்த செய்தி அக்பரின் காதிற்கு எட்டுகின்றது. அக்பரின் இரத்த நாளங்களில் துடிப்பு அதிகரிக்கின்றது. எத்தனை அன்பாய் அவன் வளர்த்த வீரர்கள் மடிந்துகொண்டிருந்த போது அவனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நேரே சண்டை நடந்த இடத்திற்கு ஓடினான். எதிரி மீதான அவனின் சினம் அங்கு வீழ்ந்துவெடிக்கும் எறிகணைகளின் தாக்கத்திலும் மேலானதாய் இருந்தது. ஒரு கட்டளை மேலாளரான அக்பர் களத்திலே தான் வளர்த்தவர்களின் அருகில் நின்றபடி, பாள்ளி வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசானைப் போல் களத்திலே சீரியபடி செல்லும் ரவைகளுக்குள்ளும் நெருப்புத் துண்டங்களாய் உடலைக் கிழித்தெறியத் துடிக்கும் எறிகணைத் துண்டங்களையும் கவனத்திற்கொள்ளாது டாங்கிகளைச் சிதறடிக்கும் வழியைக் காட்டினான். இறம்பைக்குளம் மண் அதிர்ந்தது. அந்தப்பொழுதில் அக்பர் அவர்களுக்குள் ஒருவனாய் நின்று ஆடிப்பாடி வளர்த்த நான்கு இளம் போராளிகளை விலையாய்க் கொடுத்து இரு டாங்கிகளையும் ஒரு படைக்காவியையும் அழித்து இரு டாங்கி களைச் சேதமாக்கியும் எதிரியின் கவசப் படைக்கு வலுவான அடியைக்கொடுத்தான்.

இத்தாக்குதல் முறியடிப்பின் மூலம் களத்தை முழுமையாய் வழிநடத்தும் கட்டளைத் தளபதிகளுக்கு விக்டர் சிறப்புக் கவச எதிர்ப்பு அணியின் செயற்பாட்டில் நேர்த்தியான செயற்திறன் மீதான நம்பிக்கையை அக்பர் ஏற்படுத்திக் கொடுத்தான்.

10.06.1997அன்று தாண்டிக்குளத்தில் தளம் அமைத்திருந்த ஜயசிக்குறு படைமீது ஒரு வலிந்த தாக்குதலை எமது படையணிகள் மேற்கொண்டன. இந்தக் களத்திலும் எதிரியின் டாங்கிகளின் நகர்வை முறியடிக்க ஒரு பிளாட்டூன் போராளிகளுடன் அக்பர் களமிறங்கினான். சண்டை கடுமையாய் நடந்தது. எதிரியை நெருங்கி மேற்கொண்ட இத்தாக்குதலின் ஒரு கட்டத்தில் அக்பர் விழுப்புண் அடைகின்றான். விழுப்புண்ணின் வலி அவன் உடலை வருத்தியதை விட எதிரி எங்கள் நாட்டின்மீது மேற்கொள்ளும் வல்வளைப்பின் வலி அதிகமாய் இருந்தது. விழுப்புண்ணிற்கு இரத்தத்தடுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு தொடர்ந்தும் தன் அணியை வழிநடத்திச் சண்டையிட்டான். இச்சண்டையில் இரு டாங்கிகளைத் தாக்கி அழித்து ஒரு படைக்காவியைச் சேதமாக்கி தாக்குதல் ஓய்விற்கு வந்த பின்னரே அக்பர் தளம் திரும்பினான்.

அக்பர் களங்களில் சாதித்த வெற்றிகளுக்கு அவன் வளர்த்த அணித் தலைவர்களும் காரணமாயிருந்தனர். தன்னிடமிருந்த நற்பண்புகளை அவர்களுக்கும் ஊட்டி வளர்த்தான். தனித்து முடிவெடுத்துச் செயற்பட வேண்டிய நேரங்களில் அதற்கும் வாய்ப்புக் கொடுத்தான். கட்டம் கட்டமாய்ப் பாரிய இழப்புக்களைச் சந்தித்தபடி முன்னேறிய எதிரிப்படையைப் புளியங்குளத்தில் வைத்து ஒரு வலிமையான தடுப்பு அரண் அமைத்துச் சண்டையிட்டன எமது படையணிகள்.

19.08.1997 அன்று காலைப்பொழுது. பேரிரைச்சலைக் கிளப்பியவாறு வேகமாய் வந்த டாங்கிகளும் துருப்புக்காவியும் எங்களது காப்பரண்களை ஏறிக்கடந்து புளியங்குளம் சந்தியை மூலப்படுத்தியிருந்த எமது தளத்திற்குள் நுழைந்தன. நிலைமையைப் புரிந்து கொண்டு விழித்துக்கொண்ட எமது அணிகள் முகாமிற்குள் எதிரியைச் சல்லடை போட்டார்கள். ஆர்.பி.ஜி கொமாண்டோப் போராளிகளுக்கு மேஜர் காவேரிநாடன் கட்டளை வழங்கி வழி நடத்த முகாமிற்குள் நுழைந்த எதிரியுடன் பதட்டமில்லாமல் சமரிட்டு இரண்டு டாங்கிகளை அழித்தும் ஒரு துருப்புக்காவியைக் கைப்பற்றியும் சிலவற்றைச் சேதமாக்கியும் எதிரியின் கனவைச் சிதைத்து ஓட ஓட விரட்டியடித்தனர். இந்தச் சண்டையின்போது அக்பர் களத்தில் இல்லாபோதும் அவன் வளர்த்த அணித் தலைவர்களும் போராளிகளும் விக்ரர் சிறப் புக் கவச எதிர்ப்பு அணியின் பெயரை நிலை நிறுத்தினர்.

இப்படி ஜயசிக்குறு களத்தில் அக்பர் பல சண்டைகளை எதிர் கொண்டான். ஒவ்வொரு சண்டைகளிலும் எதிரியின் டாங்கிப் படைக்கு நெடுங்குவரியைக் கண்டால் குலை நடுங்கும்படிய உரு வாக்கினான். எப்போதாவது டாங்கிகள் பேசுமாயின் தாங்கள் நடுங்கிப்பயந்து ஒடுங்கிப் போனது பற்றி அவைகூடச் சொல்லும். ஏனென்றால் அக்பர் தன் போராளிகளை வைத்து களங்களில் அப்படித்தான் சாதித்தான்.

ஓயாத அலைகள் - 02 நடவடிக்கை தலைவர் அவர்களால் திட்டமிடப்பட்டு கிளிநொச்சி நகரையும் பரந்தனையும் ஊடறுத்து எதிரியை இரண்டாகப் பிரித்துத் தாக்கும் அணிகளுடன் விக்ரர் சிறப்புக் கவச எதிர்ப்பு அணியும் இணைக்கப்பட்டது. சண்டை தொடங்கியதும் ஊடறுப்பு அணிகள் உள்நுழைந்தன. கிளிநொச்சிப் படைத்தளம் தனிமைப்படுத்தப்பட்டது. வயல் வெளிகளுக்குள் இரண்டு பகுதியாலும் முன்னேற முயலும் எதிரியைத் தடுத்து நிறுத்தும் களச் செயற்பாட்டில் அணிகள் ஈடுபட்டன. கிளிநொச்சித் தளம் மீது பலமுனைகளில் அழுத்தம் கொடுத்துத் தாக்குதல் தொடக்க முற்பட்டபோது கிளிநொச்சியைத் தம்முடன் இணைப்பதற்காக பரந்தனில் இருந்து டாங்கிகளுடன் படையினர் முன்னேறினர். இவர்களை வழிமறித்த ஏனைய படையணிப் போராளிகளும் விக்ரர் சிறப்புக் கவச எதிர்ப்பு அணிப் போராளிகளும் கடும் சமர்புரிந்தனர்.

அவ்வேளையில் நிலைகளைப் பார்த்து உறுதிப்படுத்தியபடி வந்துகொண்டிருந்த அக்பரும் ஏ - 9 பிரதான சாலையை அண்மித்திருந்தான். முன்னேறிய டாங்கிகளைத் தாக்கி அழிக்கும் பொறுப்பை மணிவண்ணனிடம் ஒப்படைத்துவிட்டுத் தான் நின்ற பகுதி நோக்கி வந்துகொண்டிருந்த துருப்புக்காவி ஒன்றினை அருகில் நின்ற கொமாண்டோ வீரனின் ஆர்.பி.ஜியை வாங்கித் தானே தாக்கியழித்தான். இந்தத் தாக்குதலில்தான் லெப். கேணல் மணிவண்ணனும் ஒரு டாங்கியைத் தாக்கியழித்தான். தங்களது கவசங்கள் உடைந்ததால் எதிரியின் உளவுரனும் உடைந்தது. பரந்தனையும் கிளிநொச்சியையும் இணைக்கும் அவர்களின் கனவு கைகூடாமல் போனது. கிலிகொண்ட சிங்களப்படை கிளிநொச்சியைவிட்டுத் தப்பியோடியது.

இதேபோன்றுதான் 26.06.1999 பள்ளமடுப் பகுதிமீது மேற்கொள்ளப்பட்ட ரணகோச நடவடிக்கை மீதும் அக்பரின் படையணி முத்திரை பதித்தது. இந்தச் சண்டையில் எதிரி டாங்கிகளைக் கூடுதலாகப் பயன்படுத்தி டாங்கி நகர்வாகவே மேற்கொண்டான். ஆர்.பி.ஜி அணிக்கு இது ஒரு சவாலான சண்டையாக இருந்தது. டாங்கிகள் உந்துகணைகளை அந்த நிலம் முழுவதும் விதைத்தது. காப்பு மறைப்புக்கள் பெரிதாக இல்லாத

அந்த நிலத்தில் நின்றபடி அக்பர் தெளிவாகக் கட்டளைகளை வழங்கினான். அக்பரின் கட்டளைக்கேற்ப நிலைகுலையா வலிமைகொண்ட போராளிகள் கடும் சமர்புரிந்தனர். இந்தச் சண்டையின் முடிவில் ஏழு போராளிகள் உயிர்களைத் தாயக விடுதலைக்காய் கொடுத்து ஆறு டாங்கிகளை எரித்தழித் திருந்தனர். எதிரியின் கவசப் படையின் பலத்தை விக்ரர் சிறப்பு கவச எதிர்ப்பு அணி நிலைகுலையச் செய்தது.

இப்படித்தான் ஜயசிக்குறுப் படை மூக்கை நுழைத்த திசை யெல்லாம் அக்பர் செயலால் தன்னை வெளிப்படுத்தினான். அக் பரின் குறியீட்டுப்பெயர் 'அல்பா - 1'. களத்திலே 'அல்பா - 1' வந்து விட்டால் எல்லாப் போராளிகளுக்கும் உடலில் புது இரத்தம் ஓடும். களத்தில் 'அல்பா - 1' இன் ஆட்கள் வந்தால் எதிரிப் படைக்கு வியர்த்து ஓடும். அப்படித்தான் அக்பர் சாதித்தான். அக்பர் எந்தச் சூழ்நிலையிலும் எந்தவேளையிலும் தனித்து முடி வெடுத்துச் செயற்படுத்தும் திறன்வாய்ந்தவன். ஒட்டிசுட்டான் பகுதியை வல்வளைப்புச் செய்யும் நோக்கோடு இரகசிய நகர் வின்மூலம் எதிரி எமது பகுதிக்குள் நுழைந்த செய்தி அக்பரின் காதுக்கு எட்டிய உடனேயே தனது போராளிகளின் ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்திகளை வாங்கிக்கொண்டு அவர்களின் கையில் துப்பாக்கிகளைக் கொடுத்து அணியினைத் தயார்படுத் தும்படி கூறிவிட்டு எதிரி முன்நகர்ந்த இடங்களைக் கண்டறி வதற்கு அக்பர் விரைந்தான். அப்போது அக்பரின் முகாம் அந்த இடத்திற்கு நெருங்கிய பகுதியில்தான் அமைந்திருந்தது. முன் னேறிய எதிரியை நகர விடாமல் உடனடியாகவே ஒரு தடுப்பு நிலையை உருவாக்கி நிலைமையைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்து ஏனைய தாக்குதல் அணிகள் அந்த இடத்தைப் பொறுப்பேற்கும் வரை அவனே அந்த நிலைகளைக் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருந்தான்.

ஆனையிறவை வீழ்த்துவதற்காக இத்தாவிலில் ஒரு தரையிறக் கத்தினைச் செய்து ஒருமாத காலம் சமர் புரிந்தபோது அக்பரும் அவன் போராளிகளும் எதிரியின் கவசப்படையின் முன்னேற்ற முயற்சிகள் அனைத்தையும் முறியடித்துப் பல கவசங்களைச் சிதைத்தனர். இத்தாவிலில் சிங்களம் சந்தித்த தோல்விக்கும் ஆனையிறவை வீழ்த்தி விடுதலைப்புலிகள் வெற்றிவாகை சூடி யதற்கும் அக்பரிற்கும் அவன் படையணிக்கும் பெரும் பங்கி ருந்தது.

விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்துவிட்ட ஆனையிறவை மீளக் கைப்பற்றும் நோக்கோடு 'தீச்சுவாலை' என்ற பாரிய இராணுவ நடவடிக் ஷகையை எதிரி மேற்கொண்டபோது டாங்கிகளை அவன் முந்நிலைப்படுத்தவில்லை. 'ஜயசிக்குறு' களச் சமர் களின்போது இசுரவேல் தயாரிப்பில் உருவான டாங்கிகளை யும் படைக்காவிகளையும் அக்பர் நொருக்கி அழித்தான். அவற்றின் சுழல்மேடையினையும் சுடுகலங்களையும் தன் காலடிக்குள் பணியவைத்தான். ஒட்டு மொத்தமாய் களத்தில் டாங்கிகளின் செயற்திறனை இல்லாநிலைக்கு கொண்டுவந் தான். தலைவர் அவர்கள் எப்படி எண்ணி இந்த விக்ரர் சிறப்புக் கவச எதிர்ப்பு அணியை உருவாக்கினாரோ, அந்தக் கனவில் சிறிதும் பிழை இல்லாமல் நினைத்ததை அப்படியே தனது அணியை வைத்து அக்பர் செய்து முடித்தான். இரும்புக் கவசத்தின் வலிமையைச் சிதைத்து விடுதலைப் போராளிகளின் வலிமையை உலகிற்குக் காண்பித்தான்.

அக்பர் இப்படிப்பல பணிகளைப் புரிந்தான். பின்னாளில் பல அணிகளை இணைத்தும், பல புதுமையான ஆயுதங்களை உள்ளடக்கியதுமான அணிகளையும் அக்பர் வழிநடத்தினான். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் மட்டக்களப்பின் ஆண்டாங் குளப் பொறுப்பாளராகத் தலைவரின் சிறப்புப் பணிப்பின் பேரில் சென்று பணிபுரிந்தான். களப்பணியையும் மக்கள் பணியை யும் ஒன்றாகச் செய்தான். தூர இடங்களுக்குக்கூட கால்நடை யாகச் சென்று வேவுபார்த்துத் தாக்குதல்கள் மேற்கொள்வது, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது என அவன் எப் போதும் இயங்கிக்கொண்டிருந்தான். ஒரு தளபதியாய் இருந்த போதும் ஒரு இயல்பான போராளியாகவே தன்னை கருதிக்

கொள்வதும் ஏற்றத்தாழ்வு இன்றி எல்லோரையும் மதித்து நடப்பதும் பண்பான சொற்களைப் பயன்டுத்தி உரையாடுவதும், புன்சிரிப்பை மெல்லியதாய் பரவவிடுவதும் அவனுடன் கூடப் பிறந்த குண இயல்புகள்.

இந்த வீரன் 23.05.2005இல் தமிழீழத் தேசியத் துணைப் படையின் வடபோர்முனைக் கட்டளைத் தளபதியாக நியமிக் கப்பட்டான். அன்றிலிருந்து முன்னணி நிலைகளுள் அவர் களுடன் வாழ்ந்து ஒரு சிறந்த படையாக அதை உருவாக் கினான். 11.08.2006இல் முகமாலையில் எதிரி முன்னேறிய போதும், தொடர்ந்துவந்த சண்டைகளிலும் தேசியத் துணைப் படை எதிர்பார்த்ததிலும் அதிகமாய் அல்லது எதிர்பார்க்காத வகையில் சண்டையிட்டதாயின் அதன் ஆணிவேராய் இருந் தது அக்பர்தான். அக்பர் கட்டளை வழங்கினால் அவர்கள் சாதிப்பார்கள், அல்லது சாதனைக்காய் மடிவார்கள். அக்பர் அப்படித்தான் வாழ்ந்தான்.

இந்த வீரன்தானே எதிரியின் எறிகணை வீச்சில் எங்களை விட்டுப்பிரிந்து போனான். அவனுடன் கூடப்போன சாதுரியனும் அன்று மடிந்தான். அக்பரின் பிரிவு தளபதிகளில் இருந்து போரா ளிகள் வரை எல்லோரின் இதயத்தையும் ஒருமுறை உலுப்பி விழிகசிய வைத்தது. அக்பர் என்ற பெயருக்கு களத்தில் ஒரு வலிமை இருந்தது. ஒவ்வொரு ஆர்.பி.ஜி கொமாண்டோ வீர னின் வலிமையும் அக்பர்தான். அந்த வீரனின் நினைவுகளைச் சிறப்புத் தளபதிகளுடன் பகிர்ந்துகொண்டபோது அவன் ஒரு களஞ்சியமாய்த் தோன்றினான்.

அக்பர் ஒரு பண்பான போராளி, பெருந்தன்மையில்லாது பெரிய சாதனைகளைப் படைத்த தூயவீரன். தலைவன் நினைத் ததைச் செய்துமுடித்தவன், எந்த வேளையிலும் எந்த வளப்பற் றாக்குறையிலும் பெரிய வேலைகளையும் அமைதியாய் செய்து முடிப்பவன். சொல்வதைச் செய்வான், செய்வதைச் சொல்ல மாட் டான். இரும்பின் வலிமையை மிஞ்சிய தந்திரசாலி. எல்லா வற்றிற்கும் மேலாய் அக்பர் எங்களின் படையச் சொத்து.

இத்தனை செயற்திறன் மிக்க வீரன் எங்களுக்குள் சத்த மில்லாமல் நடமாடித்திரிந்தான். களத்திலே இப்போதும் அவன் நிறையச் செய்யத்துடித்தான். உறங்குநிலையில் இருந்த ஆர்.பி. ஜி அணியை மீண்டும் இயங்குநிலைக்குக் கொண்டுவந்து பாரிய நடவடிக்கை ஒன்றினை முறியடிக்கும் முன்னேற்பாட்டு போது அவன் மடிந்துபோனான். ஆயினும் அந்தப் பெயரின் வலிமை இப்போதும் இருக்கிறது. அக்பர் வீழ்ந்தபின்னும் அவன் வளர்த்த போராளிகள் எதிரியின் டாங்கிகளை நொருக் கினார்கள். "தலைமைத்துவத்தின் பண்பு என்பது அவன் உயி ருடன் இருக்கும் போது மட்டுமல்ல, அவன் வீழ்ந்துவிட்ட பின் பும் அவனின் கட்டளைகளை நிறைவேற்றுவது தான் அவன் தேடிவைத்த சொத்து" அக்பர் இந்தச் சொத்தை அதிகம் தேடி வைத்திருக்கிறான்.

கடைசியில், அக்பருக்கு ஒரு ஆசையும் ஆதங்கமும் இருந்தது. அக்பர் திருமணம் செய்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை யான போராளி. அவன் களங்களிலேயே அதிகம் வாழ்ந்தவன். தன் குழந்தைகளோடு கொஞ்சிவிளையாட அவனுக்கு நேரம் கிடைத்தது குறைவு. எங்காவது ஒரு பொழுதில் வீட்டிற்குச் சென் றாலும் தங்கி நிற்கமாட்டான். துணைவி மறிப்பாள். அவளின் வேண்டுகை அவனுக்குப் புரியும். அவளைத் தலைவரின் படத் திற்கு முன் கூட்டிவருவான். தலைவரின் படத்தைக்காட்டி, "அண்ணை நிறைய எதிர்பார்க்கிறார். அண்ணையைப்போல நாங்களும் செயற்படவேணும். பட்ட கஸ்ரங்களோடை சேர்ந்து எல்லாரும் உழைத்தால் விரைவில் விடிவு கிடைக்கும். விடிவு கிடைச்சா என்ர குழந்தைகளோட செல்லங்கொஞ்சி அவையள நான் வடிவா வளர்ப்பன்தானே" என்று கூறி விட்டுப் போய்விடு வான். அப்படியே அவன் போய்விட்டான். தனக்கென்று வாழாத இந்த உன்னத வீரனின் கடைசி ஆசைப்படி அவனின் குழந் தைகளின் சிறப்பான எதிர்காலத்தை நாம்தானே போராடிப் பரிசளிக்க வேண்டும்.

நினைவுபகிர்வு:- ச.புரட்சிமாறன்.

மருத்துவ பீடம், கலைப் பீடம், விஞ்ஞான பீடம் உட்பட அனைத்து யாழ் பல்கலைக்கழக மாணவர்களாலும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்கள் நினைவு கூரப்பட்டார்

15.09.2025

ஒரு கொள்கையில் ஒருவர் எவ்வளவு உறுதியாக இருக்க முடியும், ஒரு போராட்டத்தை எவ்வளவு உன்னதமாக நடத்த முடியும் என்று உலகுக்கே உணர்த்தியவர் திலீபன்.

பார்த்திபன் இராசையா என்னும் இயற்பெயர் கொண்ட திலீபன், நவம்பர் 27, 1963-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள ஊரெழு கிராமத்தில் பிறந்தவர். ஆயுதங்களைக் கைவிட்டு, அகிம்சை வழியில் ஒரு போராட்டத்தை முன்னெடுத்தார்.

1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படை இலங்கைக்குச் சென்ற போது, 5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதம் இருந்தார். ஒரு கொள்கையில் ஒருவர் எவ்வளவு உறுதி யாக இருக்க முடியும், ஒரு போராட்டத்தை எவ்வளவு உன்னத மாக நடத்த முடியும், அதன் தாக்கத்தை எந்த அளவுக்கு மக்க ளிடம் கடத்த முடியும் என்று உலகுக்கே உணர்த்திய போர் வீரர் திலீபன்.

மிகச் சிறந்த அறிவாளியாகவும், கல்வியில் ஆர்வம் மிக்கவராக வும் இருந்த போராளி திலீபன், 1980 காலகட்டத்திலேயே மருத்துவ மாணவனாகத் தேர்வானவர்.

80-களின் துவக்கக் காலங்களில் சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகளை நேரில் பார்த்து, “போராடாமல் இங்கு எதுவும் மாறாது” என முடிவெடுத்து, படிப்பை நிறுத்திவிட்டு இன விடுதலைக்காக புறப்பட்டார்.

அகிம்சைப் போராட்டத்தைப் போதித்த காந்தியின் தேசமான இந்தியாவிலிருந்து, 1987-ம் ஆண்டு இலங்கைப் போரை முடிவுக்குக் கொண்டுவர அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்திய அமைதிப்படை சென்றது.

அமைதிப் படையிடம் திலீபன் 5 அம்ச கோரிக்கைகளை முன் வைத்தார்.

* பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

* புணர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

* இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புணர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

* வடகிழக்கு மாகாணங்களில், காவல் நிலையங்கள் திறக் கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

* இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயு தங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக் கூடங்களில் குடிகொண்டுள்ள ராணுவ, காவல் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

இந்த 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, செப்டம்பர் 15, 1987 அன்று, யாழ்ப்பாணத்தின் நல்லூர் வீதியில் முருகன் கோயில் அரு கில், “எனக்கு என்ன நேர்ந்தாலும், சுய நினைவு இருந்தாலும், இல்லா விட்டாலும் யாரும் எனக்கு உண வோ, சிகிச்சையோ அளிக்கக் கூடாது” என உறுதியாகக் கூறி உண்ணாவிரதத்தைத் தொடங் கினார்.

திலீபன் தன் மக்களுக்காக 12 நாள்கள், அதாவது 265 மணி நேரமாக ஒரு சொட்டுத் தண்ணீர் கூட உடலுக்குள் செலுத் தாமல் உண்ணாவிரதம் இருந்த திலீபன், தன் 23-ம் வயதில், 1987 செப்டம்பர் 26-ம் நாள் காலை 10.48 மணிக்கு உயி ரிழந்தார்.

-யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

www.sangathamil.ca

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு ஊர்திப் பயணம் தென் தமிழீழம் திருக்கோவிலில் இருந்து ஆரம்பம்

15.09.2025

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தலை நினைவுகூரும் முகமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் நடத்தப்பட்டு வரும் ஈகைச்சுடர் திலீபன் நினைவு ஊர்திப் பயணமானது இன்றைய நாள் (15) தென் தெமிழீழம் திருக்கோவில் பிரதேசத்தில் ஆரம்பமானது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் துசானந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த ஊர்திப் பயண ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருக்கோவிலில் அமைந்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் நினைவிடத்தில் சந்திரநேருவின் கல்லறைக்கு மலர்மாலை அணிவித்து நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்திற்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப் பட்ட பின்னர் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய வாகனம் தன் பயணத்தை ஆரம்பித்தது.

இந்த நினைவேந்தல் ஊர்தியான திருக்கோவிலில் இருந்து பொத்துவில் நோக்கிச் சென்று ஆலையடிவேம்பு, காரைதீவு, வளத்தாப்பிட்டி, வீரமுனை, கல்முனை மற்றும் பாண்டிருப்பு ஆகிய அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதேசமெங்கும் பயணத்தினை முன்னெடுத்து குறித்த பிரதேசங்களில் மக்கள் மலர் வணக்கம் செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக் கபடவுள்ளன.

அதனைத் தொடர்ந்து, இந்த ஊர்தியானது மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி நகரவுள்ளதுடன் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் பயணம் மேற்கொண்டு இறுதியாக ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் நாளன்று யாழ். நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் பயணத்தை நிறைவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈகைச்சுடர் லெப் கேணல் திலீபன் அவர்களின் 38 ஆம் ஆண்டு நினைவெழுச்சி மாதத்தின் முதலாம் நாளில் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளது. இன்று (15.09. 2025) பொத்துவிலிலிருந்து நல்லூரை நோக்கிய ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களுடைய திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி மக்கள் வணக்கத்திற்காகப் எழுச்சிப் பயணத்தை ஆரம்பித்துள்ளது. அதே நேரம் நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப் கேணல் திலீபன் அவர்களுடைய நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமானது. பன்னிரு நாட்கள் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நடாத்திய அகிம்சை போரின் முதலாம் நாளில் மக்கள் உணர்வெழுச்

யாழ். தீவகம் வேலணையில் 'ஈகைச்சுடர்' லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல்

15.09.2025

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38வது நினைவேந்தலின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று (15) காலை தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ். தீவகம் வேலணை வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள பொது நினைவுத்தூபியில் நடைபெற்றன.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு நினைவு வணக்கம் செலுத்தினர்.

வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆவது நினைவேந்தல் யாழ். நல்லூரில் ஆரம்பம்

15.09.2025

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி உண்ணாநோன்பு இருந்து உயிர்நீத்த "ஈகைச்சுடர் (தியாக தீபம்)" என அழைக்கப்படும் லெப். கேணல் திலீபனின் 38வது நினைவுவேந்தல் நிகழ்வுகள் இன்றைய நாள் திங்கட்கிழமை (15) நல்லூர், யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

யாழ்ப்பாணம், நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில், அவர் உண்ணா நோன்பை ஆரம்பித்த நேரமான காலை 9.45 மணி யளவில் வணக்க நிகழ்வுகள் ஆரம்பமாயின.

இந்த நினைவேந்தலின்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் முன்வைத்த கோரிக்கைக ளான,

1) மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங் களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2) சிறைக்கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம் களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3) அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4) ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5) தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத் தப்பட வேண்டும் ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரமின்றி 12 நாட்கள் உண்ணாநோன்பு இருந்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் உயிர்நீத்தமை குறிப்பிடத் தக்கது.

சர்வசேத நீதி கோரி யாழில் கையொப்பப் போராட்டம்

15.09.2025

செம்மணி உட்பட வடக்கு, கிழக்கில் காணப்படும் மனிதப் புதைகுழிகள் மற்றும் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை (15) கையொப்பப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கையெழுத்துப் போராட்டம் மாற்றத்துக்கான இளையோர் குரல் அமைப்பினால் யாழ்ப்பாணம் மருதனார் மடம் பகுதியில் நடத்தப்பட்டது.

இதில் மாற்றத்திற்கான இளையோர் அமைப்பின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள், யாழ் மருதனார்மடம் வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல்தரை பிரச்சினை: போராட்டம் தொடங்கி இரண்டு ஆண்டுகள் பூர்த்தி; சித்தாண்டியில் பண்ணையாளர்கள் ஆர்ப்பாட்டம்

15.09.2025

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவணை பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கோரிய தொடர் போராட்டத்தின் 2 வருட பூர்த்தியை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை (15) சித்தாண்டியில் பண்ணையாளர்களின் போராட்டம் இடம்பெறும் இடத்தில் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமது மேய்ச்சல் தரை காணியை வர்த்தமானிப்படுத்துமாறு கோரியும் சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்களை அகற்று

மாறு கோரியும் சித்தாண்டி முச்சந்தி பிள்ளையார் ஆலயத்திலிருந்து பேரணி ஆரம்பமாகி, போராட்டம் நடக்கும் இடம் வரை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, பண்ணையாளர்களின் போராட்டம் இடம்பெறும் இடத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்று நடத்தப்பட்டது.

மயிலத்தமடு மாதவணை கால்நடை மேய்ச்சல் தரைப் பகுதியில் கால்நடைகளுக்கும் பண்ணையாளர்களுக்கும் எதிராக நடத்தப்படும் அநீதிக்கு எதிரான அறவழிப் போராட்டம் இரண்டு வருடங்களை கடந்துள்ள அதாவது 730வது நாளாக நடைபெற்றுவரும் நிலையில் இன்று இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“மயிலத்தமடுவில் உள்ள சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்களை வெளியேற்று”, “பண்ணையாளர்கள் தமிழர்கள் என்பதாலா தீர்வு வழங்குவதில் தாமதம்”, “கால்நடை பண்ணையாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்று”, “பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு மேய்ச்சல் தரையினை வழங்கு”, “730 நாட்கள் கடந்தும் தீர்வு வழங்காதது ஏன்” போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டம் நடத்தப்பட்டது.

அத்துடன் தமது நியாயமான கோரிக்கையினை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோசங்களும் முன்வைக்கப்பட்டன.

பாரம்பரியமாக கால்நடை வளர்ப்பாளர்களால் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல் தரையில் அயல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அத்துமீறிய விவசாய நடவடிக்கை, காடழிப்பு மற்றும் அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகளைக் கொல்லுதல், பண்ணையாளர்களை அச்சுறுத்துதல் போன்ற செயற்பாடுகளை உடன்நிறுத்தி, அத்து மீறுபவர்களை வெளியேற்றி குறித்த பிரதேசத்தை தங்களின் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக வர்த்தமானி பிரகடனப்படுத்தக் கோரி கடந்த 2023ஆம் ஆண்டு இதே நாளில் கால்நடை பண்ணையாளர்கள் தங்கள் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

இருப்பினும், அரசாங்கங்கள் மாறினாலும் குறித்த மேய்ச்சல் தரை விடயம் தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவு எந்த அரசாங்கத்தினாலும் எடுக்கப்படாமை குறித்தும் தங்களின் கோரிக்கைக்கு எந்த அரசும் ஒரு நிரந்தரத் தீர்வினை வழங்க முன்வரவில்லை என்ற நிலைப்பாட்டில் இரண்டு வருட பூர்த்தியினை தற்போதைய அரசுக்கு தங்களின் கோரிக்கையை வெளிப்படுத்தும் முகமாக இன்றைய தினம் போராட்டம் நடத்தப்பட்டது.

இப்போராட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், இ.சிறிநாத், பிரதேச சபைத் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

www.sangathamil.ca

முல்லைத்தீவில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி

15.09.2025

முல்லைத்தீவு கடற்பரப்பில் அத்துமீறிய சட்டவிரோத கடற் தொழில் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதாக, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையீடு செய்துள்ளனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளின் முறைப்பாட்டையடுத்து 15.09.2025 இரவு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உடனடியாக கடற்தொழிலாளர்களுடன் கடலுக்குள் சென்று முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம் பெறுவதை நேரடியாக பார்வையிட்டதுடன், அவ்வாறு சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடும் பலரையும் கடுமையாக எச்சரித்துமிருந்தார்.

குறிப்பாக கொக்கிளாய் முகத்துவாரம் மற்றும் நாயாறு உள்ளிட்ட பகுதிகளில் அத்துமீறித் தங்கியுள்ள நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் மீனவர்களாலும், திருகோணமலைப் பகுதி மீனவர்களாலுமே இவ்வாறு மிக அதிகளவில் வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் மற்றும் சுருக்குவலை உள்ளிட்ட சட்ட விரோத கடற்தொழில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடலில் இருந்து பார்வையிடும் கரையில் தெரியும் வெளிச்சத்தைவிடவும் சட்டவிரோத வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் படகுகளின் வெளிச்சம் அதிகமாக தென்படுகின்றது.

அந்த அளவிற்கு மிக அதிகளவில் சட்டவிரோத வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்தநிலமைகளை வன்னி மாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களுக்கு நேரடியாக காண்பித்த முல்லைத்தீவு கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், இவ்வாறான அதிகரித்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளால் முல்லைத்தீவில் சட்டத்திற்குட்பட்டு கடற்

தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களால் கடற்தொழிலில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கு எதிராக பாராளுமன்றிலும், கடற்தொழில் அமைச்சின் ஆலோசனை குழுக்கூட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம், கடற்தொழிலாளர் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் தொடர்சியாக குரல் எழுப்பி வருவதை இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார். அத்தோடு இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாதெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார். எனவே நேரடி களவிஜயத்தின்போது சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இடம்பெறுவதை ஆதாரப்படுத்தும் வகையில் சேகரிக்கப்பட்ட விடயங்களை உரிய இடங்களுக்கு கொண்டு சென்று இந்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளை நிறுத்துவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவித்தார்.

உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்ட முல்லை. மந்துவில் படுகொலையின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல்

15.09.2025

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில் சந்திக்கு அருகாமையில் 1999 ஆம் ஆண்டு இதேநாளில் (15) விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி பொது மக்களுடைய 26 ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டது.

இன்றைய நாளில் 24 அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அதன் 26வது ஆண்டு வலிதீரா நினைவு மந்துவில்லில் இறந்தவர்களின் உறவுகளாலும் மக்களாலும் சுடரேற்றி மலர்தூவி கண்ணீருடன் நினைவு கூரப்பட்டது.

குறித்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற மந்துவில் சந்தி வளாகத்தில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் அமைப்பின் தலைவர் த.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஞா.யூட் பிரசாத் தாய்த் தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.சத்தியரூபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் சமூக செயற்பாட்டாளர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அரசியல் கைதிகளான தங்களது உறவுகளைச் சந்தித்த பின் கனத்த நெஞ்சத்துடன் பிரிந்து வந்த உறவுகள்!

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் முருகையா கோமகன்

15.09.2025

அரசியல் கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்கு மிடையே சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன்போது உணர்வு பூர் வமான சந்திப்பு ஒன்று அங்கே நடந்தது. அரசியல் கைதிகளை சந்தித்துவிட்டு கனத்த இதயத்துடனும் கண்களில் கண்ணீருடனும் அரசியல் கைதிகளின் உறவுகளும் நாங்களும் வெளியே வந்தோம் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளை போகம்பரை சிறையில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறுகிய நேரத்தில் நடந்த இந்த சந்திப்பின்போது அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் மகளை தந்தையான ஆனந்தசுதாகரன் தொட்டு உணவூட்டிய அந்த நிகழ்ச்சி சம்பவம் மனதை ரணமாக்கியது.

இந்த சந்திப்பானது நிரந்தரமாக இந்த பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டுமென இந்த நாட்டின் ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றோம்.

தேசிய கைதிகள் தினத்தை முன்னிட்டு கைதிகள் பொது மன்னிப் பின்கீழ் விடுதலை செய்யப்படுவது வழமை. ஆனால் இந்த ஆண்டு கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை.

தமது விடுதலை இடம்பெறும் என கைதிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். மீதமாக உள்ள பத்து அரசியல் கைதிகளும் நல்லிணக்கத்தின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என வினயமாக ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

மட்டக்களப்பு மேய்ச்சல் தரை அபகரிப்பு சிங்கள மக்கள் பிரதிநிதித்துவத்துகான ஆரம்பப்புள்ளி!

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்

17.09.2025

மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்களின் மாடுகள் மேயும் மேய்ச்சல் தரை போராட்டம் கடந்த பலவருடங்களாக இடம்பெற்றும் எந்த நீதியும் இன்றி மேய்ச்சல்தரை பிரச்சினை இனி இல்லை என்றது போன்றமாயை, தோற்றப்பாடு உள்ளது.

ஆனால் இதுவரை கடந்த கால அரசுகளால் ஏமாற்றப்பட்டு கடந்தகால 2024, ஜனாதிபதி தேர்தல்காலத்தில் தொடர் போராடடங்கள் நடத்தியும் வாக்குறுதிகள் மட்டுமே பண்ணையாளர்களுக்கு வழுங்கப்பட்டதால் போராட்டம் கைவிடப்பட்ட வரலாறே உள்ளது. மாடுகளுக்கான மேய்ச்சல்தரை பிரச்சினை எந்த அரசு ஆட்சியில் அமர்ந்தாலும் அது தீர்க்கப்படவில்லை.

இதனால் மீண்டும் மட்டக்களப்பு பண்ணையாளர்கள் கவன ஈர்ப்பு போராட்டத்தை எதிர்வரும் வாரங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக பண்ணையாளர் ஒருவர் தெரிவித்தார். கவன ஈர்ப்பு போராட்டத்தை தொடங்குவதை விட வேறுவழியில்லை எனவும் அரசியல் வாதிகளால் தாம் நம்பி ஏமாற்றப்பட்டுள்ளோம் எனவும் மன வருத்ததுடன் பல பண்ணையாளர்கள் கவலை வெளியிட்டுவருகிறார்கள்.

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப் பிரதேசமான மயிலத்தமடு பெரிய மாதவனை பிரதேசத்தில் மேய்ச்சல்தரை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி மாடுகளை வெட்டி அவர்களை பரம்பரையான மேய்ச்சல்தரையில் இருந்து ஓடவைப்பதற்காக முழுமூச்சான திட்டம் என்பது கடந்த கால ஆட்சியாளர்களால் சிங்களவர்களைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டு அங்கு அவர்களை குடியேற்றி எதிர் வரும் காலங்களில் மட்டக்களப்பில் இருந்து சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் ஆரம்ப புள்ளியாகவே மட்டக்களப்பு மேய்ச்சல்தரை அபகரிப்பை நோக்க முடிகிறது.

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் பிரதிநிதிகள் இன்றி தப்பிக்கிடக்கும் ஒரே மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இப்போது சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநித்துவம் உள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததாக கூறப்படும் 1948ல் பெப்ரவரி 04 தொடக்கம் 1960 மார்ச் 20 பொதுத் தேர்தல் வரை 12 வருடங்களாக வடகிழக்கில் எந்த ஒரு மூலையிலும் இருந்து சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகவில்லை. 1960 ஜூலை 20 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில்தான் அம்பாறைத்தொகுதியில் இருந்து சிறீலங்கா சுதந்திர கட்சி மூலமாக விஜயசிங்க விஜயபாகு என்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவானார். அன்றுதான் வடகிழக்கில் இருந்து முதல் முதலாக சிங்களவர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான வரலாறாகும்.

1961 ஏப்ரல் 10 இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அம்பாறை மாவட்டம் உருவானது. அதற்கு முன்னம் மட்டக்களப்பு மாவட்டமாகவே அம்பாறை கிராமங்கள் இணைந்திருந்தன. 1961 தொடக்கம் 1978 வரையும் அம்பாறை மாவட்டம் என அழைக்கப்பட்டது ஆனால் 1978- செப்டம்பர் 07 ல் புதிய அரசியல்யாப்பு உருவாக்கப்பட்டு 22 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டபோது அம்பாறை என்ற பெயர் காணாமல் போய் “திகாமடுல்ல” என்ற சிங்களப் பெயர் அம்பாறை மாவட்டத்துக்கு சூட்டப்பட்டது இதுவும் ஐக்கிய தேசிய கட்சி ஜே.ஆர்.ஜெயவர்தன செய்த சதியாகும் அப்போது எந்த தமிழ், முஷ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அம்பாறை என்பதை திகாமடுல்ல என மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை ஏன் என்பது தெரியவில்லை.

அம்பாறையில் உள்ள நான்கு தொகுதிகளான அம்பாறை, சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை இதில் ஒரு பெயரை மாவட்டத்துக்கு பெயராக வைப்பதற்கு அப்போது தமிழ், முஷ்லிம் அரசியல் வாதிகள் தவறிவிட்டனர் என்பதே உண்மை.

1977 யூலை 21 இல் நடைபெற்ற தேர்தலில் தான் திருகோணமலை மாவட்டத்தில் சேருவில எனும் தொகுதி உருவாக்கப்பட்டு எச்,அடா.லீலாரெட்டண என்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவானார் அதற்கு முன்னம் திருகோணமலையில் எந்த சிங்கள பிரதிநித்துவமும் இல்லை. 1989 பெப்ரவரி 15 தேர்தலானது முதலாவது விகிதாசாரத்தேர்தல் இதில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதிநித்துவம் உறுதியானது ஆனால் 1994 ஆகஸ்ட்16 இல் நடந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 06 ஆசனங்களில் 04 சிங்களவரும் 02 இஷ்லாமியரும் பாராளுமன்ற உறுப்பினரானார்கள்.

இறுதியாக 2024 நவம்பர் 14 ல் நடைபெற்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 07 உறுப்பினர்களில் 03 சிங்களவர் 03 இஷ்லாமியர் 01 தமிழர் தெரிவானார்கள். திருகோணமலையில் இருந்து 04 ஆசனங்களில் 02 சிங்களவர் தெரிவாகியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலையில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகும் நிலைக்கு திட்டமிட்ட சிங்கள குடியேற்றமே மூலகாரணம். அதில் இன்று 2025 வரையும் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே சிங்கள பாராளுமன்ற உறுப்பினரகள் தெரிவு செய்யும் வாய்ப்பு இல்லை.

இதனை உணர்ந்த கடந்தகால மகிந்தராஷ பக்ஷ அரசின் திட்டம்தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைகளான மயிலத்தமடு, மாதவனை பிரதேசங்கங்களில் சிங்களவர்களை குடியேற்றும் திட்டமாகும்.

அவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்திலும் சிங்கள மக்களை குடியேற்றம் செய்து மக்கள் பிரதிநிதிகளை உருவாக்க கூடிய ஒரே இடம் மட்டக்களப்பில் உள்ள மேய்ச்சல் தரைகளான மயிலத்தமடு, மாதவனை பிரதேசங்களாகும்.

மயிலத்தமடு மாதவனை பகுதியில் பொல நறுவை, அம்பாறை , மொணறாகலை பகுதிகளை சேர்ந்த சிங்களவர்கள் அத்துமீறி மீண்டும் அந்த மேய்ச்சல் தரைகளில் பயிர்செய்கையில் ஈடுபடுவதை காணமுடிகிறது.

பேசிப் பார்த்தோம், நீதிமன்றில் வழக்குப் போட்டோம், தொடராக கவன ஈர்ப்பு போராட்டங்களை செய்தோம் எந்த பயனும் இல்லை கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜீத்துக்கு ஆதர வாக வாக்களியுங்கள் என்று தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறினார் அவருடைய கதையை நம்பி வாக்களித்தோம் சஜித் பிரேமதாசா ஜனாதிபதியாக தெரிவாகவில்லை இருந்தும் அவர் எதிர்க்கட்சி தலைவராக உள்ளார் அவர் இதுவரை மட்டக்களப்பு மேய்ச்சல் தரை பற்றி வாயே திறக்கவில்லை எனவும் பண்ணையாளர்கள் ஆதங்கப்பட்டனர்.

மயிலத்தமடு, மாதவணை பிரதேசத்தில் மேய்ச்சல் தரையாக காணப்படும் இடங்கள் ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவின் ஈரளைக் குளம் கிராம சேவையாளர்பிரிவில் 6383 ஹெக்டெயரும், கோரளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் குடும்பிமலை கிராம சேவையாளர் பிரிவில் 9969 ஹெக்டெயர் முன்மொழியப்பட்டுள்ளன.

இருப்பினும் அது வர்த்தமானி அறிவித் தலாக வெளியிடப்படவில்லை. குறித்த எல்லைப் பிரதேசங்களில் அம்பாறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் இருந்து அத்துமீறிக் குடியேறுபவர்களது நெருக்கு வாரங்களை தாங்கிக்கொண்டு வாழ்வாதாரத்துக்காக காலம் கடத்தும் நிலையில் மட்டக்களப்பின் பண்ணையாளர்கள் இருப்பதாக கவலை வெளியிடப்படுகிறது.

சுதந்திரம் அரசியல் உரிமை கேட்டு போராடிய ஈழத்தமிழர்கள் இப்போது மட்டக்களப்பில் மேய்ச்சல் தரைக்காகவும், மன்னாரில் காற்றாலை தடுப்புக்காகவும், திருகோணமலையில் சூரியசக்தி மின்திட்டத்திற்கு எதிராகவும், கல்முனையில் தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தக்கோரியும், யாழ்ப்பாணத்தில் செம்மணி படுகொலைக்கு சர்வதே நீதி கோரியும், முல்லைத்தீவில் மாவீரர் துயிலும் இல்லக்காணியை விடுவிக்க கோரியும், பல கோணங்களில் போராட்டமே வெவ்வேறு விடயங்களுக்காக நடைபெறும் நிலைமை ஈழத்தமிழர்களுக்கு கடந்த 16 வருடங்களாக தொடர்கிறது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக சர்வதேச நீதிவேண்டி ஏறக்குறைய ஐயாயிரம் நாட்களை எட்டும் தொடர் போராட்டம் வடகிழக்கில் எட்டு மாவட்டங்களிலும் போதுவான ஒரு போராட்டமாகவும் தொடர்கிறது. முடிவில்லாத, தீர்வு இல்லாத போராட்டங்களே ஈழத்தமிழர்களின் வாழ்வு நிலையாக மாறிவிட்டது என்பது மட்டுமே உண்மை.

எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

யாழ். சங்கிலிய மன்னனின் மந்திரிமனையின் ஒரு பக்கம் இடிந்து விழுந்தது

17.09.2025

யாழ்ப்பாணத்தில் இன்றைய நாள் (17) பெய்த மழை காரணமாக தொல்பொருள் சின்னமான மந்திரிமனையின் ஒரு பக்கம் இடிந்து விழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் இராசதானியை ஆண்ட சங்கிலிய மன்னனது மந்திரிமனை நல்லூரில் சட்டநாதர் சிவன் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

அந்தக் கட்டடம் உடைந்து விழும் நிலையில் காணப்பட்டிருந்ததால், அதற்கு முட்டுக்கொடுத்து கம்பிகள் நடப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இன்றைய தினம் மந்திரிமனையின் ஒரு பாகம் இடிந்து விழுந்துள்ளது.

யாழ்ப்பாண இராசதானி காலத்திற்குரியதாக கருதப்படும் மந்திரி மனை, பாதுகாக்கப்படவேண்டிய தொல்பொருள் சின்னமாக 2011 ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மண்டைதீவு மனிதப் புதைகுழிக் கிணறுகளைச் சட்டரீதியாக அகழ்வதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு

18.09.2025

யாழ். குடாநாட்டின் 1991 இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது மண்டை தீவுப் பகுதியில் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் அங்குள்ள தேவாலயக் காணியின் கிணறு உட்பட 3 கிணறுகளில் போட்டு மூடப்பட்டன என்று கூறப்படுவது தொடர்பில் விசாரித்து, அந்தக் கிணறுகளைச் சட்டரீதியாக அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கு ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் நேற்று (17) எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ். குடாநாட்டின் தீவகப் பகுதியைச் சிறீலங்காப் படையினர் கைப்பற்றிய போது, படையினரும் ஓர் (EPDP) ஒட்டுக் குழுவும் இணைந்து பலரைக் கைது செய்து, சுட்டுக் கொன்று, மண்டைதீவின் தேவாலயக் கிணறு உட்பட 3 இடங்களில் உள்ள கிணறுகளில் போட்டு மூடினர் எனக் கண் கண்ட சாட்சிகளின் அடிப்படையில் சில மத குருமாரும் இணைந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிகின்றது.

அடையாளம் காணப்பட்ட கிணறுகளை அகழ உத்தரவிடக் கோரியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது, ஊர்காவற்துறை பொலிசாரிடம் அகழ்வு பணியை மேற்கொள்வதற்கான வசதிகள் இல்லை என சுட்டிக்காட்டியதை அடுத்து யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரிடம் குறித்த வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறித்த மண்டைதீவு புதைகுழி விவகாரம் தொடர்பாக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாருக்கு ஊர்காவற்துறை நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு தொடர்பாக பொலிசார் கால அவகாசம் கோரியதால் எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி: அடுத்த அகழ்வுக்கான பாதீடு நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பு

18.09.2025

யாழ். செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு இன்று வியாழக்கிழமை (18) யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் அடுத்த அகழ்வுக்கான பாதீட்டை மன்றில் சமர்ப்பித்தார்.

பாதீட்டை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் எதிர்வரும் ஒக்டோபர் 1 ஆம் திகதி முன்னேற்ற நடவடிக்கையை அவதானிப்பதற்கான அறிக்கையை பெற்றுக்கொள்ள தவணையிட்டுள்ளது.

ஒக்டோபர் 1ஆம் திகதி பாதீடு நிறைவேற்றப்படுமானால் ஒக்டோபர் 21ஆம் திகதி அடுத்த கட்ட அகழ்வுப்பணி ஆரம்பிக்கப்படும் என சட்டத்தரணி V.S.நிறைஞ்சன் தெரிவித்தார்.

www.sangathamil.ca

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் மாமனிதர் அ.துரைராஜாவிற்கு திருநெல்வேலிச் சந்தியில் உருவச் சிலையினை நிறுவத் தீர்மானம்

18.09.2025

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் துரைராஜாவின் உருவச் சிலையினை திருநெல்வேலிச் சந்தியில் நிறுவுவதற்கு நல்லூர் பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவிற்கு சிலை ஒன்றினை அமைப்பதற்கு இடமொன்றினை ஒதுக்குவது தொடர்பில் இன்றைய நாள் வியாழக்கிழமை (18) நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் தவிசாளர் ப. மயூரனால் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக தவிசாளர் சபையில் தெரிவிக்கையில்,

போலிகள் மலிந்துவிட்ட இன்றைய தேசத்தில் போலியின்றி வாழ்ந்து தேசப்பற்றோடும் மக்கள் மனித நேயத்தோடும் தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் அவர் ஆற்றிய மகத்தான தன்னலமற்று பணியாற்றியவர்.

அவரது அறிவியல், பண்பியல், வாழ்வியல் என்பன இந்த மண்ணின் ஒரு வரலாற்று அடையாளம்.

அவ்வாறானவர்கள் இந்த மண்ணில் வாழ்ந்தார்கள் என்பதனை எமது அடுத்த தலைமுறைக்கு சொல்லவேண்டியதும் இப்படியானவர்களை எமது இளைய தலைமுறையினர் தங்களது வாழ்வியலுக்கான வழிகாட்டியாக பின்பற்றவேண்டும் என்பதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபை இந்த உயரிய பணியினை மேற்கொள்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த காரணத்தினால் யாழ். பல்கலைக்கழக சூழலில் அவருடைய சிலையினை நிறுவுவதற்கான இடத்தினை ஒதுக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் ஒரு பொருத்தமான இடத்தினை தெரிவு செய்யவேண்டும்.

அந்த வகையில் திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் அல்லது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன்னால் உள்ள நடைபாதைக்கு அருகில் இச்சிலையினை நிறுவுவதற்கான இடமாக தெரிவு செய்யலாம் என தெரிவித்தார்.

இதன்போது, திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் மாமனிதர் துரைராஜாவின் சிலையினை நிறுவுவதற்கான பொருத்தமான இடம் என சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

ஆசிரியர் பற்றாக்குறை: வவுனியாவில் போராட்டம்

18.09.2025

வவுனியா கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக சுட்டிக்காட்டியும் இதனை நிவர்த்தி செய்து தருமாறு கோரியும் பெற்றோர்கள் இன்று வியாழக்கிழமை (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பற்றாக்குறை தொடர்பாக பல முறை வலயக்கல்வி பணிமனை மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை இதற்கு ஒரு தீர்வு பெறப்படாத காரணத்தினால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து, ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கோரி அப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபொழுது விரைவில் இந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருவதாக தெரிவித்தார்.

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் சத்தியாக்கிரகப் போராட்டம்

19.09.2025

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் நேற்று (18) இரண்டாவது நாளாக பொலிசாரின் இடையூறுக்கு மத்தியில் தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

"விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளைநிலங்களை உடனடியாக திருப் பிக் கொடு", "இந்தியக் கம்பனிகளின் நில மற்றும் வளச் சூறை யாடலுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம்" போன்ற பதாதைகளை ஏந்தியவாறு சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இன்று (19) திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ள நிலையில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவே இந்த போராட்டம் இடம்பெறுகிறது.

இந்நிலையில், பொலிசார் போராட்டக்காரர்களின் இடத்தை அகற்ற முற்பட்டபோதும் கூட அவர்களால் அதனை அகற்ற முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சூரிய மின் சக்திக்கு வழங்கப்பட்ட விவசாய காணிகளை மீள பெற்றுத் தருமாறு கோரியே இந்தப் போராட்டம் இடம்பெறுகிறது.

www.sangathamil.ca

தமிழர்களின் பூர்வீக விவசாயக் காணிகள் ஆக்கிரமிப்பை அனுமதிக்க முடியாது

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

18.09.2025

வவுனியா வடக்கு வெடிவச்சகல்லு கிராம அலுவலர்பிரிவில் மகாவலி அதிகாரசபையின் பிடியிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக்காணிகள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை மற்றும் பெரும்பான்மை இனத்தவர்களால் 1000 ஏக்கர் வரையில் அடர்வனங்கள் அழிக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்களுக்கு மகாவலி அதிகாரசபை மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மகாவலி “எல்”வலய வதிவிவத் திட்ட முகாமையாளருடன் கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்வதாகவும், அக்கலந்துரையாடலின் மூலம் குறித்த திரிவைச்சகுளத்தின் கீழான தமிழ் மக்களின் பூர்வீககாணிகள் பெரும்பான்மையினத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை மற்றும் அதனை அண்டிய பகுதியில் 1000 ஏக்கர் வரையில் அடர்வனங்கள் பெரும்பான்மை இனத்தவர்களால் அழிக்கப்பட்ட பிணக்குகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படுமென மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளர்.

குறித்த திரிவச்சகுளம் விவகாரம் தொடர்பில் மகாவலி அதிகாரசபையினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தலைமையிலான குழுவினருக்குமிடையில் புதன்கிழமை (17) கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போதே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியாவடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட வெடிவச்சகல்லு கிராமசேவகர் பிரிவிலுள்ள திரிவைச்சகுளத்தின் கீழான தமிழர்களின் பூர்வீக வயல்நிலங்கள் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் ஆக்கிரமிக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தவர்களுக்கு குத்தகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு அங்கு பெரும்பான்மை இனத்தவர்கள் தற்போது நெற்பயிற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அண்மையில் குறித்த திரிவைச்ச குளத்தை அண்டியுள்ள சுமார் 1000 ஏக்கர் வரையிலான அடர்வனப் பகுதிகள் பெரும்பான்மையினத்தவர்களால் அழிக்கப்பட்டு பாரிய ஆக்கிரமிப்பு முயற்சியொன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் முறைப்பாட்டிற்கு அமைவாக கடந்த 07.07.2025திகதியன்று அன்று பெரும்பான்மை இனத்தவர்களின் ஆக்கிரமிப்பிலுள்ள தமிழர்களின் பூர்வீக திரிவச்சகுளம் மற்றும் பெரும்பான்மை இனத்தவர்களால் 1000 ஏக்கர் வரையில் அழிக்கப்பட்டுள்ள திரிவச்ச குளத்தை அண்டிய பகுதி உள்ளிட்ட இடங்களுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாக கள விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 16.07.2025 அன்று மகாவலி அபிவிருத்த அதிகாரசபையின் ‘எல்’ வலய வதிவிடத் திட்ட முகா மையாளர் அலுவலகத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் வெடிவச்சகல்லு கிராமமக்கள் உள்ளிட்ட குழுவினர் நேரடியாகச் சென்று மகாவலி “எல்”வலய வதிவிடதிட்ட முகாமையாளருடன் கலந்துரையாடல் நடாத்தியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் பெரும்பான்மை இனத்தவர்கள் பத்துப்பேருக்கு திரிவைச்சகுளம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு நெற்செய்கைக்காக மகாவலி அதிகாரசபையால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினரால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு பெரும்பான்மை இனத்தவர்களால் அழிக்கப்பட்ட அடர் வனப்பகுதி தொடர்பில் வனவளத் திணைக்களத்துடன் இணைந்து வழக்குக்குத் தொடரவுள்ளதாகவும் இதன்போது தெரியப்படுத்தப்பட்டது.

எனினும் இதுவரை மகாவலி அபிவிவிருத்தி அதிகாரசபையால் இவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இத்தகையசூழலில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு குத்தகை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்ட திரிவைச்ச குளத்தின் கீழான வயல் நிலத்திலும், அதனை அண்டியுள்ள சட்டவிரோதமாக அடர் வனப்பகுதி அழிக்கப்பட்ட பகுதியிலும் தற்போது பெரும்போக நெற்செய்க்கான பண்படுத்தல் வேலைகளை பெரும்பான்மை இனத்தவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

இத்தகையசூழலில் ஏற்கனவே கடந்த 16.07.2025 அன்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட உத்தரவாதம் இதுவரை நிறைவேற்றப்படாமை குறித்து கேட்டறிவதற்கு 17.09.2025 இன்று மகாவலி அதிகாரசபையின் “எல்” வலய திட்ட முகாமையாளர் காரியாலத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வவுனியாவடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் தனுசன், துரைராசா தமிழ்செல்வன், நீதிக்கான மக்கள் அமைப்பின் பிரதிநிதி கோசலை, வெடிவைச்சகல்லு கிராமத்தைச்சேர்ந்த மக்கள் உள்ளிட்ட குழுவினர் சென்றிருந்தனர்.

இந்நிலையில் மகாவலி அதிகாரசபையின் “எல்” வலய வதிவிட திட்ட முகாமையாளர் அலுவலகத்தில் இல்லாத நிலையில், குறித்த அலுவலகத்தில் அடுத்த நிலையிலுள்ள அதிகாரியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையிலான குழுவினர் கலந்துரையாடியிருந்தனர். இதன்போது இதுவரை திரிவைச்ச குளம் வயல்காணிகள் மற்றும், அதனைஅண்டியபகுதியில் இடம்பெற்ற பாரிய சட்ட விரோத காடழிப்பு தொடர்பில் மகாவலி அதிகாரசபை நடவடிக்கை எடுக்காமைகுறித்து இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் குறித்த பிணக்குத்தொடர்பில் ஆராய்வதற்கு மகாவலி “எல்” வலய திட்ட முகாமையாளருடன் பிறிதொரு நாளில் கலந்துரையாடல் ஒன்றினை ஒழுங்குசெய்வதாகவும், குறித்த கலந்துரையாடலினூடாக இந்த பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தாம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது மக்களின் பூர்வீக விவசாயக்காணிகளை அபகரிப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. அபகரிக்கப்பட்ட எமது மக்களின் காணிகள் விடுவிக்கும்வரை எமது தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகிப்போம் என்றார்.



சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல;
அது இரத்தம் சிந்தி வெற்றிகொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

கொழும்பில் சிறீலங்கா ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் மன்னார் மக்கள் போராட்டம்

19.09.2025

மன்னார் காற்றாலை திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் சிறீலங்கா ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னாரில் புதிதாக அமைக்கப்படவுள்ள 14 காற்றாலை மின் கோபுர வேலைத்திட்டங்கள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்,

மன்னார் மாவட்டத்தில் கணிய மணல் அகழ்விற்கு எவ்வித அனுமதியும் வழங்கக்கூடாது,

ஏற்கனவே மன்னார் மாவட்டத்தில் மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளமையினால் மன்னார் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே மக்களின் பிரச்சினைகள் உடனடியாக நிவர்த்தி செயயப்பட வேண்டும். ஆகிய 3 கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுகளுக்கு எதிராக மன்னாரில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்றுடன் 47 ஆவது நாட்களை கடந்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தால் இதுவரை எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் கொழும்பு ஜனாதிபதி செயலகத்திற்கு முன் இன்று மக்கள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் தென் பகுதியில் உள்ள சிங்கள சகோதரர்கள், மத தலைவர்கள், புத்திஜீவிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், மன்னாரில் இருந்து வந்த சுமார் 500க்கும் மேற்பட்ட மக்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

காங்கேசன்துறை துறைமுகம்: அபிவிருத்திசாத்தியமில்லை!

ஜேவிபி அமைச்சர விமல் ரட்ணாநாயக்கா

19.09.2025

காங்கேசன்துறை துறைமுத்தின் அபிவிருத்திகள் சாத்திய மற்றதென ஜேவிபி அமைச்சர் விமல் ரட்ணாநாயக்கா தெரிவிததுள்ளார்.

யாழ். காங்கேசன்துறைமுகத்தை வணிகத்துறை முகமாக அபிவிருத்தி செய்ய மாட்டோம். ஏனெனில் வணிகத்துறை முகமாக அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான காரணிகள் ஏதுவாக இல்லாத நிலையில் அம்பாந்தோட்டை மற்றும் ஒலுவில் துறைமுகங்கள் போன்று காங்கேசன்துறை முகத்தை மாற்ற எமது அரசாங்கம் விரும்பவில்லை. அதுமட்டுமல்லாது காங்கேசன் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா வழங்கிய நிதி போதாது என தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் சிவஞானம் சிறீதரன் இந்தியாவிடம் வேண்டுமானால் நாங்கள் பேசி மேலதிக நிதியை பெற்று தருகிறோம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுங்கள் என கேட்டிருந்தார்.

பதில் வழங்கிய அமைச்சர் இந்தியாவிடம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பல தடவைகள் பேசி உள்ளார் நாங்களும் பேசியுள்ளோம் ஆனால் வணிகத் துறைமுகமாக அதை மாற்றுவதற்கு முடியாது என தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பங்கேற்புடன் நடைபெற்றக்கூட்டத்தில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

www.sangathamil.ca

திருமலை முத்து நகர் விவசாயிகள் மூன்றாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர்

19.09.2025

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள், அபகரிக்கப்பட்ட விவசாய காணிகளை மீள பெற்றுத் தருமாறு கோரி, மூன றாவது நாளாக இன்று (19) திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றனர்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதும் கூட இவ்விவசா யிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் விவசாய காணிகளை சூரிய மின் சக்தி உற் பத்திக்காக தனியார் கம்பனிகளுக்கு இலங்கை துறைமுக அதிகார சபையினர் இணைந்து வழங்கியதையடுத்து, முத்து நகர் விவசாயிகள் பல போராட்டங்களை நடத்திய போதும், அவை வெற்றியளிக்கவில்லை.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும் போராட்டம் நடத்தி யுள்ள நிலையில் தற்போது சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம் பித்துள்ளனர். தங்களுடைய விவசாய நிலங்கள் தங்களுக்கு வேண்டும் எனக் கோரி, இதனை முன்னெடுத்துள்ளனர்.

"விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு", "இந்திய கம்பனிகளின் நில மற்றும் வளத் திருட்டுக்கு எதிரான போராட்டத்தை தொடங்குவோம்" போன்ற பல பதாதைகளை ஏந்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் கலந்துகொண்ட முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் கருத்து தெரிவிக்கையில்,

முத்து நகர் விவசாய சம்மேளனங்கள் கடந்த 150 வருடங்க ளாக பாவித்த விவசாய நிலங்களை பெற்றுக்கொள்ள என்னை விவசாயிகள் அழைத்தார்கள். இருந்தபோதிலும் உரிய மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரை சந்திக்க முடியவில்லை.

மாவட்ட தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினரே அங்கு இருந்தார். அது சாத்தியமாகவில்லை. முத்து நகர் பிரதேச முதல் குடியேற்றம் 1973இல் ஏ.எல்.அப்துல் மஜீத் அவர்களால் ஆயிரக் கணக்கான விவசாயிகளை விவசாயம் செய்ய கிணறுகள், வீடுகளை அமைத்து 1972, 1973 தொடக்கம் 1977 வரை ஐந்து வருடங்களாக வழங்கியிருந்தார். அதன் பிற்பாடு துறைமுக அமைச்சராக இருந்த லலித் அதுலத் முதலி அவர்கள் திரு கோணமலை மாவட்டத்தில் இரு முறை தாக்குதலுக்குள்ளான போது மக்கள் குடியிருப்புக் காணிகளை சுமார் பத்தாயிரம் ஏக்கர் காணிகளை துறைமுக அதிகார சபைக்கு வழங்கினார்.

அதன் பின் அமைச்சர்களாக வந்த எம்.எச்.எம்.அஷ்ரப், றவூப் ஹக்கீம், எம்.ஈ.எச்.மஹ்ரூப் போன்றோரின் காலப்பகுதியில் இதை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காதபோது நான் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் இருந்தபோது ஐந்து வருடங்கள் அந்த நேரத்தில் மஹிந்த சமரசிங்க, சாகல ரத்நாயக்க அமைச்சர் அவர்களும் அதற்கு முன்னர் அர்ஜுன ரணதுங்கவும் இங்கு வருகை தந்தபோது மக்களுடைய காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என கூறியபோது அவர்கள் ஆதரவு தெரிவித் தார்கள். அப்போதைய மாவட்ட செயலாளராக இருந்த புஷ்ப குமார அவர்கள் இந்த காணிகள் அனைத்தையும் விடுவிப் பதாக கூறி ஐந்து வருடங்கள் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்களின்போதும் தீர்மானங்கள் எடுத்தோம்.

தற்போது வர்த்தமானி ஊடான அறிவிப்பு செய்யப்படவில்லை

என தற்போதையவர்கள் கூறுகின்றனர்.

இன்று இதனை இது தொடர்பான அறிக்கைகளை ஒப்படைக்க முற்பட்டபோது அது பயனளிக்கவில்லை. இதனை விவசாயிக ளிடம் ஒப்படைத்துச் செல்கிறேன். எங்கு வேண்டுமானாலும் இது தொடர்பில் குரல் கொடுக்க முன்வருவேன். இதனை அரசியலுக்காக பேசவில்லை. அரசியலுக்கு என்று சோரம் போவதாக இருந்தால், என்னை விட்டு விடுங்கள். தொடர்ந்தும்

உங்கள் காணிகளைப் பெற அரசாங்கத்திடம் தீர்வு பெற முயற்சியுங்கள் என்றும் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

திருகோணமலையில் சிறீலங்காப் பொலிசாரினால் எடுத்து செல்லப்பட்டுள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் தலீபனின் திருவுருவப் படம்

19.09.2025

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவேந்தல் கடந்த நான்கு நாட்களாக திருகோணமலையில் இடம்பெற்று வந்த நிலையில் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை காலை சிறீலங்காப் பொலிசாரால் ஈகைச்சுடரின் திருவுருவ படம் அகற் றப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களால், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படம் சிவன் கோயிலடியில் நிறுவப்பட்டு தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் மாலை 5.15 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு மேற் கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் இன்றைய நாள் திருகோணமலை பிரதான பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகளால் குறித்த நினைவு படம் முறையற்ற விதத்தில் அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் செயற்பாட்டாளர்கள் கடும் கண்டனத்தை தெரி வித்துள்ளனர்.

முகமாலையில் கண்ணிவெடி அகற்றல் நிறைவு!

25.09.2025

முகமாலையில் கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த கண்ணிவெடி அகற்றும் பணிகள் தற்போது முற்றாக நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போரின் பின்னர், முகமாலை, வேம்பொடுகேணி, இத்தாவில், கிளாலி ஆகிய பகுதிகளில் இருந்து கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

கடந்த 14 வருடங்களாக சுமார் மூன்று இலட்சத்துக்கும் மேற் பட்ட கண்ணிவெடிகள் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ள நிலை யில், அந்தப் பணிகளை முன்னெடுத்த 'ஹலோ ரஷ்ட்' நிறு வனம் தற்போது இறுதிக்கட்டப் பணிகளையும் நிறைவுசெய்து அங்கிருந்து வெளியேறியுள்ளது. கண்ணிவெடிகள் காரணமாக விடுவிக்கப்படாமல் இருந்த காணிகளை விடுவிப்பதற்கும் தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

“பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!” ஆவணக் காட்சியகம் நல்லூரில் திறப்பு

21.09.2025

தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் முகமாக அவரின் வரலாற்றினை எடுத்தியம்பும் “பார்த்திபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!” எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் 20ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றலில் மலர் வணக்கம் செலுத்தப்பட்டு வரலாற்று ஆவணக் காட்சியகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆவண காட்சியகத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலை மூத்த போராளி பஷீர் காக்காவால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன் சுடரேற்றி மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் வரலாற்று புகைப்படங்கள், பத்திரிகை ஆவணங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை, கனிய மணல் செயல்பாடுகளுக்கு எதிராக வவுனியாவில் இருந்து அணி திரண்ட இளையோர்!

21.09.2025

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் இன்று சனிக்கிழமை (20) 49 ஆவது நாளாக தொடர்ந்து செல்கின்ற நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா பம்பைமடுவில் இருந்து அருட்தந்தை அருட்சகோதரிகள் தலைமையில் இளையோர் குழு ஒன்று வருகை தந்து தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

குறித்த குழுவினர் சனிக்கிழமை (20) மாலை வருகை தந்து குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட இளையோர் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக எழுதப்பட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரில் காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்திற்கு நாளாந்தம் மன்னார் மாவட்டம் உள்ளடங்களாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கிராம மக்கள், பொது மற்றும் சிவில் அமைப்புக்கள் தொடர்ச்சியாக ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையிலே இன்றைய தினம் சனிக்கிழமை (20) மாலை வவுனியா பம்பைமடுவில் இருந்து அருட்தந்தை அருட் சகோதரிகள் தலைமையில் இளையோர் குழு ஒன்று வருகை தந்து தமது ஆதரவை வழங்கி அமையும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு படுகொலையின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல்

21.09.2025

மட்டக்களப்பு மாவட்டம் பழம்பெரும் தமிழ் கிராமமான புதக் குடியிருப்பு கிராமத்தில் 1990, செப்டம்பர் 21 இல் சிறீலங்கா இராணுவமும் முஷ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்து கூட்டாக 17 தமிழர்கள் கூரிய ஆயுதங்களினால் வெட்டியும், குத் தியும், துப்பாக்கியால் சுட்டும் தமிழினப்படுகொலை செய்யப் பட்டனர்.

அன்று வெள்ளிக்கிழமை (21.09.1990) இரவு புதுக்குடியிருப்பு கிராமத்துக்குள் புகுந்த சிறீலங்கா இராணுவமும் இராணுவத் துடன் இணைந்த முஷ்லிம் ஊர்காவல் படையினரும், வீடு களின் உறங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் 45 பேரை, தூக் கத்திலிருந்து எழுப்பி விசாரணைக்கென, கடற்கரை பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

விசாரணக்கென இவ்வாறு அழைத்துச் சென்றவர்களை நோக்கி இராணுவமும், முஷ்லிம் கும்பலும் அவர்களை வெட்டி யும், துப்பாக்கியால் சுட்டும் வெறியாட்டம் ஆடினர். மக்கள் அல்லோலப்பட்டனர், ஊரெல்லாம் கூக்குரல் சத்தம் அதில் சிலர் உயிர் தப்பியுள்ள போதிலும் அன்று நள்ளிரவு வேளை பெண்கள், சிறுவர்கள் உட்பட 17 பேரை கொடூரமாகக் கொலை செய்யப்பட்டும் பலர் படு காயங்களுடனும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் கொல்லப்பட்டவர்கள்:

1.சி.கதிராம்ப்போடி
2.பா.நல்லையா
4.மு.இந்திரன்
5.ஆ.கதிர்காம்ப்போடி
6.வே. புலேந்திரன்
7.செல்வன்.அ. வரதராசா
8.செல்வன்.சா.சிவகுமார்
9.செல்வன்.சா.உதயகைமார்
10.செல்வி மு.தருமவதி
11.செல்வி க.கமலேஸ்வரி
12.செல்வி.லோகநாயகி
13.திருமதி கமலேஷ்வரி
14.திருமதி செ.சிவசோதி
15.திருமதி க.செல்லம்மா
16.திருமதி க.அழகம்மா
17.திருமதி க.மகேஷ்வரி

இந்தப்படுகொலையில் 09, ஆண்களும்08 பெண்களும் மொத்தம் 17, பேர் இதில் சிறு குழந்தைகளும் உள்ளனர்.

இன்று 2025 செப்டம்பர் 21இல் 35 ஆவது ஆண்டு கடந்தும் இந்த இனப்படுகொலைக்கும் இதுவரை நீதியில்லை.

மன்னாரில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவாக வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி

21.09.2025

மன்னார் மாவட்ட தாயகச் செயலணியின் ஒழுங்கமைப்பில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆம் ஆண்டு ஞாப கார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டித்தொடர் 21.09.2025இன்று மன்னார் வேட்டையாமுறிப்பு, வள்ளுவர்

விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் வெற்றிக்கிண்ணப் போட்டித்தொடரின் இறுதிப்போட்டியில் முதன்மை விருந் தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

அந்தவகையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திரு உருவப் படத்திற்கு முன்பாக பொதுச்சுடர் மற்றும் நினைவுச்சுர் ஏற்றப்பட்டதுடன், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருஉருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர் வணக்கமும் செலுத்தப்பட்டு உணர்வெழுச்சியுடன் இறுதிப் போட்டிகள் ஆரம்பமாகின.

குறித்த இறுதிப்போட்டியில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகமும், சின்னப்பண்டிவிரிச்சான் சென் சேவியர் விளையாட் டுக்கழகமும் மோதின.

அந்தவகையில் குறித்த இறுதிப்போட்டியில் சின்னப்பண்டி விரிச்சான் சென்சேவியர் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆம் ஆண்டு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டமை யும் குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் காற்றாலை, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக தீப்பந்தப் போராட்டம்!

22.09.2025

மன்னாரில் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுத்து வரும் போராட்டம் ஞாயிற்றுக்கிழமை (செப்டெம்பர் 21) 50 ஆவது நாளை எட்டிய நிலையில் தீப்பந்தப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், இளைஞர் மற்றும் மன்னார் மக்கள் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த போராட்டம் ஞாயிற்றுக்கிழமை 50 ஆவது நாளை எட்டிய நிலையில் நேற்று இரவு தீப்பந்தம் ஏந்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது கையில் தீ பந்தத்தை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த தீப்பந்த போராட்டத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், இளையோர், பொது மக்கள் என நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நல்லூர் இராசதானியின் மந்திரிமனையினைப் பாதுகாக்குமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம்

22.09.2025

“தமிழர்களின் தொன்மையினை எடுத்தியம்பும் நல்லூர் இராச தானியின் மந்திரிமனையினைப் பாதுகாத்து மீளுருவாக்கம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கோரி திங்கட்கிழமை (செப்டெம்பர் 22) குறித்த மந்திரி மனைக்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மந்திரி மனையானது கடந்த சில தினங்களுக்கு முன் னர் பெய்த மழை காரணமாக உடைந்து விழுந்துள்ளது. இந் நிலையில் அதனை பாதுகாக்குமாறு கோரியே இந்த போராட் டமானது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “இலங்கை அரசே தமிழர்களின் மரபுரிமை சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடு, இந்த இடத்தை உரிமை கோருபவரே மந்திரி மனையை இடித்து விட்டு உல்லாச விடுதியா கட்டப்போகின்றார், தொல்லியல் திணைக்களமே பௌத்த சின்னங்களை பாதுகாப்பதைப்போல் தமிழரின் மரபுரிமை சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடு, மன்னன் சொத்து மக்கள் சொத்து தனிநபரே உரிமை கொண்டாடாதீர்கள்” போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு ஊர்தி முன்னால் பட்டாசு கொழுத்திய இளைஞரை கைது செய்த சிறீலங்காப் பொலிசார்!

23.09.2025

யாழ். பருத்தித்துறை நகரை சென்றடைந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு ஊர்தியின் முன்னால் பட்டாசு கொழுத்திய இளைஞர் இன்று (23) சிறீலங்காப் பொலிசால் கைது செய்யப்பட்டனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவு நாள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் “திலீபன் வழியில் வருகிறோம்” என்று ஊர்தி பவனியொன்று முன்னெடுக்கப்படுகிறது.

இந்த பவனி இன்று (23) பிற்பகல் 1.30 மணியளவில் பருத்தித் துறை நகரப் பகுதியை வந்தடைந்துள்ளது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி கடந்த ஒரு வாரகாலமாக தமிழர் தாயக பகுதி களில் மலர் வணக்கத்துகாக பவனி செல்லும் நிலையில், பருத் தித்துறை நகர் மக்களின் மலர் வணக்கத்துக்கு இன்றைய நாள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதன்போது பருத்தித்துறை நகர சபை தவிசாளர் வின்சன் டிபோல் டக்ளஸ் போல் மற்றும் பொதுமக்கள், பாடசாலை மாண வர்கள் என பலரும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்துக்கு வணக்கம் செலுத்தினர்.

இதன்போது பருத்தித்துறை நகரப் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவர் ஊர்தியின் முன் பகுதியில் பெருந்தொகையான பட்டா சுகளை கொழுத்திய போது பருத்தித்துறை நகர் முழுவதும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து இச்சம்பவத்துடன் தொடர்புடைய இளை ஞரை சிறீலங்காப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

தியாகி திலீபன் 1987இல் சொன்னதை 2025இல் ஈழத்தமிழர்கள் செய்யவேண்டும்!

மட்டக்களுப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன்

22.08.2025

1987 செப்டம்பர் 15 முதல் 26 வரை நல்லூர் முருகன் ஆலய முன்றலில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட தியாகி திலீபன் இறுதியாக ஆற்றிய உரையில்.. "என் அன்பிற்கினிய மக்களே என்னால் பேச முடியவில்லை. பேச முடியாத நிலையில் இருந்தும் என்னை நீங்கள் தரும் உற்சாகம் பேச வைக்கிறது. நான் மீட்கப்பட முடியாத இடத்திற்கு போய்க் கொண்டிருக்கிறேன்.

நான் வாழ்நாள் முழுவதும் நேசித்த என் தேசத்து மக்களே, உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும். இங்கே ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். மறைந்த போராளிகள் 650 பேருடன், 651ஆவது போராளியாக நான் மேலே இருந்து மலரும் தமிழீழத்தை மகிழ்வோடு பார்ப்பேன். போராடத் தயாராகுங்கள். எனக்கு விடை தாருங்கள்." என கூறிவிட்டே ஆகதியானார்.

அவர் அப்படிக்கூறி 18 நாட்களுக்குப் பின்னர் தான் 1987 அக்டோபர் 10இல் தமிழீழ விடுதலைப் புலிகள் - இந்தியப்படைகளுடன் போர் ஆரம்பித்தனர் அதன் பின்னர் 1990 ல் இலங்கைப்படையினருடன் போர் ஆரம்பித்து மரபுப்படையணிகளுடன் வளர்ச்சியடைந்து பல்வேறு சமர்கள் செய்து பின்னர் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சர்வதேச சதி மூலமாக 2009 மே 18ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் மௌனித்தது போர் மௌனித்து 16 வருடங்களாகியும் தியாகி திலிபன் கூறிய மக்கள். புரட்சி என்பதை எந்த ஒரு தமிழ்தேசிய கட்சிகளும் தலைமை தாங்கி முன் னெடுக்கத்தவறிவிட்டன.

ஆட்சியில் இருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, மைத்திரி பால, கோட்டபாய, ரணில் விக்கிரமசிங்க வரை தமிழர்களுக்கு எந்த அரசியல் தீர்வும் வழங்க தயாக இருக்கவில்லை. தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசின் ஜனாதிபதி அநுராவும் அவருடை ஆட்சியும் சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கை இருந்தாலும் தமிழ் மக்களை பொறுத்தவரை குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கை அற்ற ஒரு ஜனாதிபதி யாகவே அநுராவும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை வடகிழக்கில் செய்து கொண்டுள்ளார்.

தற்போது செம்மணியில் 240, தாண்டி தமிழர்களின் எலும்புக்கூடுகள் இனப்படுகொலைக்கு சாட்சிய மாக வெளிவந்துகொண்டுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு சென்ற ஜனாதிபதி அநுரா அவர்கள் கச்சதீவுக்கு சென்று படம் காட்டியவர் செம்மணி படுகொலை புதைகுழிக்கு சென்று பார்ப்பதற்கு கூட மனம் வரவில்லை.

அவர் பார்ப்பதால் நீதிகிடைக்கும் என்று இல்லை தமிழ் மக்களுக்கு அவர் பார்த்தார் என்ற ஒருவகை திருப்தி ஏற்பட்டிருக்கும் அதுகூட அவர் செய்யவில்லை, தற்போது ஜெனிவாவில் மனித உரிமை ஆணைக் குழுவில் 60 வது கூட்டத்தொடர் நடக்கும் இந்த சந்தர்பத்தில் ஒட்டு மொத்த தமிழர்களும் சர்வ தேச விசாரணை தேவை என்ற தொடர் அழுத்தம் கொடுக்கும்போது உள்நாட்டு பொறிமுறைதான் தீர்வு என வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் எல்லோரும் ஜெனிவாவுக்கு படை எடுத்து சென்று வலியுறுத்திவருவதை காணமுடிகிறது.

இவ்வாறான சந்தர்பத்தில் ஈழத்தமிழர்கள் ஒற்று மையாக ஒரேகுரலாக மக்களை அணிதிரட்டி தியாகி திலீபன் 1987இல் இதே மாதம் 38, ஆண்டுகளுக்கு கூறிய மக்கள் புரட்சிக்காக ஈழமக்கள் தமிழ் தேசிய கட்சிகள் அணிதிரள வேண்டிய தேவை இப்போது தமிழ் மக்களுக்கு அவசியம் உண்டு.

ஆயுதம் ஏந்தாமல் அறப்போராட்டம் மூலம் ஒருதுளி நீர் கூட அருந்தாமல் உறுதியாக தமது உயிரை இனத்துக்காக தியாகம் செய்யும் போது அவர் கூறிய வார்த்தையை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வோர் தமிழருக்கும் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் அரசியலுக்காகவும், வாக்கு அரசியலுக்காகவும் தமிழ் தேசிய கட்சிகள் செயல் படுவதை விட்டு விடுதலை அரசியலுக்காக மக்களை அணிதிரட்டும் காலம் 16 வருடம் கடந்தும் செய்ய தவறினால் தமிழ்மக்களில் இருந்தும், குறிப்பாக தமிழ் இளைஞர்கள் மத்தியில் இருந்தும் தமிழ்த்தேசிய உணர்வுகள் அற்ற மரக்கட்டைகளாக தமிழினம் மாற்றப் படுவது நிச்சயமாகும்.

இதற்கு உதாரணமாக யாழ்மாவட்டத்துக்கு அடிக்கடி போய் வரும் ஜனாதிபதியும், பிரதமரும் அபிவிருத்தி திட்டங்களை மட்டும் ஆரம்பித்து பொருளாதாரம் தொடர்பாக மட்டும் உரையாடிச் செல்கின்றனர்.

இனப்பிரச்சனை தொடர்பாகவோ, இனப் படுகொலை தொடர்பாகவோ அவர்களால் வாய் திறக்க முடியவில்லை. ஆளும் தரப்பு தேசிய மக்கள் சக்தி அரசில் உள்ளவர்கள் அப்படி இருந்தாலும் எதிர்கட்சி தலைவராக உள்ள சஜீத் பிரமதாசாவும் தமிழ் மக்கள் தொடர்பாக ஏன் செம்மணி புதை குழி தொடர்பாக இது வரை அவரும் வாயே திறக்கவில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை தோற்கடிக்க கருவியாக தமிழரசுக்கட்சியில் சிலர் அவரை பாவிந்தனர் அந்த நன்றிக்காகவது சஜீத் தமிழ் மக்கள் தொடர்பாக எதுவும் பேசாமல் தமது சிங்கள இன வாதத்தை நிருபித்து விட்டார். எனவே 38ஆவது ஆண்டு தியாகி திலீபனுக்கு வணக்கம் செலுத்தும் தமிழ் மக்கள் அவர் கூறிய மக்கள் புரட்சியினை செயல் வடிவம் கொடுப் பதே அவருக்கு உண்மையாக நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

எங்களுடைய மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டு வர முடியாது

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்

22.09.2025

"எங்கள் மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டு வரமுடியாது. நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்ற மமதையை விட்டு முழுமையான தீர்வுக்கு அரசாங்கம் முன்வர வேண்டும்" என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று (23) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "2009 இறுதி யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு 16 ஆண்டுகளாக நீதிக்காக தமிழினம் ஏங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் தமிழர் தரப்பிலேயே பலரை குழப்பம் செய்யும் விதத்தில் சிலரின் நடவடிக்கை காணப்படுகிறது.

சர்வதேசம் எதையுமே செய்யாது என்ற விசம பிரச்சாரத்தின் மூலம் அழுத்தம் இல்லாத சூழலை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

நான் 15 தடவைக்கு மேல் ஜெனிவா கூட்டத்தொடருக்கு சென்றவன் என்ற அடிப்படையில், நாட்டிலிருந்து கோரிக்கை வர வேண்டும். உள்நாட்டு மக்கள் போதிய அளவு அக்கறை காட்டவில்லை. புலம்பெயர் நாடுகளில் இருந்து வரும் அழுத்தம் மட்டும் போதாது என்று கருத்துப்பட சொல்லி இருந்தார்கள்.

நடைபெற்றது இனப்படுகொலை என்று சொல்வதற்கு போர் முடிவடைந்து ஏறக்கூடிய ஏழு ஆண்டுகள் எடுத்தன. 2009 இல் போர் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்தே 3 பிரதான கட்சிகள் இணைந்து இனப்படுகொலை என கையெழுத்திட்டு ஐ.நா.வுக்கு கடிதம் அனுப்பின.

2015 இல் வடக்கு மாகாண சபை இனப்படுகொலை தீர்மானத்தை நிறைவேற்றியபோதும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் வடக்கு மாகாண சபை இருந்த போதும் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாத நிலையில் இருந்தது.

இனப்படுகொலையை நிரூபிக்க முடியாது என சொன்னவர்கள் தற்போது செம்மணிக்கு பிறகு இனப்படுகொலை நிருபிக்கப் படலாம் என்ற கருத்தை எங்கள் தரப்பில் இருந்து சொல்கின்றார்கள்.

நாங்கள் போராடுவதால், அழுத்தம் கொடுப்பதால் எதுவும் ஆகாது என்று இல்லை. எங்களுக்கு அதிஷ்டம் இருப்பது போல செம்மணி மனிதப் புதைகுழி தோண்டும்போது இருநூறுக்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் இன்று வெளிவந்துள்ளது. இதை குழப்புவதற்கு பலர் செயற்பட்டாலும் நாங்கள் அதனை வெளிப்படுத்த தயாராக இருக்க வேண்டும்.

இனிமேல் இனப்படுகொலை நடைபெறாது என்பதை உறுதிப் படுத்தக்கூடிய விதத்தில் ரோம் உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு பிராந்தியங்களை ஏற்று ஐ.நா.வின் பொறிமுறை ஊடாக எமக்கான பரிகாரநீதி வழங்கப்பட வேண்டும். சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் எமக்கு தீர்வு வருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கிறது.

எங்கள் மக்களின் சம்மதம் இல்லாமல் ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டு வர முடியாது. நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்ற மமதையை விட்டு முழுமையான தீர்வுக்கு அரசாங்கம் முன்வர வேண்டும். சர்வதேசத்திடம் நீதியை கேட்கவும், தொடர்ந்து போராடவும் தமிழ் மக்கள் தொடர்ந்து பயணிக்க வேண்டும்" என்றார்.

செல்லுங்கள் – வீழ்த்துங்கள் –வெல்லுங்கள்
இதுதான் போரின் உண்மைத் தாற்ப்பரியம்.
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-
www.sangathamil.ca

வடமராட்சி நாகர்கோவில் மகாவித்தியாலய மாணவர் படுகொலையின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல்

22.09.2025

22.09.1995 வடமராட்சிகிழக்கையே பெரும் சோகத்தில் ஆழ்த்திய நாளும் வடமராட்சிகிழக்கில் நாகர்கோவில் மண்ணில் இடம்பெற்ற. மாணவர் இனப்படுகொலையை சிறீலங்கா விமானப்படையின் புக்காரவிமானங்கள் நடாத்தியுள்ளது அன்றைய நாட்களில் வடமராட்சிகிழக்கில் அதிகளவான மக்கள் நாகர்கோவில் கிராமத்தின் J/425, J/424, J/423 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் வாழ்ந்து வந்தனர் கிட்டத்தட்ட 3000க்கு மேற்ப்பட்ட குடும்பங்கள். அங்கிருந்தனர் 1990 காலப்பகுதியில் கிழக்கு மாகாணமான மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட மக்களும் வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவு தட்டுவன்கொட்டி கிராம மக்களும் யாழ்ப்பாணத்தின் வலிவடக்கு மயிலிட்டி, காங்கேசன் துறை, பலாலி, வசாவிளான், வளலாய் போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயந்தமக்களும் 1990தீவகத்தை இராணுவம் ஆக்கிரமித்தபோது அங்கிருந்த தப்பி வந்தமக்களும் 1991.07.14 காலப்பகுதியில் ஆனையிறவை மீட்ப்பதற்க்காக புலிகள் தொடுத்தபோரின் போது சிக்கிய படைகளை மீட்க்க வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணியில் இராணுவம் கடல் மூலம் தரையிறங்கியபோது வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி போன்ற கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும் 1992 இல் மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், பொன்னாலை, மூளாய், சேந்தாங்குளம் பகுதிகளைசேர்ந்த மக்களும் குறிப்பாக கடல்த்தொழிலை தமது வாழ்வாதரமாய் கொண்டமக்கள் அங்கு குடியேறியிருந்தார்கள் இந்த மக்களுக்கு தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் முகாம்களை அமைத்துக்கொடுத்திருந்தது.

முகாம்களான
1.மட்டக்களப்பு முகாம்
2.திருகோணமலை முகாம்
3.ஆனையிறவுமுகாம்
4.தட்டுவன்கொட்டிமுகாம்
5.பலாலிமுகாம்
6.காங்கேசன்துறைமுகாம்
7.வெற்றிலைக்கேணிமுகாம்
8.ஆழியவளைமுகாம்
9.மாதகல் முகாம்
10.இளவாலைமுகாம்
இருந்து வந்தது இங்குள்ள அனைத்து மாணவர்களுக்கும் கல்வியை கற்பிக்கும் பாடசாலைகளாக நாகர்கோவில் மாகாவித்தியாலயமும் நாகர்கோவில் தெற்க்கு ஆரம்ப பாடசாலையுமே இருந்து வந்தது நாகர்கோவில் ம.வியில் கிட்டத்தட்ட. 2500 க்கு மேற்ப்பட்ட மாணவர்கள் கல்விகற்றார்கள் அந்த நாட்களில் நாகர்கோவில் கிராமம் ஒரு நகரம்போல்த்தான் இருந்தது சன நேரிசல் நிறைந்து இருந்தது சந்தை ஒன்றும் இயங்கியது அத்துடன் இந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒவ்வொருகிழமையும் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்தை வடமராட்சிகிழக்கு ப.நோ.கூ.சங்கம் 3 கிளைகள் ஊடாக வழங்கி வந்தது.

20.09.1995.அன்று முல்லைத்திவு. செம்மலைக்கடல் பரப்பில் விடுதலைப்புலிகளின் கடல் புலிகளுக்கும் கடல்படைக்கும் நடந்த சண்டையில் கடல்புலிகள் கடற்படையின் ஜரிஸ்மோனா. எனும் படைகளுக்கு பொருட்களை ஏற்றி இறக்கும் கப்பலை கைப்பற்றியிருந்தார்கள் அந்தக்கப்பலை கொண்டுவந்து வடமராட்சிகிழக்கில் தமது தளம் அமைந்திருந்த நாகர்கோவிலுக்கு கிழக்குப்பகுதியில் 3KM தொலைவில் உள்ள குடாரப்பு கடலில் கொண்டுவந்து நங்குரமிட்டிருந்தார்கள் அந்த கப்பலை இலக்கு வைத்து புக்கார விமானங்கள் தாக்குதல் நடத்தியது தாக்குதல் நடித்திய விமானங்கள் மீது கடல்புலிகள் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தார்கள் அதனால் இலக்கை அடையமுடியாத புக்காரவிமானம்கள் இரண்டும் நாகர்கோவில் கிராமத்தையும் சுற்றிவட்டமிட்டது அந்த வேளையில் அங்கு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 8ஆம் ஆண்டின் 8ஆம் நாள் நிகழ்வும் உண்ணநோன்பும் நாகர்கோவிலில் இடம்பெற்றுக்கொண்டிருந்து அப்போது புக்கார வட்டமிட்டபோது சந்தைக்கு வந்த மக்கள் நிவாரணம் பெறவந்தமக்கள் திலீபனின் உண்ண நோன்பில் கலந்து கொண்டிருந்த மக்கள் எல்லாரும் பாதுகாப்புதேடி ஓடினர் புக்கார தாழப்பறந்து வட்டமடித்தபோது பாடசாலை மாணவர்களும். சிதறி ஓடினர், ஓடிய மாணவர்களில் ஒரு குடிப்பிட்ட அளவு மாணவர்கள். அயலில். உள்ள பெரிய புளியமரத்தின் கீழ் பாதுகாப்புத்தேடிக்கொண்டனர் அப்போது அடுத்து அடுத்து இரண்டு புக்காரவிமானங்களும் ஆறுக்கு மேற்பட்ட குண்டுகளை பாடசாலையை சுற்றி வீசியது இரண்டு குண்டுகள் அந்தப்புளிய மரத்தின் மீது விழுந்து வெடித்தது சம்பவ இடத்திலே. 21 மாணவர்கள் பலியானர்கள் 35க்கு மேற்ப்பட்டோர் படுகாயம் அடைந்தனர் மாணவர்களின் வெள்ளை சீருடைகள் செங்குருதியினால் சிவப்பு சீருடைகளாக்கப்பட்டுள்ளது அத்துடன் 5 பொதுமக்களும் பலியாகினர். இந்த சம்பவத்தில் மயிலிட்டியைச்சேர்ந்த ஒருமாணவி இரண்டு கால்களையும் இழந்தார். அவர் இதன்சாட்சியாக இன்றும் இருக்கிறார். புலம்பெயர் நாட்டில் காயமடைந்த மாணவர்கள் விடுதலைப்புலிகளின் அன்பு மருத்துவ மனையினதாலும். பொதுமக்கள் ICRC தமிழர் புனர்வாழ்வுக்கழகம், கடல்புலிகள், பொதுமக்கள் அனைவருமாக இணைந்து காயப்பட்டவர்களை அம்பன் வைத்தியசாலைக்கும் அதன் பின். மந்திகை வைத்தியசாலைக்கும் கொண்டுசென்று அவர்களுக்கு வைத்திய சேவைகளை வழங்கியது. ஜரிஸ்மோனவின் இழப்புக்கு தனது பழியை தீர்த்து அப்பாவி மாணவர்களை கொண்றது சிறீலங்கா சிங்கள விமானப்படையின் புக்கார விமானம். அதன் சாட்சியாக இன்றும் பலர் இருக்கின்றார், சிலர் சுனாமியிலும் மற்றும் இறுதியுத்தத்திலும் கொல்லப்பட்டாலும். பலர் பல இடங்களிலும் இருக்கிறார்கள் அன்று மாணவியாக கடுமையாக காயமடைந்த ஒரு மாணவி இன்று ஒரு ஆசிரிகையாக மருதங்கேணி கோட்டத்தில் உள்ள பாடசாலையில் கல்விகற்ப்பிக்கின்றர். இந்த இனப்படுகொலையை என்றைக்கும் மறக்காது வடமராட்சி கிழக்கு மண்ணும் மக்களும் கண்ணீருடன் கசியும் இதயத்துடன் …

செல்வன் மயில்வாகனம் கணகநாதன்
செல்வன் இராமநாதன் கோபிதரன்
செல்வன் சுந்தரலிங்கம் பழனி
செல்வன் நாகமுத்து செந்தில்வேல்
செல்வன் கிருஷ்ணகுமார் தவசீலன்
செல்வன் இராசரத்தினம் உமாகாந்தன்
செல்வி அல்போன்ஸ் அமலவிஜி
செல்வி இரவிந்திரராசா அமிர்தா
செல்வி இராசரத்தினம் கவிதா
செல்வி இராமநாதன் மேதினி
செல்வி மார்க்கண்டு நாகலோஜினி
செல்வி பாலச்சந்திரன் ரஜிதா
செல்வி தாமோதரம் சகுந்தலா
செல்வி இராமச்சந்திரன் சங்கீதா
செல்வி சிதம்பரப்பிள்ளை சசிருபி
செல்வி செல்வகுலசிங்கம் செல்வதி
செல்வி குகசரவணமலை தர்சினி
செல்வி சுந்தரலிங்கம் தர்சினி
செல்வி பூலோகராசா துஷாந்தினி
செல்வி நவரத்தினசாமி உமாதேவி
செல்வி தர்மலிங்கம் துஷந்தினி ஆகிய மாணவச் செல்வங்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

- நினைவுப் பகிர்வு
இ.முரளிதரன், வடமராட்சிகிழக்கு
21.09.2025

குறிப்பு: இன்று குறித்த நினைவு வணக்க நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவுகள், பொதுமக்கள்,அரசியல் பிர முகர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

யாழ். புங்குடுதீவுப் பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பவனி

23.08.2025

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி பவனி இன்றைய நாள் புங்குடுதீவில் முன்னெடுக்கப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆவது நினைவு நாளை முன்னிட்டு யாழ். தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இன்றைய நாள் யாழ் புங்குடுதீவு பகுதியில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திபவனி ஆரம்பமாகி நடைபெற்றது

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது

www.sangathamil.ca

நாகர்கோவில் மாணவர் படுகொலை நினைவேந்தலுக்கு ஊடகங்களுக்கு தடை விதித்த பாடசாலை அதிபர்: யூடியூப்பரின் அறிவுறுத்தலுக்கு அமைய அதிபர் நடந்ததாக ஊடகவியலாளர்கள் குற்றச்சாட்டு

23.09.2025

சிறீலங்கா விமான படையின் குண்டு வீச்சு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் செய்தி சேகரிப்பதற்கு பாடசாலை அதிபர் அனுமதி மறுத்துள்ளார். குறித்த சம்பவத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினர்களும் தமது கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

அதேவேளை ஊடகங்களுக்கு அனுமதி மறுத்த அதிபர், தனது உறவினரான யூடியூப்பர் ஒருவருக்கு அனுமதி வழங்கியதாகவும், தனது யூடியூப்பில் மாத்திரமே நிகழ்வு குறித்ததான காணொளிகள் வர வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த யூடியூப்பரின் அறிவுறுத்தலுக்கு அமையவே அதிபர் ஊடகங்களை அனுமதிக்கவில்லை என ஊடகவியலாளர்கள் தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் மகாவித்தியாலயம் மீது கடந்த 1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி சிறீலங்கா விமான படையினர் வீசிய குண்டுகளில் 21 பாடசாலை மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலையான மாணவர்களின் 30ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் பாடசாலை வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

அந்நிகழ்வில் செய்தி சேகரிப்பதற்காக சென்ற ஊடகவியலாளர்களை பாடசாலை ஆசிரியர்கள் இருவர், பாடசாலை நுழைவாயிலில் வைத்து, ஊடகங்களுக்கு அனுமதி இல்லை என திருப்பி அனுப்ப எத்தனித்துள்ளனர்.

அதனை அடுத்து, ஊடகவியலாளர்கள் தாம் அதிபருடன் கதைக்க வேண்டும் என கூறிய போது, ஆசிரியர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தமையால், வாய்த்தர்க்கம் ஏற்பட்டது, அதன் பின்னர் அதிபரை சந்திக்க ஆசிரியர்கள் அனுமதித்தனர்.

அதிபரிடம், எதற்காக ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது? கடந்த காலங்களில் இருந்த அதிபர்கள், ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கவில்லை தாங்கள் புதிதாக அதிபராக கடமையேற்ற நிலையில், எதற்காக ஊடகங்களை அனுமதிக்கவில்லை என கேள்வி எழுப்பி இருந்தனர்.

கல்வி வலயமே, ஊடகங்களை அனுமதிக்க வேண்டாம் என தமக்கு கூறியுள்ளது. எனவே ஊடகவியலாளர்கள் பாடசாலை வளாகத்தினுள் இருந்து வெளியேற வேண்டும் என அதிபர் பணித்துள்ளார்.

அதனை அடுத்து, ஊடகவியலாளர்கள் பாடசாலை வளாகத்தினுள் இருந்து வெளியேறி, வலய கல்வி பணிப்பாளருடன் தொலைபேசியில், ஊடகவியலாளர்களை பாடசாலைக்குள் அனுமதிக்காதது, தொடர்பில் கேள்வி எழுப்பிய வேளை, வலயத்தினால் அவ்வாறு எதுவும் அதிபருக்கு கூறப்படவில்லை எனவும், தாம் அதிபருக்கு ஊடகங்களை அனுமதிக்குமாறு கூறுவதாக கூறியுள்ளார்.

அதனை அடுத்து சிறிது நேரத்தில் பாடசாலை வளாகத்தின் வெளியே நின்ற ஊடகவியலாளர்களிடம் வந்த இரு ஆசிரியர்கள், அதிபரிடம் பாடசாலைக்குள் வருவதற்கு முறைப்படியான அனுமதியை கோரி பெற்று, நிகழ்வில் செய்தி சேகரிக்கலாம் என கூறி சென்று இருந்தனர்.

அதற்கு தாம் அதிபரிடம் ஏற்கனவே அனுமதி கோரி இருந்தோம். அதற்கு அவர் அனுமதியில்லை பாடசாலை வளாகத்தை விட்டு வெளியே போங்கள் என கூறி இருந்தார். தற்போது எமக்கு அனுமதி வழங்கினால், உள்ளே வந்து நிகழ்வில் செய்தி சேகரிப்போம் இல்லை எனில் வெளியே நிற்கிறோம் என கூறி இருந்தனர். அதன் பின்னரும் அதிபர் தரப்பில் இருந்து அனுமதி கிடைக்கப்பெறாததால், ஊடகவியலாளர்கள் பாடசாலை வளாகத்திற்கு வெளியே நின்று ஒளிப்படங்களை எடுத்துக்கொண்டனர்.

அதேவேளை, கடந்த காலங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுக்க பல்வேறு அச்சுறுத்தல்கள் அழுத்தங்கள் இருந்த போதிலும், அப்போதைய பாடசாலை அதிபர்கள் எதற்கும் அஞ்சாது நிகழ்வுகளை ஒழுங்கமைத்து செய்ததுடன், ஊடகங்களையும் அனுமதித்து இருந்தனர்.

தற்போதைய அரசாங்கம் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடையேதும் ஏற்படுத்தாத நிலையில், பாடசாலை அதிபர் ஊடகங்களுக்கு அனுமதி மறுத்து தன்னிச்சையாக செயற்பட்டமை

தொடர்பில் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஊடகவியலாளரை அச்சுறுத்தியமைக்கு யாழ். ஊடக மன்றம் கண்டனம்!

24.08.2025

யாழில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்ட குழுவினர் ஒன்றினால் அச்சுறுத்தப்பட்டமைக்கு யாழ். ஊடக மன்றமானது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

சுயாதீன ஊடகவியலாளரான சுமித்தி தங்கராசா என்பவர் நேற்று(22) செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை கிளிநொச்சியிலிருந்து வந்த குழுவினரால் அச்சுறுத்தப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் ஊடக மன்றம் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடக மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "குறித்த ஊடகவியலாளர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு முன்னால் இடம்பெற்ற உண்ணாவிரத போராட்டம் ஒன்றில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, அந்த போராட்டத்தில் குழப்பம் செய்வதற்கு வந்த குழுவினரால் கடுமையான அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நடுநிலையான செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் ஊடகவியலாளர்களின் பங்கு அளப்பரியது.

அவ்வாறான செய்திகளை சேகரிக்கும் போதும், அதனை அறிக்கையிடும் போதும் அந்த ஊடகவியலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பல.

மக்களது பிரச்சினைகளை வெளிக்கொணரும் ஊடகவியலாளர்களுக்கு தொடர்ச்சியாக இவ்வாறான அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் ஏற்படுவது குறித்து எவரும் கரிசினை கொள்வதில்லை.

சம்பவத்தின்போது குறித்த ஊடகவியலாளரை அச்சுறுத்திய நபர் அந்த இடத்தில் வெளிப்படுத்திய கருத்துக்கள் ஊடக சுதந்திரத்தை கேள்விக்குறியாக்குகின்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகத்துறை கருதப்படுகின்ற இவ்வாறான சூழ்நிலையில் அச்சுறுத்திய நபர், ஊடகங்களாலேயே நாடு நாசமாக போவதாகவும் மற்றும் நீங்கள் ஊடகவியலாளர்கள் அல்ல நாட்டை கெடுப்பவர்கள் என கூறியுள்ளமை ஊடகத்துறையை அவமதிக்கும் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

இந்த கருத்துக்கு பொது அமைப்புகளோ மற்றும் அரசியல் வாதிகளோ இதுவரை தமது கண்டனத்தை வெளியிடாமை என்பது கவலைக்குரிய விடயம்.

ஊடகங்களும் மற்றும் ஊடகவியலாளர்களும் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து பேசுவதற்கோ, குரல் கொடுப்பதற்கோ முன்னிற்பவர்கள் அல்லது முன்னிற்கும் அமைப்புகளின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணும் அளவிற்கே காணப்படுகின்றது.

தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடம் ஏறியிருக்கின்றது.

யாழ்.ஊடக மன்றம்
Jaffna Media Forum
යාපනය මාධ්‍යවේදී සංසදය
jaffnamediaforum@gmail.com
JMF
The Independent Journalist Team

தலைவர்:க.பரதன்	செயலாளர்:த.சுமித்தி	பொருளாளர்:பு.கஜிந்தன்

சுயாதீன ஊடகவியலாளரை அச்சுறுத்தியமைக்கு வன்மையான கண்டனம்

சுயாதீன ஊடகவியலாளரான சுமித்தி தங்கராசா இன்றையதினம் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை கிளிநொச்சியில் வந்த குழுவினரால் அச்சுறுத்தப்பட்டமைக்கு யாழ். ஊடக மன்றமானது வன்மையான கண்டனத்தை பதிவுசெய்கின்றது.

குறித்த ஊடகவியலாளர் இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு முன்னால் இடம்பெற்ற உண்ணாவிரத போராட்டம் ஒன்றில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை, அந்த போராட்டத்தில் குழப்பம் செய்வதற்கு வந்த குழுவினரால் கடுமையான அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நடுநிலையான செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதில் ஊடகவியலாளர்களின் பங்கு அளப்பரியது. அவ்வாறான செய்திகளை சேகரிக்கும்போதும், அதனை அறிக்கையிடும்போதும் அந்த ஊடகவியலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பல. மக்களது பிரச்சினைகளை வெளிக்கொணரும் ஊடகவியலாளர்களுக்கு தொடர்ச்சியாக இவ்வாறான அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் ஏற்படுவது குறித்து எவரும் கரிசினை கொள்வதில்லை.

இன்றைய சம்பவத்தின்போது குறித்த ஊடகவியலாளரை அச்சுறுத்திய நபர் அந்த இடத்தில் வெளிப்படுத்திய கருத்துக்கள் ஊடக சுதந்திரத்தை கேள்விக்குறியாக்குகிறது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகத்துறை கருதப்படுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் அச்சுறுத்திய நபர், ஊடகங்களாலேயே நாடு நாசமாக போவதாகவும், நீங்கள் ஊடகவியலாளர்கள் அல்ல நாட்டை கெடுப்பவர்கள் என கூறியுள்ளமை ஊடகத்துறையை அவமதிக்கும் செயற்பாடாகவே காணப்படுகிறது. இந்த கருத்துக்கு பொது அமைப்புகளோ அரசியல்வாதிகளோ இதுவரை தமது கண்டனத்தை வெளியிடாமை என்பது கவலைக்குரிய விடயம்.

ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து பேசுவதற்கோ, குரல் கொடுப்பதற்கோ முன்னிற்பவர்கள் அல்லது முன்னிற்கும் அமைப்புகளின் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணும் அளவிற்கே காணப்படுகிறது. தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடம் ஏறியிருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் ஏற்படும் அச்சுறுத்தல் அல்லது பாதிப்புகள் குறித்து காத்திரமான நடவடிக்கையை எடுப்பதற்கு முன்வரவேண்டும் என்பதனை யாழ். ஊடக மன்றம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது.

நன்றி

இவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கம் ஊடகங்களுக்கும் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஏற்படும் அச்சுறுத்தல் அல்லது பாதிப்புகள் குறித்து காத்திரமான நடவடிக்கையை எடுப்பதற்கு முன்வரவேண்டும் என்பதனை யாழ். ஊடக மன்றம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

www.sangathamil.ca

எமது மண்ணை மீட்க போராடுவது எமது உரிமை

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார்

24.09.2025

மன்னாரில் காற்றாலை திட்டங்களை தொடர்வது ஜனாதிபதியின் தன்னிச்சையான முடிவாக இருந்தாலும் எமது மண்ணையும் வளங்களையும், உரிமையையும் ,பாதுகாக்க போராட்டங்களை தொடர்வது எமது உரிமை என்றும், சில தினங்களில் மாவட்டம் தழுவிய ரீதியில் பாரிய போராட்டம் வெடிக்கும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் எச்சரித்துள்ளார்.

மன்னார் போராட்டக்களத்தில் இன்று புதன்கிழமை (24) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் இன்று புதன்கிழமை (24) 53 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை (23) ஜனாதிபதி செயலகத்தில் இருந்து மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது தொடர்பான தனது செய்தியை அனுப்பி உள்ளார். மன்னாரில் குறித்த 14 காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் நிறுத்த தேவையில்லை.

அதற்கான பணிகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறும், அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் முன்னர் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற கட்டளையையும் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கியுள்ளார்.

எதை வைத்து குறித்த அனுமதியை ஜனாதிபதி வழங்கியுள்ளார் என்று எமக்கு தெரியவில்லை. பல முறை குறித்த திட்டம் குறித்து அதிகாரிகளுடனும், அமைச்சர்களுடனும், ஜனாதிபதியுடனும் தொடர்பு கொண்டு மக்களுடைய கருத்துக்களையும், எங்களுடைய கருத்துக்களையும் முன் வைத்தோம்.

எனினும் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்காமல், தான்தோன்றித்தனமாக தனது சுய முடிவை எடுத்துள்ளமை மன வேதனையை நம்பியிருந்த எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

வாழ்வது எமது உரிமை. அதை யாரும் பறிக்க முடியாது. அந்த உரிமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம். எமது போராட்டம் விரிவடைகிறது என்பதை உங்களுக்கு கூறிக் கொள்ள விரும்புகின்றோம். எமது மூன்று கோரிக்கைகள் நிறைவேறும் வரை எமது போராட்டம் தொடரும். மாவட்ட ரீதியில் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாரிய போராட்டமாக மாறவுள்ளது.

நாங்கள் சட்டத்தை மீறுகின்ற போராட்டமாக ஏனையவர்களுக்கு இடையூறை ஏற்படுத்துகின்ற போராட்டமாக இப் போராட்டம் ஒருபோதும் அமையாது.

இவற்றுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் நாங்கள் முன்னெடுத்து வருகின்ற போதும், எமது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்படும். கவலைக்குரிய விடயம் என்ன என்றால் எமது மன்னார் மாவட்டச் செயலகம் அரச அதிபர் மற்றும் அவருடன் கடமையாற்றுகின்ற அதிகாரிகளுடைய செயல்பாடுகள் எமக்கு மிகவும் கவலையை ஏற்படுத்துகின்றது.

குறித்த கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை (23) காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் நேற்று மாலை ஒருவரை அனுப்பி இக்கடிதத்தை பெற்றுக் கொண்டுள்ளோம். மிகவும் வேதனையான விடையமாக அமைந்துள்ளது.

கடந்த 40 நாட்களாக இடம் பெற்ற வேலைத்திட்டங்களை மாவட்டச் செயலகம் கண்காணிக்கவில்லை என்பதை இவ் விடத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாவட்டச் செயலகமும், அதிகாரிகளும் இத்திட்டங்களுடன் ஒத்துப்போகின்றார்களா? என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது. மக்களை அழிக்கும், மக்களின் வாழ்விடங்கள் பறிக்கின்ற, இத் தீவை இல்லாது செய்கின்ற செயல்பாடுகளுடன் அதிகாரிகள் அனைவரும் இணைந்து போகின்றார்களா? என்கிற சந்தேகமும் எழுந்துள்ளது.

அவர்களின் செயல்பாடு மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. மக்களாகிய நாங்கள் ஒன்றிணைந்து எமது மண்ணையும், வளங்களையும், உரிமையையும் பாதுகாக்க எமது போராட்டம் தொடரும். இனி வரும் நாட்களில் இப்போராட்டம்

பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் திங்கட்கிழமை (29) மன்னாரில் மாவட்ட தழுவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு எமது சக்தியை இந்த அரசுக்கு காண்பிக்க வேண்டும். ஜனாதிபதி தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்துள்ளார் என்பதே மிகவும் கவலைக்குரிய விடயம்.

மக்களை பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை எடுப்போம் என அனைத்து அதிகாரிகளும் தெரிவித் திருந்தனர். ஆனால் ஜனாதிபதியினுடைய அறிவித்தல் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. அது ஜனாதிபதியின் முடிவாக இருக்கின்ற நிலையில், எங்களுடைய முடிவு எங்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்ளுவோம் என்ற ஒரு முடிவு தான்.

எனவே இந்த போராட்டக் களத்தில் இருந்து சட்டங்களை மீறாது எமது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்.

சட்ட ரீதியாக மூன்று நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். கனிய மணல் அகழ்விற்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறோம். 14 காற்றாலை திட்டங்களுக்கு எதிரான இரு வழக்குகளை தாக்கல் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. என அவர் மேலும் தெரிவித்தார்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு சாவகச்சேரி பிரதேச சபையில் நினைவேந்தல்

25.09.2025

சாவகச்சேரிப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு 25.09.2025 வியாழக்கிழமை சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றிருந்த நிலையில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படம் வைத்து நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் இடம் பெற்ற மேற்படி வணக்க நிகழ்வில் சபையின் உபதவிசாளர், உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு சுடர் மற்றும் மலர் வணக்கம் செலுத்தியிருந்தனர்.

அத்துடன் திலீபனது இலட்சியக் கனவு நிறைவேற சபையில் இரு நிமிடங்கள் அக வணக்கமும் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காற்றாலைத் திட்டத்தை உடனடியாகக் கைவிடவேண்டும்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

25.09.2025

மன்னாரில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்களை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும். இல்லையேல் போராட்டம் தீவிரமாகும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரில் காற்றாலைத் திட்டங்கள் வேண்டாம் என 50 நாள்களுக்கு மேலாக மக்கள் போராட்டம் நடத்திவருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலகத்துக்கு முன்பாகவும் மன்னார் மக்களும், சிவில் அமைப்பினரும் போராட்டம் நடத்தியிருந்தனர். ஆனால் இந்தப் போராட்டங்களையெல்லாம் கருத்திற்கொள்ளாத ஜனாதிபதி அநுர, காற்றாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்களையும் அனுமதியையும் வழங்கியுள்ளார்.

மன்னார் மக்களின் வாழ்வுரிமையை இந்த அரசாங்கம் மறுத்து வருகின்றது. மக்களின் இறையாண்மையை அரசாங்கம் மீறுகின்றது. இது நியாயமா? என இந்த உயரிய சபையில் கேட்கின்றேன். தற்போதைய ஜனாதிபதி போராட்ட இயக்கமொன்றில் இருந்துவந்துதான் இன்று அரசாங்கத்தின் தலைவராகியுள்ளார். ஆனால் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கி, எமது மக்களின் உயிரை துச்சமென மதிக்கும் வகையிலேயே செயற்படுகின்றார்.

இவ்வாறான செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக மன்னார் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடரும். இனிவரும் நாள்களில் கூடுதல் வீரியத்துடன், அதிகளவான மக்களுடன் அந்தப் போராட்

டங்களை முன்னெடுப்போம் - என்றார்.

www.sangathamil.ca

சர்வதேச நீதி கோரி யாழில் சுழற்சிமுறையிலான உண்ணா நோன்புப் போராட்டம் ஆரம்பம்

25.09.2025

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தினரின் ஏற்பாட்டில் தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாநோன்புப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று (25) ஆரம்பமானது.

இப்போராட்டம் யாழ்ப்பாணம் செம்மணியில் இன்று காலை ஆரம்பமான நிலையில் எதிர்வரும் 29ஆம் திகதி வரை தொடர்ந்து நடத்தப்படவுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு நீதி கோரியும் இந்த உண்ணாநோன்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்துக்கு வணக்கம் செலுத்தப்பட்டு ஆரம்பமான இந்தப் போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்துகொண்டுள்ளனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், நாட்டின் உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழ் இன அழிப்புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் முதலான விடயங்களில் நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் முதலான கோரிக்கைகளை இதன்போது முன்வைத்துள்ளனர்.

முல்லை புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு நினைவேந்தல்

25.09.2025

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபை வளாகத்தில், தாயக செயலணியின் ஏற்பாட்டில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஊர்தி பவனிக்கான வணக்க நிகழ்வு இன்றைய நாள் (25.09.2025) இடம்பெற்றிருந்தது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தபிசாளர் வே. கரிகாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து 38 ஆம் ஆண்டு நினைவு மலர் வணக்கம் செலுத்தியிருந்தனர்.

தாயக செயலணியின் ஏற்பாட்டில் நேற்றையதினம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்தி பவனியானது இன்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் நினைவு வணக்கத்தைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தியிருந்தனர்.

பலஸ்தீனத்தை ஆதரிக்கும் அனுர: தமிழ் மக்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளமாட்டார்!

ஐக்கிய சோசலிச கட்சியின் முக்கியஸ்தர் ஸ்ரீதுங்க ஜெயசூரிய

25.09.2025

பலஸ்தீனத்தை ஆதரிக்கும் அனுர தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக்கொள்ளமாட்டார் என ஐக்கிய சோசலிச கட்சியின் முக்கியஸ்தர் ஸ்ரீதுங்க ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அனுர அரசும் முன்னைய அரசுகளுக்கு நிகரான அரசுதான் என்பதை நிரூபித்து வருகின்றது எனவும்

தேர்தல் மேடைகளில் கூறியவற்றை மறந்து மக்களை திசை திருப்பி தங்களின் ஆட்சியை கொண்டு செல்லவே பாடுபடுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் ,

அனுர ஒரு சந்தர்ப்பவாதி, அமெரிக்கவின் நிகழ்ச்சி நிரலில் இருந்து நாட்டை சீரழிக்கும் ஒருவர், அமெரிக்கா என்ன நினைக்கின்றதோ அதையே நாட்டில் முன்னெடுத்து வருகின்றது.

இதேநேரம் சர்வாதிகரம் கொண்ட அனுரவுக்கு நாட்டில் புரையோடிக் கொண்டிருக்கும் அரசியல் பிரச்சினையை தீர்க்க ஒரு கையொப்பம் போதும், ஆனால் அதை அவர் செய்யமாட்டார்.

யாழ் மக்களுக்கு சர்வதேச மைதானம் அவசியமாக இருந்தாலும் அதைவிட அவசியமானவை எண்ணற்ற அளவில் இருக்கின்றன.

ஆனால் அனுர அரசு மைதானத்தை காட்டி தமிழ் மக்களின் பிரச்சினைகளை மூடிமறைக்க முயல்கிறது.

வடக்கில் இருந்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் சென்றாலும் அவர்களில் ஒருவர் கூட அமைச்சராக பொறுப்புக் கொடுக்காத அரசு இது.

வடக்கில் வந்து பேதங்கள் அற்ற ஆட்சி செய்வதாக கூறும் அனுர, தனது ஆட்சியில், அமைச்சரவையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களை ஓரங்கட்டி வைத்திருக்கின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணம் சாரா ஒருவரை யாழ்பாணத்தின் அமைச்சராக்கி யாழ் மக்களை இழிவுபடுத்தும் செயலே முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கு காரணம் இலங்கை தமிழர் ஒருவர் அமைச்சரானால் தமிழ் மக்கள் பிரச்சினைகள் குறித்த தீர்வுக்கு குடைச்சல் கொடுப்பார் என்பதால் தான் அமைச்சு கொடுக்கபடவில்லை, இதுவே உண்மை.

பலஸ்தீனத்ததை ஆதரித்து ஐ.நாவில் கருத்துக் கூறும் அனுர இலங்கை தமிழ் மக்கள் தொடர்பில் ஒருபோதும் அலட்டிக் கொள்ளமாட்டார். ஏனெனில் அனுர ஓர் இனவாத குடும்பத்தின் பின்னணியில் இருந்து வந்தவர்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் சதித்

திட்டத்தை முன்னெடுக்கின்றது. இதை முறியடிக்க வேண்டும்.

நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய அனுர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாது வடக்கு கடற்தொழில் சமூகத்தின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதுடன் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள மக்களின் பாரம்பரிய பூர்வீக காணிகளை உடனடியாக விடுவிக்கவும் அனுர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க இந்த அரசு முயற்சி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

www.sangathamil.ca

மன்னாரில் காற்றாலை அமைப்பதற்கான உபகரணங்களை மன்னாருக்கு கொண்டுசெல்வதை உடன் நிறுத்துங்கள்! மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் கையளிப்பு

25.09.2025

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கத் தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டுசெல்லும் வேலைகள் நடைபெறு கின்ற நிலையில் தயவு செய்து அவற்றை உடன் நிறுத்தி, மக்க ளிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.



இன்றைய நாள் வியாழக்கிழமை (25) பகல் மன்னார் மாவட்ட செயலகத்துக்குச் சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனிடம் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் கை யளித்த மகஜரில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மன்னார் மக்கள் 50 நாட்களுக்கு மேலாக போராட்டம் செய்து கொண்டு, ஜனாதிபதியிடம் இருந்து நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்த்திருந்த வேளையில், இவ்வாறான ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதை நீங்கள் உடனடியாக எங்களுக்கு தர வில்லை என்பதும் கவலை அளிக்கிறது.

கடிதத்தை நாங்கள் வந்து தான் பெற்றுக்கொண்டோம். ஜனாதி பதியின் முடிவுகள் மன்னார் மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியை யும் கவலையையும் தருகிறது. ஜனாதிபதி தனது மக்களாகிய எங்களுடன் பேசுவார். மக்களின் வாழ்வை பாதிக்காத வகை யில் கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பார் என எதிர்பார்த்திருந் தோம்.

நாங்கள் வஞ்சகமான முறையில் ஏமாற்றப்பட்டுள்ளோம். ஜனாதிபதி முடிவுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உடன் வேலைகளை நிறுத்தி ஜனாதிபதியுடன் பேசி முடி வுகளை எடுக்க எதிர்பார்க்கின்றோம்.

காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகர ணங்கள் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டுசெல்லும் வேலைகள் நடைபெறுகின்றன.

தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேசவும். மக்களுடைய விருப்பத்துக்கும் உரிமைக்கும் எதிராக நீங்கள் செய்யவிருக்கும் நடவடிக்கைகளினால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் நீங்களே பொறுப்புக்கூற வேண்டிவரும்.

ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கும் வரை மக்கள் போராட்டமானது இலங்கை யாப்பிற்கும் சட்டத்திற்கும் உட்பட்டு முன்னெடுக்கப்படும். எங்கள் புனித போராட்டமானது விரிவடைந்து செல்வது உங்களுக்குத் தெரியும். அதை இன் னும் விரைவாக எமது நாடு பூராவும் விரிவுபடுத்தவுள்ளோம்.

ஜனாதிபதி அவர்களினால் தரப்பட்ட ஒரு மாத கால வேலை நிறுத்தத்தை கவனிப்பதற்கு ஒரு குழு உங்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது. உங்கள் குழுவானது அந்தப் பகுதியில் நடந்த வேலைகளை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க வில்லை.

எனவே தயவு செய்து உடனடியாக மக்களின் வாழ்வையும் வளத்தையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்வதை எதிர்பார்க்கின்றோம் என மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனிற்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் சுடரேற்றி அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது

25.09.2025

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சபை அமர்வு மாநகர முதல்வர் வி.மதிவதனி தலைமையில் இன்று இடம்பெற்றது. இதன் ஆரம்பத்திலேயே ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனிற்கு நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

மாநகர சபை முதல்வர் சுடரேற்றியதனைத் தொடர்ந்து சபை யில் இருந்த அனைத்து உறுப்பினர்களும் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவு வணக்கம் செலுத்தினர்.

இதேநேரம் இந்த இந்த வணக்க நிகழ்வில் ஈ.பி.டி.பியின் நான்கு உறுப்பினர்களும் கலந்து கொள்ளாது, வணக்க நிகழ் வுகள் நிறைவுற்ற பின்னர் சபை அமர்வில் பங்குகொண்டனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி இரண்டாம் நாள் உண்ணா நோன்புப் போராட்டம்

26.09.2025

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணா நோன்புப் போராட்டம் இரண்டாம் நாளாக வெள்ளிக்கிழமை (26) யாழ்ப்பாணத்தில் நடை பெற்றது.

குறித்த போராட்டம் யாழ் செம்மணியில் வியாழக் கிழமை (25) ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது நிகழ்த் தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாம லாக்கப்பட்டவர்கள் உள் ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண் டியும், உள் நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவ காரத்திற்கு நீதி கோரியும் குறித்த உண்ணா நோன்புப் போராட்டம் ஆரம்பிக் கப்பட்டது.

குறித்த போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட் டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உற வினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

www.sangathamil.ca

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு உணர்வுபூர்வமான நல்லூரில் வீரவணக்க நிகழ்வு

26.09.2025

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

அதேவேளை சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணாநோன்பு இருந்த இடத்திலும், நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவண கண்காட்சி கூடத்திலும் வீர வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் ஐந்தம்ச கோரிக்கைகளை முன் வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணா நோன்பு இருந்தார்.

இந்திய வல்லாதிக்க ஆளும் வர்க்கத்தின் அரசியல் முக மூடியைக் கிழித்தெறிந்து சாகும் வரை நீராகாரமற்ற உண்ணா நோன்பு இருந்து பன்னிரண்டாவது நாள் தனது உயிரை தற்கொடை செய்தவன் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன். தமிழீழ மக்களிற்கும் உலகிற்கும் இந்திய சிறீலங்கா அரசின் நயவஞ்சக செயலை வெளிக்காட்டிய மெலிந்த உடல் கொண்ட, இரும்பு மனம்கொண்ட மனிதன் லெப் கேணல் திலீபன் அவர்கள். இந்தியாவை நோக்கி ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து தன் உயிரை எம் தேசத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

அவரது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் 12 நாட்களின் பின்னரான 26ஆம் திகதி அவரது உயிர் பிரிந்தது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனால் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகள்:

- மீளக்குடியமர்தல் என்ற பெயரில் தமிழர்கள் இருக்கும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் புதிதாக திட்டமிடும் குடியேற்றங் களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

- சிறையிலும், இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனை வரையும் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

- அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

- ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற் றாகக் களையப்பட வேண்டும்.

- தமிழர் பகுதிகளில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப் பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முழுவதும் நிறுத் தப்பட வேண்டும். என்பதே அவரின் கோரிக்கையாகவும் அபி லாசையாகவும் இருந்தது.

யாழ். கல்கலைக்கழகத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்

26.09.2025

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீ பனின் 38 வது நினைவு நாள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வெள்ளிக்கிழமை (26) நினைவுகூரப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவேந்தல் மதியம் 12 மணிக்கு ஆரம்பித்ததுடன், பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின்

உருவப்படத்திற்கு பல்கலைக்கழக சமூகத்தினரால் மலர் மாலை அணிவித்து மலர் தூவியும் வணக்கம் செலுத்தப் பட்டதுடன் பலரும் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையிலான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ் நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணா நோன்புப் போராட்டம் நடத்தி சாவைத் தழுவிக் கொண்டார்.

'ஈகைச்சுடர்' லெப். கேணல் திலீபனுக்கு வலி.கிழக்குப் பிரதேச சபையில் வீரவணக்க நிகழ்வும், "திலீபன் வீதி" எனப் பெயரிடவும் மற்றும் சிலை அமைக்கவும் தீர்மானம்

26.09.2025

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் "ஈகைச்சுடர்" லெப். கேணல் திலீபனின் நினைவு நாள் வியாழக்கிழமை (25) உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டதுடன் லெப். கேணல் திலீபனின் தியாகத்திற்கு மதிப்பளிக்கும் விதமாக தீர்மானங் களும் மேற்கொள் ளப்பட்டன.

நேற்று வியாழக்கிழமை (25) காலை பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் சபை முன்றலில் நினைவு வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் தம் இன்னுயிரைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அவ்வேளை பொது வணக்கச் சுடரினை பிரதேச சபையின் உறுப்பினர் விஜயதாரணி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. பின், தவிசாளரி னால் நினைவு வணக்க உரை நிகழ்த்தப்பட்டது. சபை உறுப்பினர்களும் தமது மலர் வணக்கத்தினை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பிரதேச சபையின் அவை அமர்வில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனை நினைவு கூர்ந்து முன்னைய காலங்களில் "திலீபன் வீதி" என பிரயோகிக் கப்பட்டு, பின்னர் பொக்கணை வீதி என அழைக்கப்பட்ட வீதியை புனரமைக்கவும் அவ்வீதியின் பெயரை நிர்வாக நடை முறைகளுக்கு அமைய, "திலீபன் வீதி" என மீளவும் மாற்றி யமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, "ஈகைச்சுடர்" லெப். கேணல் திலீபன் அவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமத் தினைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் வலிகாமம் கிழக்கு பிர

தேச சபை வளாகத்தில் திலீபனுக்கு திருவுருவச்சிலையினை 1975ஆம் ஆண்டின் 4 இலக்க காட்சிப்படுத்தல் சட்டத்தின் பிர காரம், உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதியைப் பெற்று நிறுவு வதெனவும் தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் அவைத் தீர்மானத்திற்காக முன்வைக்கப்பட்டது. இத்தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழீழ நிலப்பரப்பெங்கும் நினைவு கூரப்பட்டது

26.09.2025

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38வது ஆண்டு நினைவேந்தலின் இறுதிநாள் வணக்க நிகழ்வுகள் இன்றைய தினம் (26) வட தமிழீழம், தென் தமிழழீழம் எங்கும் நினைவுகூரப்பட்டது.

யாழ். பருத்தித்துறை

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் இறுதிநாள் நினை வேந்தல் யாழ். பருத்தித்துறையில் உள்ள அவரது நினைவாலயத்தில் இன்று காலை 8 மணி முதல் அடையாள உண்ணா நோன்புடன் வடமராட்சி மக்களால் நினைவுகூரப்பட்டது.

இதன்போது பொது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நினைவேந்தலில் கலந்துகொண்டவர்களால் மலர் வணக்கம செலுத்தப்பட்டது.

இதில் சைவ மதகுருக்கள், பருத்தித்துறை மௌலவி, அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு மலர் வணக்கம் செலுத்தினர்.

திருகோணமலை

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆவது நினைவேந்தல் இன்று திருகோணமலை சிவன் கோயிலடி முன்றலில் நடைபெற்றது. இதனை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்தனர்.

உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நினைவுகூரப்பட்டதைத் தொடர்ந்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் கண்டுமணி

லவகுசராசா, அஹிம்சை வழியில் போராடிய "தியாக தீபம்" திலீபன் அவர்கள் ஈழ மக்களின் விடுதலைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து தனது உயிரை துறந்தார்.

அவர் 23 வயதில் மருத்துவ மாணவனாக இருந்தபோது அப்

போதைய காலத்தில் சிங்கள பேரினவாத காலணித்துவர்களால் அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டபோது அரசாங்கம் ஊர்காவல் படையினருக்கு ஆயுதங்களை வழங்கியிருந்தனர். இந்திய மகாத்மா காந்தி போன்று அஹிம்சை வழியில் போராடியபோது நிராயுதபாணியாக செயற்பட்டு மக்களின் விடுதலைக்காக பாடுபட்டவரே தியாக தீபம் திலீபன்.

அவசரகால சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோருதல், வீதியோர இராணுவ முகாம்களை அகற்றல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஈழ மக்களுக்காக உண்ணாவிரதம் இருந்தபோது 1987இல் புரட்டாதி மாதம் 26 அன்று உயிர் துறந்தார்.

ஐக்கிய நாடுகள் பேரவையின் ஜெனீவா மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் கூறியதாவது உள்ளக பொறிமுறை ஊடாக தீர்வினை வழங்குவோம் என்று. ஆனாலும் உள்ளக பொறிமுறை மீது நம்பிக்கை இல்லை. சுயாதீனமான சர்வதேச பொறிமுறை ஊடாக நீதி கிடைக்க வேண்டும் என இந்த தருணத்தில் கோரிக்கை விடுக்கிறோம் எனத் தெரிவித்தார்.

சிறீலங்கா தலைநகர் கொழும்பு

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கொழும்பில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு இன்று இறுதிநாள் நினைவு வண்க்கம் செலுத்தினார்.

குறிப்பாக, தற்போது செப்டெம்பர் மாதத்திற்கான இரண்டாவது மாதாந்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றன. ஆகவே குறித்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ரவிகரன் கொழும்பில் தங்கியுள்ளார்.

இந்நிலையிலேயே அவரால் கொழும்பில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

நினைவேந்தலின்போது ரவிகரன் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி, மலர் தூவி உணர்வுபூர்வமாக வணக்கம் செலுத்தினார்.

மன்னார்

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் "ஈகைச்சுடர்" லெப். கேணல் திலீபனின் 38ஆவது நினைவு நாள் வணக்க நிகழ்வு இன்று (26) காலை மன்னாரில் நினைவுகூரப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்துக்கு சுடர் ஏற்றப்பட்டு, மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து அக வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் உள்ளடங்கலாக பலர் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தினர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த "ஈகைச்சுடர்" லெப். கேணல் திலீபனின் 38ஆவது

ஆண்டு நினைவு நாள் வணக்க நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை (26) காலை 10.30 மணியளவில் மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் "ஈகைச்சுடர்" லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நினைவு உரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளை பிரதிநிதிகள், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டு மலர் வணக்கம் செலுத்தினர்.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு

"ஈகைச்சுடர்" லெப். கேணல் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று (26) காலை புதுக்குடியிருப்பில் நினைவுகூரப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த வணக்க நிகழ்வை முன்னிட்டு, புதக்குடியிருப்பு வர்த்தகர்கள் தங்களது கடைகளை மூடி, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கான நினவைு வணக்க மரியாதையினை செலுத்தியிருந்தனர்.

நினைவேந்தல் நிகழ்வின்போது பொதுச்சுடரினை சட்டத்தரணி தனஞ்சயன் ஏற்றிவைக்க, தொடர்ந்து ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கு வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் வணக்கம் செலுத்தினர். அத்துடன், நினைவுரையும் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பு இருந்து உயிர்நீத்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38வது நினைவு நாள் வெள்ளிக்கிழமை (26) மட்டக்களப்பு மாவடிவேம்பு சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் தாயக செயலணியின் அனுசரணையில், மாவடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் ஆ.பிரிநட் குணபாலனின் தலைமையில் நடைபெற்றது.

ஈகைச்சுடர் லெப். கேணல் தீலிபன் உண்ணாநோன்பை ஆரம்பித்த 9.45 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், மாவீரர் சிறிநந்தியின் தாயாரான நல்லரெட்ணம் பவளமலரால் இதன் போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்துக்கு முன்னாள் போராளி ஒருவர் மலர்மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தியதைத் தொடர்ந்து பலரும் உணர்வுபூர்வமாக வணக்கம் செலுத்தினர்.

இந்நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இ.ஸ்ரீநாத், ஏறாவூர் பற்று பிரதேச சபை தவிசாளர் மு.முரளிதரன், பிரதேச சபை உறுப்பினர்கள், தாயக செயலணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வவுனியா வடக்கில் தமிழர்களின் பூர்வீக காணிகள், குளங்களை விழுங்கப்போகும் கிவுல் ஓயாத் திட்டத்தை உடன் நிறுத்துங்கள்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

26.09.2025

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக்குளங்கள் மற்றும் அவற்றின் கீழான காணிகள், பழந்தமிழ் கிராமங்கள் என்பவற்றை ஆக்கிரமித்து மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் கிவுல் ஓயா என்னும் பெயரில் நீர்பாசனத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் குளங்கள் மற்றும் அவற்றின் கீழான காணிகளையும், தமிழர்களின் பூர்வீக கிராமங்களையும் அபகரித்து மேற்கொள்ளப்படவுள்ள இந்தக் கிவுல் ஓயா திட்டத்தினை உடன் நிறுத்தி, தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழிடங்களில் நிம்மதியாக வாழ்வதற்கும், பூர்வீக விவசாய நிலங்களில் விவசாயத்தை மேற்கொண்டு தன்னிறைவு பெறுவதற்கும் வழிவகைகளை ஏற்படுத்துமாறும் ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் இன்று (26) உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மகாவலி அதிகார சபையின் (எல்) வலயத்தால் முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்தால் எமது தமிழ் மக்களுக்கு ஏற்படவுள்ள பாரிய பாதிப்பு நிலைதொடர்பிலும் இந்த உயரியசபையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாயா அல்லது பெரிய ஆறு மற்றும் சூரியன்ஆறு ஆகிய ஆறுகளை மறித்து பாரிய அணைக்கட்டு அமைக்கப்பட்டு கிவுல் ஓயாத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது. இந்த பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தில் 6000 ஏக்கர் நீர்ப்பாசன விவசாயக் காணிகள் வெலி ஓயாவில் அத்துமீறி குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இவ்வாறாக கிவுல் ஓயா திட்டத்தினைச் செயற்படுத்தினால் வவுனியாவடக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக விவசாயக் குளங்கள் மற்றும் அவற்றின் கீழான வயல்நிலங்கள், தமிழர்களின் பூர்வீக கிராமங்கள் பலவும் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அந்த வகையில் இராமன்குளம், கொட்டோடைக்குளம், ஓயா மடுக்குளம், வெள்ளான்குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல் மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், வெடிவைச்சகல்லு குளத்தின் கீழ் வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன்குளம், கூழாங்குளம் வயற்காணிகளும் வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டை கிராமம், மருதோடை கிராமத்தின் ஒருபகுதி உள்ளிட்ட பகுதிகள் குறித்த நீர்ப்பாசன அணைக்கட்டின் நீரேந்து பகுதிகளாக மாறும் அபாயம் ஏற்படும்.

அதேவேளை தமிழர்களின் இதயபூமி எனப்படுகின்ற பூர்வீக மணலாற்றுப் பிரதேசத்தை வெலிஓயாவாக மாற்றிவிட்டு அங்கு அத்துமீறிக்குடியேற்றப்பட்டுள்ள பெரும்பான்மை இனத்தவர்களே இந்த கிவுல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தால் பயன்பெறவுள்ளனர்.

அத்தோடு தற்போது ஆட்சி பீடத்தில் இருக்கின்ற இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இந்த கிவுல் ஓயாத் திட்டத்தை செயற்படுவதில் அதிக அக்கறையோடு செயற்படுவதாகவும் அறிய முடிகின்றது.

தமிழ் மக்களின் சிறிய பூர்வீக விவசாயக்குளங்கள் மற்றும் அவற்றின் கீழான வயல்நிலங்கள், தமிழ் மக்களின் பூர்வீக கிராமங்கள் என்பவற்றை விழுங்குகின்ற இந்த கிவுல் ஓயாத் திட்டத்தை தயவுசெய்து உடனடியாக நிறுத்துமாறு இந்த உயரிய சபையினூடாக கோருக்கின்றேன்.

அத்தோடு மகாவலி அதிகார சபை இந்தத் திட்டத்திற்கென ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற தமிழர்களது பூர்வீக சிறிய விவசாய குளங்கள் மற்றும் அவற்றின் கீழான விவசாயநிலங்களையும், பூர்வீகத் தமிழ்க் கிராமங்களையும் உடனடியாக விடுவிக்குமாறு இந்த உயரிய சபையினைக் கோருகின்றேன்.

எமது தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழிடங்களில் நிம்மதியாக வாழ்வதற்கும், பூர்வீக விவசாய நிலங்களில் விவசாயத்தை மேற்கொண்டு தன்னிறைவு பெறுவதற்கும் வழிவகைகளை ஏற்படுத்துமாறும் இந்த உயரிய சபையைக் கோருகின்றேன் என்றார்.

‘திலீபனின் எண்ணமும், நோக்கும் இன்னும் நிறைவேறவில்லை’

பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கிறான்: நாடாளுமன்றில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு வணக்கம் செலுத்திய ரவிகரன் எம்.பி.

26.09.2025

தியாகதீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லையெனவும், எனவே பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் 26.09.2025 உரையாற்றும்போது ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனுக்கு வணக்கம் செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழத்தமிழர்களின் உரிமைக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சைவழியில் உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த தியாகதீபம் திலீபன் அவர்களுக்கு இந்த உயரிய சபையில் முதற்கண் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இராசையா பார்த்தீபன் என்னும் இயற்பெயரைக்கொண்ட தியாகச்செம்மல் திலீபன் அவர்கள் தமிழர்களின் உரிமைக்காக தனது இன்னுயிரைத் துறந்து 38வருடங்கள் ஆகியுள்ளன.

ஆனாலும் ஈழத்தமிழர்கள் தற்போதும் உரிமைகள் மறுக்கப்பட்டநிலையிலே தமிழர்தாயகப்பரப்பில் வாழ்ந்துவருகின்றனர். தமிழர் தாயகப்பரப்பில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தற்போதும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தமிழர்தாயகப்பரப்பில் அதிகரித்த இராணுவமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே தியாகதீபம் திலீபன் எந்த நோக்கத்திற்காக பசித்திருந்து தனது இன்னுயிரைத் தியாகித்தாரோ அந்த நோக்கமும், அவரின் எண்ணமும் இதுவரை நிறைவேறவில்லை. அந்தவகையிலே பார்த்தீபன் இப்போதும் பசியோடுதான் இருக்கின்றான் என்பதை இவ்வுயரியசபையிலே பதிவுசெய்துகொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் ஊர்திப் பவனி பிறந்த இடத்தில் இருந்து ஆரம்பம்

26.09.2025

ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் 38ஆவது நினைவு தின இறுதி நாளான இன்று (26.09.2025) அவர் பிறந்து வாழ்ந்த ஊரெழுவில் இருந்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தீவக நினைவேந்தல் குழுவின் ஊர்தி பவனிகள் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளன

இந்நிகழ்வில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டு மலர் வணக்கமும் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னர் அவ்விடத்தில் இருந்து இரு ஊர்திகளும் யாழ்.பலாலி வீதியூடாக நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்தை நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.

இதே வேளை அதே வழித்தடத்தில் அமைந்துள்ள விடுதலை போராட்டத்திற்காக தன் உயிரை தியாகம் செய்த பொன் சிவகுமாரின் யாழ்.உரும்பிராயில் அமைந்துள்ள உருவச் சிலைக்கும் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் யாழ் நல்லூர் நோக்கி பயணிக்கும் இரு ஊர்திகளுக்கும் மக்கள் வீதியோரங்களில் நின்று மலர் வணக்கம் செலுத்தினர்.

இவ் ஊர்தி பவனியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், நடராஜர் காண்டீபன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டாளர்கள் மற்றும் பிரதேச சபை உறுபவினர் கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உணர்வு பூர்வமாக வணக்கம் செலுத்தினர்.

மன்னார் மக்களை எதிரத்துக்கொண்டு அடாவடியாக காற்றாலை திட்டத்தை முன்னெடுக்கவேண்டாம் மக்கள் ஏற்றுக்கொள்ளாத காற்றாலைத் திட்டத்தை உடன் நிறுத்ததுக!

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

26.09.2025

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மன்னார் மாவட்ட மக்களை எதிர்த்துக்கொண்டு அடாவடித்தனமாக காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை முன்னெடுக்கக் கூடாதென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே மன்னார் மக்கள் ஏற்றுக்கொள்ளாத காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் 26.09.2025இன்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் காற்றாலைமின் உற்பத்தி திட்டத்தினை நிறுத்துமாறு இந்த உயரியசபையைக் கோருகின்றேன்.

மன்னார்த்தீவில் மின் உற்பத்திக்கோபுரங்கள் அமைப்பதை நிறுத்தக்கோரி மன்னார் மக்கள் இன்றுடன் 55 ஆவது நாளாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இந்நிலையில் மக்களின் எதிர்ப்பினால் இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தினை அரசாங்கம் மக்களின் விருப்பத்திற்குமாறாக மீள முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

அந்தவகையில் மன்னார்தீவினுள் சவுத்பார், தாழ்வுபாடு மற்றும் கொன்னையன்குடியிருப்பு தொடக்கம் நடுக்குடாவரையான பகுதிகளிலுமாக 20 மெகாவோட் மற்றும் 50 மெகாவோட் கொள்திறன்களைக்கொண்ட மொத்தம் 14 காற்றாலை மின் உற்பத்திக்கோபுரங்களை மக்களின் விருப்பிற்கு மாறாக நிறுவுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம்.

குறிப்பாக கடந்த ஒகஸ்ட் மாதம் 13ஆம் திகதி மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலான குழுவினர் ஜனாதிபதி அவர்களைச் சந்தித்து குறித்த காற்றாலைத்திட்டம் மன்னார் தீவில் முன்னெடுக்கப்படக் கூடாதெனக் கோரியிருந்தோம். இந்நிலையில் குறித்த காற்றாலைத்திட்டம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதெனவும், அதுவரை காற்றாலைத்திட்டத்தினை இடைநிறுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கடந்த 05.09.2025அன்று மன்னார்தீவிலுள்ள சாந்திபுரம், தாழ்வுபாடு, தோட்டவெளி, ஓலைத்தொடுவாய், பேசாலை ஆகியபகுதிகளில் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டு வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் மக்களுக்கு காற்றாலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அனைத்து இடங்களிலும் மக்களால் காற்றாலைத்திட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அதிலும் குறிப்பாகபேசாலையில் கூட்டத்தினை நடாத்த முடியாத அளவில் மக்கள் மிகவும் கடுமையாகத் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்ததை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகின்றேன். இதனைத்தொடர்ந்து இம்மாதம் 19ஆம் திகதி மன்னார் மாவட்ட மக்கள் பெருமளவில் ஒன்று திரண்டு ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவும் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

மன்னார் மக்கள் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்திற்கு எதிரானவர்களில்லை. அவர்கள் மன்னார்தீவினுள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைப்பதையே எதிர்க்கின்றனர்.

குறிப்பாக 32 கிலோமீற்றர் நீளமும், 04 கிலோமீற்றர் வரையான அகலமுடைய குறைந்தளவு நிலப்பரப்பினைக்கொண்ட மன்னார்தீவில் ஏற்கனவே 30 காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேலதிகமாக காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டால் மன்னார்த்தீவினுள் மக்கள் வாழமுடியாதநிலை ஏற்படும் என்பது அந்த மக்களின் கருத்தாகவுள்ளது.

இதுதவிர வங்காலை, நறுவிலிக்குளம் ஆகியஇடங்களில் 06 காற்றாலை மின் உற்பத்திக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 36காற்றாலை மின் உற்பத்திக்கோபுரங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

எனவே நாட்டின் பொருளாதாரத்திற்கும், நாட்டின் மின்சாரத் தேவைக்கும், மீள் புதுப்பிக்கத்தக்க சக்திக்கான இலக்கினை அடைவதற்கும் ஏற்கனவே பங்களிப்பினை நல்கியுள்ளதாக அந்த மக்கள் கருதுகின்றனர்.
இத்தகைய காரணங்களுக்காகவே மன்னார்த்தீவினுள் காற்றாலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு மக்கள் எதிர்க்கின்றனர்.

இத்தகையசூழலில் மன்னாரில் இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த குறித்த காற்றாலைத்திட்டத்தினை உடனடியாக மீள முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் வலுசக்தி அமைச்சினையும், மன்னார் மாவட்ட செயலகத்தையும் அறிவுறுத்தியுள்ளதாக அறியக்கிடைக்கின்றது. எனவே மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்ற, மக்கள் ஏற்றுக்கொள்ளாத இத் திட்டத்தினை, மக்களின் விருப்பத்திற்குமாறாக அடாவடித்தனமாக வலிந்து ஏற்படுத்த முனைவது பொருத்தமற்ற செயற்பாடாகும். ஆகவே மக்கள் ஏற்றுக்கொள்ளாத இக் காற்றாலைத் திட்டத்தினை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு இவ் உயரியசபையின் ஊடாக உரியவர்களைக் கோருகின்றேன்.

மேலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மன்னார் மாவட்ட மக்களை எதிர்த்துக்கொண்டு இந்த காற்றாலைத்திட்டத்தை செயற்படுத்தவேண்டாமெனவும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

முல்லை கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளை உடனடியாக தடுத்து நிறுத்தத் தவறினால் மீனவக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் அவலம் அரங்கேறும்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

26.09.2025

முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் மிகவும் பாரிய அளவில் அதிகரித்துள்ளதாச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அவ்வாறு அதிகரித்துள்ள சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளை உடனடியாக தடுத்துநிறுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இவ்வாறு அதிகரித்துள்ள குறித்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளை தடுக்கத் தவறினால் மீனவக்குடும்பங்கள் பட்டினிச்சாவினை எதிர்கொள்ளவேண்டிய அவலநிலை ஏற்படுமெனவும் எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றில் 26.09.2025 இன்று உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு கடற்பரப்பில் பாரிய அளவில் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் அதிகரித்திருக்கின்றன. இது தொடர்பில் கடற்தொழில் அமைச்சருக்கும் எம்மாலும், எமது மீனவர்களாலும் ஏற்கனவே முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் எமது கடற்பரப்பில் தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களின் முறைப்பாட்டிற்கமைய கடந்த 15.09.2025 ஆம் திகதி இரவுவேளை மீனவர்களுடன் இணைந்து படகுகள் மூலம், ஏறத்தாள 15 கிலோமீற்றர் தூரமளவில் கடலுக்குள் சென்று சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் இடம்பெறும் விதம்பற்றிய நிலமைகளைப் பார்வையிட்டிருந்தேன்.

அந்தவகையிலே ஏறத்தாள ஆயிரம் படகுகள் அளவிலே முல்லைத்தீவு கடற்பரப்பில் மிகமோசமாக வெளிச்சத்தைப் பாய்ச்சி திருட்டுத்தொழில்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததை அவதானிக்கமுடிந்தது. இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத தொழில்களே அங்கு மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருந்தன.

இவ்வாறு நான் மீனவர்களுடன் சென்று முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை வெளிக்கொணர்ந்ததையடுத்து கடற்தொழில் அமைச்சர் உடனடியாக இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்தும்படி கடற்தொழில் அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் இந்த சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கடற்படையினரோ, கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரோ கவனத்திலெக்கவில்லை. ஏன் கடற்படையினர் ஆழ்ந்த தூக்கத்தில் உள்ளார்களா?

இந்த சபையிலே தற்போது பாதுகாப்பு பிரதி அமைச்சர் இல்லை எனினும் இந்த விடயத்தை பாதுகாப்பு பிரதி அமைச்சரினதும் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

நிச்சயமாக ஊழலை ஒழிப்போம், ஊழலை ஒழிப்போமென சொல்லிக்கொண்டு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இப்படியான ஊழல்கள் எவ்வித ஒழிவு மறைவுமின்றி தெட்டத் தெளிவாக அனைவருக்கும் தெரிகின்ற விதத்தில் இலங்கைக் கடற்பரப்பிலே இடம்பெற்றுவருகின்றன. அதாவது ஆயிரம் படகுகளுக்கும் மேல் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டு எமது கடற்பரப்பைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் இந்த விடயத்திற்கு என்ன பதிலைக் கூறப்போகின்றார், கடற்தொழில் அமைச்சர் இந்த விடயத்திற்கு என்னபதிலைச் சொல்லப்போகின்றார், கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களங்கள் என்ன பதிலைச் சொல்லப்போகின்றன.

இவ்வாறு எமது கடற்பரப்பிலே சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்க, எமது அப்பாவி மீனவர்கள் தொழிலின்றி கடற்கரைகளிலே கூடிநின்று ஏக்கத்துடன் வேடிக்கை பார்க்கின்ற அவலநிலையே எமது பகுதிகளில் காணப்படுகின்றன.

இவ்வாறாக சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் எமது கடற்பரப்பெங்கும் இடம்பெறுவதால், எமது அப்பாவி மீனவர்களால் உழைக்கமுடியவில்லை.

அந்த அப்பாவி மீனவர்களின் குடும்பங்களைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். எமது மீனவர்கள் தமது பிள்ளைகளை கல்வி கற்பிப்பதில்லையா, அவர்கள் அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதில்லையா, இவ்வாறாக கடற்பரப்பெங்கும் சட்டவிரோதிகள் சட்டவிரோத கடற்தொழில்களை மேற்கொண்டு எமது அப்பாவி மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சூறையாடிச் செல்கின்றனர்.

இத்தகைய திருட்டுத்தொழில்களை ஏன் கட்டுப்படுத்தமுடியவில்லை. கடற்தொழில் அமைச்சர் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கூடுதல் கவனமெடுக்க வேண்டும்.

இவ்வாறு கடற்பரப்பில் அதிகரித்துக்காணப்படும் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளை உடனடியாக முற்றாக தடுத்து நிறுத்துங்கள்.

அவ்வாறு தடுத்து நிறுத்தத் தவறினால் அப்பாவி மீனவக் குடும்பங்கள் பட்டினிச்சாவினை எதிர்கொள்ளவேண்டிய அவலநிலையும் ஏற்படும். எனவே இவ்விடயத்தில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இந்திய இலங்கை ஒப்பந்தமும் ஒரு தாயும், ஒரு மகனும் செய்த தியாகமும்

பா. அரியநேந்திரன்

26.09.2025

அன்று 1987 செம்டம்பர் 15 தொடக்கம் 26 வரை. தன்னை வருத்தி தமிழ் மண்ணுக்காக உணவை தவிர்த்து, உணர்வை வெளிக்காட்டி உடலை வருத்தி, உலகில் வெளிப்படுத்தி ஆகதியான 23, இளைஞனின் 38, வது ஆண்டு நினைவு இன்றாகும்!

இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 யூலை 29இல் மேற்கொள்ளப்பட்டதால் இந்திய அரசு காந்தீய வழியில் போராடிய இரண்டு உயிர்களை பல எடுத்த வரலாறு ஈழத்தமிழினத்துக்கு மட்டுமே உண்டு.

யாழ்ப்பாணத்தில் ஒரு மகன்-தியாகி திலீபன்.
மட்டக்களப்பில் ஒரு தாய்-அன்னை பூபதி.

தியாகி திலீபன் [பிறந்த திகதி 1963, நவம்பர்,27] 23, வயதில் 1987 செம்டம்பர் 15-26 வரை, 12 தினங்கள் நீர் கூட அருந்தாமல் அவரால் முன்வைத்த 05 கோரிக்கைகள்,

1. மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2. சிறைக் கூடங்களிலும் இராணுவக் காவல் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3. அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4. ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முழுமையாகக் களையப்பட வேண்டும்.

5. தமிழர் பிரதேசங்களில் புதிதாகக் காவல் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

அன்னை பூபதி [பிறந்தது 1932 நவம்பர் 03] 56, வயதில் 1988 மார்ச் 19 தொடக்கம் ஏப்ரல் 19 வரை, நீர் மட்டும் அருந்தி 31, நாட்கள் அவரால் முன்வைத்த 02, கோரிக்கைகள்..

1. உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்.

இந்த தாயும், மகனும் இந்திய அரசிடம் தமிழீழம் கேட்டு உண்ணா விரப்போராட்டம் செய்யவிலை, சமஷ்டி தீர்வு கேட்டு போராட்டம் செய்யவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் என்ற போர்வையில் அமைதிப்படையாக ஈழமண்ணில் நுழைந்து ஆக்கிரமிப்பு படைகளாக மாறி இலங்கை அரசின் நிகழ்ச்சி திட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்பைகளை மேற்கொண்டமையால்தான் இந்தியாவிற்கு எதிராக அந்த நாட்டின் அறவளிப்போர் மரபுகளுடன் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு பாரத்தின் பகட்டு முகத்திரையை கிழித்தெறிந்தனர்.

அவர்களின் தியாகங்களை நிறைவேற அதன்கான பணிகளை செய்வதே நாம் அவர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

அந்தவகையில் இன்று 26.09.2025, தியாகி திலீபனின் 38 ஆம் அண்டு நினைவாகும். அவர் இன்று உயிருடன் இருந்திருப்பின் 62, அகவையுடன் வாழ்ந்திருப்பார். அன்னை பூபதியின் 37ஆம் ஆண்டு நினைவு கடந்த 2025, ஏப்ரல் 19, அவர் உயிருடன் இருந்திருந்தால் இன்று 93, அகவையுடன் வாழ்ந்திருப்பார்.

இன்று 2025, ஆண்டுகள் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு 13ஆவது சட்டத்திருத்தம் மூலம் அறிமுகமான மாகாண சபை முறைமை இணைந்த வடகிழக்கில் ஒரே ஒரு தேர்தலை குறைமாத பிரசவமாக அரசியல் 2008, 2012இல் இரண்டு கிழக்கு மாகாணசபை தேர்தலும் 2013இல் ஒரேயொரு வடமாகாணசபை தேர்தல் மட்டுமே இடம்பெற்று எந்த ஒரு அதிகாரமும் இன்றி மாகாணசபை தேர்தல்களும் நடத்த முடியாமல் காலத்தை இழுத்தடிக்கும் நிலையே தொடர்கிறது.

இப்போது தமிழீழம் கேட்டு போராடிய இனம் சமஷ்டி கேட்டு போராடிய இனம் மாகாணசபை தேர்தலை நடத்துங்கள் என கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்திய அரசும் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று அவர்களால் இலங்கை அரசை வலியுறுத்த வக்கில்லாமல் ஜநா மனித உரிமை 60, வது கூட்டத்தொடரில் இந்திய தரப்பு இலங்கையில் மாகாண சபை தேர்தலையும், 13ஆவது திருத்தம் தொடர்பாகவும ஜெனிவாவில் இந்தியா சார்பாக கலந்துகொண்ட பிரதிநிதி கதைத்தார் என்றால் இந்தியாவால் அந்த விடயத்தை இலங்கையிடம் கூறி வலியுறுத்த முடியாது என்பதை அல்லவா வெளிக்காட்டியுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கான இனப்படுகொலைக்கான சர்வதேச நீதியும் இல்லை. அரசியல் தீர்வும் இல்லை, புதிய அரசியல் யாப்பும் இல்லை, அப்படி மல்லுக்கட்டி சிலவேளை புதிய அரசியல் யாப்பு வந்தாலும் ஈழத்திழர்களை புறக்கணித்து கடந்த 2015 இல் நல்லாட்சி அரசில் பேசிய தமிழ் தரப்பு ஏற்காத ஏக்கியராச்சிய அரசியலமைப்பை மீண்டும் தூசிதட்டி முன்வைக்கவே தேசிய மக்கள் சக்தி அரசு முயல்கிறது.

ஈழத்தமிழினம் போராடும் ஒரு இனமாகவே யார் ஆட்சியில் இருந்தாலும் தொடரப்போகிறது இதுதான் தியாகி திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவில் நாம் கற்றுக்கொண்ட பாடம்.

யாழில் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்த உண்ணா நோன்புப் போராட்டம்

27.09.2025

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாநோன்புப் போராட்டம் இன்று சனிக் கிழமை மூன்றாம் நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

குறித்த போராட்டம் யாழ் செம்மணியில் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 1ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்திற்கு நீதி கோரியும் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் அணையா விளக்கு பகுதியில் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தி போராட்டத்தை ஆரம்பமானது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்ககள், சிறிலங்காவில் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழ் இனவழிப்புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

மன்னாரில் காற்றாலை மின் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த போது மக்கள் மீது சிறீலங்காப் பொலிசார் தாக்குதல்

27.09.2025

மன்னாரில் காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வரும் நிலையில், மக்களின் விருப்பத்திற்கு மாறாக காற்றாலைகளை தீவுக்குள் கொண்டு செல்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், காற்றாலை உதிரிபாகங்களை ஏற்றி வந்த வாகனங்களை அமைதியான முறையில் தடுக்க முயன்ற மக்கள் மீது பொலிசார் கொடூரமான தாக்குதலை மேற்கொண்டனர்.

இதில் பலர் காயமடைந்து வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மக்களின் விருப்பத்திற்கு எதிராக எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த மாட்டோம் என ஜனாதிபதி தெரிவித்திருந்த நிலையில், கடந்த மாதம் ஒரு குழுவை அமைத்து மக்களின் கருத்துக்களை உள்வாங்கி நல்ல தீர்வு வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

ஆனால், இதற்கு மாறாக, ஜனாதிபதி மக்களின் எதிர்ப்பையும் கருத்துக்களையும் மதிக்காமல், காற்றாலைத் திட்டங்களைத்

தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நேற்று முன்தினம் பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில், நேற்று (26) இரவு 10 மணியளவில், முதற்கட்டமாக காற்றாலை உதிரிபாகங்களை ஏற்றி வந்த வாகனங்களை மக்கள் அமைதியாகத் தடுத்து நிறுத்த முயன்றபோதிலும், அவர்களின் எதிர்ப்பை மீறி உதிரிபாகங்கள் கொண்டு செல்லப்பட்டன.

தொடர்ந்து, நள்ளிரவு 12 மணியளவில் இரண்டாவது காற்றாலை உதிரிபாகங்கள் கொண்டு செல்லப்பட்டபோது, பொது மக்களும் அருட்தந்தையர்களும் வீதிகளில் இறங்கி தடுக்க முயன்றனர்.

அப்போது, பொலிசார் பெண்கள், அருட்தந்தையர்கள் உள்ளிட்ட அனைவர் மீதும் கொடூரமாகத் தாக்குதல் நடத்தி, கூட்டத்தைக் கலைக்க முயன்றனர்.

அதேவேளை, போராட்டக்காரர்களைத் தடுக்க விசேட அதிரடிப் படையினரைப் பயன்படுத்தி, ஆயுத முனையில் அவர்களை அச்

சுறுத்தி, காற்றாலை உதிரிபாகங்களைக் கொண்டு சென்றனர்.

குறிப்பாக, சில பெண்கள் மீது கால்களால் மிதித்தும், தடிகளால் அடித்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் காயமடைந்தவர்கள் மன்னார் பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மன்னார் காற்றலைக்கு எதிராக கட்டைக்காட்டில் போராட்டம்

28.09.2025

மன்னார் காற்றாலை திட்டத்தை எதிர்த்து மக்கள் எழுப்பிய ஜனநாயக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீதும் பங்கு தந்தையர்கள் மீதும் காவல்துறை மேற்கொண்ட தாக்குதலை கண்டித்து வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் அமைதி வழி போராட்டம் ஒன்று இன்று (28) முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மக்களுக்கு பாதிப்பாக அமையக்கூடிய காற்றாலை திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னாரில் போராட்டம் தீவிரம் அடைந்துவரும் நிலையில் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது அரச அடக்குமுறை பயன்படுத்தப்படுகிறது.

போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீதும், அருட் தந்தையர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை கண்டித்தும் மன்னார் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவழிக்கும் முகமாக வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கட்டைக்காடு பொதுமக்களின் ஒழுங்குபடுத்தலில் கட்டைக்காடு பங்கு தந்தை தலைமையில் இன்று காலை 7:30 மணி அளவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அழிக்காதே அழிக்காதே மன்னாரை அழிக்காதே, வேண்டாம் வேண்டாம் காற்றாலை திட்டம் வேண்டாம், அள்ளாதே அள்ளாதே எமது மண்ணை அள்ளாதே போன்ற வாசகங்களை ஏந்தி கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கட்டைக்காடு பங்கு தந்தை வசந்தன் அடிகளார்,

மன்னார் தீவில் எமது மக்களுடைய சாத்வீக போராட்டம் அரசு இயந்திரத்தால் ஒடுக்கப்படுவதை கண்டித்து கட்டைக்காடு பொது மக்களாக நாங்கள் இதனை வன்மையாக கண்டிக்கிறோம்.

மன்னார் எங்களுடைய பூர்வீக சொத்து, அபிவிருத்தி என்னும் பெயரில் மன்னார் மக்கள் பாதிக்கப்படுவதையும் மன்னாருடைய வளங்கள் சூரையாடப்படுவதையும் வன்மையாக கண்டித்து அப்பகுதி மக்கள் சாத்வீகமான போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஆனால் இந்த அரசாங்கம் அரசு இயந்திரத்தை பயன்படுத்தி மன்னார் மக்களுடைய சாத்வீக போராட்டத்தை அசிங்கப்படுத்தியுள்ளார்கள் அத்தோடு அப்பாவி மக்கள், அப்பாவி மத குருமார்களை தாக்கி இருக்கிறார்கள்.

உடனடியாக இந்த அராஜகம் நிறுத்தப்பட வேண்டும். பல வாக்குறுதிகளை கொடுத்து ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் ஏனைய அரசாங்கங்களை போன்றுதான் செயல்பட எத்தணிக்கின்றார்கள்.

இன்னும் எமது நாட்டில் இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை, அரசியல் கைதிகள் இன்றும் சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள், அத்தோடு எமது மன்னார் தீவின் வளங்களை சூரையாடுவதற்காக திரைமறைவில் பல காய்கள் நகர்த்தப்பட்டு கொண்டிருக்கின்றன. இது சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

உடனடியாக அரசாங்கம் இவ்வாறான தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை கைவிட்டு எமது தேசத்தில் எமது மக்கள் உரிமையோடும், இறைமையோடும், தங்களுடைய வளங்களை தாங்களே பயன்படுத்தக்கூடிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

இதனை சர்வதேச சமூகம் பாராமுகமாக இருக்காமல் சர்வதேச சமூகத்தின் தலையீட்டுடன் எமது மக்களுடைய உரிமைகள்

கிடைக்கப் பெற வேண்டும் என்பதனை வலியுறுத்தி கட்டைக்காடு பொது மக்களாக இன்றைய காலை வேளையில் இந்த சாத்வீகமான போராட்டத்தில் இணைந்து கொண்டிருக்கிறோம்.

அத்தோடு ஏனைய அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கமும் தமிழ் மக்களை ஒடுக்குகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. ஆகவே இவ்வாறான செயற்பாடுகளுக்கு எங்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்று சொன்னால் சர்வதேச தலையீடு கண்டிப்பாக தேவை என்பதனை மக்கள் தற்போது தெளிவாக புரிய தொடங்கி இருக்கிறார்கள்.

அதேபோன்று மக்களாக குறித்த மன்னார் காற்றாலைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றபோதும் மக்களின் சாத்வீகமான போராட்டத்தை சிலர் மதச்சாயம் பூச முனைகின்றார்கள்

அருட்தந்தையர்கள், இந்துக் குருக்கள், முஸ்லிம் மத குருமார்கள், ஆகியோர் இன மத பேதமின்றி கலந்து கொள்கிறார்கள். ஆகவே அரச இயந்திரம் மதச்சாயம் பூசி மக்களின் சாத்வீக போராட்டத்தை சேறு பூச முனையாமல் அவர்களுடைய இறைமை பாதுகாக்கப்பட கொடுத்த வாக்குறுதிகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டுமென தெரிவித்தார்.

மன்னாரில் காற்றாலைகளை நிறுவுவதற்கு முன்னர் அரசு மக்களுடன் கலந்துரையாடல்களுக்கு வர வேண்டும்: வர தவறும் பட்சத்தில் மக்கள் தொடர்ந்தும் அரசுக்கு எதிராக போராடுவார்கள்

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன்

28.09.2025

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பொலிசார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளனர். ஒரு ஜனநாயக நாட்டில் உரிமை கேட்டு போராடுவது தவறா? போராட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்தவர்கள் என்றால் அது ஜே.வி.பி என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இன்று ஞாயிற்றுக்கிழமை (28) மதியம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பல்வேறு விதமான போராட்டங்களும், கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், கடந்த மாதம் 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அமைச்சர்களுடன் சந்திப்பும், 13 ஆம் திகதி ஜனாதிபதியுடனான சந்திப்பிற்கு பின்னர் ஒரு மாத காலம் இடை நிறுத்தப்பட்டிருந்த பணிகள் அதற்கு பின்னர் மாவட்டத்தில் இயங்குகின்ற அமைப்புக்களுடனான கலந்துரையாடல், பாதிக்கப்பட்ட தரப்புக்களுடன் 5 இடங்களில் கலந்துரையாடல் என இடம் பெற்றன.

அதனை தொடர்ந்து வருகை தந்த விசேட குழுக்களிடம் அமைப்புக்கள் ஊடாக கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றை எல்லாம் பெற்றுக்கொண்டவர்கள், நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவது போல் ஜனாதிபதியினுடைய செயலாளர் கடந்த 22 ஆம் திகதி மின்சக்தி அமைச்சிற்கு கடிதம் எழுதியுள்ளார் 14 காற்றாலைகளையும் அதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு.

அன்றைய தினமே மின் சக்தி அமைச்சின் செயலாளர் மன்னார் மாவட்ட செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.ஆகவே நீதிமன்றத்தின் தீர்ப்பு போல் மக்கள் மன்றங்களின் விவகாரங்களை அரசு கையாள நினைப்பது சர்வ அதிகாரத்தின் அதி உச்சமாக நாங்கள் பார்க்கின்றோம். ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களுடைய வாதங்களைக் கேட்டு உணர்ந்தவர்கள் அந்த மக்களுடன் மீண்டும் கலந்தரையாடியே தீர்மானத்திற்கு அவர்கள் வந்திருக்க வேண்டும்.

நீங்கள் சொல்வதை சொல்லுங்கள். நாங்கள் நினைப்பதை தான் செய்வோம் என்றால் அரசு முற்று முழுதாக சர்வாதிகாரமாக தான் செயல் படுகிறதா? மக்களுடைய அடிப்படை கோட்பாட்டில் இருந்து விலகி கடந்த கால அரசாங்கங்கள் மக்களுக்கு எதிராக சமூகத்திற்கு எதிரான நிலைப்பாட்டை கையில் எடுத்ததோ, அதே விடையத்தை அனுரவின் அரசும் முன்னெடுக்கின்றதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

போராடுகின்ற மக்களை தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்ற மக்களோடு, எந்த விதமான உரையாடலும் மேற்கொள்ளாது அவர்கள் தாங்கள் நினைத்தது போல் இத்திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றலாம் என்று அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அதனடிப்படையில் நேற்று சனிக்கிழமை (27) இரவு காற்றாலைக்கான உதிரிபாகங்களை மன்னாருக்கு கொண்டு வந்துள்ளனர். இதன் போது அதற்கு எதிராக ஜனநாயக ரீதியாக போராடிய மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மிலேச்சதனமானது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பொலிசார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளது. ஒரு ஜனநாயக நாட்டில் உரிமை கேட்டு போராடுவது தவறா? போராட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்தவர்கள் போராட்டத்திற்கு ஒரு கட்சி என்றால் அது ஜே.வி.பி தான்.அந்த நிலையில் இருந்து கொண்டு ஆட்சி சித்தாந்தத்தை ஏற்படுத்திய கட்சி இன்று அதே போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது என்பது உண்மையில் அவர்களின் மனநிலை என்ன?

யுத்த வெற்றிவாத மனோ நிலையில் ராஜபக்ஸக்கள் எவ்வாறு செயலாற்றினர்களோ அந்த ராஜபக்ஸக்களை யுத்த வெற்றிவாத மன நிலைக்கு இட்டுச் சென்ற ஜே.வி.பி இன்றைய ஜனாதிபதியும் மிக முக்கியமானவர். ஆகவே அதே மனநிலையில் தான் இன்றும் அவர்கள் தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்ள முனைகிறார்கள் என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுகின்றது.

உங்களுடைய கட்சிக்கு கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இந்த மாவட்டத்தில் அதிக அளவான மக்கள் வாக்களித்துள்ளனர். அந்த மக்களின் உணர்வுகளையும் கோரிக்கைகளையும் சற்று கூட புரிந்து கொள்ளாத இந்த அரசு தான்தோன்றித்தனமாக ஜனநாயக விரோத செயல்பாட்டில் ஈடுபடுகின்றது. நாட்டிற்கு ஜனாதிபதி வந்ததன் பின்னர் மக்களுடன் உரையாடி அவர்களினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் எவ்வாறு நடைமுறைப்படுத்த போகின்றீர்கள்? நடை முறைப் படுத்துகின்ற போது எழுகின்ற சவால்களுக்கு என்ன தீர்வு வைத்துள்ளீர்கள்?

ஏற்கனவே 30 காற்றாலைகள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பிரதேசங்களுக்கும் என்ன தீர்வு வைத்துள்ளீர்கள்? இவற்றை எல்லாம் கலந்துரையாடி தான் அரசு அடுத்த கட்ட நகர்வுக்கு போக வேண்டுமே தவிர நாங்கள் நினைத்ததை தான் செய்வோம் என்றால் இது ஜனநாயக அரசும் இல்லை.

நாட்டின் கோட்பாட்டு தத்துவமும் இல்லை. மன்னார் மக்கள் ஏன் காற்றாலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று அரசு தரப்பு இன்னும் புரிந்து கொள்ளவில்லை. தீவுப் பகுதிக்குள் காற்றாலை வேண்டாம் என்பதையே மக்கள் தெரிவிக்கின்றனர். மக்கள் காற்றாலை திட்டத்திற்கு எதிரானவர்கள் இல்லை.

மேலும் கடந்த அரசாங்கம் தான் இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது என தற்போதைய அரசு கூறுகிறது. ஆனால் கடந்த 22-02-2025 அன்று கேலீஸ் நிறுவனத்திற்கு 10 காற்றாலைகள் அமைக்க மின் சக்தி அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று தற்போதைய அரசு கூறிவிட முடியாது.

எனவே அரசு புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். மக்களின் ஜனநாயக எழுச்சியை எந்த அரசாலும் கட்டுப்படுத்த முடியாது என்பதை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இலங்கை சந்தித்தது.

எனவே காற்றாலைகளை நிறுவுவதற்கு முன்னர் அரசு எங்களுடன் கலந்துரையாடல்களுக்கு வர வேண்டும். வர தவறும் பட்சத்தில் மன்னார் மக்கள் தொடர்ந்தும் இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே கடைபிடிப்பார்கள். அதற்கான சூழலை அரசு ஏற்படுத்தியுள்ளது. மன்னார் மக்கள் இத்திட்டத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தொடர்ந்தும் மக்கள் இவர் களுக்கு எதிரான நிலைப்பாட்டை கடைபிடிப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மீனவ அமைப்பின் பிரதிநிதி என்.எம்.ஆலம், சமூக செயற்பாட்டாளர் திருமதி ரெபேக்கா ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

12ஆவது நாளாக தொடரும் திருகோணமலை முத்துநகர் விவசாயிகளின் உண்ணா நோன்புப் போராட்டம்

28.09.2025

திருகோணமலை முத்து நகர் விவசாயிகளின் 12வது நாளாக உண்ணா நோன்புப் போராட்டம் இன்றும் (28) திருகோணமலை மாவட்ட செயலகம் முன் தொடர்கிறது.

கடந்த வாரம் கொழும்பில் பிரதமரை சந்தித்த போது பத்து நாட்களுக்குள் தீர்வை வழங்குவதாக கூறி இன்னும் பிரதமர் அவர்களின் காலக்கெடு மீதி 06 நாட்களே உள்ளன, திருகோணமலை வளங்களை சூரையாடுவதை நிறுத்து போன்ற பல வாசகங்களை ஏந்தியவாறும் உண்ணாநோன்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் போது ஊடகங்களுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை (28) கருத்து தெரிவித்த விவசாயிகள் கடந்த 53 வருடங்களாக பரம்பரை பரம்பரையாக செய்து வந்த எங்கள் விவசாய பூமியை எங்களுக்கு வழங்குங்கள்.

இந்திய கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கப்பட்ட விளை நிலங்களை மீளக் கொடுங்கள் எனவும் பிரதமர் 10 நாட்கள் அவகாசம் கொடுத்த நிலையில் இன்னும் ஆறு நாட்களே மீதமுள்ளன நல்லதொரு தீர்வை பிரதமர் எமக்கு வழங்குவார் எதிர்பார்க்கிறோம்.

'கிருஷாந்தியின் அடிச்சுவடுகளில்' சிங்களத்தில் நூல் வெளியீடு

28.09.2025

செம்மணி புதைகுழியை உலகறியச்செய்த கிருஷாந்தி குமாரசாமியின் படுகொலையை மையமாக வைத்து சிங்களத்தில் நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

"கிருஷாந்தியின் அடிச்சுவடுகளில்" (கிருஷாந்தியின் அடிபாரே) என்று குறித்த நூலுக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

சிங்களத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரத்னபால கமகே இதனை தொகுத்து எழுதியுள்ளார்.

செம்மணிப் படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் குறித்த புலனாய்வு ஊடகத் தகவல்கள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.





முல்லைத்தீவு கேப்பாப்புலவு காணிகளை விடுவியுங்கள்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

28.09.2025

முல்லைத்தீவு, கேப்பாப்புலவில் இராணுவத்தின் பிடியிலுள்ள மக்களுக்குரிய 190 ஏக்கர் காணிகளை விடுவிப்புச் செய்வதுடன், அகதி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் கேப்பாப்புலவு மக்களை உடனடியாக அவர்களின் பூர்வீக வாழிடங்களில் மீளக்குடியமர்த்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில்,

“கேப்பாப்புலவு மக்கள் பாரிய போராட்டங்களை நடாத்தியதன் மூலமாக இராணுவத்தின் கையகப்படுத்தலில் இருந்த பெருமளவான மக்களின் காணிகள் கடந்தகாலங்களில் விடுவிக்கப்பட்டன.

ஆனால் தற்போதும் 190 ஏக்கர் அளவில் கேப்பாப்புலவு மக்களுடைய பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்படாமலுள்ளன. அந்தக் காணிகள் விடுவிக்கப்படவேண்டும்.

குறித்த கேப்பாப்புலவு காணி விடுவிப்பு தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் கேட்டால் கூடிய விரைவில் விடுவிக்கப்படுமென தொடர்ந்து தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்.

அதேபோல் அமைச்சர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வரும்போது கேட்டால் அவர்களும் அதே பதிலையே கூறுகின்றனர். அதேபோல் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் உபாலி சமரசிங்கவிடமோ அல்லது வன்னி மாவட்ட அரசாங்கத்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ கேட்டால் அவர்களும் கூடிய விரைவில் கேப்பாப்புலவு காணிகள் விடுவிக்கப்படுமென தெரிவிக்கின்றனர்.

ஆனால் குறித்த கேப்பாப்புலவு காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் கேப்பாப்புலவை பூர்வீகமாகக் கொண்ட 60 குடும்பங்கள் அளவில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் அவல வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். கேப்பாப்புலவு மக்களுக்கு ஏன் இந்த அகதி எனும் அவல நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தயவுசெய்து கேப்பாப்புலவு மக்களை உடனடியாக அவர்களுடைய பூர்வீக வாழிடங்களில் மீள்குடியேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்” என்றார்.

மன்னார் காற்றாலை திட்டத்தை அதானி நிறுவனம் விலகிய பின்னர் ஜேவிபி ஆட்சியாளர்கள் குறித்த திட்டத்தை Hayleys Fentons Ltd நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது

இனமொன்றின் குரல் முகநூல்

28.09.2025

மன்னார் காற்றாலை திட்டத்தை அதானி நிறுவனம் விலகிய பின்னர் ஜேவிபி ஆட்சியாளர்கள் குறித்த திட்டத்தை Hayleys Fentons LTD நிறுவனத்திடம் வழங்கிருக்கின்றார்கள்

இந்த Hayleys Fentons LTD நிறுவனம் மஹிந்த ராஜபக்சே குடும்பத்தின் பினாமியான கசினோ வர்த்தகர் திரு தம்மிக்க பெரேராவின் Hayleys PLC யின் 99.97 % வீத கட்டுப்பாட்டிலுள்ள துணை (Subsidiary) நிறுவனமாகும் .

அதே போல Hayleys PLC யில் ஆதிக்கம் செலுத்தும் (Influence- Soft Power) மற்றுமொரு நபராக கோத்தபாயா ராஜபக்சேவின் பினாமியான ரேயினர் சில்வா (சூரியன் குஆ- துமிந்த சில்வாவின் சொந்த சகோதரர்) இருக்கின்றார்.

அதாவது குறித்த Hayleys PLC யின் இரண்டாவது மிக பெரிய தனியார் முதலீட்டாளாராக (Second Largest Individual Shareholder) ரேயினர் சில்வா இருக்கின்றார்.

இவர்கள் தான் இந்த நிறுவனங்களின் Operating மற்றும் Finance நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்தி கட்டுப்படுத்தும் அதிகார மையங்களாக இருக்கின்றார்கள்.

இவர்களின் நிறுவனத்தினரிடம் தான் கேள்விப்பத்திர நடைமுறைகள் மீறப்பட்டு மன்னார் காற்றாலை திட்டத்தை ஜேவிபி வழங்கியிருக்கின்றது.

திருமதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் திரு அனுரகுமார திஸநாயக்க விவசாய அமைச்சராகவிருந்த போது உர கூட்டுத்தாபனத்தில் ரூபா 8 மில்லியனை திருடிய தற்போதைய ஜேவிபியின் மின்சக்தி அமைச்சர் திரு குமார ஜெயக்கொடி தான் இதன் சூத்திரதாரியாக இருக்கின்றார்.

ஏற்கனவே இந்த Hayleys நிறுவனத்தின் துணை (Subsidiary) நிறுவனங்களின் ஒன்றான Dipped Products PLC தங்கள் இரத்துபஸ்வல (Rathupaswala) பகுதியில் நிலத்தடி நீரை மாசுபடுத்தியத்தை எதிர்த்து 2013 ஆம் ஆண்டு அப்பிரதேச மக்கள் நடத்திய போராட்டம் மீது, ராஜபக்சே நிர்வாகம் துப்பாக்கி நடத்தி மூன்று பேரை கொன்று இருந்தனர்.

ரூபா 575 மில்லியன் ரூபா வரி ஏய்ப்பு மோசடி உட்பட பல்வேறு குற்றசாட்டுகளுடன் தொடர்புடைய தம்மிக்க பெரேரா ராஜபக்ச சகோதரர்கள் அதிகாரத்திலிருந்த போது சக்திமிக்க வியாபாரியாக இருந்தார்.

குறித்த காலத்தில் பல்வேறு அரசு நிறுவனங்களின் தலைவராகவும் அமைச்சுக்களின் செயலாளராகவும், தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் கடமையாற்றியிருந்தார்.

குறிப்பாக தம்மிக்க பெரேரா இலங்கைப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளாராக இருந்த போது 5 மில்லியன் ரூபா அரச பணத்தை முறைகேடாக திரு நாமல் ராஜபக்சேவின் இளைஞர்களுக்கான நாளை என்கிற இளைஞர் அமைப்பிற்கு கைமாற்றிய குற்றச்சாட்டில் 2015 ஆம் ஆண்டு கைதும் செய்யப்பட்டு இருந்தார்.

இந்த ராஜபக்சே பினாமிகள் நிறுவனத்திற்காக தான் மிக செறிவான மக்கள் குடியிருப்புகளுக்கு நடுவே மன்னாரில் காற்றாலைகளை அமைக்க முயற்சிக்கின்றார்கள்.

கடல்மட்டத்தை விட மிக தாழ்ந்த நிலப்பரப்பான மன்னார் தீவின் வாழ்வாதாரமான கடற்தொழிலை சிதைத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மன்னார் மக்களின் வாழ்க்கையை அடகு வைத்து மின்சாரம் பெற போவதாக சொல்லுகின்றார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் சூசை ஆனந்தன் தனது ஊரில் கிட்டத்தட்ட 350 வள்ளம் நிற்கின்றது என்கின்றார். ஆனால் கடலுக்கு போவது 10, 15 வள்ளம் தான்.

ஏனென்றால் அந்தளவிற்கு மீன் இல்லை. கறிக்கே மீன் இல்லை.

மீனவர்கள் வள்ளத்தை இழுத்து வைத்திட்டு நிறையப் பேர் கூலிக்கு அட்டை பிடிக்கிறதற்கு நிற்கிறார்கள். நிறையப்பேருக்கு தொழில் இல்லாமல் சரியான கஸ்டம்.

இவ்வாறான பல சூழ்நிலைகளின் விளைவாக 4 பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை தீவின் மீன் உற்பத்தி இந்த ஆண்டு 12.5 % வீழ்ச்சியடைந்து இருக்கின்றது (Y-o-Y, மே, 2025) ஆனால் எந்த தீர்வும் இல்லை.

கற்றாலை திட்டம் ஏற்படுத்தக்கூடிய வெள்ளத் தாக்கம் குறித்து சரியான ஆய்வுகள் எதுவுமே நடத்தாமல் காற்றாலைக்கான அனுமதியை வழங்கியிருக்கின்றார்கள்.

இதன் விளைவாக அங்கு ஏற்கனவே உள்ள காற்றாலைகளுக்கான வீதி கட்டமைப்புகள் காரணமாக மன்னாரின் பல கிராமங்கள் சிறிய மழைக்கே வெள்ளகாடாகி போகின்றன என சொல்லுகின்றார்கள்.

அதே போல பறவைகளின் வழித்தடங்களுக்கு தடையாகவுள்ள இடங்களுக்கும் கூட காற்றாலையை நிறுவ அனுமதி கொடுத்திருக்கின்றார்கள்.

இது போதாதென்று குறித்த திட்டத்திற்கான Environmental Impact Assessment (EIA) அறிக்கை கூட வெறும் பழைய தரவுகளை அடிப்படையடையாக கொண்டது என சொல்லப்படுகின்றது.

உண்மையில் வேற மாதிரி யோசிக்க வேண்டியவை நிறைய இருக்கின்றன.

கடல்வளங்களை மீன்பிடிக்கு, சுற்றுலாப் பயணத்துறைக்கு வினைத்திறனுடன் பயன்படுத்தி மன்னனரில் எவ்வளவு விடயங்களை செய்யலாம்.

ஆனால் மேற்படி உண்மைகளையெல்லாம் மறைத்து விட்டு தம்மிக்க பெரேரா 50,000 மக்களின் வாழ்க்கையை சிதைத்து மின்சாரம் (National Grid) தருவார் என உலகில் எந்த பகுதியிலும் நடக்காத கதைகளை சொல்லுகின்றார்கள்.

ஜேவிபி மின்சார கட்டணத்தை 1/3 குறைப்பதாக வாக்குறுதி வழங்கியிருந்த நிலையில் கடந்த 6 மாத காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை ரூபா 13.1 மில்லியன் (Q 1 & Q 2) நட்டமடைந்திருக்கின்றது.

இந்த உண்மைகளையெல்லாம் மறைத்து விட்டு ஜேவிபி பணம் கொடுத்து இயக்கம் சமூக தள பக்கங்களில் பொருளாதார நிபுணர்களாகி பல கதைகள் சொல்லுகின்றார்கள்

எமது தேசத்தின் வளத்தின் அடிப்படையில் எமது தேசிய பொருளாதாரம் சுயநிறைவு காணவேண்டும்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

மன்னார் மாவட்டம் முழுவதும் பொது முடக்கல் போராட்டம் முன்னெடுப்பு

29.09.2025

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை திட்டத்திற்கு எதிராகவும், மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்தும் இன்றைய நாள் திங்கட்கிழமை மன்னாரில் பொது முடக்கல் போராட்டம் இடம்பெற்ற நிலையில் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பல ஆயிரக்கணக் கான மக்கள் வருகை தந்து கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மன்னார் பஜார் பகுதி உள்ளடங்களாக அனைத்து பகுதிகளி லும் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட் டிருந்தது.

தனியார் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் நிறுத் தப்பட்டது. பல்வேறு கிராமங்களில் உள்ள மீனவர்கள் கடற் தொழிலுக்கு செல்லவில்லை. இந்த நிலையில் காலை 10.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடினர்.

பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டன பேரணி ஆரம்பமானது.

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல், மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பொலிசாரினால் பொதுமக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் தாக்கப் பட்டமை ஆகிய சம்பவங்களை கண்டித்து குறித்த பேரணி ஆரம்பமானது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் இருந்து போராட்டக்குழு ஒன்று வருகை தந்தது.

மேலும் வடக்கில் உள்ள சில மாவட்டங்களில் இருந்தும் ஆதரவு தெரிவித்து சமூக செயல்பாட்டாளர்கள் கலந்து கொண் டிருந்தனர்.

பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான குறித்த பேரணி பொது வைத்தியசாலை வீதியூடாக சென்று மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது.

பின்னர் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடிய மக்கள் காற்றாலை மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.இதனால் குறித்த பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது. பின்னர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மக்கள் ஒன்று கூடி இடத் திற்கு வருகை தந்தார்.

இதன் போது போராட்டக்குழு சார்பாக ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டிய கடிதம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கை யளிக்கப்பட்டது. கடிதத்தை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் உடனடியாக மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்தார். இதனை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் தொடர்ச்சியாக போராட்டம் இடம் பெறும் பகுதிக்குச் சென்றனர்.

இந்த நிலையில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிசார் தாக்குதல் மேற் கொண்ட நிலையில் தாக்குதலை மேற்கொண்ட பொலிசாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதனால் பொலிசாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடை யில் முருகல் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் கலகம் அடக்கும் பொலிசார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்டனர்.

பின்னர் தொடர்ச்சியாக முருகல் நிலை ஏற்பட்ட நிலையில் மத தலைவர்கள் அவ்விடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட் டவர்களுடன் கதைத்து அவ்விடத்தில் இருந்து அனைவரையும் அகற்றினர்.

அதனை தொடர்ந்து பஜார் பகுதியில் நின்று தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

யாழில் ஐந்தாவது நாளாகத் தொடரும் உண்ணா நோன்புப் போராட்டம்

29.09.2025

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாநோன்புப் போராட்டம் இன்றைய நாள் (29) ஐந்தாவது நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த போராட்டம் யாழ். செம்மணியில் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமான நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் 1ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட் டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள் நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசார ணையை வலியுறுத்தியும், செம்மணி மனிதப் புதைகுழி விவ காரத்திற்கு நீதி கோரியும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்கள், செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண் டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் அணையா விளக்கு பகுதியில் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தியவாறு போராட்டம் ஆரம்பமானது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் “சிறீலங்காவில் உள் நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம்”, “தமிழ் இன அழிப் புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசார ணையை மட்டுமே கோருகின்றோம்” உள்ளிட்ட கோரிக் கைகளை முன்வைத்திருந்தனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமானக நினைவுகூர்ப்பட்டது

26.09.2025

மட்டக்களப்பு, செப்டம்பர் 26 அன்று தமிழர் விடுதலைக்காக உண்ணா நோன்பின் மூலம் தன்னுயிரை ஈந்த ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவு நாள் (26.09.2025) அன்று கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நினைவுகூரப் பட்டது.

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், திலீபனின் ஈகம் உணர்வு பூர்வமாக நினைவுகூரப்பட்டது. நிகழ்வின் போது ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டதுடன், தமிழர் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் அவரது பங்களிப்பு வலியுறுத்தப்பட்டது.

தமிழர் தேசம் முழுவதும் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் நினைவு நாள் பல இடங்களில் நினைவுகூரப்படும் நிலையில், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் இந்த நினைவு நிகழ்வு குறிப்பிடத்தக்கதாகும்.

திருகோணமலை முத்துநகர் விவசாயிகள் 14ஆவது நாளாக தொடரும் போராட்டம்

30.09.2025

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் சூரிய மின் சக்தி திட்டத்துக்காக அபகரிக்கப்பட்ட தங்கள் விவசாய நிலங்களை பெற்றுத் தருமாறு கோரி 14ஆவது நாளாகவும் இன்று (30) திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்பாக சத்யாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“பொய் வேண்டாம்”, “எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்”, “விவசாயிகளை இப்படியா நடத்துவது”, “விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு” மற்றும் “அரசே எங்களுக்கு சோறு போடும் நிலத்தை மீட்டுத் தா” போன்ற பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் நடத்தினர்.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவிக்கையில்,

352 விவசாயிகளின் காணிகளை சூரையாடியுள்ளனர். அவற்றைப் பெற தொடர்ச்சியாக 14 நாட்களை தாண்டியும் போராட்டத்தில் ஈடுபடுகிறோம். இது தொடர்பில் எங்களுக்காக அரச தரப்பில் இருந்தோ அரசியல்வாதிகளோ குரல் கொடுக்க முன்வரவில்லை. பிரதமர் பத்து நாட்களுக்குள் முடிவு தருவதாக கூறியுள்ளார். அந்த நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம் என்றார்கள்.

‘ஈகைச்சுடர்’ லெப். கேணல் திலீபனுக்கு வலி. கிழக்குப் பிரதேச சபையில் வீரவணக்க நிகழ்வும், “திலீபன் வீதி” எனப் பெயரிடவும் மற்றும் சிலை அமைக்கவும் தீர்மானம்

26.09.2025

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் “ஈகைச்சுடர்” லெப். கேணல் திலீபனின் நினைவு நாள் வியாழக்கிழமை (25) உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டதுடன் லெப். கேணல் திலீபனின் தியாகத்திற்கு மதிப்பளிக்கும் விதமாக தீர்மானங்களும் மேற்கொள் ளப்பட்டன.

நேற்று வியாழக்கிழமை (25) காலை பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் சபை முன்றலில் நினைவு வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் தம் இன்னுயிரைத் தியாகம் செய்த மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அவ்வேளை பொது வணக்கச் சுடரினை பிரதேச சபையின் உறுப்பினர் விஜயதாரணி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. பின், தவிசாளரினால் நினைவு வணக்க உரை நிகழ்த்தப்பட்டது. சபை உறுப்பினர்களும் தமது மலர் வணக்கத்தினை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பிரதேச சபையின் அவை அமர்வில் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனை நினைவு கூர்ந்து முன்னைய காலங்களில் “திலீபன் வீதி” என பிரயோகிக்கப்பட்டு, பின்னர் பொக்கணை வீதி என அழைக்கப்பட்ட வீதியை புனரமைக்கவும் அவ்வீதியின் பெயரை நிர்வாக நடைமுறைகளுக்கு அமைய, “திலீபன் வீதி” என மீளவும் மாற்றியமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானிக்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, “ஈகைச்சுடர்” லெப். கேணல் திலீபன் அவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமத்தினைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் வலிகாமம் கிழக்கு பிர

தேச சபை வளாகத்தில் திலீபனுக்கு திருவுருவச்சிலையினை 1975ஆம் ஆண்டின் 4 இலக்க காட்சிப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதியைப் பெற்று நிறுவுவதெனவும் தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் அவைத் தீர்மானத்திற்காக முன்வைக்கப்பட்டது. இத்தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

www.sangathamil.ca

மன்னார் காற்றாலை விவகாரம்: அபிவிருத்தியின் போர்வையில் இன அழிப்பு தொடர்கிறது!

நீதிக்காகன செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

30.09.2025

இன அழிப்பினை அபிவிருத்தியின் போர்வையிலும் தொடரலாம் என்பதற்கு மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் நிகழ்கால உதாரணமாகும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (30) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அதன் தலைவர் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று அதிகாரத்தை காலடியில் மிதித்து மக்களை அவமதித்துள்ளதோடு அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமைதி போராட்டம் நடத்திய மக்களை பொலிசார் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தி அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டமை அரசாங்கத்தின் அடாவடி கோர முகத்தினையும், தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை சிங்கள பௌத்த பேரினவாத அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் தமிழர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களை கிழித்து எறிந்தமைக்கு ஒப்பான செயலுமாகும். இதனை வன்மையாக கண்டிக் கின்றோம்.

மக்களுக்கான ஆட்சி தொடர்பில் சர்வதேச மன்றிலிருந்து உலகத்துக்கே பாடம் எடுக்கும் இலங்கை ஜனாதிபதி தனது சொந்த நாட்டில் தமது தேர்தல் பிரச்சார மேடைகளில் "மக்களின் விருப்பின்றி எந்த அபிவிருத்தி திட்டங்களையும் மேற்கொள்ள மாட்டேன்" என்று கூறியதை நிறைவேற்றாது அராஜகம் புரிவதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் இது இன அழிப்பின் இன்னுமொரு வடிவமாகும்.

இன அழிப்பினை அபிவிருத்தியின் போர்வையிலும் தொடரலாம் என்பதற்கு மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் நிகழ்கால உதாரணமாகும். மக்களை அவர்களின் வாழ் நிலங்களில் இருந்தும், தொழில்கள் இருந்தும் அகற்றி அந்நிலத்தினை அவர்களிடமிருந்து பறித்து முதலாளித்துவ சக்திகளுக்குத் தாரை வார்ப்பது எந்த வகையில் நியாயம்? இதுவா இடதுசாரி கொள்கை? இதற்காகவா தமிழ் மக்களும் தேசிய சக்திக்கும் ஜனாதிபதிக்கும் வாக்களித்து அதிகார பதவியில் அமர்த்தினார்கள்?

அன்று யுத்தகாலத்தில் தமிழர் தேசத்தின் வளமான இல்மனைட் சுரண்டப்பட்டு கப்பலில் ஏற்றி சென்ற போது தமிழர்களின் படைப்புலமும் ஆயுதமும் அதனை தடுத்து நிறுத்தியது வரலாறு. யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் கனியவளம் மட்டும் அல்ல தமிழர்கள் நிலத்தை அபிவிருத்தி எனும் போர்வையில் அன்னிய சக்திகளுக்கு கொடுக்க முனைவதும், அதனை அமைதி வழியில் எதிர்ப்பு தெரிவிக்கும் மக்களை தாக்குவதும் மீண்டும் பழைய நிலையை தோற்றுவிக்கவா? என்றும் கேட்கத் தோன்றுகின்றது.

தமிழர்கள் முன் வைக்கும் யுத்த குற்றங்களுக்கான நீதிக்கு அப்பால் அரச பயங்கரவாத படையினர் பலவந்தமாக கட்டிய விகாரைக்கு இதுவரை நீதி கிட்டவில்லை. கிழக்கின் மயிலத்தமடு மாதவனை பண்ணை பணியாளர்களின் போராட்டத்திற்கு நீதி கிடைக்கவில்லை. மன்னார் காற்றாலை மற்றும் கனியவளம் அகழ்வு தொடர்பில் உறுதியளித்த நீதியை மறுப்பதும் தமிழர்களுக்கு எதிரான அழிப்பே. தற்போதைய ஆட்சியாளர்களும் கடந்த காலத்தைப் போன்று சிங்கள பௌத்த பேரினவாத மனநிலையிலேயே ஆட்சியை தொடர்கின்றனர் என்பதனை அண்மைய சம்பவங்கள் உறுதி செய்கின்றன.

தற்போது தமிழர்கள் முகம் கொடுக்கும் சவால்களை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் தெற்கின் முற்போக்கு அரசியல் முகம் கொண்ட அரசியல் கட்சி ஒன்று தமிழர்களின் அரசியலை ஆக்கிரமிக்க தமிழர் தாயகத்தில் களம் இறங்கி உள்ளது. தீர்வுக்கு பக்க பலமாக இருப்பதாகவும் அதற்கான போராட்டங்களை தலைமை தாங்கி முன்னெடுப்பதாகவும் காட்டி நிற்பது தமது கட்சி அரசியலை தமிழர் தாயகத்தில் பலப்படுத்தவே. மீண்டும் ஒரு முறை விட்டில் பூச்சிகளாகி எம்மை நாமே அழித்துக்கொள்ளக் கூடாது என அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம். தமிழ் அரசியல் தலைமைத்துவங்களும், சிவில் சமூக அமைப்புகளும், அரசியல் வழிகாட்டிகளாக தம்மை அடையாளப்படுத்தி கட்டுரை வரைபவர்களும் விழித்துக்கொள்ள வேண்டிய காலம் இது.

தமிழர் பாதுகாப்புக்கான கோரிக்கைகளை முன் வைத்து 38 ஆண்டுகளுக்கு முன் தியாகியான திலீபனுக்கு சுடர் ஏற்றிய நாளின் இரவில் தான் மன்னார் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை சாதாரண ஒரு நிகழ்வாகவோ, மன்னார் போராட்டக்காரர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலாகவோ கணிக்க முடியாது. என்றும் உயிர்ப்புடன் உள்ள திலீபனின் அரசியல் கோரிக்கைகளுக்கு எதிரான தாக்குதலாகவே நாம் கொள்ளல் வேண்டும்.

தமிழர்களின் தீர்க்கப்படாத அரசியல் பிரச்சனையை சர்வதேச மட்டத்தில் நீர்துப்போக செய்யவும், தமிழர் தாயகத்தில் நிகழ்ந்த சர்வதேச போர் குற்றங்களுக்கான நீதியை உள் நாட்டு விசாரணை பொறிமுறைக்குள் முடக்கவும் சிங்கள பௌத்தத்தின் நீதியை திணிக்கவும் ஆட்சியாளர்கள் மிகத் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதனை அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்களின் பலத்துடன் தான் முறியடிக்க முடியும். இனியும் காலம் தாமதிக்க முடியாது.

ஆதலால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், திலீபன் உயிர் கொடையான நாள், மாவீரர் நாள் என்பவற்றையும் தமிழர்களின் அரசியலுக்காக வித்தானோரையும் மையப்படுத்திய அரசியல் செயற்பாடு நிறைந்த வழித்தடமாக்கி தமிழர் தாயகத்தின் விடுதலைக்காக செயல்படும் அனைத்தும் தரப்பினரும் தமிழர் தாயக அரசியலுக்காக உயிர் கொடையானவர்களின் அரசியலோடு பயணிக்க திடசங்கற்பம் கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுகின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக நுழைவாயிலை மறித்து ஆசிரியர் சங்கத்தினர் போராட்டம்

30.09.2025

தமக்கான ஊதிய உயர்வு மற்றும் கடந்தகாலங்களில் கிடைக்கப்பெற்று தற்போது நிறுத்தப்பட்ட சில சலுகைகளை மீள வழங்கல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்துடன் இணைந்து ஒரு நாள் அடையள போராட்டம் ஒன்றை இன்றையதினம் முன்னெடுத்தனர்.

யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து இன்று காலை முன்னெடுக்கப்பட்ட குறித்த எதிர்ப்பு அடையாளப் போராட்டம் பல்வேறு கோசங்கள் அங்கிய பதாதைகளை ஏந்தியவாறு முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பல்கலையின் ஆசிரியர் சங்க தலைவர் கலாநிதி விக்னேஸ்வரன் –

இன்றைய அரசின் கல்வி அமைச்சர், ஜனாதிபதி உள்ளிட்டவரகளுடன் எமது பிரச்சினைகள் குறித்து பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தி, தீர்வை வழங்க அவர்கள் இணங்கிய நிலையில், தீர்வுகளை நடைமுறைபடுத்துவதில் காலதாமதம் அல்லது இழுத்தடிப்பு நிலை இருந்துவருவதால், அதற்கு எமது எதிர்ப்பை வெளிக்கொணரும் வகையிலும் தீர்வை விரைவுபடுத்தக் கோரியுமே இந்த போராட்டத்தை நாம் முன்னெடுக்கின்றோம்.

இந்த அரசு தற்போது கொண்டுவந்துள்ள சம்பள சீரமைப்பில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கடுமையாக பாதிக்கப்படும் நிலை இருக்கின்றது.

அதேபோன்று கொரோனா உள்ளிட்ட பல அனர்த்தங்களால் பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர் அனுமதிப்பும் அதிகரித்துள்ளதால் மாணவர்களை உரிய ஆராச்சி முறையிலான கற்பிதங்களை செய்வதில் பல நெருக்கடிகள் இருக்கின்றன.

மேலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிள்ளைகளுக்கு தரம் மிக்க பாடலைகளில் முதலாம் தரத்தில் இணைப்பதற்கான சலுகைகள் வழங்கப்பட்டு வந்தது. அதை இந்த அரசு நிறுத்தியுள்ளது.

விரிவுரையாளர்கள் பலர் வெளி நாடுகளுக்கு சென்றுள்ளமையால் அவர்களது வெற்றிடங்களை நிவர்தி செய்வதற்கான நடவடிக்கையை இன்றைய அரசு எடுக்காதுள்ளதால் விரிவுரையாளர்கள் கடும் சுமைகளுக்குளாகியுள்ளனர்.

கல்வி மறுசீரமைப்பை இந்த அரசு முன்னெடுக்கின்றது. இந்த நடவடிக்கையின் போது உரிய ஆய்வுகளை மேற்கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்றது என எமது தாய்ச்சங்கம் சுட்டிக்காட்டிய போதும் அது தொடர்பில் அரசு அக்கறை கொள்ளாதிருக்கின்றது.

இவ்வாறான பல பிரச்சினைகளை நாம் எதிர்கொண்டு வரும் நிலையில் அரசுடன் போச்சுக்களை நடத்தி தீர்வை எட்டியிருந்தோம்.

ஆனால் அந்த தீர்வை நடைமுறைப்படுத்த அரசு பின்னடிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பிரச்சினைக்கு தீர்வை விரைவுபடுத்தும் நோக்கிலேயே இந்த ஒரு நாள் அடையாள போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

எனவே நாட்டின் முதுகெலும்பான பல்கலைக்கழக கட்டமைப்பை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று தெரிவித்தார்.

கனடாவில் பணவீக்க வீதம் குறித்து கனடிய புள்ளிவிபரவியல் திணைக்கத்தின் புதிய தகவல்

16.09.2025

கனடாவின் மொத்த பணவீக்க விகிதம் ஆகஸ்ட் மாதத்தில் 1.9% ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

பெட்ரோல் விலைகளின் உயர்வு பணவீக்கத்தில் முக்கிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பெட்ரோல் விலை மாதந்தோறும் 1.4% உயர்ந்தது. வருடாந்திர அடிப்படையில் விலை இன்னும் 12.7% குறைந்துள்ளது, ஆனால் யூலை மாதத்தில் இருந்த 16.1% குறைவிலிருந்து சற்று மந்தமானது.

இதன் காரணமாகவே மொத்த பணவீக்கத்தை உயர்த்தியுள்ளது. பெட்ரோல் விலை இல்லாமல் கணக்கிடப்பட்ட பணவீக்கம் 2.4% ஆக உள்ளது.

இது கடந்த மூன்று மாதங்களுடன் ஒப்பிடும்போது சற்று குறைவாகும். ஆகஸ்ட் மாதத்தில் மளிகைப் பொருட்களின் விலைகள் 3.5% உயர்ந்துள்ளன.

இறைச்சி வகைகளின் விலைகள் 7.2% உயர்ந்துள்ளன வீட்டு வாடகை மற்றும் வீட்டு கடன் வட்டி செலவுகள் ஆண்டுக்கான பணவீக்கத்தை உயர்த்தும் முக்கிய காரணிகளாக தொடர்ந்தும் நீடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் வட்டி விகீதத்தை 0.25 சதவீத குறைப்பு; 2.5 சதவீதமாக நிர்ணயிதுள்ள மத்திய வங்கி

17.09.2025

கனடாவில் வங்கி வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக கனடா மத்திய வங்கி அறிவித்துள்ளது.

முக்கிய வட்டி விகிதத்தை 0.25 சதவீத புள்ளிகளால் குறைத்து 2.5 சதவீதமாக நிர்ணயித்துள்ளது.

உலக வர்த்தகத் தடைகள் மற்றும் சிக்கல்கள் காரணமாக உலக பொருளாதார வளர்ச்சி மந்தமாகி வரும் நிலையில், இந்த வட்டி விகிதக் குறைப்பை பொருளாதார நிபுணர்கள் முன் கூட்டியே எதிர்பார்த்திருந்தனர்.

ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் விலைகள் கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 1.9 சதவீதம் உயர்ந்திருந்ததாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு மத்திய வங்கி வட்டி விகிதத்தை குறைக்கும் முதல் முறை இதுவாகும்.

கனடாவின் பலவீனமான தொழில்சந்தை நிலையும், அமெரிக்க வரி விதிப்பிற்கான எதிர்வினை நடவடிக்கைளும் இந்த வட்டி குறைப்புக்கான ஏதுக்கள் என கனடிய மத்திய வங்கி ஆளுநர் டிஃப் மாக்லெம் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் பலவீனமடைந்துள்ள நிலையில், பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் குறைந்துள்ளதால், வட்டி விகிதத்தை குறைப்பது சரியான முடிவு என நாங்கள் கருதினோம் என தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இரண்டாம் காலாண்டில் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சுமார் 1.5 சதவீதம் குறைந்துள்ளது.

அமெரிக்க சுங்க வரிகள் மற்றும் பொருளாதார நிச்சயமற்றத் தன்மைகளினால் ஏற்றுமதிகள் 27 சதவீதம் வீழ்ச்சி கண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராரியோ அரசு சுகாதார சேவைகளை மேம்படுத்த அடுத்த கட்ட நடவடிக்கைகள்!

25.09.2025

ஒன்ராரியோ அரசு $235 மில்லியன் முதலீடு செய்து, 1,30-க்கும் மேற்பட்ட புதிய மற்றும் விரிவுபடுத்தப்பட்ட குழுக்களின் மூலம் மேலும் 3,00,000 மக்களை முதன்மை சிகிச்சை சேவைகளுடன் இணைக்கிறது. அதிக தேவையுள்ள பகுதிகள் போன்ற ஸ்காபரோவும் இதில் அடங்கும். ஸ்காபரோ மருத்துவ மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார அகாடமியில் (SAMIH) முதல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஸ்காபரோ ஜெனரல் மருத்துவமனையில் புதிய கண்டறிதல் படிமப் பிரிவு போன்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டங்கள், ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு சிகிச்சை அணுகலை மாற்றி அமைக்க உள்ளது.

“மக்களை மையமாகக் கொண்டு சிகிச்சை வழங்குவதுதான் எங்கள் அரசின் நோக்கம் - ஸ்காபரோ குடும்பங்களுக்கு மருத்துவர்களைச் சந்திக்கச் சிறந்த வாய்ப்பு, வேகமான பரிசோதனைகள், மற்றும் வீட்டிற்கு அருகில் தரமான சேவைகள் கிடைக்கப்படுவதை உறுதி செய்கிறோம். ஸ்காபரோ மக்களுக்கு உரிய சுகாதார சேவையை நாங்கள் வழங்கி வருகிறோம்,” என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார்.

கண் மருத்துவர்கள், உளவியல் நிபுணர்கள், மருந்தாளர்கள் போன்ற வல்லுநர்களின் செயல்பாட்டு வரம்பை விரிவுபடுத்துவதன் மூலம், நோயாளிகள் தகுந்த நேரத்தில் சிகிச்சை பெறுவர். இதனால் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அழுத்தம் குறையும். இவ்விதமான முதலீடுகள் ஸ்காபரோவின் சுகாதார அமைப்பை வலுப்படுத்தும் தெளிவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன, மேலும் குடும்பங்கள் தங்களுக்கு தேவையான சிகிச்சையை சரியான இடத்திலும் சரியான நேரத்திலும் பெறுவதை உறுதி செய்கின்றன.

www.sangathamil.ca

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

கனடாவில் ஹைஹுண்டாய் ரக வாகனம் பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை

27.09.2025

கனடாவில் ஹைஹுண்டாய் ரக வாகனங்கள் சிலவற்றை பயன்படுத்துவோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஹைஹுண்டாய் நிறுவனம் கனடாவில் சுமார் 44,000க்கும் மேற்பட்ட வாகனங்களை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

இருக்க பட்டிகள் உரிய முறையில் செயற்படாத காரணத்தினால் இந்த நவடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விபத்து ஏற்பட்டால், இருக்கைப்பட்டி சரியாக பொருந்தாமல் பிரிந்து செல்லக்கூடும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த திரும்பப் பெறல் நடவடிக்கை ஹைஹுண்டாய் பலிசேட் (Hyundai Palisade) மாடல்களுக்கு உட்பட்டது. 2020 முதல் 2025 வரை வெளியிடப்பட்ட மாடல்கள் அனைத்தும் இதில் அடங்குகின்றன.

மொத்தம் 43,990 ஹைஹுண்டாய் ரக எஸ்.யு.வீ கனடாவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கனடிய போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

சில வாகனங்களில் ஓட்டுனர், முன் பயணி மற்றும் பின்புற 2 ஆவது வரிசை இருக்கைகளில் உள்ள இருக்கைப் பட்டிகள் உரிய முறையில் பொருத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

திருத்தப்பணிகள் முடியும் வரை, ஓட்டுனர்கள் மற்றும் பயணிகள் சீட்பெல்ட்டை வலுவாக பூட்டிச் செருகி, இழுத்துப் பார்த்து சரிபார்க்க வேண்டும் என்று ஹைஹுண்டாய் பரிந்துரைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஹைஹுண்டாய் வாகன உரிமையாளர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள்.

கனடாவின் ஐந்து மாகாணங்களில் அக்டோபர் முதல் குறைந்தபட்ட சம்பளம் உயர்த்தப்படுகிறது

28.09.2025

கனடாவின் ஐந்து மாகாணங்களில் சம்பள அதிகரிப்பு தொடரபில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உயர் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க தொழிலாளர்களும் நிறுவனங்களும் உதவுவதற்காக, ஐந்து கனடிய மாகாணங்களில் அக்டோபர் 1 முதல் குறைந்தபட்ச சம்பளம் உயர்த்தப்படுகிறது.

இந்த மாற்றம் ஒன்ராரியோ, மானிடோபா, சஸ்காட்செவன், நோவா ஸ்கோஷியா மற்றும் பிரின்ஸ் எட்வர்டு தீவு மாகாணங்களில் அமலுக்கு வருகிறது.

ஒன்ராரியோ மாகாணத்தில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 17.60 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

பிரின்ஸ் எட்வர்டு தீவில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 16.50டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

நோவா ஸ்கோஷியாவில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 16.50 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

மானிடோபாவில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 16 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

சஸ்காட்செவனில் ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளம் 15.35 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது.

அல்பெர்ட்டா குறைந்த ஊதியம் வழங்கும் மாகாணமாக

மாற்றம் பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

காய்ச்சல் (Flu) தடுப்பூசி தொடர்பில் விசேட அறிவுறுத்தல்

29.09.2025

காய்ச்சல் தடுப்பூசி ஏற்றுகை தொடர்பில் கனடிய அரசாங்கம் விசேட அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

ஒன்ராரியோ மாகாணத்தில் மூத்த குடிமக்கள், நீண்டகால பராமரிப்பு இல்லங்களில் வசிப்பவர்கள், மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் நோயாளிகளுக்கு இந்த வாரம் முதல் காய்ச்சல் (Flu) தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது.

எதிர்வரும் அக்டோபர் 27 முதல், ஆறு மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒன்ராரியோ மாநில மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்ற கனடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் அக்டோபர் நடுப்பகுதியில் இருந்து காய்ச்சல் தடுப்பூசி திட்டங்கள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிய குழந்தைகள், மூத்தவர்கள், ஆஸ்துமா மற்றும் COPD (Chronic Obstructive Pulmonary Disease) உடையோர் அதிக ஆபத்தில் உள்ளனர் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசி காய்ச்சலை முற்றிலும் தடுப்பதில்லை, ஆனால் தொற்றை லேசாக ஆக்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதைத் தடுக்க உதவுகிறது என அறிவுறுத்தியுள்ளனர்.

தடுப்பூசி போட்ட 2 வாரங்களுக்கு பிறகே பாதுகாப்பு விளைவுகள் உருவாகும் என தெரிவித்துள்ளனர்.

இந்த காய்ச்சல் தடுப்பூசி, மருத்துவரை அணுக வேண்டிய நிலை அல்லது மருத்துவமனை அனுமதிக்கப்பட வேண்டிய

நிலையை சுமார் 50 வீதத்தினால் குறைக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரொரான்ரோ மாநகராட்சியின் இடைத் தேர்தலில் நீதன் சண்முகராஜா வெற்றி

30.09.2025

ஒன்ராரியோ ரொரான்ரோவின் ஸ்காப்ரோ ரக் ரிவர் தொகுதியில் நடைபெற்ற நகராட்சி இடைத்தேர்தலில் நீதன் ஷான் என்று அழைக்கப்படும் நீதன் சண்முகராஜா வெற்றியீட்டியுள்ளார். இந்த தொகுதி ரொரான்ரோ மாநகராட்சியின் ஒர் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

நீதன் சண்முகராஜா 5,174 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார் என்பதுடன் அவரை எதிர்த்து போட்டியிட்ட அனு சிறிஸ்கந்தராஜா 3.374 வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தாம் கடந்த காலங்களில் வழங்கிய சேவையையும் தமது அயராத உழைப்பினையும் மக்கள் அங்கீகரித்துள்ளனர் என நீதன் சண்முகராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த தொகுதியில் ஜெனிபர் மெக்கல்வி நகராட்சி மன்ற உறுப்பினராக கடமையாற்றி வந்தார்.

எனினும் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிட்டு வெற்றி ஈட்டிய காரணத்தினால் அந்த நகராட்சி மன்ற உறுப்புரிமை பதவி வெற்றிடமானது.

அதற்காக நடைபெற்ற இடைத்தேர்தலில் நீதன் சண்முகராஜா வெற்றியீட்டியுள்ளார். எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையில் அவர் இந்த நகராட்சி மன்ற உறுப்பினர் பதவியை வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

46 வயதான நீதன் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டவர் என்பதுடன் ரொரான்ரோ பல்கலைக்கழகத்தில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

தமிழக செய்திகள்

தமிழகத்தில் வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை 74,000 ஆக உயர்த்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை

17.09.2025

தமிழகத்தில் வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையை 74 ஆயிரமாக உயர்த்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழகத்தில் கடந்த 2024 மக்களவைத் தேர்தலின் போது 68 ஆயிரம் வாக்குச்சாவடிகள் இருந்தன.

இந்நிலையில், ஒரு வாக்குச்சாவடியில் 1,200 வாக்காளர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. அதன்படி, தமிழகத்தில் வாக்குச்சாவடிகள் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் விவரங்கள் அந்த மாவட்ட ஆட்சியர்களிடம் வழங்கப்பட்டு வருகிறது.

உத்தேச வாக்குச்சாவடி பட்டியல் தொடர்பாக இம்மாத இறுதிக்குள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் ஆலோசனை நடத்தி, அவர்களின் கருத்துகளைப் பெற்று வாக்குச்சாவடி பட்டியலை இறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

பின்னர் மாவட்ட வாரியாக வாக்குச்சாவடிகள் பட்டியல்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்களால் வெளியிடப்பட உள்ளது. அதன், பின்னர் புதிய வாக்குச்சாவடிகள் பட்டியலை தேர்தல் ஆணையத்துக்கு, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அனுப்பி வைக்க உள்ளார்.

இந்த நடவடிக்கையின் மூலம் தமிழகத்தில் புதிதாக 6 ஆயிரம் வாக்குச்சாவடிகள் உருவாகி, மொத்த வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 68 ஆயிரத்தில் இருந்து 74 ஆயிரமாக உயர வாய்ப்புள்ளது என தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், "வாக்குச்சாவடி அலுவலர்களாக மத்திய, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரை நிய மனம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் அந்த பணிக்கு வர இயலாத நிலை ஏற்பட்டால் வாக்குச்சாவடி அலுவலர்களாக தேர்தல் பணியில் அங்கன்வாடி பணியாளர்கள், கிராம உதவியாளர்கள், தேசிய நகர்ப்புற வாழ் வாதார திட்டப் பணியாளர்களை பயன்படுத்திக்கொள்ளலாம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. முந்தைய தேர்தல்களில் தேர்தல் பணியில் வாக்குச்சாவடி அலுவலர்களாக அரசு ஊழியர், ஆசிரியர்கள் மட்டும் நியமிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

பனைமரங்களை வெட்ட மாவட்ட ஆட்சியர் அனுமதி கட்டாயம்: அரசாணை வெளியீடு

19.09.2025

பனை மரத்தை வெட்டும்போது மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்துறை வெளியிட்ட அரசாணை விவரம்: சட்டப்பேரவையில் கடந்த 2022-ம் ஆண்டு வேளாண் நிதி நிலை அறிக்கையை அமைச்சர் தாக்கல் செய்யும்போது, "பனைமரத்தை வேரோடு வெட்டி விற்கவும், செங்கல் சூளைகளுக்கு பயன்படுத்தும் செயலைத் தடுக்கவும் அரசால் உத்தரவு பிறப்பிக்கப்படும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பனைமரங்களை வெட்டுவதற்கு, மாவட்ட ஆட்சியர் அனுமதி கட்டாயமாக்கப்படும்" என அறிவித்தார்.

தொடர்ந்து வெளியிடப்பட்ட அரசாணையில், மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அல்லது உதவி மாவட்ட ஆட்சியர், சார் மாவட்ட ஆட்சியர், வேளாண் உதவி இயக்குநர், காதி கிராமத் தொழில் வாரிய உதவிஇயக்குநர் ஆகியோருடன் கூடிய குழு அமைக்கப்படும். மாவட்ட ஆட்சியர் வேறு உறுப்பினரையும் தேவைக்கேற்ப குழுவில் சேர்க்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, தோட்டக்கலைத்துறை இயக்குநர், மாவட்ட ஆட்சியரிடம் மரம் வெட்டுவதற்கான அனுமதியை பெறுவதற்கு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்கான கருத்துருவை அரசுக்கு சமர்ப்பித்தார். அதில், தமிழகத்தில் கடந்த 2020ஆம் ஆண்டு கதர்த்துறை எடுத்த கணக்கின்படி, 5 கோடி பனை மரங்கள் உள்ளன. இந்த மரங்களை வாழ்வாதாரமாக கொண்டு 3 இலட்சம் விவசாய, தொழிலாளர் குடும்பங்கள் உள்ளன. பனைப்பொருட்கள் ஏற்றுமதி மூலம் பனைத் தொழில் அந்நியசெலாவணி வருவாய்க்கு பங்களிக்கிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பனை மரங்கள் குறைந்து வருவதை அரசு கவனத்தில் கொண்டு பனைமரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க 3 ஆண்டுகளாக பனை மேம்பாட்டு இயக்கத்தை செயல்படுத்தி வருகிறது.

பனைமரத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு பனை மரங்கள் வெட்டப்படுவதை தடுக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட, வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். இந்தப் பரிந்துரையை ஏற்ற தமிழக அரசு, மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவில் கண்காணிப்புக்குழு, வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுவும் அமைத்துள்ளது. இக்குழுக்கள் இதுகுறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறி வுறுத்தப்பட்டுள்ளது.

பனை மரம் தவிர்க்க முடியாத சூழலில் வெட்ட நேரிட்டால், மாவட்ட அளவிலான குழுவின் அனுமதி அவசியம். பனை மரம் வெட்ட அனுமதி வேண்டி தனிநபர், பொதுத்துறை நிறுவனங்கள், வேளாண் துறையின் உழவர் செயலியில் விண்ணப்பிக்க வேண்டும். அதன் பின்னர் சம்பந்தப்பட்ட வட்டார அலுவலர்கள் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, ஆய்வு செய்து பனைமரத்தை வெட்ட வேண்டியதன் அவசியம் குறித்து மாவட்ட அளவிலான குழுவுக்கு அறிக்கை அளிக்க வேண்டும். 3 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது தேவைக்கேற்ப மாவட்ட அளவிலான குழு கூட்டம் நடத்தி விவாதிக்க வேண்டும். பனை மரங்களை வளர்ப்பதை ஊக்குவிக்க, ஒரு மரத்தை வெட்டினால் அதற்கு ஈடாக 10 மரக்கன்றுகளை நட்டுவளர்ப்பதை உறுதி செய்ய வேண்டும். மாவட்ட அளவிலான குழு, மரத்தை வெட்டுவதற்கான முடிவை ஒரு மாதத்துக்குள் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

உடலுறுப்பு தானத்தால் 8,000 பேருக்கு மறுவாழ்வு

அமைச்சர் மா. சுப்பிரமணியன்

24.09.2025

தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் சார்பில் உறுப்பு தான நாள் - 2025 நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடைபெற்றது. இதில் உறுப்பு கொடையாளர் குடும்பத்தினருக்கு சிறப்பு செய்து, உறுப்பு மாற்று சிகிச்சையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் விருதுகள் வழங்கினார்.

தொடர்ந்து, வருடாந்திர அறிக்கை மற்றும் மேம்படுத்தப்பட்ட செயலி விடியல் 2.0 ஆகியவற்றை வெளியிட்டு, உறுப்பு கொடையாளர்களுக்கு மலர் வணக்கம் மற்றும் இசை வணக்கம் செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது,

கடந்த 2008ஆம் செப்.5ஆம் தேதி மூளைச்சாவு உறுப்பு மாற்று சிகிச்சை திட்டத்தை அன்றைய முதல்வர் கருணாநிதி தொடங்கி வைத்தார்.

2008ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 2,242 பேர் உடலுறுப்பு கொடையாளர்களாக இருந்துள்ளனர். இந்த 2,242

பேரின் உடலுறுப்பு தானத்தின் மூலம் 8,017-க்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு வகைகளில் பயன்பெற்றுள்ளனர் என்றார்.

சர்வதேச விண்வெளி மையத்தை செவ்வாய் கிரகத்தில் அமைக்க வாய்ப்பு

இஸ்ரோ நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை

24.09.2025

‘சர்வதேச விண்வெளி மையத்தை செவ்வாய்க் கிரகத்தில் அமைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது’ என இஸ்ரோ நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார். திருச்சியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியாதவது:

கல்வியை தாய்மொழியில்தான் சிறப்பாக கற்க முடியும். அதே வேளையில், ஆங்கில மொழியை கற்றுக் கொள்வதன் மூலம் உலக அளவில் நாம் செல்லமுடியும். உலக அளவில் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. அதை கல்வி யின் மூலம் அடைய முடியும் என்பதை என்னை உதாரணமாக வைத்து மாணவர்களுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

சமுதாயத்துக்கான பல்வேறு பணிகளை இந்திய விண்வெளித் துறை செய்துள்ளது. சூரிய மண்டலத்தில் பூமிக்கு அடுத்து மனிதர்கள் வாழத் தகுதியான கிரகமாக செவ்வாய்க் கிரகம் இருக்க வாய்ப்புள்ளது. எனவே, சர்வதேச விண்வெளி மையத்தை செவ்வாய்க் கிரகத்தில் அமைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

பழைய காலத்திலும் அறிவியல் இருந்தது. இன்றும் உள்ளது. ஆனால், அறிவியல் இன்று பல வகைகளில் மேம்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு விண்வெளித் துறையில் முக்கியமானது. விண்வெளித் துறையில் ஏற்கெனவே அது செயல்படுத்தப்பட்டு அடுத்த பரிமாணத்தை நோக்கிச் சென்றுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக பதவி வகித்த ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு சிபிஐ-க்கு மாற்றம்

25.09.2025

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு விசாரணையை சிபிஐ-க்கு மாற்றியுள்ள உயர் நீதிமன்றம், எந்தவொரு அரசியல் தலையீடும் இல்லாமல் விசாரித்து 6 மாதங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டுமென அறிவுறுத்தியுள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக பதவி வகித்த ஆம்ஸ்ட்ராங் கடந்தாண்டு யூலை 5ஆம் தேதி பெரம்பூரில் உள்ள தனது வீட்டருகே ஒரு கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் சிறையில் உள்ள பிரபல ரவுடி நாகேந்திரன், அவரது மகனும், முன்னாள் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகியுமான வழக்கறிஞர் அஸ்வத்தாமன், ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு, அஞ்சலை, பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், 10 வழக்கறிஞர்கள், பெண்கள் என மொத்தம் 27 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ரவுடி திருவேங்கடம் என்பவர் பொலிசாரால் என்கவுண்டர் செய்யப்பட்டார். இந்த வழக்கில் தொடர்ந்து தலைமறைவாக உள்ள சம்போ செந்தில் மற்றும் மொட்டை கிருஷ்ணன் ஆகியோரை பொலிசார் கடந்த ஓராண்டாக தேடி வருகின்றனர். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது செம்பியம் பொலிசார் 5 ஆயிரம் பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை எழும்பூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். தற்போது இந்த வழக்கு விசாரணை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கை பொலிசார் முறையாக விசாரிக்கவில்லை எனக்கூறி ஆம்ஸ்ட்ராங்கின் சகோதரர் கீனோஸ் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதில், ஒரு தேசிய கட்சியின் மாநிலத் தலைவராக பதவி வகித்த தனது சகோதரரின் படுகொலை வழக்கை செம்பியம் பொலிசார் முறையாக விசாரிக்கவில்லை.

இந்த கொலையில் பல முக்கிய அரசியல் புள்ளிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. கொலையில் தொடர்புடைய சம்போ செந்தில் மற்றும் மொட்டை கிருஷ்ணன் ஆகியோரை பிடிக்க தமிழக பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பி.வேல்முருகன் முன்பாக நடந்து வந்தது. அப்போது காவல்துறை தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.முனியப்பராஜ், இந்த வழக்கில் உடனடியாக 27 பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. நீதிமன்றத்தில் விசாரணை சரியான கோணத்தில் தான் நடந்து வருகிறது என வாதிட்டார்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் யோகேஷ் கண்ணா, இந்த வழக்கில் முதல் குற்றவாளியாகவுள்ள ரவுடி நாகேந்திரனுடன் நெருக்கமாக இருந்த தமிழக காங்கிரஸில் முக்கிய பொறுப்பில் உள்ள தலைவரிடம் இதுவரை எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை.

இந்த வழக்கில் கைதான திருவேங்கடம் ஏன் என்கவுண்டர் செய்யப்பட்டார் என்பது குறித்தும் பொலிசார் தெளிவுபடுத்தவில்லை. பல உண்மைகளை மறைத்து பொலிசார் அவசர

கதியில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளனர். எனவே இந்த வழக்கை சிபிஐக்கு மாற்ற வேண்டும் என வாதிட்டிருந்தார். இருதரப்பிலும் வாதங்கள் நிறைவடைந்த நிலையில் இந்த வழக்கின் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் தள்ளிவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிபதி பி.வேல்முருகன் நேற்று பிறப்பித்துள்ள தீர்ப்பில், இந்த வழக்கு விசாரணையை சிபிஐ-க்கு மாற்றியும், சிபிஐ அதிகாரிகள் அரசியல் குறுக்கீடோ, ஊடக குறுக்கீடோ இல்லாமல் சுதந்திரமாக விசாரித்து 6 மாதங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிட்டார்.

இதேபோல ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கை சிபிஐ-க்கு மாற்றக் கோரி ஆம்ஸ்ட்ராங்கின் மனைவி பொற்கொடி தொடர்ந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் மற்றொரு தனி நீதிபதி முன்பாக நிலுவையில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கரூரில் விஜயின் பிரசாரக் கூட்டத்தில் 39 பேர் பலி

27.09.2025

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் கரூரில் பரப்புரை செய்தபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் (?) சிக்கி 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

விஜய் இன்று சனிக்கிழமை (செப்டம்பர் 27, 2025) கரூர் மாவட்டத்தில் மக்களைச் சந்தித்து உரையாற்றியபோது, கட்டுக்கடங்காத கூட்டம் கூடியதால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 31 பேர் உயிரிழந்தனர். இது கரூர் மாவட்டத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் இன்று (செப்டம்பர் 27) கரூர் வேலுச்சாமிபுரத்தில் பரப்புரை மேற்கொண்டார்.

இந்த கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அப்போது கூட்ட நெரிசலில் தள்ளு (?) முள்ளு (?) ஏற்பட்டதாக கூறப்

படுகிறது. இந்த கூட்ட நெரிசலில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 39 பேர் உயிரிழந்ததாகக்கூறப்படுகின்றது.

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்துகொள்ளவார்கள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

உலக செய்திகள்

ஈகைப்பேரொளி முருகதாசன் திடலில் உணர்வெழுச்சியுடன் கவனயீர்ப்புப் போராட்டம்

15.09.2025

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்றுவரும் நிலையில், தமிழின அழிப்பினை மேற் கொண்ட சிங்களப் பேரினவாத அரசினை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றப் பொறிமுறையூடான நீதியினையும் தமிழர்களுக்கு தமிழீழமே இறுதியான தீர்வு என்பதனையும் வலியுறுத்தி 15.09.2025 இன்று பி.ப 2:15 மணியளவில், சுவிஸ் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை முன் றலில் (ஈகைப்பேரொளி முருகதாசன் திடலில்) உணர்வெழுச

சியுடன் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி நடைபெற்றது.

தமிழர்களுக்கெதிரான தாங்கொணா அடக்குமுறைகள், இன் னல்களினால் பிறப்பெடுத்த தமிழீழ விடுதலைப் போராட்டம் பல் லாயிரம் மாவீரர்களினதும் தமிழ் மக்களினதும் தியாகத்தினால் உயர்நிலைக்குச் சென்று, 2009 இல் நடந்த திட்டமிட்ட இன வழிப்புப் போருக்குப் பின்னும் அறவழிப்போராட்டமாக தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரினை முன்னிட்டு, தமிழின அழிப்பிற்கு எதிராக, உணர்வெழுச்சியுடன் அனைத்துல நீதி வேண்டி விடுதலை நோக்கி வீறுகொண்டு அறவழியில் இப்போராட்டம் நடை பெற்றது.

தமிழர்கள் இவ்வாறான தொடர்ச்சியான அறவழிப்போராட் டங்களை முன்னெடுப்பதனூடாக, எமது விடுதலையை தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில், எமது தமிழீழ மண்ணை மீட்டு, சுதந்திரமாக வாழ முடியும். இச்சூழமைவில் காலத்தின் தேவை அறிந்து நாம் செயலாற்ற வேண்டும்.

செம்மணி மனிதப் புதைகுழி குறித்து அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் சம்மர் லீ தனது எக்ஸ் தளத்தில் கருத்து தெரிவிப்பு

17.09.2025

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் சர்வ தேச மட்டத்தில் கரிசனை அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் சம்மர் லீயும் (Summer Lee) தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் கருத்து வெளியிட் டுள்ளார்.

அவரது பதிவில், செம்மணியில் நூற்றுக்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் மட்டுமன்றி, குழந்தையின் பால் போத்தல், பாடசாலை புத்தகப்பை, சிறுவர்கள் விளையாடும் பொம்மைகள் உள்ளிட்ட பொருட்களும் மீட்கப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற கண்டுபிடிப்புகள் பாதிக்கப்பட்டவர்களின் நீதி கோரிக்கைகளை வலுப்படுத்துவதாகவும், நீதி மற்றும் பொறுப் புக்கூறல் என்பன உறுதிசெய்யப்பட வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இதற்கு முன்னர் அமெரிக்க காங்கிரஸ் உறுப் பினர்களான ராஜா கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோரும் தங் களின் எக்ஸ் தளப்பதிவுகள் ஊடாக செம்மணி சம்பவம் குறித்து ஆழ்ந்த அக்கறையை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தநிலையில், சம்மர் லீ தமது பதிவில், "நாம் தொடர்ந்து சுயாதீன விசாரணையை வலியுறுத்த வேண்டும். அதுவே நீதியை நோக்கி நகரும் பாதை" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பதில் கனடா, அவுஸ்திரேலியா, போர்த்துகல் ஆகிய பிரித்தானியாவுடன் இணைவு!

22.09.2025

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில், இஸ்ரேல் குடியேற் றங்களை விரிவுபடுத்தவும், காசா மீதான போரை தீவிரப்படுத் தவும் திட்டமிட்டுள்ள நிலையில், பாலஸ்தீன அரசை முறையாக அங்கீகரிப்பதில் கனடா, அவுஸ்திரேலியா மற்றும் போர்த்துகல் ஆகியன ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்துள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனேடிய பிரதமர் மார்க் கார்னி பாலஸ்தீன அரசை அங்கீகரிப் பதாக ஞாயிற்றுக்கிழமை (செப்டெம்பர் 21) அறிக்கையொன் றினூடாக அறிவித்துள்ளார்.

மேலும் "பாலஸ்தீன அரசு மற்றும் இசுரவேல் அரசு இரண்டிற் கும் அமைதியான எதிர்காலத்திற்கான வாக்குறுதியைக் கட்டி யெழுப்புவதில் தங்கள் கூட்டாண்மையை" வழங்கியுள்ளார்.

இசுரவேலிய அரசாங்கம் "பாலஸ்தீன அரசு உருவாகும் வாய்ப்பை எப்போதும் நிறுவுவதைத் தடுக்கும் முறையாக" செயல்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"பாலஸ்தீன அதிகார சபையின் தலைமையிலான பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது, அமைதியான சகவாழ்வையும் ஹமா ஸின் முடிவையும் விரும்புவோருக்கு அதிகாரம் அளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது எந்த வகையிலும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்தாது, அதற்கான எந்த வெகுமதியும் அல்ல," எனவும் கனேடிய பிரதமர் மார்க் கார்னி குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீன அதிகாரசபை கனடாவிற்கு அதன் ஆட்சியை சீர் திருத்துவதில் "நேரடி உறுதிமொழிகளை" வழங்கியுள்ளது.

அதே நேரத்தில், அவுஸ்திரேலியா பாலஸ்தீன அரசை அங்கீ கரிப்பதாகவும் அறிவித்தது.

கனடா மற்றும் பிரித்தானியாவுடன் இணைந்து அவுஸ்திரேலி யாவும் அங்கீகரிப்பது இரு நாடு தீர்வுக்கான சர்வதேச முயற்சி யின் ஒரு பகுதியாகும் என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தனி

அல்பானீஸ் ஒரு அறிக்கையினூடாக தெரிவித்துள்ளார்.

திருகோணமலை ஐந்து மாணர்களின் கொலைக்கான நீதிக்காய் போராடியவரும் மனோகரன் பிரித்தானியாவில் காலமானார்

22.09.2025

திருகோணமலை ஐந்து மாணவர்களின் கொலைக்கான நீதிக்காய் போராடியவரும், டாக்டர் மனோகரன் பிரித்தானியா

வில் காலமானார்.

மரணம் தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள நண்பர் ஒருவர் "ரஜீகரின் பிறந்தநாள் இன்று. அவனுக்கான நீதிக்காய் ஓடிக் களைத்து பிறந்தநாளில் அவனோடு இணந்தார்.

2006 ஜனவரி 2ம் திகதி இரவில் இருந்து மனோகரன் அவர்களோடு உரையாடத் தொடங்கி இருந்தேன், இறுதி வரை ஏதோ ஒரு முயற்சிகளுக்காய் அவரோடு பேசிக் கொண்டே இருந்தேன்.

எமது கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி சடங்கில் தன் குடும்பத்தின் சார்பாக என்னை பேச அழைத்தார். அதன் பின் 31வது நாள் நிகழ்வை ஏற்பாட்டில் நான் முழுமையாக இருந்தேன்.

தொடர் கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் அனைத்துப் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் நாட்டில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

டாக்டர் தொடர்ச்சியாக போராடினார், சர்வதேச நிறுவனங்களிடம் கண்ணீர் மல்க நீதி கேட்டார்.

அனைவருக்கும் தெரிந்த அரச பயங்கரவாதக் கொலைக்கு அவரால் இறுதிவரை நீதியைப் பெற முடியவில்லை.

2023 அவருடன் இணைந்து இங்கிருக்கின்ற சர்வதேச மன்னிப்புச் சபையிடம் மீண்டும் இந்த வழக்கை எடுக்குமாறு நான் கோரிக்கையை வைத்து ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்தேன்.

வைத்தியசாலையில் இருந்த படி அந்த நிகழ்வை நேரடியாக அவர் பார்த்தார்.

அடுத்த கட்டம் தொடர்பாக ஏதோ ஒன்றைச் செய்து கொண்டே இருந்தார். பல முறை உரையாடினார், இன்று வந்த அழைப்பில் அவரின் மகன் ஜெய்கரின் சோகக் குரல் மட்டும் ஒலித்தது. நீதி கேட்கின்ற அரசியல் போராட்டங்கள் எம்முள் இப்படித்தான் விதைக்கப்பட்டது.மனோகரன் அவர்களுக்கு இறுதிவரை நீதி எட்டவில்லை. ரஜீகருக்கும் நீதி கிடைக்கவில்லை" என தெரிவித்துள்ளார்

பாலஸ்தீனத்தை அங்கீகரித்த பிரான்ஸ்

23.09.2025

பாலஸ்தீன அரசாங்கத்தை நான் அங்கீகரிக்கிறேன் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் இன்று (23) அமெரிக்காவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டில் அறித்தார்.

ஹமாசிடம் இருக்கும் 48 பிணயக்கைகதிகளும் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் எனவும், 'ஒக்டோபர் 7' தாக்குதல் ஒரு ஆறாத வடு.

பயங்கரவாதத்தை நாடுவதை எதுவும் நியாயப்படுத்த முடியாது என குறிப்பிட்ட மக்ரோன், "சட்டம் பலத்தை விட மேலோங்கச் செய்ய வேண்டும்" எனவும், ஹமாசை அரசியல் ரீதியாக அழிக்க முயற்சிக்க வேண்டும் எனவும் மக்ரோன் குறிப்பிட்டார்.

இம்மானுவேல் மக்ரோனின் உரையின் போது இசுரவேலிய பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தனர். பாலஸ்தீனத்தில், இஸ்ரேலில் அமைதியைக் கொண்டுவர 'இருநாடுகள்' தீர்வு கட்டாயமானதாகும் எனவும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் குறிப்பிட்டார்

"பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் கூடாது" ஐ.நா. சபையில் இசுரவேல் பிரதமர் நெதன்யாகு பேச்சு

26.09.2025

ஐ.நா பொதுச் சபையின் 80-வது கூட்டத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஹமாஸ், ஹவுதி, ஹிஸ்புல்லா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளின் இயக்கத்தை தங்கள் தேசம் நசுக்கி உள்ளதாக தெரிவித்தார். மேலும், பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

அவர் தனது உரையில், "கடந்த ஆண்டு இங்கு பேசியபோது இந்த வரைபடத்தை நான் காண்பித்து இருந்தேன். இந்த வரைபடத்தில் ஈரானின் தீவிரவாத செயல்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரைபடம் உலகத்துக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எங்கள் பிராந்தியத்துக்கும், தேசத்துக்கும் இதே நிலைதான். அணு ஆயுதங்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஈரான் உருவாக்கி வருகிறது. அதற்கான திட்ட பணியில் ஈரான் தீவிரம் காட்டுகிறது. இது இசுரவேலை மட்டும் அழிப்பதற்கானது அல்ல. அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு இது அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதன்மூலம் மற்ற நாடுகளை ஈரான் மிரட்டி வருகிறது.

காசாவில் இருந்து ஹமாஸ், ஏமனில் இருந்து ஹவுதி, லெபனானில் இருந்து ஹிஸ்புல்லா உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளின் செயல்பாட்டை நசுக்கி உள்ளோம். இசுரவேல் முயற்சியால் இந்த அமைப்புகளின் முக்கிய தலைவர்களை அழித்துள்ளோம். ஹமாஸ் படையினருக்கு எதிரான எங்களின் இராணுவ நடவடிக்கை தொடரும். நாங்கள் ஹமாஸ் வசம் உள்ள பிணைக் கைதிகளை மறக்கவில்லை. ஒவ்வொரு நொடியிலும் உங்கள் நினைவோடு இருக்கிறோம்.

பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அங்கீகாரம் கூடாது. அந்த அங்கீகாரம், இசுரவேலியர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு இணையானது. இந்த விவகாரத்தில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள் வெட்கப்பட வேண்டும். சிறிய ஆதரவுடன் சுமார் ஏழு மோதல்களை இசுரவேல் கையாள்கிறது" என்று நெதன்யாகு பேசினார்.

இசுரவேல் பாதுகாப்பு படையினர் பாலஸ்தீனத்தின் காசாவில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் ஹமாஸ் தீவிரவாத படையை சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது அப்பாவி

மக்களுக்கு உயிரிழந்துள்ளனர். அங்கு உணவு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், அதை நெதன்யாகு தனது உரையில் மறுத்து பேசியுள்ளார். நெதன்யாகு தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை காரணமாக உள்நாடு மற்றும் உலக நாடுகளில் கடும் கண்டனத்தை இசுரவேல் பெற்றுள்ளது.

எமது வீரர்களைச் சாவின் பொறிக்குள் தள்ளியது இந்தியா; எமது மக்களுக்கு இழைத்த மன்னிக்க முடியாத குற்றமாகும். புலேந்திரன், குமரப்பா உட்பட 12 வேங்கைகளின் வீரச்சாவு ஒரு பெரும் வல்லரசை எதிர்த்து நிற்கும் நெஞ்சுரத்தை எமக்கு ஏற்படுத்தியது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

செம்மணி மனிதப் புதைகுழிகளையும் சிறீலங்காவின் ஏமாற்றுதலையும் அம்பலப்படுத்தும் வாகன விளம்பரப் பலகை

26.09.2025

செப்டம்பர் 22, 2025 அன்று, ஐ.நா. பொதுச் சபையின் தொடக்க விழாவின் போது, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்(TGTE) நியூ யார்க்கில் ஒரு நடமாடும் விளம்பரப் பலகைப் பிரச்சாரத்தைத் தொடங் கியது. இந்தப் பிரச்சாரம், சிறீலங் காவிற்கும், தமிழ் மக்களிற்குமான போரட்டத்தின்போது குழந்தைகள் உட்பட தமிழ் மக்கள் சர்வதேச சட் டங்களிற்கு முரணான வகையில் கொல்லப்பட்ட எலும்புக் கூடுகளையும், மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் எலும்புக் கூடுகளையும் உள்ளடக்கி இருந்த செம்மணிப் புதைகுழிகளை உலகத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதும் மேலும் சிறீலங்காவின் தொடர்ச்சியான ஏமாற்று அரசி யலையும், தண்டனையின்மை யினையும் எடுத்துக்காட்டியது.



விளம்பரப் பலகையில் பின்வரும் செய்திகள் இடம் பெற் றிருந்தன:

மனிதப் புதைகுழிகள், வைலிந்து காணாமல் ஆக்கப்பட் டவை, நீதியைத் தடுக்க சிறீலங்காவின் தொடர்ச்சியான முயற் சிகளை ஆவணப்படுத்தும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் (TGTE) அறிக்கைகள் பற்றியகுறிப்புகள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை, சிறீலங்கா தொடர்ச்சியாக ஏமாற்றுவதை சித்தரிக்கும் படம்.

1990 ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனால் முதன்முதலில் ஏற்றப்பட்ட தமிழீழ தேசியக் கொடியையும் மேலும் நவம்பர் 21 ஐ ஒவ்வொரு வருடமும் தமிழீழத் தேசியக் கொடி நாளாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் பிரகடனப்படுத்திய செய்தியையும் குறிக்கப்பட் டிருந்தன.

சிறீலங்கா தமிழர்களுக்கு எதிரான குற்றங்களை சர்வதேச சமூகத்திற்கு நினைவூட்டுவதும், நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக் கான அவசியத்தை வலியுறுத்துவதும், தமிழ்மக்களின் மற்றும் தமிழீழத்திற்கான போராட்டத்தை மீண்டும் உறுதிப்படுத் துவதும் இந்தப்பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

காசா முழுவதும் இசுரவேலிய தாக்குதல்: ஒரே நாளில் 60 பாலஸ்தீனியர்கள் பலி

27.09.2025

காசா முழுவதும் இசுரவேல் நடத்திய தாக்குதல்களில் நேற்று வெள்ளிக்கிழமை (26) சுமார் 60 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித் ததாக சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

செப்டம்பர் 16ஆம் திகதி தரைவழி நடவடிக்கையைத் தொடங் கியதிலிருந்து இசுரவேல் தனது தாக்குதல்களை தீவிரப்படுத் தியுள்ளது.

அல்-வேஹ்தா தெரு, ஷாதி முகாம் மற்றும் நாசர் சுற்றுப்புறம் உள்ளிட்ட இடங்கள் நேற்று வெள்ளிக்கிழமை தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வெவ்வேறு தளங்கள் மற்றும் இடங்களை குறிவைத்து இசுர வேலிய தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் நிலைமை மோச மாகி வருவதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்த குண்டுவீச்சு தாக்குதலுக்கு மத்தியில், “ஒவ்வொரு எட்டு அல்லது ஒன்பது நிமிடங்களுக்கு ஒரு வான்வழித் தாக் குதலை” நடத்தியதாக குறிப்பிடப்படுகிறது.

இசுரவேலிய தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புகளுடன், சர்ச் சைக்குரிய இசுரவேல் மற்றும் அமெரிக்காவின் ஆதரவுடன் நடத்தப்படும் தளங்களிலிருந்து உதவி பெற முயன்றபோது வெள்ளிக்கிழமை பலர் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன மருத்துவ வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

தமிழீழம் கிட்டும் வரை போராட்டம் தொடரும்

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –

எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கின்றோம். தாங்கமுடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம். எமது வீடுகள், சொத்துக்கள், செல்வங்களை இழந் திருக்கிறோம். பெருந்தொகையான இளம் போராளிகளை களத்தில் பலி கொடுத்திருக்கிறோம். சகிக்க முடியாத அளவிற்கு நாம் அவமானப்பட்டிருக்கிறோம். இழிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப் போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர் இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப் பின்னர், இத்தனை மகத்தான தியாகங்களுக்குப் பின்னர், இத்தனை வீரசாதனைகளுக்குப் பின்னர், நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கை நீட்டப் போவதில்லை.

நாம் சுத்நதிரமாக, கௌரவமாக நிம்மதியாக சமாதானமாக வாழ்வதாயின் அது சுதந்திர தமிழீழத்தில்தான் சாத்தியமாகும். அந்த சுதந்திர தமிழீழம் கிட்டும்வரை எமது போராட்டம் தொடரும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

தர்மமும் உண்மையும் இறுதியில் வெற்றியளித்து தமிழ்த்தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றோ ஒரு நாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம்மிடம் ஆத்மபலமும், அயுதபலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத் துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகிறேன்.

(‘எனது மக்களின் விடுதலைக்காக’ என்ற நூலில் இருந்து)

Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்

HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com

K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

தீயினில் எரியாத தீபங்களே

காற்றும் ஒருகணம் வீச மறந்தது
கடலும் ஒருநொடி அமைதியாய் கிடந்தது
தேற்றுவார் இன்றி எம் தேசம் அழுதது
தீருவில் வெளியிலும் தேகங்கள் எரிந்தது

தீயினில் எரியாத தீபங்களே -எம்
தேசத்தில் நிலையான வேதங்களே

தீயினில் எரியாத தீபங்களே -எம்
தேசத்தில் நிலையான வேதங்களே
மண்ணினில் விதையான முத்துக்களே -நாம்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் -புலி
நிச்சயம் வெல்லுமென்று கூறுங்கள்

தீயினில் எரியாத தீபங்களே -எம்
தேசத்தில் நிலையான வேதங்களே

கடலினில் கடல்புறா பயணங்கள் போனது
சிறீலங்கா இராணுவம் பொறிவைக்க லானது

கடலினில் கடல்புறா பயணங்கள் போனது
சிறீலங்கா இராணுவம் பொறிவைக்க லானது
குமரப்பா புலேந்திரன் உடன் பத்து வேங்கைகள்
கொள்கையின்படி நஞ்சை குடித்தபின் சாய்ந்தனர்
குமரப்பா புலேந்திரன் உடன் பத்து வேங்கைகள்
கொள்கையின்படி நஞ்சை குடித்தபின் சாய்ந்தனர்
இளமையில் சருகாகிக் போனவரே -எம்
இதயத்தில் உருவான கோவில்களே

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் -புலி
நிச்சயம் வெல்லுமென்று கூறுங்கள்
தீயினில் எரியாத தீபங்களே -எம்
தேசத்தில் நிலையான வேதங்களே

அப்துல்லா ரகு நளன் ஆனந்தகுமார் மிரேஸ்
அன்பழகன் றெஜினோல்ட் பழனி கரனுடன் தவக்குமார்
அப்துல்லா ரகு நளன் ஆனந்தகுமார் மிரேஸ்
அன்பழகன் றெஜினோல்ட் பழனி கரனுடன் தவக்குமார்
ஆகிய வேங்கைள் அனலிடை போயினர்
காவிய நாயகர் களப்பலி ஆகினர்
ஆகிய வேங்கைள் அனலிடை போயினர்
காவிய நாயகர் களப்பலி ஆகினர்
மக்களுக்காக கடல் சென்றீரே -மண
மாலைகள் வாட முன்னர் போனீரே

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் -புலி
நிச்சயம் வெல்லுமென்று கூறுங்கள்
தீயினில் எரியாத தீபங்களே -எம்
தேசத்தில் நிலையான வேதங்களே

எங்களின் கடலிலே எவனெம்மை பிடிப்பது
எங்களின் படகினை எவனிங்கு தடுப்பது
எங்களின் கடலிலே எவனெம்மை பிடிப்பது
எங்களின் படகினை எவனிங்கு தடுப்பது
இந்திய அரசது ஏன்துணை போனது
இடியுடன் பெருமழை ஏன் உருவானது

எங்களின் கடலிலே எவனெம்மை பிடிப்பது
எங்களின் படகினை எவனிங்கு தடுப்பது
கண்களில் நீர் சுமந்து நிற்கின்றோம் -நீர்
காட்டிய பாதையிலே செல்கின்றோம்

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் -புலி
நிச்சயம் வெல்லுமென்று கூறுங்கள்

புதுவை இரத்தினதுரை

அநுராதபுர வான் படைத்தளம் மீது எல்லாளன் நடவடிக்கை: 21 கரும்புலிகள் வீரச்சாவு 22.10.2007

22.10.2007 நேரம் விடிசாமம் 1.30 மணி. அந்த அநுராதபுர வான்படைத்தளம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தது. நடக்கப் போவதை அறியாத அந்தத்தளம் சஞ்சலமில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தது. தனது பாதுகாப்பில் அத்தனை நம்பிக்கையும் இறுமாப்பும் அதற்கு. ஆனால் சிறிது நேரத்தில் ஒரு பெரும் பூகம்பத்தை மூட்டப்போகும் அந்தக் கரும்புலி வீரர்கள் இருபது பேரும் தங்களை களத்தில் இருந்தபடி வழிநடத்தப் போகும் அணித்தலைவன் இளங்கோவின் கையசைப்பிற்காகக் காத்திருந்தார்கள்.

இளங்கோ நிலைமையை அவதானிக்கின்றான். தனக்குச் சாதகமான நேரம் வரும்வரை காத்திருந்தான். அந்த நேரமும் வந்தது அவன் கரும்புலி வீரர்களைத் தனக்கு அருகாக அழைத்துக் கொண்டான். இறுதித் திட்டத்தை தெளிவாக அவர்களுக்கு விளங்கப்படுத்தினான்.

“எங்களிடம் இருக்கிற ஆயுதமெல்லாம் எதிரியின்ர இலக்குகளை அழிக்கிற ஆயுதங்கள். நாங்கள் வடிவா நிதானமா சண்டை பிடிப்பம். நாங்கள் இப்ப உள்ளுக்க போறம். சண்டை பிடிக்கிறம். எதிரியின்ர விமானங்களை உடைக்கிறம். விடுதலைப் புலிகளெண்டா ஆரெண்டுறதை சிங்களப் படையளுக்குக் காட்டுவோம்” இளங்கோவின் குரல் உறுதியாய் ஒலித்தது.

கரும்புலி
லெப் கேணல் இளங்கோ

கரும்புலி
லெப் கேணல் வீமன்

“வீமண்ணை என்ன எதிர்ப்பு வந்தாலும் நீங்கள் எம்.ஐ.24 நிக்கிற இடத்துக்கு வேகமாய்ப் போங்கோ. ஹெலி ஒண்டையும் எழும்ப விடாம அடிச்சு நொருக்குவம். அப்ப நாங்கள் வெளிக்கிடுவோம்.” இளங்கோவின் அனுமதி கிடைத்ததும் எல்லோரும் தங்கள் ஆயுதங்களை இயங்கு நிலைக்கு தயார் படுத்தியபடி உற்சாகமாக நகர தொடங்கினார்கள்.

இந்த நாளுக்காக அவர்கள் எத்தனை வருடங்கள் காத்திருந்தார்கள். எத்தனை கடின பயிற்சிகளுக்குள் மூழ்கியிருந்தார்கள். எல்லாமே இந்த நாளுக்காகத்தான். சின்னப் பிசகென்றாலும் எல்லாமுமே தலைகீழாக மாறிவிடும். அதனால் பயிற்சி கடுமையாக இருந்தது. யாரும் அசைந்து கொடுக்கவில்லை. பயிற்சிகளால் உடல் களைப்படையும். ஆனால் அவர்கள் சோர்ந்ததேயில்லை. அவர்களின் எண்ணமெல்லாம் இலக்கு பற்றியதாகவே இருந்தது. பயிற்சித் தளத்தில் பயிற்சி ஆசிரியரின் சொல்லை அவர்கள் என்றுமே தட்டிக் கழித்ததில்லை. பயிற்சி சிறிது கடுமையாக இருந்தால் தங்குமிடத்தில் ஆசிரியரை அன்பாகக் கிண்டலடிப்பார்கள்.

அங்கு சிரிப்பொலிகள் எழும். கைகள் ஆயுதங்களைத் துப்பரவு செய்து கொண்டிருக்கும். இப்படி கழிந்தன அந்த நாட்கள். அமைதியான அந்த இரவில் வண்டுகளின் ரீங்கார ஒலிகளும், சில பறவைகளின் இடைவிட்ட ஓசைகளும் அந்த விமானத் தளத்தைச் சூழ கேட்டுக் கொண்டிருந்தன. இந்த அமைதியைக் குலைக்காதவாறு அவர்கள் அந்தப் படைத்தளத்தின் தடைவேலியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கரும்புலி வீரனும் தான் தாக்குதல் நடாத்தும் விதத்தை மனதில் ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது தலைவர் அவர்கள் இறுதியாகச் சொல்லிவிட்ட வரிகள் ஞாபகத்திற்கு வந்தன.

“நீங்கள் 21 பேரும் போறியள். நிச்சயம் நிறையச் சாதிப்பீங்கள். எங்களாலையும் செய்யமுடியும் எண்டதை உலகத்துக்கு நாங்கள் காட்டுவோம். உங்கட பேரை நாங்கள் சொல்லத் தேவையில்லை. இந்த உலகம் கட்டாயம் உங்கட பேரை உச்சரிக்கும்.” தலைவரின் உணர்வை அவர்கள் நன்கு புரிந்தவர்கள். தலைவருடன் கூடவிருந்து வாழ்ந்தவர்கள். அவரின் ஒவ்வொரு அசைவினதும் அர்த்தத்தையும் தெளிவாக புரிந்து வைத்திருந்த அந்த வீரர்கள் தலைவரைப் பார்த்து தாங்கள் சாதிப்போம் என்ற உறுதிமொழியை முகத்தில் பூத்த புன்னகை மூலம் காட்டினார்கள்.

அந்த இடத்தில் “அண்ணை தேசிய கொடியைக் கொண்டு போகட்டுமா?” என இளம்புலி கேட்டான். “நீங்கள் கொண்டு போகலாம். அதுக்குத் தடையில்லை. ஏனெண்டா இது முற்று முழுதான இராணுவத் தளம். நீங்கள் உங்கட உச்ச வீரத்தை காட்டுங்கோ. ஆனால் ஆரும் அதிகாரியளின்ர பிள்ளையள் சில நேரம் அங்க நிக்கக்கூடும். தாக்குதல் நடத்தேக்குள்ள அவைய பத்திரமா அகற்றி அவையளுக்கு ஒன்றும் நடக்காம பார்த்துக் கொள்ளுங்கோ.” தலைவரின் கவனம் அவர்களுக்குப் புரிந்தது.

உண்மையில் சிங்களப் படைகளைப் போல் பிணந்தின்னிக் கழுகுகளாக அவர்கள் செல்லவில்லை. அவர்களின் ஒரே மூச்சு, சுதந்திரமான தேசம் தான். அதற்காகத்தான் இவர்கள் வெடி சுமந்து போனார்கள். இந்தக் கரும்புலி அணிக்குள் மூன்று பெண் கரும்புலிகளும் இருந்தார்கள். அவர்களில் அறிவுமலர் என்ற பெண் கரும்புலி மிகவும் இரக்க சுபாவமுடையவள். பயிற்சி நாட்களில் இவளின் தங்ககத்தில் ஒருநாள் தலைக்கு அணியும் சீருடை தொப்பிக்குள் எலிக்குஞ்சுகள் கீச்சிட்டுக் கொண்டிருந்தன. எலிக்குஞ்சுகளை இவர்கள் கண்டு விட்டதால் அச்சமடைந்த தாயெலி அங்கு மிங்கும் ஓடியபடியிருந்தது. கூட இருந்தவர்கள் அதை வெளியில் விடுவோமென ஆலோசனை சொன்னார்கள்.

கரும்புலி
கப்டன் அறிவுமலர்

ஆனால் அவள் மறுத்துவிட்டாள். அதை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டாள். தாயெலி அதை ஒவ்வொன்றாக வாயில் கவ்வி இன்னொரிடத்திற்கு கொண்டு சென்றது. கடைசி எலிக் குஞ்சை தாயெலி காவிச் செல்லும்வரை அவள் காவலிருந்தாள். இத்தனை மென்மையான உள்ளங்களிலிருந்து எதிரிகளை அழிக்க வேண்டுமென மனவலிமை பிறக்கின்ற தென்றால் சிங்களதேசம் எத்தகைய கொடுமைகளை எங்கள் மீது புரிந்திருக்கிறது.

நேரம் விடிகாலை 3.00 மணி அமைதியாயிருந்த அந்த தளத்தில் தங்களுக்கு சாதகமான இடத்தில் தடையை அகற்றுவதற்காக தடைவேலியை கரும்புலிகள் அணி நெருங்குகின்றது. கரும்புலி வீரர்கள் சிலர் தங்கள் சீருடையிலிருந்த பைகளைத் தட்டிப் பார்க்கின்றார்கள். இவர்கள் வன்னித் தளத்திலிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் இரவு நடவடிக்கைக்கான தளபதியை அவசர அவசரமா அழைத்த தலைவர் “பெடியள் வெளிக்கிட்டிட்டாங்களா?” என்று கேட்டார்.

“இல்லையண்ணை. இனித்தான்...” “அப்பியெண்டா அவங்களிட்டச் சொல்லுங்கோ கடைசியா முகாமுக்குள்ள இயங்கேக்கையும் பொக்கற்றில சொக்கிலேற்றுகளைக் கொண்டுபோகச் சொல்லுங்கோ. இவங்கள் கடைசி நேரம் விட்டிட்டுப் போடுவாங்கள். பிறகு நீண்டநேரம் சண்டை பிடிச்சா களைச்சிடுவாங்கள். ஆனபடியா மறக்காம கொண்டுபோகச் சொல்லுங்கோ.”

அந்த வீரர்கள் புறப்பட்ட கணம் முதல் தலைவர் அந்த வீரர்கள் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். பெரும் இலட்சிய நெருப்பைச் சுமந்து செல்லும் அந்த வீரர்கள் உச்சமான சாதனை புரிந்துதான் இந்த மண்ணில் வரலாறாக வேண்டுமென அவர் துடித்துக் கொண்டிருந்தார். அதை நன்கு புரிந்து வீரர்கள் இங்கே சாதிக்கும் கணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். அநுராதபுர வான்படைத் தளத்தைச் சூழ கோயில் திருவிழாபோல் வெளிச்சம் போடப்பட்டிருந்தது. ஆனால் அந்த வெளிச்சத்தில் மிகவும் அமைதியாக எழிலின்பனும் பஞ்சீலனும் தடையை நெருங்குகின்றார்கள். வேகமாக தங்களிடமிருந்த கம்பி வெட்டும் கருவியால் தடையை வெட்டத் தொடங்குகின்றார்கள். அவர்களிலிருந்து 15 மீற்றரில் இளங்கோ நிலையெடுத்திருந்து அணிக்கான கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்தான்.



அன்புக்கதிரும் புரட்சியும் தடை அகற்றும் பகுதிக்கு அண்மையாக இருந்த காப்பரணை நோக்கி தங்கள் இரவுப் பார்வைச் சாதனம் பொருத்தப்பட்ட ஆயுதத்தால் குறிபார்த்தபடியிருந்தார்கள் அவர்களின் குறிக்காட்டிக்குள்ளால் அந்த காவலரணில் இருந்த விமானப்படைச் சிப்பாயின் முகம் தெரிந்தது. ஆனால் அவன் இவர்களைப் பார்க்க மனமில்லாதவன் போல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்குத் தெரியாமல் இங்கே அதிவேகமாய் தடை வெட்டப்பட்டுக் கொண்டிருந்தது. வான்படைத்தளத்தின் பாதுகாப்புக் கருதி எதிரி அதிக தடைகளை ஏற்படுத்தி இருந்தான். கம்பி வலை வேலி, பட்டுக்கம்பி வேலி, முட்சுருள், கண்ணிவெடிகள் என ஏராளமான தடைகள். தாங்கள் தளத்தில் பயிற்சி செய்தபடி, பயிற்சியை விடவும் வேகமாக தடையை அகற்றிக்கொண்டிருந்தார்கள்.

தடையில் மின் பாய்ச்சல் இருக்கின்றதா இல்லையா என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டார்கள். குறுகிய நேரத்தில் தடை அகற்றப்படுகின்றது. தடை அகற்றப்பட்டதற்கான சைகையை இளங்கோவிற்கு வழங்க திறக்கப்பட்ட பாதைக்குள்ளால் அணிகள் வேகமாக உள்நுழைகின்றன. இப்போது அவர்கள் சாதிப்பது உறுதியாகிற்று. எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சிப் பிரகாசம். தங்கள் கனவு நிறைவேறப் போவதற்கான ஆனந்தச் சிரிப்பு. இளங்கோ கட்டளை மையத்துடன் தொடர்படுகின்றான். “நாங்கள் இறங்கப்போறம். இப்ப தொடர்பிருக்காது.

விமானத்தளத்தின்ர மையத்துக்குப்போன பிறகுதான் தொடர்பெடுப்பன்.” இளங்கோ நிலைமையைச் சொல்லி விட்டு அணியுடன் உள்நுழைகின்றான். நடப்பதை சற்றும்புரியாத விமானப் படைத்தளம் அமைதியாகவே கிடந்தது. அன்று இரவு பயிற்சி விமானமும், பீச்கிறாவ்ற்றும் வந்து இறங்கியதாக மிகுந்த மகிழ்ச்சியோடு கட்டளைப் பீடத்திற்கு தெரியப்படுத்தினார்கள். நடக்கப்போவதை அறியாத அந்த விமானம் எரிபொருள் தாங்கி முழுவதும் எரிபொருள் நிரப்பியபடி பற்றி எரிவதற்குத் தயாராயிருந்தது. உள்நுழைந்த அணி அங்கிருந்த கிறவல் மண்புட்டியை தாண்டும் போதுதான் காவலில் இருந்த சிப்பாய் முகாமில் மனித உருவங்களைப் பார்த்துத் திகைத்து நின்றான். பயப்பீதியால் “டோ… டோ…” என்று அவன் கத்தத் தொடங்கினான். சுமார் இரண்டு நிமிடங்கள் வரை எதிரிச்சிப்பாய் கத்தித் தொலைத்தான்.

அத்தோடு அங்கு நிலவிய நிசப்தத்திற்கு முற்றுப்புள்ளி கிடைக்கிறது. சுபேசனின் ‘லோ’ முழங்கியது. காவலரணில் பட்டு பெருமோசையோடு அது வெடித்துச் சிதறியது. கரும்புலிகளின் வீரசாகசம் சிங்களத்தின் கோட்டையான அநுராதபுரத்துக்குள் தொடங்கியது. எதிரி நிலைகளைத் தகர்த்தபடி வேகமாக அணிகள் உள்நுழைகின்றன. இளங்கோ வேகமான முறையில் கட்டளைகளைப் பிறப்பிக்க கரும்புலி வீரர்கள் தங்கள் இலக்குகளை நோக்கி தங்கள் உடலில் சுமந்த நவீனகரமான வெடிபொருட்களோடும் ஆயுதங்களோடும் ஓடிக் கொண்டிருந்தார்கள். சமநேரத்தில் வன்னியில் விடுதலைப் புலிகளின் வான்படைத்தளத்தில் அச்சமென்றால் எதுவென்று தெரியாது, எப்போதும் எதற்கும் துணிந்த வானோடிகள் தங்கள் இலகுரக விமானத்திலேறி அநுராதபுர வான்படைத்தளத்தை நோக்கி விரைந்தார்கள்.

வீமன் தனது அணியை அழைத்துக் கொண்டு எம்.ஐ.24ரக உலங்கு வானுர்தி தரிப்பிடம் நோக்கி முன்னேறினான். இளங்கோ மற்றைய அணியை அழைத்துக்கொண்டு பிரதான விமானத்தரிப்பு கொட்டகையை நோக்கி ஓடினான். இளங்கோ தானும் சண்டையிட்டபடி அணியையும் வழிநடத்தினான். எந்த வித பதட்டமுமில்லாமல் மிகவும் தெளிவான முறையில் இளங்கோவின் குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. சண்டையென்றால் சோளம் பொரி சுவைப்பதுபோன்ற உணர்வவனிற்கு. பதட்டமென்றால் என்னவென்று இளங்கோ புத்தகத்தில்த்தான் படித்தறிய வேண்டும். அனுபவத்தில் அதைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. எத்தனை சண்டைக் களங்களில் எதிரியைப் பந்தாடியவன்.

வன்னியில் நடந்த புகழ்பெற்ற சமர்களிலெல்லாம் அவனின் துப்பாக்கி முழங்கியிருக்கின்றது. ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையில் ஜெயசிக்குறுப் படையை விரட்டியடித்த பெருஞ் சமரில் ஒட்டுசுட்டானிலிருந்த கட்டைக்காட்டுப் பாலத்தை சிங்களப் படைகளிடமிருந்து மீட்பதற்காக எதிரிப்படை மீது அதிரடியாய்ப் புகுந்து எதிரிகளை மண்ணில் புரளவைத்து கட்டைக்காட்டுப் பாலத்தை எல்லோரும் வியக்கும்படி கைப்பற்றியவன் இந்த இளங்கோ. இத்தாவில் சமர்க்களத்தில் பெண் போராளிகளின் நிலைகளை ஊடறுத்து உள் நுழைந்த கவசப்படை கவசவண்டிகள் மீது துணிகர தாக்குதலை மேற்கொண்டு ஒரு பவள் கவச வாகனத்தை மடக்கிப் பிடித்து அதிலிருந்த எதிரிமீது தாக்குதலைத் தொடுத்து மின்னல் வேகத்தில் அந்த பவள் கவச வாகனத்தில் பாய்ந்து ஏறி அதில் பூட்டப்பட்டிருந்த 50 கலிபர் துப்பாக்கியைக் கைப்பற்றி அதிலிருந்தபடியே எதிரியைத் தாக்கி பெரும் சாகசம் நிகழ்த்திய இளங்கோ இந்தக் களத்திலா அசைந்து கொடுப்பான்?

அநுராதபுர படைத்தளம் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் அதிர்ந்துகொண்டிருந்தது. பெரும் இறுமாப்போடு நீண்ட தடைகளையும் மண் அணைகளையும் காவல்நிலைகளையும் அமைத்துவிட்டு ‘முடிந்தால் புலிகள் புகுந்து பார்க்கட்டும்’ என்று நினைத்திருந்த எதிரிகளுக்கு ‘முடிந்தால் தடுத்துப் பார்க்கட்டும்’ என்ற சவாலோடு கரும்புலிகள் விமானங்களை நோக்கி ஓடினார்கள். இந்த விமானங்கள் மீது எத்தனை கோபம் அவர்களுக்கிருந்தது. எங்கள் தாய் நிலத்தில் எங்கள் பிஞ்சுக் குழந்தைகள் தசைத் துண்டுகளாய் சிதறவும், எங்கள் தாய்க்குலம் ஓவென்று கதறி அழுவதற்கும் தினம் தினம் சாவின் வாடையே எங்கள் தாய் நிலத்தின் வாசல்களில் வீசுவதற்கும் கொடிய எதிரிக்கு உதவுவது இந்த விமானங்கள் தானே.

இந்த விமானங்களை அழிப்பதால் சிதையப்போவது விமானங்கள் மட்டுமல்ல, சிங்கள அரசினதும் அதன் படையினதும் ஆக்கிரமிப்பு ஆசை நிறைந்த போர்வெறிக் கனவுந்தான்.

சண்டை தொடங்கி கொஞ்ச நேரத்திற்குள் விமானத்தளத்தில் நின்ற விமானங்கள் பெருமோசையோடு வெடித்துச்சிதறி எரிந்து கொண்டிருந்தன. தங்களைக் காக்கமுடியாத ஆற்றாமையோடு கரும்புலி வீரர்களுக்குக் கட்டுப்பட்டு அவை கவனமாக சொன்னதைச் செய்யும் கிளிப்பிள்ளை போல எரிந்து கொண்டிருந்தன. அந்த விமானங்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள் எங்கள் தேசத்தின் புயல்களின் வீச்சில் அகப்பட்டு செத்துவீழ்ந்திருந்தார்கள். எஞ்சியோர் அந்தத் தளத்தை விட்டே ஓடித்தப்பினார்கள். அந்த விமானப் படைத்தளத்தின் ஓடபாதையின் இடது புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எம்.ஐ - 24ரக உலங்கு வானூர்தியை நெருங்கிய வீமனின் அணி அந்த உலங்குவானூர்தி மீது தாக்குதலைத் தொடுக்கின்றது.

சிங்களப் படையின் பலம்மிக்க உலங்குவானுர்தியான எம்.ஐ-24 ஒன்று வெடித்துச் சிதறியபடி எரிந்துகொண்டிருக்கின்றது. மற்றைய எம்.ஐ-24 உலங்குவானூர்தி மீது தாக்குதல் தொடுத்தபோதும் அது சேதமாகிக்கொண்டே இருந்தது. பற்றி எரியவில்லை. அதன் மீது தொடர்ச்சியாக வீமனின் அணி தாக்குதலை தொடுத்தது. இந்தக் கணத்தில் சிங்களப் படையால் விமானத்தளத்தை நெருங்கவே முடியவில்லை. அவர்களின் கண்முன்னாலேயே அவை வெடித்து பெரும் தீப்பிழம்பை வீசியபடியும் கரும்புகையை கக்கியபடியும் எரிந்துகொண்டிருந்தன.

மறுபக்கம் இளங்கோ பிரதான விமானத் தரிப்பு கொட்டகையை



நோக்கி தனது மற்றைய அணியை சண்டையிட்டபடி நகர்த்தினான். அந்த கொட்டகை மீது கருவேந்தன் ‘லோ’ வால் தாக்க அங்கிருந்த விமானங்கள் தீப்பற்றத் தொடங்கின. அவர்கள் விமானக் கொட்டகையையும் ஒடுதளத்தில் தரித்து நின்ற விமானங்கள் மீதும் தாக்க அவையும் தீப்பற்றி எரியத் தொடங்கின. அநுராதபுர வான்படைத்தளத்தினுள் எதிரியின் விமானங்களுக்குத் தங்கள் உடலில் சுமந்து வந்த வெடி பொருட்களால் தாக்கி அவை எரியும் காட்சியை ஆனந்தத்தோடு பார்த்தபடி நிலைமையை வன்னியிலுள்ள கட்டளைப் பீடத்திற்கு அறிவித்தான் இளங்கோ.

“என்னண்டா வீமனாக்கள் எம்.ஐ-24 ஒண்டை எரிச்சிட்டாங்கள். மற்றது தாக்கி சேதப்படுத்தியிருக்கு அது எரியேல்ல. இஞ்சால என்ர பக்கம் ஒரு கே-8 விமானமும் இன்னுமொரு விமானத்தையும் ரண்வேயில தாக்கி எரிச்சிருக்கிறம். பெரிய கங்கருக்குள்ள நிற்கிற விமானங்களுக்கு அடிச்சிருக்கிறம். தொடர்பில நில்லுங்கோ பார்த்து அறிவிக்கிறன்.” கட்டளை மையத்திற்கு இளங்கோ நிலைமைகளை தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறான். சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. அந்த வான்படைத் தளத்துள் நடந்த தொடக்கச் சண்டையின் போது உள்ளிருந்த எதிரிகளின் தடைகளை தகர்த்தெறிந்து எழிலின்பன், பஞ்சீலன், சுபேசன், ஆகியோர் தங்களுக்குத் தரப்பட்ட பணியை சரிவர நிறைவேற்றிய திருப்தியோடு வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர்.

கரும்புலிகளின் நெஞ்சில் எரிந்த விடுதலைத் தீயின் ஒளிப்பிழம்புகள் அந்த விமானத் தளத்தை சுட்டெரித்துக் கொண்டிருந்தன. சிங்களப் படைகளால் துளியளவேனும் கரும்புலி வீரர்களின்

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அவர்கள் எத்தனை தான் முயன்றாலும் விமானத்தளம் கரும்புலி வீரர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. முன்னேறிய படையினர் அடித்து விரட்டப் பட்டனர். சமாதானம் என்ற மாயையைக்காட்டி எங்கள் விடுதலைப் போரை சிதைத்து விட சிங்களத் தேசம் மும்முரமாக ஈடுபட்டபோது, இவர்கள் எந்த நொடிப்பொழுதும் கரும்புலியாகி எதிரியின் குகைக்குள் புகுந்து பகைவனுக்கு பெரும் சேதம் விளைவித்து தலைவனுக்கு பலம் சேர்க்க காத்திருந்தார்கள்.

தலைவரோடு கூடவிருந்து அவரின் சுமைகளைத் தாங்கியவர்கள். அந்த உணர்வோடுதான் எதிரியின் கற்பனைகளைச் சிதைத்துவிட்டு மீண்டும் இங்கு போர்மேகம் கருக்கொண்டபோது கரும்புலியாய் பிறப்பெடுத்தார்கள். தங்கள் இலக்கை அழித்தொழிக்கும் அந்த நாளுக்காக அவர்கள் எத்தனை இரவுகள் காத்திருந்தார்கள். அவர்களின் நெஞ்சில் பிறந்த விடுதலைப்பற்று இன்று அநுராதபுரத்து வான்படைத் தளத்தை சிதைத்துக் கொண்டிருந்தது. அநுராதபுர வான்படைத்தளத்தின் மையத்தில் நின்று விமானத்தளத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபடி விமானங்கள் நிற்கும் திசைகளுக்கு கரும்புலிகளை நகர்த்தினான் இளங்கோ. வீமன் மறுபுறத்தே நின்றபடி தனது அணியை வழிநடத்தினான். இந்த வீரர்களை எதிர்த்துச் சமரிடும் திறன் சிங்களப் படைக்கு எங்கே இருக்கின்றது? வீமன் தலைவருக்கு நெருக்கமாக நின்று பணிபுரிந்தவன்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மெய்க்காவலர் அணிக்குப் பொறுப்பாக நின்று செயற்பட்டவன். அந்தப் பெரு மனிதனின் மனதைப் புரிந்து அவரோடு இசைந்துபோய் அவரின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் வல்லவனாயிருந்தான் வீமன். ஆனால் பாதுகாப்பு நடைமுறைகளில் அவன் தளர்வு காட்டியதில்லை. தேசத்தின் குரல் பாலா அண்ணன் அவர்கள் இங்கு வந்தால் அவர் கேட்பது வீமனைத்தான். அத்தனை பற்றும் பாச உணர்வும் வீமனிடத்தே அவருக்கிருந்தது. அந்த வீமன்தான் இன்று அநுராதபுர வான்படைத் தளத்தை அதிரவைத்துக் கொண்டிருந்தான். தங்கள் தீரம் மிகு செயல்களால் விடுதலைப் போருக்குப் பலம் சேர்த்த கரும்புலி வீரர்கள் சிலர் தங்கள் உடலோடு சுமந்து வந்த வெடிபொதியை வெடிக்க வைத்து தங்களை இந்தத் தேசத்திற்காக அர்ப்பணித்துக்கொண்டிருந்தனர்.

நெஞ்சிலே காயமடைந்த காவலன் அணித்தலைவன் இளங்கோவிடம் அனுமதி பெற்றபின் தன் மார்போடு பொருத்தப்பட்டிருந்த கந்தகப்பொதியை வெடிக்க வைத்து காற்றோடு

கரும்புலி
மேஜர் மதிவதனன்

கரும்புலி
மேஜர் சுபன்

கரும்புலி
மேஜர் இளம்புலி

கரும்புலி
மேஜர் கனிக்கீதன்

கரும்புலி
மேஜர் காவலன்

கரும்புலி
மேஜர் எழிலின்பன்

கலந்து போனான். அநுராதபுர வான்தளத்தில் அந்த வீரர்கள் மூட்டிய தீ பிரகாசித்து எரிந்து கொண்டிருந்தது. களத்தில் நின்ற படி அணியை வழிநடத்திய இளங்கோ காயமடைந்தான். அவனால் நகரமுடியவில்லை தனது காயத்திற்கு கட்டுப்போட்டு விட்டு அவன் தெளிவாக கட்டளைகளை வழங்கிக்கொண்டிருந்தான்.

அந்தக் கரும்புலிகளுள் ஒரிருவரைத் தவிர மற்றைய எல்லோரும் எதிரியின் குண்டுமழையால் வீர வடுவேந்திய போதும் அவற்றிற்குக் கட்டுப் போட்டுவிட்டு தொடர்ந்தும் சண்டையிட்டனர். காயங்களின் வேதனை அவர்களை வாட்ட வில்லை. சிங்களம் எங்கள் தேசம் மீது புரிந்த கொடுமைகளின் வடுக்கள்தான் அவர்களின் மனதை வாட்டிக்கொண்டிருந்தது. அதற்காகத்தான் இன்று எதிரியின் கோட்டைக்குள் முழக்கமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். சிங்களப்படை மீண்டும் தங்கள் தளத்தை கைப்பற்ற முன்னேறுகின்றார்கள். இளங்கோ கட்டளை மையத்துடன் தொடர்பெடுக்கிறான்.

“என்னண்டா ட்ரக்கில வந்து இறங்கி அடிச்சுக்கொண்டு வாறாங்கள். நாங்கள் திருப்பித் தாக்கிறம்.” “நீங்கள் உங்கட ஆக்களை வச்சு நல்லாக் குடுங்கோ. எங்கட விமானங்கள் உங்களுக்கு துணையா இப்ப தாக்குதல் நடாத்துவினம்.” இளங்கோ கட்டளை மையத்துடன் தொடர்பிலிருந்தான். திடீரென முகாமைச் சூழ இருந்த எதிரிகளின் ஆயுதங்கள் வான்நோக்கி குண்டுமழையை பொழிந்தன.

உண்மையில் அப்போது வானத்தில் எமது விமானங்கள் தென்படவில்லை. எதிரியின் ராடார் திரையில் எமது விமானம் தென்படுவதாகத் தகவல் கிடைத்ததுமே பீதியால் கண்மண் தெரியாது



சுட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் அவர்களின் இந்த இரைச்சல்களுக்கூடாகவே விடுதலைப் புலிகளின் திறன் வாய்ந்த வானோடிகள் தங்களுக்குத் தரப்பட்ட இலக்கின் மீது கனகச்சிதமாக குண்டுகளை வீசிவிட்டு மீண்டும் தளம் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அநுராதபுர வான்தளத்தில் தரையாலும், வானாலும் கரும்புலிகள் தொடுத்த தாக்குதலால் சிங்களச் சிப்பாய்களும் அவர்களது அதிகாரிகளும் கதிகலங்கி போயினர். முன்னேறி வந்த சிங்களப் படையினர் எமது வான்படையின் வரவைக் கேள்வியுற்றதுமே ஓடித் தப்பிக் கொண்டனர். இளங்கோ இந்த நிலைமையை விமானத்தளத்

தின் மையத்திலிருந்தபடி கட்டளை பீடத்திற்கு அறிவித்தான்.

எதிரியின் இலக்குகளை தகர்த்துக் கொண்டிருந்த செந்தூரன் காயமடைந்தான். அவனால் இனிச் செயற்பட முடியாத அளவு பாரிய காயம். அவன் இன்று நிறையவே சாதித்துவிட்டான். அவன் மனதில் நிறைந்த திருப்தியிருந்தது. அவன் புகழ்மணியிடம் தனது உடலில் பொருத்தப்பட்ட வெடிகுண்டை இயக்கி விடும்படி பணிக்கின்றான்.

அந்தக் கணத்தில் கரும்புலி வீரர்களின் மனத்தில் எழுந்த உணர்வை எப்படிச் சொல்வது? எத்தனை வருடங்களாக ஒன்றாக இருந்து ஒருவருக்கொருவர் துணையாக வாழ்ந்த வீரர்கள். இன்று பிரியப் போகின்றார்கள். ஆனாலும் சாதித்து

விட்டோம் என்ற பெருமிதத்தோடு அவனது ‘சார்ச்சை’ இழுத்துவிட்டான் புகழ்மணி. சில கணங்களில் செந்தூரன் இந்த தேசத்திற்காக அணுவணுவாக வெடித்து சிதறினான். இளங்கோ தங்களால் அழிக்கப்பட்ட விமானங்களின் தரவுகளை சொல்லிக் கொண்டிருந்தான். அவற்றில் ஒன்றினது இலக்கத்தைக்கூட தெளிவாக பார்த்து அறிவித்துக் கொண்டிருந்தான்.

“என்னண்டா வீமன்ணையாக்கள் ஒரு எம்.ஐ-24ஐ முற்றா எரிச்சிட்டினம். ஒண்டு சேதத்தோட நிக்குது. அது அடிக்க அடிக்க எரியுதில்லை. என்ர பக்கம் ரக்சி வேயில ஒரு கே-8 எரிஞ்சு முடிஞ்சுது. அதவிடவும் இன்னொண்டும் வெளியில எரிஞ்சிருக்கு. பெரிய கங்கருக்குள்ள 3யூ.ஏ.வி உம் ஒரு பெல்லும் எரியுது. அதைவிடவும் உள்ளுக்க விமானங்கள் எரியுது. ஆனால் நெருப்பு எரிஞ்சு புகையா கிடக்கிறதால எங்களால பார்க்க முடியேல. விளங்கிற்றுதா?” “ஓமோம் விளங்கிற்று. நீங்கள் தொடர்பில நிண்டு நிலைமையை அறிவிச்சுக்கொண்டிருங்கோ.” இளங்கோ சுற்றிவர எரிந்துகொண்டிருக்கும் விமானங்களுக்கு நடுவே காயம் அடைந்த படி சண்டையை நடாத்திக் கொண்டிருந்தான். இரவு வந்து இறங்கிய பீச் கிறாவ்ச் அந்தத் தளத்தில் இருந்த கோபுரத்தின் மறைவில் நின்றதை இப்போது தான் கண்டார்கள். உடனடியாகவே வீமன் தனது கிறனைட் லோஞ்சரால் அதன் மீது தாக்க அது பற்றி எரியத் தொடங்கியது. இப்போது கரும்புலிகளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. பீச் கிறாவ்ற் விமானம் மிகவும் பெறுமதிவாய்ந்தது. அத்தோடு மற்றைய விமானங்களைவிடவும் இது முக்கியமாக அழிக்கப்பட வேண்டுமென ஏற்கனவே சொல்லப்பட்டுமிருந்தது.

இளங்கோ கட்டளை மையத்துடன் மீண்டும் தொடர்பெடுக்கின்றான். “என்னண்டா இப்ப ‘பீச் கிறாவ்ற்’ ஒண்டை அடிச்சு எரிச்சிட்டம். புதுசா மினுங்கிக் கொண்டு நிண்டது. வெடிச்சுவெடிச்சு எரியிற சத்தம் உங்களுக்கும் கேக்குமெண்டு நினைக்கிறன்?” இளங்கோ ஆனந்த பூரிப்போடு பீச் கிறாவ்ற் வெடித்து எரியும் சத்தத்தை தொலைத் தொடர்புக் கருவியூடாகக் கேட்குமாறு கட்டளைப்பீடத்திற்கு தெரிவித்துக் கொண்டிருந்தான். சிங்களப் படையின் அந்தப் பெரும் விமானத்தளம் இப்போது கரும்புலி வீரர்களிடம் மண்டியிட்டுக் கொண்டது. இப்போது அங்கே கரும்புலிகள் நினைத்தது மட்டும்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தங்களது விமானங்களைப் காப்பாற்றும் நப்பாசை சிங்களத்திடம் இருந்து இன்னும் போகவில்லை. எரிந்து கொண்டிருக்கும் விமானங்களையாவது காப்பாற்றுவோம் என எண்ணி அவர்கள் தீயணைப்பு வாகனத்தோடு விமானத்தளத்துள் நுழைந்தார்கள்.

அப்போது புகழ்மணி தனது பி. கே ஆயுதத்தால் அவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதலை தொடுக்க அவர்களும் ஓடித்தப்பிக் கொண்டனர். ஆனாலும் தொடர்ச்சியாக வான் படைத்தளத்தின் எல்லையில் நின்றவாறு கரும்புலிகள் மீது தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்தனர்.

இப்போது அந்தத் தளத்தில் பி.கே ஆயுதத்தைவைத்து சுட்டுக்கொண்டிருந்த புரட்சி காயமடைய அவன் தனது சார்ச்சை இழுத்துவிடுமாறு தர்மினியிடம் வேண்டிக்கொண்டான். அந்தக் கரும்புலி வீராங்கனை அந்த வீரனுக்கு கடைசி விடை

கொடுத்து அவனது சார்ச்சை இழுத்து விட்டாள்.அந்த வீரனும் தனது தாய் தேசத்திற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டான். அவனது பி.கே ஆயுதத்தை தர்மினி எடுத்து மதியிடம் கொடுத்தாள். மதிவதனன் இப்போது ஒரு கரும்புலி வீரனாயினும் அவனொரு கனரக ஆயுதப்பயிற்சி ஆசிரியர். எத்தகைய கனரக ஆயுதத்தையும் எடுத்தவுடன் கையாளும் திறன் வாய்ந்தவன்.

அவன் உருவாக்கிய போராளிகள் இப்போதும் களங்களில் கனரக ஆயுதங்களுடன் நிற்கிறார்கள். எந்த ஆயுதத்தையும் இலகுவாகக் கையாளும் அந்தக் கரும்புலி வீரன் வீரச்சாவடைந்த சகதோழனின் துப்பாக்கியை எடுத்து ரவைகளை பொழிந்து கொண்டிருந்தான். தர்மினி ஒரு துடிப்பான போராளி. அவளும் அந்தக் களத்தில் கண்ணில் காயமடைந்த போதும் தனது இயக்கத்தை அவள் நிறுத்திக் கொள்ளவில்லை.

தனது காயமடைந்த கண்ணிற்கு கட்டுப் போட்டுவிட்டு அவள் சண்டையிட்டுக் கொண்டிருந்தாள். புலிமன்னனும் கடும் காயத்திற்குள்ளானான். அவனிற்கு இடுப்பிற்கு கீழ் இயலாமல் போனது. அவனால் நகர முடியாது போனாலும் பெரும் மனவுறுதியைக் கொண்ட அந்த வீரன் தனது பி.கே ஆயுதத்தால் தொடந்தும் சூடுகளை வழங்கிக் கொண்டிருந்தான். அநுராதபுர வான்படைதளம் எங்கும் பெரும் தீயின் வெளிச்சம். துப்பாக்கி வேட்டுக்களினதும் குண்டுகளினதும் காதை கிழிக்கும் வெடியோசைகள். இவற்றிற்கு நடுவே நின்ற படி கரும்புலிகள். தொடர்ந்தும் சண்டையிட்டார்கள். அந்த தளத்தை சூழ இருந்த சிங்கள விமானப்படையால் எதுவும் முடியாது போக தங்கள் ஆற்றாமையால் மன்னாரிலிருந்தும், வவுனியாவிலிருந்தம் விசேட படை அணிகளை அநுராதபுரத்திற்கு அழைத்தனர்.

இப்போது அந்தத் தளத்தில் சண்டை இன்னும் வலுவுற்றது. எஞ்சியிருந்த கரும்புலி வீரர்கள் மூர்க்கமாகச் சமரிட்டார்கள்.

இளங்கோவிற்கு மீண்டும் இருமுறை காயம் ஏற்படுகின்றது. அந்தக் காயத்தின் வலியையும் கடந்து அவன் நிதானமாக கட்டளை மையத்துடன் தொடர்பெடுக்கிறான். “எனக்கு திரும்பவும் ரெண்டிடத்தில காயம் வந்திட்டுது. நான் எனக்கு தந்த கடமையை சரியாச் செய்திருக்கிறன். அண்ணையிட்டச் சொல்லுங்கோ. நான் என்ர அணியோட சேர்ந்து சாதிச்சிட்டனெண்டு. நீங்கள் எல்லோரும் அண்ணையை கவனமா பார்த்துக் கொள்ளுங்கோ.

கரும்புலி
கப்டன் அன்புக்கதிர்

கரும்புலி
கப்டன் ஈழப்பிரியா

கரும்புலி
கப்டன் ஈழத்தேவன்

கரும்புலி
கப்டன் கருவேந்தன்

கரும்புலி
கப்டன் புகழ்மணி

கரும்புலி
கப்டன் புலிமன்னன்

அண்ணைதான் எங்களுக்கு முக்கியம். என்ர நண்பர்களிட்ட சொல்லுங்கோ நான் என்ர கடமையைச் சரியாக செய்திருக்கிறன் எண்டு. இனி நீங்கள் தான் அண்ணைக்கு நிறையச் செய்து குடுக்க வேணுமெண்டு சொல்லுங்கோ...” இந்த வார்த்தைகளோடு இளங்கோவின் குரல் அடங்கிப்போகிறது. அதன் பின் அவன் குரலை கேட்க முடியவில்லை. சற்று முன் தான் வீமனும் அந்த அநுராதபுர தளத்துள் வெடித்து சிதறி வரலாறான செய்தியை இளங்கோ சொல்லியிருந்தான். இளங்கோ அந்த அணியை வைத்து நிறையவே சாதித்து விட்டான். தலைவர் நினைத்ததை விட அதிகமாய் அவன் சாதித்துவிட்டான். தனது மனதில் எத்தனை பெரும் சுமைகளை அந்த வீரன் இன்று வரை சுமந்திருக்கிறான். சமர்க்களங்களில் எத்தனை அர்ப்பணிப்புக்களை கண்டிருக்கிறான். அதன் பதிவுகள் அவனது நாட்குறிப்பில் இப்படியிருக்கின்றது...

‘கடும் சமர் மத்தியிலேயே தலையில் காயம் பட்டு வார்த்தைகள் வெளிவர முடியாத நிலையிலேயே என் மடியில் தலைவைத்த படியே என்னைக்கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்துவிட்டு என் கரம் இறுகப்பற்றியபடியே என் மடியினிலே உயிர்விட்ட உயிர்த் தோழன் மேஜர் மனோவை என் கண்ணால் பார்த்திருக்கிறேன்.” ஊடறுப்புச் சமருக்காக நெஞ்சுமுட்ட நீருக்குள்ளால்

நகர்ந்து கொண்டிருந்த போது எதிரியின் சரமாரியான செல் மழையில் மார்பில் காயப்பட்ட பெண் போராளி குப்பி கடிக்க முற்பட்ட போது குப்பியை பறித்துவிட்டு ஒரு கிலோ மீற்றர் தூரம் நீருக்குள்ளால் தோளில் காவிச் சென்று கரை சேரும் போது என் தோளிலேயே உயிர் பிரிந்த பெண் போராளியைப் பார்த்து இருக்கின்றேன்.” இது அவனது குறிப்பு பொத்தகம் சொன்ன அவனின் உணர்வுகள்.

இந்த உணர்வுகளைச் சுமந்து தானே இன்று அவன் சமரிட்டான். அவன் மட்டும் என்ன 21 கரும்புலி வீரர்களும் இப்படிப்பட்ட உணர்வுகளை சுமந்து தானே இன்று கரும்புலியாக உருவாகியிருந்தார்கள். அந்த உன்னத வீரர்களின் இலட்சிய தாகத்தின் முன்னாலும் அசையாத மனவுறுதியின் முன்னாலும் நெஞ்சை நிமிர்த்திய வீரத்தின் முன்னாலும் சிங்களக் கூலிப் படைகளால் எப்படி தாக்குப் பிடிக்க முடியும்? அந்த உன்னத வீரர்களை எதிர்கொள்ளும் துணிவு இவர்களுக்கு எங்கே இருக்கின்றது?

எதிரிகள் கலங்கி நிற்க ஆச்சரியத்தோடு வியந்து நிற்க எஞ்சியிருந்த ஒவ்வொரு கரும்புலி வீரனும் மூர்க்கமாக போராடினான். விடிகாலை 3.20 மணிக்கு தொடங்கிய சண்டை காலை 9.00 மணிவரையும் தொடர்ந்த போதும் சிங்களப் படையால் உள்நுழைய முடியவேயில்லை. கடைசியாக கவச வாகனங்களை கொண்டு வந்து பெரும் குண்டு மழை பொழிந்துதான் அவர்களால் தங்கள் வான் படை தளத்தினுள் நுழைய முடிந்தது. அப்போது தங்களுக்கு தரப்பட்ட பணியை கரும்புலி வீரர்கள் உச்சமாக நிறைவேற்றி முடித்து வீரச்சாவை அணைத்திருந்தார்கள். சிங்கள தேசம் தனது ஆற்றாமையின் வெளிப்பாடாய் தங்கள் கோபங்களை கரும்புலி வீரர்களின் வித்துடலில் தான் தீர்த்துக்கொண்டது. பாவம் சிங்களப் படைகள். சிங்கத்தின் வழிதோன்றல்களுக்கு நாகரீகம் பற்றி புரிந்திருக்க நியாயமில்லை தான். ஆனால் கரும்புலிகள் வென்று விட்டார்கள்.

தலைவர் சொல்லி விட்டது போல வெற்றி பெற்ற அவர்களின் உன்னத அர்ப்பணிப்பால் உலகமிப்போது அவர்களின் பெயரை உச்சரிக்கின்றது. சிறீலங்காவின் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவை நவீன துட்டகைமுனுவாகச் சித்தரித்தபடி ஆழிக்கூத்தாடிய சிங்களத்தின் மீது, நவீன எல்லாளனாக புகுந்து அவர்களின் துட்டகைமுனு கொட்டத்தை அடக்கி முறித்து எறிந்திருக்கிறார்கள். அந்த வீரர்கள் தனியே அநுராதபுர வான்படை தளத்திற்கும் மட்டும் தீ மூட்டவில்லை. பெரும் விடுதலை தீயை பலநூறு போராளிகளின் இதயங்களில் மூட்டியிருக்கிறார்கள். நிச்சயமாய் இனிவரும் களங்களில் அவர்கள் சிங்களத்தின் தலையில் பேரிடியாய் இறங்குவார்கள்

அநுராதபுர மண்ணில் பகைவரின் வானூர்திகளை அழித்து

வன்னி முற்றுகைக்கான முதலடியைக் கொடுத்த இந்த வீர மறவர்களின் தியாகத்தை வீண்போகாமல் காக்கப்பட வேண்டும். எல்லாளன் நடவடிக்கையில் வீரச்சாவடைந்த கரும்புலிகளுக்கு எங்கள் வீரவண[redacted]

ஒரு மணித்தியால நேர இடைவெளிக்குள் மூன்று கிலோ மீற்றர் நீளத்தையும் இரண்டரைக் கிலோ மீற்றர் அகலத்தையும் கொண்ட அநுராதபுரம் பாரிய விமானப்படைத்தளத்தினை கரும்புலிகள் அணியினர் வெற்றிகரமாக தாக்கி தமது முற்று முழுதான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். அப்போது விடுதலைப் புலிகளின் வான்படையினரின் இரண்டு வானூர்திகள், அநுராதபுரம் வான்படைத்தளத்தினுள் உள்நுழைந்து இரண்டு குண்டுகளை வீசி அப்படைத்தளத்திற்கு மேலும் பாரிய சேதங்களை ஏற்படுத்தின.

அந்த வான்படை தளத்துக்கு உதவி புரிவதற்காக வவுனியாவில் இருந்த அனுப்பப்பட்ட பெல்-212 உலங்குவானூர்தியானது மகிந்தலைப் பகுதியில் வானூர்தி எதிர்ப்பு ஆயுதத்தினால் சுட்டு வீழ்த்தப்பட்டனர். அதில் பயணம் செய்த நான்கு வான்படையினர் உலங்குவானூர்தியுடன் வீழ்ந்து உடல் சிதறிப் பலியாயினர்.

இந்த தாக்குதல்களின் போது சிறீலங்கா வான்படையின் எட்டு வானூர்திகள் அழிக்கப்பட்டதாக முதலில் செய்திகள் வெளிவந்தாலும் தற்போது கிடைக்கும் நம்பகமான தகவல்களின் படி 18 வரையிலான வானூர்திகள் அப்படைத்தளத்தின் மீதான தாக்குதலின் போது அழிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனிவிரட்ன கடந்த 24 ஆம் நாள் புதன் கிழமை ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதாவது 660 கோடி ரூபா பெறுமதி வாய்ந்த 18 வானூர்திகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டு அல்லது சேதமாக்கப்பட்டு விட்டதாக அவர் தெரிவித்திருந்தார்.

அதாவதுஎம்.ஐ-24 உலங்குவானூர்திகள்- 02
எம்.ஐ-17 உலங்கு வானூர்தி - 01, பெல்-212 - 01
பீச் கிராப்ட்- 01, K-8 பயிற்சி வானூர்தி - 01
PT-6 பயிற்சி வானூர்தி - 03, ஆளில்லா வேவு வானூர்தி - 03
செஸ்னா வானூர்தி - 06 ஆகியன இத்தாக்குதலின் போது புலிகளினால் அழிக்கப்பட்டதாக தெரிவித்த செனிவிரட்ன இது தவிர மேலும் மூன்று வானூர்தி அழிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான விபரங்கள் கிடைக்கப்பெற்றதும் வெளியிடப்படும் என்றும் லக்ஸ்மன் செனிவிரட்ன தெரிவித்தார்.

இத்தாக்குதல்களின் போது சிறீலங்காப் படையினர் 14 பேர் கொல்லப்பட்டதாகவும் 20-க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் சிறீலங்கா அரச தரப்பினர் செய்திகளை வெளியிட்டிருந்தனர். கொல்லப்பட்டவர்களில் விங் கொமாண்டர் அமிலா மொகொட்டி, ஸ்குவார்டன் லீடர் ருவான் விஜயரட்ன மற்றும் இரண்டு பிளையிங் ஒபிசர்கள், நான்கு கோப்பரல்கள், இரண்டு லான்ஸ் கோப்பரல்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். விடியும் வரை விழித்திருந்த அநுராதபுரம் மக்கள்.

அநுராதபுர நகரமானது அதிகாலை 03:20 மணியில் இருந்தே குண்டு சப்தங்களாலும் துப்பாக்கி வேட்டொலிகளினாலும் அதிர்ந்துகொண்டிருந்தது. அந்நகர மக்கள் இச்சத்தங்களினால் நித்திரையில் இருந்து திடுக்கிட்டு எழுந்ததுடன் பயப்பீதி காரணமாக பின்னிரவு முழுவதும் விழித்திருந்தனர். விடுதலைப் புலிகளின் இரண்டு வானூர்திகள் மிகவும் இரைச்சலுடன் தாழப் பறந்து குண்டுவீசியதை தாம் கண்டதாக பல மக்கள் செய்தி நிறுவனங்களுக்கு தெரிவித்திருந்தனர். மேலும் முகாம் பகுதியில்

பாரிய நெருப்புக்கோளங்களையும் தீச்சுவாலைகளையும் கண்டதாக முகாமிற்கு அருகில் வசித்தவர்கள் தெரிவித்தனர்.

விமான படைத்தளம் அழித்து வெற்றிக்கு வித்திட்டு வீரத்துயில் கொள்கின்ற தேசத்தின் புயல்கள்..

லெப். கேணல் இளங்கோ...
அவனது சாதுவான அந்தச் சிரிப்பு, அவனுக்குள்ளே குடியிருந்த எரிமலையின் மறுபக்கம். இம்ரான்-பாண்டியன் படையணியின் இரகசியமான சிறப்புப் பணியொன்றை ஆற்றிய சில ஆண்டு காலப்பகுதியில் அவனது செயற்பாடுகள் பற்றி இங்கு விவரிக்க முடியாது. பின்னர் லெப்.கேணல் விக்ரர் கவச எதிர்ப்பு அணியில் இணைந்துகொண்டான். அவ்வணியில் இருந்து அவன் சாதித்துக் காட்டிய வீரம் வித்தியாசமானது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குடாரப்புத் தரையிறக்கத்தின் மூலம் உள்ளே நுழைந்த படையணியில் அவனது தலைமையிலும் ஓரணி கவச எதிர்ப்பு ஆயுதங்களுடன் களமிறங்கியிருந்தது. பிரிகேடியர் பால்ராஜ் தலைமையில் நிலையெடுத்திருந்த விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கும் நோக்குடன் பலமுனைகளில் முன்னேறிவந்த எதிரியுடன் கடும்சமர் இடம்பெற்றது.

எதிரியின் கவசவாகனத்தைத் தாக்கி அதிலிருந்த 50 கலிபர் துப்பாக்கியை கைப்பற்றி, அதன்மூலம் எதிரியின் மீதே தாக்குதலை நடத்திய இளங்கோவின் வீரம் அன்று அந்தச் சமர்க்களத்தை வெல்வதற்கு உறுதுணையாக அமைந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்த காலம் தொடக்கம், பல்வேறு சிறப்பு பணிகளில் ஈடுபட்டவன். ஆனால் ஒவ்வொரு பணியிலும் அவனது முழுமையான ஈடுபாடு இருக்கும்.

உள்ளகப் புலனாய்வுப்பணி தொடக்கம் ஊடுருவிதாக்குதல் வரை அவனது பணிகள் நீண்டவை. அவனது அந்த அனுபவங்களே எல்லாளன் நடவடிக்கைக்கான சிறப்பு அணியின் பொறுப்பாளனாக நியமிக்கப்படும் அளவுக்கு அவனைப் புடம் போட்டது.


கரும்புலி
கப்டன் செந்தூரன்

கரும்புலி
கப்டன் சுபேசன்


கரும்புலி
கப்டன் திருமகள்


கரும்புலி
கப்டன் பஞ்சீலன்


கரும்புலி
கப்டன் புரட்சி


கரும்புலி
லெப். அருண்

சிறப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தவரை சிறிய அணிகளே பொருத்தமானவை. அதன் மூலமே சாதகமான மறைப்பை பயன்படுத்தி எதிரிக்குப் பேரழிவைக் கொடுப்பதுடன் - நெருக்கடியான நிலைமைகளின் கீழ் - அணியை ஒழுங்கமைப்பதும் இலகுவானது.

21 பேர் கொண்ட பெரிய அணியையும் அதற்குத் துணையான வேறு அணிகளையும் நெறிப்படுத்தி வழிகாட்டி பெருந்தலைவன் அளித்த பணியைச் சிறப்பாகவே அவன் முடித்து வைத்தபோது - சிங்கள தேசமே ஆட்டங்கண்டது.

லெப். கேணல் வீமன்...
பாலா அண்ணை ஊருக்கு வந்தால் இவன்தான் அவருக்கு மெய்ப்பாதுகாப்பாளன். தேசியத்தலைவரின் மெய்ப்பாது காவலர் அணியில் சில ஆண்டுகள் பணியாற்றிய இவனை தலைவரேதான் பாலா அண்ணையின் பாதுகாப்பாளராக நியமித்தார்.

மிக இளவயதில் போராட்டத்தில் இணைந்த வீமன் தொடக்கத்தில் விடுதலைப் புலிகளின் படைத்துறைப்பள்ளியில் கல்வி பயின்றான். 1995 இன் இறுதிக்காலப்பகுதியில் - யாழ்.குடாநாட்டை முற்றாகக் கைப்பற்றவென சிறீலங்காப்படைகள் மும்முரமாக முயன்றுகொண்டிருந்த காலப்பகுதியில் படைத்துறைப் பள்ளியிலிருந்து சிறப்பு இராணுவப் பயிற்சிக்கெனத் தேர்வு செய்யப்பட்ட அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டான். அவனது சிறப்பு இராணுவப் பயிற்சிகள் தொடரமுடியாத வண்ணம் போர் நிலைமைகள் மாறின. புலிகள் யாழ்.குடாநாட்டை விட்டு வெளியேறி வன்னிக்கு வந்தபோது அவனது சிறப்பு இராணுவப் பயிற்சிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன.

வன்னிக் காடுகளில் மாறிமாறி வெவ்வேறு வேலைத்திட்டங்களில் ஈடுபட்ட வீமனும் அவனது அணியும் மீண்டும் தமது சிறப்புப் பயிற்சிகளைத் தொடர்ந்தனர். பின்னர் வன்னியின் இறுதிப்போரில் வீரச்சாவடைந்த கேணல் வசந்தன் மாஸ்டரின் மேற்பார்வையில்தான் அப்போது வீமனும் அவனது அணியும் சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றனர். பல தற்காப்புக் கலைகள் உட்பட சிறப்புப் பயிற்சிகளைப் பெற்று அந்த அணி புடம்போடப்பட்டது.

இந்நிலையில்தான் தலைவரின் மெய்ப்பாதுகாப்புப் பணியில் வீமன் இணைத்துக் கொள்ளப்பட்டான். வீமன் சிறந்த சமையலாளனாயும் விளங்கினான்.

வீமன் பல்வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டான். எல்லாவற்றிலும் சிறப்பாகச் செயற்பட்ட காரணத்தால் வீமன் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்தான். பாலா அண்ணை வன்னிக்கு வருகை சந்தர்ப்பங்களில் வீமனே அவரது பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டான். அது யுத்தநிறுத்த காலப்பகுதியா அமைந்தபோதும் வீமனுக்கும் மற்றவர்களுக்கும் அது நிம்மதியான காலமன்று. அந்தக்காலப்பகுதியில் பாலா அண்ணையையும் தலைவரையும் தாக்குவதற்கென்று சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் எதிரியின் நீண்டதூர ஊடுருவித் தாக்கும் அணிகள் வன்னிக்குள் நகர்ந்திருந்தமையும் இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. அந்நேரத்தில் புலிகளின் படையணிகள் முக்கிய சாலைகள் முழுதும் 24 மணிநேரமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததை வன்னியில் வாழ்ந்த மக்கள் நன்கறிவர்.

அந்த இக்கட்டுக்குள்ளும் வீமனும் அவனது அணியும் தளராமல் பணியாற்றினார்கள். சரியான தூக்கமின்றி, உணவின்றி, ஓய்வின்றி தமது கடமையைச் செய்தார்கள். வீமன் மேல் கொண்ட நம்பிக்கையால்தான் தலைவர் வீமனை பாலா அண்ணையின் பாதுகாப்பாளனாக நியமித்தார்.

பின்னர் கரும்புலிகள் அணியில் இணைந்துகொண்ட வீமன் எல்லாளன் நடவடிக்கையில் இளங்கோவின் உதிவிப் பொறுப்பாளனாகத் தேர்வு செய்யப்பட்டான். கொடுத்த பணியைச் சிறப்பாக முடித்து ஏனையோரோடு லெப்.கேணல் வீமனும் கண்மூடினான்.

மேஜர் மதிவதனன்...
என்னேரமும் கலகலப்பாகவே இருப்பான். அவனது கலகலப்பும் துடியாட்டமும் எல்லோரிடமும் அவனை நெருக்கமாக வைத்திருந்தது.

அடிப்படை இராணுவப் பயிற்சியின் பின்னர் வெவ்வேறு பணிகளைச் செய்து இறுதியில் வந்து சேர்ந்தது கனரக ஆயுதப் பயிற்சியாசிரியனாக. சில விமான எதிர்ப்புப் பீரங்கிகள், கடற்சண்டைக்கான ஆயுதங்கள் என்பவற்றுக்கான பயிற்சியாளனாக இவன் தேர்வானான். அப்போது இம்ரான்-பாண்டியன் படையணியின் ஓரங்கமாக இருந்த லெப்.கேணல் ராதா வான்காப்பு அணியில் பயிற்சிக்கெனச் சென்ற இவனின் திறமை இறுதியில் இவனைப் பயிற்சியாளனாக்கியது.

பின்னர் வன்னியின் இறுதிச்சமரில் வீரச்சாவடைந்த லெப். கேணல் கருணாகரனின் வழிகாட்டலில் வளர்ந்த மதிவதனன் பின்னர் தனித்துப் பயிற்சியளிக்கும் நிலைக்குத் தன்னை வளர்த்துக் கொண்டான். கருணாகரன் வேறு கடமைக்கென பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியேறிய பின்னர் மதிவதனனே அவ்விடத்தையும் நிரப்பினான். தனது ஆற்றலாலும் ஆளுமையாலும் போராளிகள் பலரைத் திறம்பட வளர்த்து விட்டவன் மதிவதனன். பின்னர் கரும்புலிகள் அணியில்

இணைந்து எல்லாளன் சிறப்பு நடவடிக்கைக்கான அணியிலும் இணைத்துக் கொள்ளப்பட்டான். தரப்பட்ட பணியைச் சிறப்பாக முடித்து ஏனையவர்களோடு தன்னையும் வெற்றிக்காக ஆகுதியாக்கிக் கொண்டான்.

மேஜர் இளம்புலி ...
இம்ரான் பாண்டியன் படையணியில் மருத்துவப் போராளியாய் தனது கடமையைச் செய்துகொண்டிருந்தவன். இவனும் நல்ல கலகலப்பாகவும் துடியாட்டமாகவுமே இருப்பான். அனேகமான பயிற்சி முகாம்களில் மருத்துவப் போராளியாகப் பணியாற்றியிருந்தான். சில போர்க்களங்களில் இவனின் பங்களிப்பு மற்றவரிடையே இவனைப் பிரபலப்படுத்தியது.

இவனது நீண்டநாள் விரும்பத்தின்படி கரும்புலிகள் அணியில் இணையும் வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் எல்லாளன் நடவடிக்கைக்கான சிறப்பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டான். அந்நடவடிக்கையில் புலிக்கொடியோடு சென்று தான் நினைத்ததைச் சாதித்து வீரகாவியமானான்.

இவர்களோடு,

மேஜர் சுபன்..
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை நிலையான முகவரியாகவும், கொண்ட இராஜவதனி டி-8 உருத்திரபுரம் கிளிநொச்சியை இடைக்கால முகவரியாகவும் கொண்ட கதிரவன் ஜீவகாந்தன்.

மேஜர் காவலன்...
என்று அழைக்கப்படும் 4 ஆம் கட்டை பூநகரி, கிளிநொச்சியைச் சேர்ந்த சண்முகம் சத்தியன்.

மேஜர் கனிக்கீதன்...
என்று அழைக்கப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த இராசன் கந்தசாமி.

மேஜர் எழில்இன்பன்...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை நிலையான முகவரியாகவும், தாரணி உதயநகர் கிளிநொச்சியை இடைக்கால முகவரியாகவும் கொண்ட விமலநாதன் பிரபாகரன்.

கப்டன் தர்மினி...

என்று அழைக்கப்படும் கிளிநொச்சி 3 ஆம் வாய்க்கால் சுந்தரராஜ் வளர்ச்சித்திட்டத்தைச் சேர்ந்த கணேஸ் நிர்மலா.

கப்டன் புரட்சி...
என்று அழைக்கப்படும் யாழ். மாவட்டத்தை நிலையான முகவரியாகவும், இல. 34 பரமேஸ்வரி உருத்திரபுரத்தை இடைக்கால முகவரியாகவும் கொண்ட செல்வராசா தனுசன்.

கப்டன் கருவேந்தன்...
என்று அழைக்கப்படும் கிளிநொச்சி வட்டக்கச்சி எண் 6 ஹட்சன் வீதியைச் சேர்ந்த மயில்வாகனம் சதீஸ்குமார்.

கப்டன் புகழ்மணி...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை நிலையான முகவரியாகவும், இல. 19, 1 ஆம் வட்டாரம் முள்ளியவளையை இடைக்கால முகவரியாகவும் கொண்ட தர்மலிங்கம் புவனேஸ்வரன்.

கப்டன் புலிமன்னன்...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை நிலையான முகவரியாகவும், பாக்கியநாதன் எம்ஆர் ஓட்டுனர் சிவன் கோவிலடி நாச்சிக்குடாவை இடைக்கால முகவரியாகவும் கொண்ட கணபதி நந்தகுமார்.

கப்டன் அன்புக்கதிர்...
என்று அழைக்கப்படும் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பெரிய சாளம்பனை நிலையான முகவரியாகவும், ரா.இந்திரா அம்மன் கோவிலடியை கிளிநொச்சியை இடைக்கால முகவரியாகவும் கொண்ட வில்சன் திலீப்குமார்.

கப்டன் சுபேசன்...
என்று அழைக்கப்படும் மன்னாரை நிலையான முகவரியாகவும் ச.நாகேந்திரம் வட்டக்கச்சி சந்தையடி கிளிநொச்சியை இடைக்கால முகவரியாகவும் கொண்ட நாகராசா மகாராஜ்.

கப்டன் செந்தூரன்...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை நிலையான முகவரியாகவும் ஜெகன் உதயநகர் கிளிநொச்சியை இடைக்கால முகவரியாகவும் கொண்ட கணேசநாதன் தினேஸ்.

கப்டன் பஞ்சீலன்...
என்று அழைக்கப்படும் மட்டக்களப்பை நிலையான முகவரியாகவும், நாகரத்தினம் கணுக்கேணி முள்ளியவளையை இடைக்கால முகவரியாகவும் கொண்ட சிவானந்தம் கஜேந்திரன்.

கப்டன் ஈழப்பிரியா...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை நிலையான முகவரியாகக் கொண்ட கந்தையா கீதாஞ்சலி,

கப்டன் அறிவுமலர்...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சேவியர் உதயா.

கப்டன் ஈழத்தேவன்...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கராசா மோசிகரன் ஆகிய கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப். அருண்...
என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தை நிலையான முகவரியாகவும், கனகநாதன் கரியாலை நாகபடுவான் முழங்காவிலை இடைக்கால முகவரியாகவும் கொண்ட பத்மநாதன் திவாகரன்.

தாயக விடுதலை வேள்வி தன்னில் தங்கள் உயிரை அர்பணித்து மண்ணை மக்களைக் காத்த மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்...!

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

www.sangathamil.ca

தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

பிரமந்தனாற்றுப் படுகொலை 02 அக்டோபர் 1985

02.10.1985 அன்று அதிகாலை வேளை பொழுது புலர்ந்தும் புலராத நிலமை. அதிகாலை வானில் ஓர் உலங்கவானூர்தி முதலில் சுற்றி வட்டமிட்டு சுட்டுக்கொண்டே இருந்தது. அதனைத் தொடர்ந்து மூன்று குண்டுவீச்சு விமானங்கள் வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அவை குண்டுகளை வீசவில்லை. இவை மூன்றும் இத்தாலியத் தயாரிப்பான சிறியராக சியாமா செட்டி விமானங்களாகும்.

இந்த வேளையிற் பிரமந்தனாற்றுக் கிராமத்தின் தெற்கு எல்லை ஓரமாகவுள்ள காட்டுப்பகுதிக்குள் சிறீலங்கா இராணுவ அணிகள் உலங்குவானூர்தி மூலமாகத் தரையிறக்கப்பட்டன. தரையிறக்கப்பட்ட படைகள் படிப்படியாக முன்னேறி கிராமத்தினைச் சுற்றிவளைத்து கொண்டன. வீட்டுக்கு வெளியே வந்து என்ன நடைபெறுகின்றது எனப் பார்த்துக்கொண்டு நின்ற பொதுமக்களுக்கு அந்த ஊரைச்சேர்ந்த மயிலர் கந்தசாமி என்பவர் ஒழுங்கைகளுக்கூடாக காட்டுக்குள்ளால் ஆமி வருகிறான் என்று சத்தம் போட்டுச் சொல்லிக்கொண்டே ஓடி வந்தார். அவர் கூறுவதைக்கேட்டு அக்கிராம மக்கள் விழிப்படைந்தார்கள்.

அந்தச்சம்பவத்தினை நேரில் பார்த்த திருமதி உமாமகேஸ்வரன் கமலாம்பிகை (வயது 45) அன்றையநாள் நடந்த அனர்த்தம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

காட்டுக்குள்ளால் ஆமி நடந்து வருகிறான் என்று மயிலர் கந்தசாமி சொல்லக் கேட்டவுடனேயே நான் எனது ஆறு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு காட்டக்குள் ஓடிவிட்டேன். எனது கடைசிக் குழந்தை தீபன் அப்போது ஆறுமாதக் குழந்தை. அன்றைய நாள் முழுவதும் எனது பிள்ளைகள் பசியோடும் பட்டினியோடும்தான் இருந்தார்கள். எந்த உணவும் கிடைக்கவில்லை. முழுநாளும் பட்டினிதான். தாகம் எடுத்தபோது குளம் குட்டைகளில் தங்கி நின்ற தண்ணீரைத்தான் எடுத்துக் குடித்தோம்.

மேற்படி நாளன்று இக்கிராமத்திலிருந்த சிவபாதம் என்பவருடைய கடை கொள்ளையடிக்கப்பட்டது. அந்தக்கடையிலிருந்த நகை, பணம். என்பன கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்குறித்த சிவபாதத்தின் கடையைக் கொள்ளையடித்த சிறீலங்கா இராணுவத்தினர் அவருக்குப் புலியெனச்சாயம் பூசிக்கைது செய்து விசாரணைக்குக் கொண்டு போனார்கள். போகும் போது ஓலை வீடுகளுக்குத் தீவைத்துவிட்டுச் சென்றார்கள். பல வீடுகள், பொது மக்களுடைய உடைமைகள், பாடசாலைப் பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் தீ மூட்டி எரிக்கப்பட்டன. அன்றையநாள் ஐந்து உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிங்களச் சிப்பாய்கள் செய்த அடாவடித்தனங்களால் இக் கிராமத்தினைச்சேர்ந்த பலர் புகலிடம் ஏதுமற்ற ஏதிலிகளாக்கப்பட்டனர்.

இப்படுகொலை பற்றிய மேலும் சில விபரங்கள்

மேற்படி சிறீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் போது பதின்நான்கு அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் சுட்டும் வெட்டியும் படுகாயப் படுத்தப்பட்டார்கள். பல அப்பாவிப் பொதுமக்கள் ஏறக்குறைய இருபத்திரண்டிற்கும் மேற்பட்ட பொது மக்கள் கிட்டிணர் சிவபாதசுந்தரம் என்பவரினது கடையில் நீண்ட நைலோன் கயிற்றால் கைகள் பின்பக்கமாகப் பிணைத்துக் கட்டப்பட்ட நிலையில் படுகொலை செய்வதற்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை நைலோன் கயிற்றினால் கட்டி வைத்த சிங்களப் படைகள் போதையேறிய நிலையில் காணப்பட்டார்கள். இவர்களைப் பின்னர் வந்து கவனித்துக்கொள்வதாகக் கூறிவிட்டு மனிதவேட்டைக்குச் சென்று விட்டார்கள். நல்லவேளையாக ஒரு சிறுவன் கத்தியைக் கொண்டுபோய் அவர்களது கைகள் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றை வெட்டிவிட்டுச் சென்றமையால் அவர்கள் யாவரும் காப்பாற்றப் பட்டார்கள்.

உடன் பிறந்த தம்பியைப் பறிகொடுத்த அக்காவின் துயரம்

மேற்படி 02.10.1985 அன்று இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தின் போது தனது உடன்பிறந்த சகோதரனான வாரித்தம்பி பாக்கியநாதன் என்பவரைப் பேரினவாதக் கொடுமைகளுக்குப் பறிகொடுத்த அவரது சகோதரியான திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) என்பவர் இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

சம்பவநாள் காலை வேளை தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் எனது வீட்டைச் சுற்றி வளைத்தார்கள். எனது கணவர் அப்போது அங்கே இருக்க வில்லை. எனது தம்பியார் தான் அங்கே இருந்தார். அவருக்கு அப்போது இருபத்தொரு வயதுதான் இருக்கும். எமது வீட்டைச் சுற்றி வளைத்த சிங்கள இராணுவத்தினர் முதலில் எங்கள் எல்லோரையும் முட்டுக்காலில் நிற்கும்படி பணித்தார்கள். அவ்வாறே நாங்கள் நின்றோம். எங்கள் வீட்டுக்குள் தாங்கள் தேடுதல் மேற்கொள்ளப்போகின்றோம் என்றார்கள். அவ்வாறு சொல்லியவாறே எங்கள் வீட்டக்குள் அடாவடித்தனமாக நுழைந்தார்கள். எனது தம்பியின் இரு கைகளையும் பின்னால் பிணைத்துக் கட்டினார்கள். வீட்டுக்குள் வந்தவர்களிற் சிலர் நான்றாகத் தமிழிற் கதைத்தார்கள். இவர்களுள் ஒரு வெள்ளைத் தோலுடைய நன்கு உயரமான தோற்றமுடைய ஒருவரும் காணப்பட்டார். அவர் ஒன்றுமே பேசவில்லை. எல்லாவற்றையும் கூர்மையாக இவதானித்தபடி இருந்தார். அன்றைய நாள் அவரை வேறு பல தமிழ் மக்களும் கண்டிருக்கிறார்கள். அவரைப் பொதுமக்கள் மொசாட் என்று அழைத்தார்கள். மொசாட் என்றால் என்னவென்று எனக்கு முதலில் விளங்கவில்லை. பின்னர்தான் மொசாட் என்பவர்கள் வெளிநாட்ட வெள்ளைக்காரர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

சிறீலங்காப் படையினர் செய்த கொடுமைகள்

மேற்குறித்த திருமதி துரைராசா சாரதாதேவி (வயது 45) தொடர்ந்து கூறுகையில்,

மேலும் சிறீலங்கா இராணுவத்தினர் எனது தம்பியிடம் துவக்கைக் கொடுத்துப் படமெடுத்தார்கள். வேறு சில சிறீலங்கா இராணுவத்தினர் உலங்குவானூர்திக்கு முன்னால் எனது தம்பியை நிறுத்தி வீடியோப் படம் எடுத்தார்கள். எனது தம்பிக்குக் காலால் உதைத்தார்கள், அடித்தார்கள். எனது தம்பிக்கு அடிக்கவேண்டாம் என்று நான் கதறி அழுதேன். அவரை எல்.ரி.ரி.இ என்று சொல்லி அடித்தார்கள். நான் இல்லை அவருக்கும் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சொல்லி அழுதேன். அவர்கள் என்னிடம் எனது தம்பியை எல்.ரி.ரி.இ என்று சொன்னால் விட்டு விடுவதாகச் சொன்னர்கள். நான் அவர்களிடம் இல்லாத ஒன்றைச் சொல்லமாட்டேன் என்றேன். அவர்கள் எனது தம்பியை உதைத்துக் கொண்டும், அடித்த படியும் கூட்டிக்கொண்டு போனார்கள். நான் பின்னால் அழுதுகொண்டு போனேன். சிறீலங்காப்படையினர் என்னை வழி மறித்த அடித்து உதைத்துத் தள்ளி விழுத்திவிட்டார்கள். என்னால் தொடர்ந்து செல்ல முடிய வில்லை. இந்தவேளை எனது கணவர் எனது வீட்டில் இருக்க வில்லை. அவர் புளியம்பொக் கணைக்குச்சென்று விட்டார். சிங்கள இராணுவத்தினர் எனது வீட்டைத் தீமூட்டி எரித்தார்கள். இவற்றைக் கேள்விப்பட்ட கணவர் ஊருக்கு வந்தார். அக்கால கட்டத்தில் முல்லைத்தீவு நகரில் முகாம மைத்திருந்த சிங்கள இராணுவச் சிப்பாயகள் தான் எங்கள் வீட்டைக் கொளுத்தினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதோடு, எனது தம்பியையும் அவர்கள் இழுத்துச் சென்றமையால் அங்கு போய் எனது தம்பியைப் பற்றி விசாரித்தேன். அதற்கு அவர்கள் தாம் எங்களுடைய ஊருக்கு வர வில்லை என்றும் இதுபற்றித் தமக்கு எதுவும் தெரியாது என்றும் மறுத்து விட்டார்கள். இதன் பின்னர் நான் சிறீலங்காச் சிப்பாய்கள் எனது தம்பியைக் கொன்றிருப்பார்கள் என்று எண்ணிக் காட்டுப் பக்கங்களில் அவரைத்தேடினேன். இச்சம்பவம் இடம் பெற்று ஆறாம் நாள் தான் எனது தம்பியின் இறந்த உடலைக் காட்டுப் பக்கம் கண்டேன். அவரது உடலில் பலத்த கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன. கைகள் பின்னுக்குக் கட்டப்பட்டிருந்தன. இறந்த அவரது உடல் நன்றாகப் பழுதாகிப் போயிருந்தது. அதனால் அதனை அந்த இடத்தியேயே எரித்த விட்டோம். எனது தம்பியைப் பலவந்தமாக உலங்குவானூர்தியில் ஏற்றிய சிங்களப் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மேலே எழும்பியபோது அதிலிருந்து தள்ளிவிட்டதாகப் பார்த்தவர்கள் சொன்னார்கள். இப்போது நான் கூலிவேலை செய்து எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றேன்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த இன்னொரு பெண்ணின் சாட்சியம் "இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற நாள் அன்று பிரமந்தனாற்றுக் கிராமத்தில் வாழ்ந்த திருமதி குலஅரியேஸ்வரி (வயது 46) இப்படுகொலைப் பற்றிப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

"இப்படுகொலைத் நாள் அன்று ஐந்து உலங்குவானூர்திகள் வானத்தில் வட்டமிட்டதைப் பார்த்தேன். விமானங்களும் வானத்தில் சுற்றிச் சுழன்றடித்து வட்டமிட்டுக் கொண்டன. சிறீலங்கா இராணுவச் சிப்பாய்கள் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். நாங்கள் எல்லோருமாகக் காட்டுக்குள் ஓடிவிட்டோம். காட்டுக்குள் தரையிறக்கப்பட்ட இராணுவம் வீடுகளை எரித்துக் கொண்டே வந்தது. தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை யைச் சேர்ந்த டிஸ்கோ என்பவர் முகத்தில் பெயின்ரைப் பூசிக் கொண்டு உருமறைப்புச் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டு சிங்கள இராணுவத்திற்கு வழிகாட்டிக்கொண்டு சென்றதைக் கண்டேன். டிஸ்கோவால் காட்டிக் கொடுக்கப்பட்ட தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவர் பிடிபட்டார். ஆனால் இவர் தந்திரோபாயமாக தப்பிக்கொண்டார். இவர் இராணு வப்பயிற்சி பெற்றிருந்த ஒருவரென் பதை நான் அறிவேன். எனது வீட்டுக்கு அருகில் சிறீலங்கா சிப்பாய்கள் அப்பன் என்பரையும், ஆனந் தராசா என்பவரையும் வாழை மரத்தோடு கட்டி வைத்து அவர்களது நெற்றியில் சுட்டப் படுகொலை செய்தார்கள்."

மேலே கூறப்பட்ட 02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரும் சிறீலங்கா விமானப் படையினரும் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த அனைவரும் இருபதிற்கும முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர்.

மேலதிகத் தகவல்கள்

பிரித்தானிய கே.எம்.எஸ் (கினிமின இராணுவப் பிரிவைச் சேர்ந்த Tim Smith என்பவர் சிறீலங்கா இராணுவத்திற்கு சிறீலங்காவில் தங்கியிருந்து கே. எம். எஸ் (கினிமினி சேவிஸ்) இராணுவ பிரிவின் சார்பாகப் பயிற்சி கொடுத்தார். பயிற்சி கொடுத்ததோடு, அவர்களோடு இணைந்து பல சந்தர்ப்பங்களில் விமானத்தாக்குதல்களுக்கு விமானியாகவும், Tim Smith கடமையாற்றியுள்ளார். இலங்கையில் கடமையாற்றிய பின் தனது சொந்த நாடான பிரித்தானியாவுக்குச் சென்ற இவர் சிறீலங்காவில் தனது பணிகள் பற்றி ஒரு நூலை எழுதியுள்ளார். "The Reluctant Meunary" (The Recollection of a British Ex Army Helicopter Pilot in the anti Terrorist War in Sri Lanka) என்ற அந்த நூலில் அறுபத்தோராம் பக்கத்தில் புதுக்குடியிருப்பு புறச்சூழலில் (பிரமந்தனாறு) சிறீலங்காப் படைகளைத் தான் தரையிறக்கும் போது தனது அனுபவத்தினை எழுதியுள்ளார். இலங்கையின் தரைப்படையும், விமானப்படையும் கூட்டாகத் தரையிறக்கப்பட்ட படை நடவடிக்கைக்கு Flight Lieutant (முதலாவது லெப்றொகான் குணதிலகா தலைமை தாங்கியதாகவும், அவர் எவ்வேளையிலும் எத்தகைய முடிவையும் எடுக்க முடியாமல் தடுமாறியதாகவும் (He is always undecided) குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த நூலில் சிறீலங்காப் படைகளைப் பற்றி விபரிக்கும் போது "சிறீலங்கா இராணுவம் ஒழுக்கம் கெட்ட இராணுவமாகவே இருந்தது என்றும் இவர்களைக் களத்தில் இறக்கிவிட்டால் அவர்கள் கொலைப் பொறி போல (Killing Machinery) செயல்படுவர்" என்றும் கூறியுள்ளார்.

றொகான் குணத்திலக

சிறீலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி ஏயா மார்சல் ரி. குணதிலகாவின் மகன் தான் இந்த றொகான் குணதிலக (Flight Lieutant) ஆவார். இவர் தனது தந்தையாரின் செல்வாக்கால் விமானப் படையினுள் நுழைந்து மிகக் குறுகிய காலத்தில் ஒரு இடைநிலை அதிகாரியானார். இவரே பிரமந்தனாற்றுப் படுகொலைக்குப் பொறுப்பாக அன்றைய நாள் இருந்தார்.

02.10.1985 அன்று பிரமந்தனாற்றுப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்

1. ஸ்லீபன்ராஜாஸ் சத்தியசீலன் (26)
2. நாகப்பன் சத்தியலிங்கம் (21)
3. கந்தசாமி தர்மசிங்கம் (23)
4. கிட்டிணர் சிவபாதசுந்தரம் (33)
5. கறுப்பையா தர்மலிங்கம் (23)
6. கறுப்பையா செல்வராசா (24)
7. பொன்னுத்துரை பாக்கியநாதன் (21)
8. சுப்பையா அருணாச்சலம் (29)
9. சின்னையா சவுந்தரராசன் (24)
10. வன்சநாதகே பியதிலகே காமினி (26)
11. வல்லிபுரம் கணேசமூர்த்தி (30)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

அடம்பன் படுகொலை 12.10.1986

திருமலை மூதூரில் 18.07.1986 அன்று அதிகாலை 3:00 மணியளவில் மணற்சேனை, பெருவெளி எனும் கிராமங்களை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணு வத்தினர் இங்கு நாற்பத்து நான்கு பொதுமக்களைக் கைது செய்து கொண்டுசென்று சுட்டுப் படுகொலை செய்தனர். இதில் அனைவரும் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மேன்காமம், கங்குவெளி, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவத்தின் அச்சுறுத்தல், படுகொலை சம்பவம் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புத் தேடி அகதிகளாக வந்தவர்களாவர்.

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்குப் பிரதேசசெயலர் பிரிவில் அடம்பன் கிராமம் அமைந்துள்ள விவசாயக் கிராமமாகும். கிராமத்தில் வசித்து வருகின்ற மக்கள் கடந்த இருபது ஆண்டகளுக்கு மேலாக கிராமத்திற்கு அருகேயமைந்துள்ள தள்ளாடி சிங்கள இராணுவ முகாமினால் பலசொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்த வருகின்றனர்.

12.10.1986 அன்று அதிகாலை 4:00 மணிக்கு தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து பறப்பட்ட இராணுவத்தினர் மாளிகைத்திடல் கிராமத்தினூடாக வந்து அடம்பன் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். பின்னர் அடம்பன் கிராமத்தில் வீடுகளில் உறங்கிகொண்டிருந்த மக்களைச் சுட்டப் படுகொலை செய்தது டன், அடம்பன் சந்தியிலுள்ள கடைகளையும் எரித்தனர். அதிகாலை 5:00 மணிக்கு கிராமத்தினுள் நுழைந்த இராணுவத்தினர் மு.ப. 11 மணிவரை அடம்பன் கிராமத்தில் தாக்குதலை நடாத்திவிட்டு இறந்தவர்களின் சடலங்களை வீதிகளிலும் வயல்களிலும் வீசிவிட்டு இராணுவ வாகனங்களில் தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இச்சம்பவத்தில் இருபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பல வியாபார நிலையங்கள், கடைகள் என்பனவும் எரிக்கப்பட்டன.

கதிரன் சௌந்தரராஜன்

“1986 ஆம் ஆண்டு தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளிக்கிட்டு வந்த இராணுவத்தினர் திருக்கேதீசுவரம் வந்து அதன் வழியாக மாளிகைத்திடல் வந்து அதனூடாக தாமரைக்குளம் வரை வந்து தியாகு மற்றும் கோபாலு என்று குடும்பஸ்தர்கள் இருவரையும் சுட்டுக் கிணற்றுக்குள் போட்டனர். பின்னர் அங்கிருந்து அடம்பன் வந்த இராணுவத்தினர் அக்கிராமத்தைச் சேர்ந்த நோபோட் என்ற பத்தொன்பது வயதுடைய ஒருவரையும் சீலன் என்ற பதினாறு வயது இளைஞனையும் பசுமை என்பவரையும் சுட்டக் கொன்றார்கள். அந்தவேளை அடம்பன் கடை வீதிவழியால் வந்த இராணுவத்தினர் முத்துவேல் என்ற இளைஞனையும் அந்தோனிச்சாமி என்ற இளம் குடும்பஸ்தரையும் சிறி என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் வாழ் நெல் வியாபாரியையும் பிடித்தச் சென்று நெடுங்கண்டல் கோயிலடியில் சுட்டுப் போட்டனர். அதன் பின்னர் அவ் வீதி வழியால் வந்த இராணுவத்தினர் 22 வயதுடைய மனோகரன் என்பவரையும் பத்தென்பது வயது ஜெகதீஸ்வரன் என்பவரையும் மாந்தையைச் சேர்ந்த நெல்லுக்கடை உரிமையாளரான உதயன் என்பவரையும் உலக்கையால் அடித்து சாகாத நிலையில் அடம்பன் கடற்கரையிற் போட்டுச் சுட்டிருந்தார்கள். இவ்வாறு சுடப்பட்ட அனைவரினதும் கழுத்துகளில் நஞ்சைக் கட்டி உழவு இயந்திரத்தில் ஏற்றி உள்ளித் தாழ்வுப் பகுதியால் தள்ளாடி முகாமிற்கு ஏற்றிச் சென்றார்கள். பின்னர்

சடலங்கள் அனைத்தும் அடையாளங்காண முடியாத நிலையில் இருந்ததால் யாரும் சடலங்களை கையேற்க முன்வராத நிலையில் இராணுவத்தினரே ரயர்களைப் போட்டு எரித்தார்கள். இந்தச் சம்பவத்தில் பதினாறு பேர் வரை இறந்திருந்தார்கள். இச்சம் பவத்தின் போது எந்தவித வயது வேறுபாடின்றி ஆறுபது வயது முதியவர்களிலிருந்து இருபது வயது இளைஞர்கள் வரை சுட்டுக் கொல்லப்பட்டார்கள். தள்ளாடியிலும், உயிலங்குளத்திலும் இராணுவ முகாம்கள் இருப்பதால், இராணுவத்தினரின் தாக்குதல் நேரங்களில் வேறு பகுதிகளிற்குப் போகமுடியாத நிலை ஏற்படும். அப்படி வெளியேறினால் காயப்படவோ அல்லது இறக்கவோ நேரிடும். இதேபோன்று தான் ஆண்டான்குள மக்களுக்கும் பாதிப்புக்கள் இருக்கிறது. இந்தத் தள்ளாடி இராணுவ முகாமால் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தள்ளாடி முகாமிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திலிருக்கின்ற நாங்களாகத்தான் இருக்கிறது. பெரும்பாலும் எறிகணைத் தாக்குதலையும் உலங்குவானூர்த்தித் தாக்குதலையும் இம்முகாம் இராணுவத்தினர் மேற்கொள்வார்கள்.”

12.10.1986 அடம்பன் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. யூலியன் யெஜசீலன் (22)
2. கிறிஸ்தோடு யோவான் (65)
3. ஐயம்பிள்ளை நாகமுத்து (84)
4. தங்கவேல் ராமன் (-)
5. மாமுண்டி செல்வராஸ் (14)
6. அந்தோனி செல்வராஸ் (63)
7. அந்தோனிப்பிள்ளை மெசியாஸ் (28)

பெரியபண்டிவிரிச்சான் படுகொலை 15.10.1986

மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேசசெயலர் பிரிவில் பெரியபண்டிவிரிச்சான் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தைச் சேர்ந்த இராசநாயகம் என்பவர் வழமை போல 15.10.1986 அன்று தோட்டத்தில் வேலை செய்து கொணடிருந்தார். பாடசாலை சென்று திரும்பிய அவரது இரு பெண் பிள்ளைகளும் மதிய உணவை முடித்துக் கொண்டு தோட்டத்தில் நின்ற தந்தைக்கு உணவு கொண்டு வந்தார்கள். தந்தையும் அயற் தோட்டத்தில் காவல்காக்கும் எழுபத்திரண்டு வயதான ஜோசப் பிரான்சிஸ் உட்பட நான்கு பேரும் தோட்டக்குடிசையில் அமர்ந்திருந்தார்கள்.

இந்த வேளையில் பெரியபண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியால் வந்த சிறீலங்கா இராணுவத்தினர் தோட்டப்பகுதியை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் தோட்டக் குடிசைப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் இராசநாயகத்தைப் பலமாகத்தாக்கினர். பின்னர் இராச நாயகத்தின் மகளான சிறுமியின் பெண்ணுடல், மார்பு என்பவற்றை வெட்டிச் சித்திரவதை செய்ததுடன், ஜோசப் பிரான்சிஸ் அவர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதில் இராசநாயகமும் ஒரு பெண் பிள்ளையும் காயங்களுடன் தப்பிவிட்டனர். இராசநாயகத்தின் படுகோரமாக சித்திரவதை செய்யப்பட்ட மகள் மடு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழுந்தார். ஜோசப் பிரான்சிஸ் அதே இடத்தில் உயிரிழந்தார். சிறுமியின் உடல் மடு சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. ஜோசப் பிரான்சிஸின் உடல் சம்பவ இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சான் படுகொலை யில் கொல்லப்பட்டோர் விபரம்

1. இராசநாயகம் மரிய எனஸ்ரின் (11)
2. ஜோசப் பிரான்சிஸ் (72)

15.10.1986 அன்று பெரிய பண்டிவிரிச்சானில் காயமடைந்தவர்களின் விபரம்

1. இராசநாயகம் (-)
2. இராசநாயகம் மரியராணி (மாணவி)

எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.

புதுக்காட்டுச்சந்திப்படுகொலை 11.10.1987

கிளிநொச்சி மாவட்டத்தின் வட பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் ஏ-9 நெடுஞ் சாலையில் சோரன்பற்று புதுக்காட டச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தி யானது மருதங்கேணி, பளை, கிளிநொச்சி என்பவற்றை இணைக் கும் முச்சந்தியாக உள்ளது. இச்சந்தி யைச் சுற்றி சோரன்பற்று, கரந்தாய் போன்ற கிராமங்கள் அமைந் துள்ளன. மேலும் தாளையடி, மருதங்கேணிப் பகுதிக்கான பிரதான வீதி இச்சதந்தியிலிருந்து ஆரம்பிப்பதால் இச்சந்தியில் போக்கு வரத்துக்காகப் பொதுமக்கள் அதிகள வில் கூடுகினற இடமாகும்.

11.10.1987 அன்று ஞாயிற்றுக் கிழமை 3:30 மணியளவில் ஆனையிறவு இந்திய இராணுவ முகாமிலிருந்து யாழ். நோக்கி வாகனத்தொடரணி, கவசவாகனங் கள் சகிதம் வந்த இந்தியப் படை யினர் புதுக்காட்டுச் சந்திப் பகுதியில் திடீரென வாகனங்களிலிருந்து இறங்கி அப்பகுதியில் கடைகளில் பொருட்களை வாங்குவதற்காக வும், பிரயாணத்திற் காகவும் நின்ற பொதுமக்கள் மீது நடத்திய துப்பாக் கிச் சூட்டில் எட்டுப் போர் உயிரிழந் ததுடன், நான்கு பேர் படுகாய மடைந்தார்கள்.

இந்தச் சம்பவத்தின் போது தன்னுடைய இரண்டு பிள்ளை களை இழந்தவரும் சந்தியில் கடை வைத்திருந்தவருமான இளையதம்பி பேரம்பலம் பின்வருமாறு கூறினார்.

“வாகனங்களில் வந்த இந்திய அரச படையினர் திடீரென இறங்கி பஸ் தரிப்பு நிலையத்திற் காத்து நின்ற மக்கள்மீதும் கடைகளில் நின்ற வர்கள் மீதும் துப்பாக்கிப் பிர யோகத்தை நடத்தினார்கள். அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் கடையில் எனது மூத்த மகனும் இளையமகளும் நின் றனர். அத்துட்ன ஊழியர் ஒருவரும் நின்றார். இவர்கள் மூவரையும் இராணுவம் கடையுடன் சேர்த்து எரித்தது. இவர்களின் உடல்கள் எரிந்த நிலையில் பின்னர் என்னால் மீட்கப்பட்டது. இந்தச் சந்தியிலிருந்த நான்கு கடைகளும் டாங்கிகளால் இடிக்கப்பட்டன. அத்துடன் சந்தியில் நின்ற காரும் எரிக்கப்பட்டது.” என தன்னுடைய சோகக்கதையைக் கூறினார்.

11.10.1987 அன்று புதுக்காட்டுச் சந்திப்படுகொலையில் கொல் லப்பட்டோர் விபரம்

1. கனகரத்தினம் (35)
2. குழந்தைவேலு செல்வ ராசா (22)
3. பொன்னையா நவரத் தினம் (34)
4. பொன்னையா சுப்ர மணியம் (40)
5. பேரம்பலம் மகேஸ்வரன் (10)
6. பேரம்பலம் கோகிலா தேவி (14)
7. வேலாயுதம் செந்தில் நாதன் (14)
8. சின்னத்தம்பி பசுபதிப் பிள்ளை (41)

காயமடைந்தவர்களின் விபரம்

1. கணபதிப்பிள்ளை கேதீஸ் வரன் (14)
2. சுப்பிரமணியம் ஏகாம் பரம் (45)
3. சின்னக்குட்டி சிவரூபன் (16)
4. ஆறுமுகம் பாலசிங்கம் (30)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

கொக்குவில், பிரம்படி, பொற்பதி வீதிப் படுகொலை 10.10.1987

கொக்குவிற் கிராமம் யாழ் மாவட் டத்தில் நல்லூர்ப் பிரதேச எல்லைக் குள் அமைந்துள்ளது. பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடம் அமைந் துள்ள இடத்திலிருந்து மேற்குப் புறமாக ஏறக்குறைய ஐநூறு யார் தூரத்தில் கொக்குவில் பிரம்படி வீதி உள்ளது.

இந்திய இராணுவத்தினர் 1987ஆம் ஆண்டு பத்தாம் மாதம் பன்னிரண் டாம் திகதி பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கிய தொடருந்து நிலைய வீதியூடாகக் கனரக வாகனங்கள் மூலம் முன்னேறி கொக்குவில் பிரம்படிப் பகுதியினைச் சுற்றிவளைதத்து. பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று அங்கிருந்த பெண்கள், குழந்தைகள், வயோ திபர்கள், இளைஞர்கள் என யாவரையும் வீதிகளுக்கு அழைத்து வந்து சுட்டதில் நாற்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந் தார்கள். அன்றையதினம் வேறு ஒரு பகுதியூடாக வந்த இந்திய இராணுவத்தின் மற்றுமொரு அணி யினர், கொக்குவில் பொற்பதிப் பகுதி யைச் சுற்றிவளைத்து மக்களைக் கைதுசெய்து கொக்குவில் பிள் ளையார் ஆலயத்துக்கு வடக்காக நானூறு யார் தூரத்தில் அமைந் துள்ள சனசமூக நிலையத்தின் அருகே வீதியோரத்தில் அனை வரையும் உயிருடன் நிலத்தில் படுக்க வைத்து இராணுவத்தின் கவச வாகனங்கள், டாங்கிகளை அவர்கள் மீது ஏற்றிப் படுகொலை செய்தனர். இதில் அறுபத்துநான்கு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். 1987 ஒக்டோபர் பன்னிரண்டாம் திகதி பிரம்படிப் பகுதி, கொக்குவில் பொற்பதிப் பகுதி ஆகிய இடங்களில் நடந்த சம்பவத்தில் நூறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந் தார்கள்.

பொற்பதி வீதியைச் சேர்ந்த 87 வய தான தட்சணாமூர்த்தி சிவராஜ லிங்கம் தன்னுடைய வாக்குமூலத் தில் பின்வருமாறு கூறுகின்றார்,

“சுகாதாரப் பரிசோதகரான என் னுடைய சகோதரன் தட்சனா மூர்த்தி தவராஜலிங்கம், வயது 44, அவருடைய மனைவி தவராஜ லிங்கம் கனகமலர், வயது 38, பிள்ளைகளான தவராஜலிங்கம் கரன், வயது 10, தவராஜலிங்கம் கஜேந்திரன், வயது 6, 18 மாதங் களே நிரம்பிய தவராஜலிங்கம் தர்மிகா ஆகியோர் கொக்குவில் பிரம்படி வீதியிலுள்ள இல 24 வீட்டில் வாழ்ந்துகொண்டிருந் தார்கள். என்னுடைய இன்னெரு மருமகனான 11 வயதான ஹர்சனும் அவர்களுடன்தான் இருந்தார். அன்றைய தினம் என்னுடைய சகோதரனின் வீட்டுப் பகுதியில் கடுமையான துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அடுத்தநாள் காலை 7 மணிக்குத்தான் அவ்வீட்டுக்கு என்னால் போக முடிந்தது. அங்கே, என்னுடைய சகோதரன், அவரின் மனைவி, பஞ்சிளம் பெண் குழந்தை ஆகியோரின் சடலங்கள் வீட்டிற்குள் இருந்தன. வேறு இரு சடலங்களும் அவ்வளாகத்தில் காணப்பட்டன.

கரன், கஜேந்திரன், ஹர்சன் ஆகிய மூன்று பையன்பளும் இன்னொரு அறையிலிருந்த கட்டிலின் கீழ் ஒளிந்திருந்ததைக் கண்டேன். கஜேந்திரனும் ஹர்சனும் காய மடைந்திருந்ததுடன் குருதி வடிந்து கொண்டும் இருந்தது.”

7 ஆம் வட்டாரம் நயினாதீவைச் சேர்ந்த 47 வயதான நாகலிங்கம் நாகேஸ்வரி தன் வாக்குமூலத்தில்,

“நான் என்னுடைய அண்ணா நாக லிங்கம் ஜீவரட்ணத்தின் குடும்பத் துடன் இல 24, பிரம்படி வீதி, கொக்குவிலில் வாழ்ந்துகொண் டிருந்தேன். சில வருடங்களுக்கு முன்னர்தான் என் பெற்றோர் மரணமடைந்திருந்தார்கள். அவ் வீட்டில், அண்ணாவும், பிள் ளைகளான கோகிலாவும் மனோ கரனும், என்னுடைய சகோதரிக ளான ஆனந்தகௌரி, சாரதா தேவியும் ஒன்றாக வசித்தோம். அன்றைய தினம் காலை ஒரு மணியிலிருந்து, துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்தால் எமது உறக்கம் கலைந் துபோயிருந்தது. காலை 5.30 அளவில், இந்தியப் படையினர் எமது வீட்டு வளவுக்குள் நுழைந்து எம்மை வெளியில் வருமாறு சொன் னார்கள். படைவீரர்கள் எமது வீட்டு வளாகத்தில் நின்றுகொண்டிருந்த நேரத்தில் எறிகணைகள் அருகில் விழுந்து வெடித்தது. பின்னர், குண் டுப் பயத்தினால் பயமடைந்தோ என்னமோ, அவர்கள் தங்கள் சுடுகலன்களை எம்மை நோக்கித் திருப்பினார்கள். என்னுடைய அண்ணாவும் ஆறே வயது நிரம் பிய அவரது மகன் மனோகரனும் அவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். என்னுடைய இரு சகோ தரிகளும், ஏழு வயதான மருமகள் கௌசலாவும் அவர்களின் துப்பாக் சிச் சன்னங்களுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். பின்னர் அவர் கள் யாழ்ப்பாண வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டார்கள்.”

திருகோணமலை மாவட்டம் மூதூர் பூமரத்தடிச்சேனைப் படுகொலை 04.10.2000

தென்தமிழீழத்தில் திருமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலகத் தைச் சேர்ந்த பூமரத்தடிசேனைக் கிராமத்தில் 07 அப்பாவித் தமிழ் விவசாயிகள் சிங்கள ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். கடந்த 04.10.2000 அன்று பூமரத்தடிச்சேனைக் கிரா மத்தை சுற்றிவளைத்த சிங்கள ஊர்காவல் படையினரால் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பெண் உட்பட 07 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களின் விபரம் வருமாறு:

1. ந. அருளானந்தம் (17 வயது)
2. சி. நல்லதம்பி (57 வயது)
3. த. கலிராசா (35 வயது)
4. வி. சோமசுந்தரம் (56 வயது)
5. த. கனகரட்ணம் (57 வயது)
6. ச. இராசன் (37 வயது)
7. கிருஸ்ணபிள்ளை தயாஜோதி (32 வயது)

சிறீலங்கா அரச பயங்கரவாதத்தினால் 06.10.1990 அன்று அனலைதீவிலிருந்து தமிழ்நாடு நோக்கி சென்ற அகதிகள் படகு மூழ்கி மக்கள் பலி

06.10.1990 அன்று அனலைதீவில் இருந்து சிறீலங்கா அரச பயங்கரவாதத்தின் போக்குவரத்து தடை காரணமாக அனலைதீவிலிருந்து 78 பேரை ஏற்றிக்கொண்டு தமிழ் நாடு நோக்கிப் பயணித்தவேளை நடுக்கடலில் படகு முழ் கியதால் அதில் பயணம் செய்த மக்களில் 66 போல் பலியாகினர்.

கடலில் மூழ்கி 67 பேர் பலி

படகில் ஓட்டை விழுந்ததால் கடலில் மூழ்கியது

உயிர்தப்பி வந்த இலங்கை அகதிகள் பேட்டி

ஆவுடையார்கோவில், அக். 10–

"படகில் ஓட்டை விழுந்து தண்ணீர் உள்ளே புகுந்து விட்டது. அதனால் படகு மூழ்கி எங்கள் குடும்பத்தாரை இழந்துவிட்டோம்" என்று உயிர் தப்பி வந்த இலங்கை அகதிகள் கூறினார்கள்.

தப்பி வந்த அகதிகள்

இலங்கையில் சிங்கள ராணுவத்தின் கொலைவெறி தாக்குதலுக்கு பயந்து ஊர்க் காவல்துறை, அணலைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து 76 மீனவர்கள் தமிழ்நாட்டுக்கு தப்பி வருவதற்காக ஒரு படகில் வந்தார்கள்.

அவர்களில் 30 பேர் பெண்கள், 16 குழந்தைகள்

அவர்கள் வந்த படகு கடலில் மூழ்கி விட்டதால் அதில் 67 பேர் செத்து விட்டார்கள். 11 பேர் நீந்தி புதுக்கோட்டை மாவட்டத்தில் கரை ஏறினார்கள்.

பேட்டி

இந்த விபத்தில் உயிர் தப்பியவர்களில் சூரியகுமார், கிருஷ்ணமூர்த்தி குருக்கள் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:–

ஓட்டை விழுந்தது

இலங்கை ராணுவத்தின் கொலை வெறி நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. அதற்கு பயந்து நாங்கள் 78 பேரும் ஒரு படகில் ஏறி தமிழ்நாட்டுக்கு தப்பி வர முடிவு செய்தோம்.

அதன்படி ஒரு நபருக்கு ரூ. 1000 வீதம் பேசி படகை ஏற்பாடு செய்து கடந்த 6–ந் தேதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு அணலைத் தீவில் இருந்து புறப்பட்டோம்.

ஏறத்தாழ 1½ மணி நேர பயணத்துக்குப் பிறகு படகில் ஓட்டை விழுந்து விட்டது. அதில் தண்ணீர் புகுந்து படகில் ஏறியது.

சாவு

நாங்கள் அந்த தண்ணீரை வாளியினால் இறைத்து கடலில் ஊற்றினோம்.

படகு இந்திய எல்லைக்குள் வந்து விட்டது. அதன் பிறகு சிறிது தூரம்தான் எங்களால் வர முடிந்தது. மீண்டும் ஓட்டை வழியே தண்ணீர் புகுந்து படகு கடலில் மூழ்கியது.

நாங்கள் 2 பேரும் அரை மைல் தூரம் கடலில் நீந்தினோம். அங்கு சிலர் படகில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தார்கள். அந்த படகை அழைத்து அதில் நாங்கள் 2 பேரும் ஏறிக் கொண்டோம்.

மூழ்கிய படகை தேட அங்கு விரைந்தோம். நாங்கள் இலங்கையில் இருந்து வந்த படகு முழுவதும் மூழ்கி விட்டது.

தப்பியவர்கள்

கடலில் 9 பேர் மட்டுமே தத்தளித்துக் கொண்டிருந்தனர் அவர்களை மட்டும் படகில் சென்று காப்பாற்றினோம். மற்ற 67 பேர் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை.

அதன்பின் எங்களை புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப பட்டினம் அருகில் உள்ள ஆயி பட்டினம் என்ற இடம் அருகே இறக்கி விட்டனர். நாங்கள் அங்கிருந்து நீந்தி கரைக்கு வந்தோம்.

எங்கள் குடும்பத்தினர் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை.

இவ்வாறு சூரியகுமாரும், கிருஷ்ணமூர்த்தி குருக்களும் கூறினார்கள்.

கனகசபை

தப்பி வந்த கனகசபை (63) நிருபரிடம் கூறியதாவது:–

என் மனைவி செல்லம்மாள் [illegible] கள் 3 மகன்கள். அவர்கள் 6 பேரும் கனடா நாட்டில் இருக்கிறார்கள்.

நானும் என் மனைவியும் இலங்கையில் இருந்து உயிர் தப்பி தமிழகத்துக்கு படகில் புறப்பட்டோம். வழியில் படகு மூழ்கியதால் என்னால் மட்டுமே தப்பிக்க முடிந்தது. என் மனைவியை பறிகொடுத்து விட்டேன்"

இவ்வாறு கனகசபை அழுது கொண்டே கூறினார்.

சண்முகநாதன்

உயிர் தப்பி வந்தவர்களில் சண்முகநாதனும் ஒருவர். விவசாயியான அவர் நிருபரிடம் கூறிய போது, என்னுடைய மகள்கள் சாந்தலோசினி (20) வசந்தலோசினி (18), மகன் சிவநாதன் (10), தங்கை நித்தியா நந்தி (20) ஆகியோரும் அந்த படகில் வந்தோம்.

படகு மூழ்கியதால் நானும் என்னுடைய மகன் சிவநாதன் மட்டுமே தப்பினோம். மற்றவர்கள் தண்ணீரில் மூழ்கி விட்டனர் என்று கூறி அழுதார்.

பத்மநாபன்

பத்மநாபன் கூறிய போது, எனக்கு திருமணம் ஆகி 4 வருடம் ஆகிறது. மனைவி புவனேசுவரி. மகள் மதலினி (3). [illegible] (52), [illegible] (10) [illegible] ஈஸ்வரி, அண்ணன் உருத்திரநாதன் (32) ஆகியோரும் படகில் வந்த போது படகு மூழ்கி விட்டது. நான் மட்டுமே உயிர் பிழைத்தேன். மற்ற 7 பேரின் கதி என்ன என்று தெரியவில்லை என்று கதறி அழுதபடி கூறினார்.

குவதாசன்

குவதாசன் நிருபரிடம் கூறியதாவது:–

இலங்கையில் அரசு படகு கம்பெனி ஒன்றில் வேலை பார்த்த என்னை நீக்கி விட்டனர்.

இலங்கை பிரச்சினையில் மனைவி பரமேசுவரி (52), மகள்கள் பிரியதர்சினி (20), பெரியநந்தினி (19) நிவேதிகா (15) சிவபிருந்தா (13), ராதிகா (9) ஆகியோரும் படகில் வந்தோம்.

மகள் பெரிய நந்தினிக்கு மன நிலை சரியில்லை. அவளுக்கு தமிழகத்தில் வைத்தியம் பார்க்க வேண்டும் என்று ஆசையுடன் வந்தேன். படகு மூழ்கியதால் மனைவி மகள்களை பறிகொடுத்து விட்டோம்" என்று கூறி கதறி அழுதார்.

அகதி முகாம்

உயிர் தப்பிய 11 பேரும் கோட்டைப்பட்டினம் அகதி முகாமில் தங்கி உள்ளனர்.

கடலில் மூழ்கி செத்தவர்களின் பிணங்கள் ஏதேனும் கரையில் ஒதுங்குகிறதா என்பதை கடற்கரை ரோடு இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணன் பார்வையிட்டு வருகிறார்.

06.10.1990இல் அனலைதீவிலிருந்து அகதிகளாக 78 பேர் இந்திய மீன்படிப் கடகொன்றில் ஏறி கடல் மார்க்கமாக இந்தியாவை நோக்கிச் சென்ற வேளை, படகு நடுக்கடலில் கவிழ்ந்து நீரில் மூழ்கியதனால், அதில் சென்றவர்களின்78 பேர் உயிர் நீத்தனர், 13 பேர் நீந்தி உயிர் தப்பினர்; இவர்களில் 2 பேர் படகோட்டிகள்.

06.10.1990 அன்றைய நாள் கடலில் உயிர்நீத்த உறவு களின் விபரம்:–

1. திருமதி. குகதாசன் பரமேஸ்வரி 45, வட்டாரம் 2 , அனலைதீவு
2. செல்வி. குகதாசன் பிரியதர்சினி(பூரணி) 22, வட்டாரம் 2, அனலைதீவு
3. 3. செல்வி.குகதாசன் பிரியனந்தினி 20, வட்டாரம் 2, அனலைதீவு
4. செல்வி. குகதாசன் நிவேதிகா 18, வட்டாரம் 2, அனலைதீவு
5. செல்வி. குகதாசன் சிவப்பிருந்தா 16, வட்டாரம் 2, அனலைதீவு
6. செல்வி. குகதாசன் இராதிகா 14, வட்டாரம் 2, அனலைதீவு
7. திரு. கணேசையர் கோபாலகிருஷ்ணன் குருக்கள் 48, வட்டாரம் 3, அனலைதீவு
8. திருமதி. கோபாலகிருஷ்ணன் வாலாம்பிகாதேவி 40, வட்டாரம் 3, அனலைதீவு
9. செல்வன். கோபாலகிருஷ்ணன் ரமேஷ் 20, வட்டாரம் 3, அனலைதீவு
10. செல்வன். கோபாலகிருஷ்ணன் ராஜேஷ் 18, வட்டாரம் 3, அனலைதீவு
11. செல்வி. கோபாலகிருஷ்ணன் சித்திரா 17, வட்டாரம் 3, அனலைதீவு
12. செல்வன். கோபாலகிருஷ்ணன் ஜெகதீஷ் 15, வட்டாரம் 3, அனலைதீவு
13. திருமதி. சண்முகம் சின்னாச்சி 55, வட்டாரம் 3, அனலைதீவு
14. செல்வி. திருநாவுக்கரசு சசிகலா 18, வட்டாரம் 3, அனலைதீவு
15. செல்வன். திருநாவுக்கரசு சசிகரன் 16, வட்டாரம் 3, அனலைதீவு
16. திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை 70, வட்டாரம் 3, அனலைதீவு
17. திருமதி. கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து 60, வட்டாரம் 3, அனலைதீவு
18. செல்வி. கணபதிப்பிள்ளை உருத்திராதேவி 27, வட்டாரம் 3, அனலைதீவு
19. செல்வி. கணபதிப்பிள்ளை கௌரி 20, வட்டாரம் 3, அனலைதீவு
20. செல்வி. சண்முகநாதன் சந்தலோயினி 21, வட்டாரம் 3, அனலைதீவு
21. செல்வி. சண்முகநாதன் வசந்தலோயினி 19, வட்டாரம் 3, அனலைதீவு
22. செல்வி. தம்பையா சத்தியானந்தி 22, வட்டாரம் 3, அனலைதீவு
23. பொன்னம்பலம் இந்திரநாதன் 34, வட்டாரம் 3, அனலைதீவு
24. செல்வன். இந்திரநாதன் சுஜாகரன் 08, வட்டாரம் 3, அனலைதீவு
25. திருமதி. குமாரசாமி ஈஸ்வரி (சின்னம்மா) 59, வட்டாரம் 4, அனலைதீவு
26. திரு. சிவராசா உருத்திரநாதன் 36, வட்டாரம் 4, அனலைதீவு
27. திருமதி. உருத்திரநாதன் சற்குணம் 30, வட்டாரம் 4, அனலைதீவு
28. செல்வன். உருத்திரநாதன் மோகனதாஸ் 1.5 , வட்டாரம் 4, அனலைதீவு
29. திருமதி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் சாவித்திரி 27, வட்டாரம் 4, அனலைதீவு
30. செல்வி. கிருஷ்ணமூர்த்தி அரிகரப்பிரியா (பிரியா) 12, வட்டாரம் 4, அனலைதீவு
31. செல்வி. கிருஷ்ணமூர்த்தி சிவப்பிரியா 09, வட்டாரம் 4, அனலைதீவு
32. செல்வி. கிருஷ்ணமூர்த்தி ஜனனி 08, வட்டாரம் 4, அனலைதீவு
33. திருமதி. குமாரசாமி கனகலெட்சுமி (மணி) 45, வட்டாரம் 5, அனலைதீவு
34. திருமதி. விக்னேஸ்வரன் சூரியவதனி 20, வட்டாரம் 5, அனலைதீவு
35. செல்வி. விக்னேஸ்வரன் ஜீவிதா 10 மாதம், வட்டாரம் 5, அனலைதீவு
36. செல்வி. குமாரசாமி மலர்வதனி 16, வட்டாரம் 5, அனலைதீவு
37. செல்வன். குமாரசாமி அரிகரகுமாரன் 12, வட்டாரம் 5, அனலைதீவு
38. திருமதி. செல்லத்துரை கமலாம்பிகை (சின்னம்மா) 52, வட்டாரம் 5, அனலைதீவு
39. செல்வி. சதாசிவம் யோகேஸ்வரி (சுரபி) 15, வட்டாரம் 5, அனலைதீவு
40. திருமதி. பத்மநாதன் பவனேஸ்வரி (கீதா) 20, வட்டாரம் 5, அனலைதீவு
41. செல்வி. பத்மநாதன் மகிழினி 03, வட்டாரம் 5, அனலைதீவு
42. திருமதி. சபாபதி அன்னலட்சுமி (அன்னம்) 51, வட்டாரம் 5, அனலைதீவு
43. திருமதி. கனகசபை செல்லம்மா 50, வட்டாரம் 5, அனலைதீவு
44. செல்வன். க. கந்தசாமி விக்னேஸ்வரன் (அப்பன்) 15, வட்டாரம் 5, அனலைதீவு
45. செல்வன். கு. கந்தசாமி அரிகரன் (கரன்) 14, வட்டாரம் 5, அனலைதீவு
46. திரு. சந்தியான் அந்தோனி 26, வட்டாரம் 5, அனலைதீவு
47. திரு. வயிரவநாதன் தில்லையம்பலம் 56, வட்டாரம் 6, அனலைதீவு
48. திருமதி. தில்லையம்பலம் திருப்பதி 53, வட்டாரம் 6, அனலைதீவு
49. செல்வி. தில்லையம்பலம் சிவசோதி (ராணி) 21, வட்டாரம் 6, அனலைதீவு
50. செல்வன். தில்லையம்பலம் சிவகுமார் (குமார்) 14, வட்டாரம் 6, அனலைதீவு
51. செல்வி. தில்லையம்பலம் வசந்தா 11, வட்டாரம் 6, அனலைதீவு
52. திரு. இந்திரநாதன் சுஜீதா 22, வட்டாரம் 6, அனலைதீவு
53. திரு. இந்திரநாதன் சுஜீகரன் 32, வட்டாரம் 6, அனலைதீவு
54. திரு. பொன்னம்பலம் பொன்னுச்சாமி 64, புளியங்கூடல்
55. திருமதி. பொன்னுச்சாமி அன்னலெட்சுமி 60, புளியங்கூடல்
56. பொன்னுச்சாமி சிவநாதன் 35, புளியங்கூடல்
57. பொன்னுச்சாமி கணநாதன் 29, புளியங்கூடல்
58. திரு. நாகராசா குகதாசன் 17, புளியங்கூடல்
59. திருமதி. கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் 60, வட்டாரம் 2, எழுவைதீவு
60. செல்வி. கிருஷ்ணபிள்ளை சுந்தரேஸ்வரி 14, வட்டாரம் 2, எழுவைதீவு
61. திருமதி. நடராசா இராசாம்பாள் 24, வட்டாரம் 2, எழுவைதீவு
62. செல்வி. நடராசா வாணி 1.5, வட்டாரம் 2, எழுவைதீவு
63. வே. அன்னலிங்கம் 70, மண்டைதீவு
64. திருமதி. அன்னலிங்கம் 55, மண்டைதீவு
65. செல்வி. அன்னலிங்கம் வசந்தா 30, மண்டைதீவு
66. தேவன் 24, கரம்பொன்

ஏறாவூர் படுகொலை 10.10.1990

தங்கராசு ஐயனார் சொல்கிறார்:

“கைதாகி காரத்தீவு சண்முகா பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது மகனை பார்ப்பதற்கு. 10ஆம் தேதி அக்டோார் மாதம், 1990இல் சுமார் 10 மணிக்கு மருத்துவர் சண்முகநாதன், அவருடைய மனைவி ராணி ஆகியோரை அழைத்து சென்றேன். நகரில் நின்றோரை எல்லாம் தடுத்து நிறுத்தி விட்டு சென்றார்கள். சிறது நேரத்தில் திரும்ப வந்து இஸ்லாமியர்களையும், தமிழர்களையும் தனித் தனியே பிரிந்திருக்க சொன்னார்கள். பின்னர் இஸ்லாமியர்களை எல்லாம் அங்கிருந்து சென்று விட்டனர்.

ஆண்களை ஒரு பக்கத்துக்கு அழைத்தார்கள். என்ன நடக்கப் போகிறது என்று எல்லோரும் எண்ணிக்கொண்டு இருந்தோம். அங்கு உள்ள ஒரு அறையினுள் எங்களை செல்லச் சொன்னார்கள். எங்களுக்கு பயமாக இருந்தது. இப்போது மருத்துவரின் மனைவி அந்த அறையினுள் சென்று, மருத்துவரை ஒன்று துன்புறுத்த வேண்டாம் என இராணுவத்தினரைப் பாரர்த்து கெஞ்சினார். ஆனால், இராணுவத்தினர் மருத்துவரின் மனைவியை தூரே இழுத்துச் சென்று வெளியே வீசி விட்டு வந்தனர். அப்பொழுது அங்கு ஒரு மனிதர் கத்தியை பிடித்து கொண்டு நின்றிருக்கிறார். இது எனக்கு அப்பொழுது தெரியாது. தீடீரென என்னுடைய தலையில் உள்ள மயிரை பிடித்தார். எனது தலையில் எண்ணெய் தடவியிருந்ததால், அவரின் பிடி நழுவியது. என்னுடைய தலையை வெட்டிவிட ஓங்கிய கத்தி, எண்ணெய் வழுக்கி கை நழுவியதால் எனது கழுத்தில் விழுந்தது. நான் தரையில் விழுந்தேன். நான் படுகாயமுற்றதால் இறந்து விடுவென் என நினைத்தேன்.

மருத்துவர் சண்முகநாதனும், சிலரும் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டிருந்தனர். நான் கீழே விழுத்திருந்த நேரத்தில். கொல்லப்பட்டவர்களின் அலறல் ஒலி கேட்க முடிந்தது. அந்த சப்தத்தை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆனால், எனக்கு வேறு வழி தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து பெரிதாய் சத்தமிட்டுக் கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் இழுத்து வரப்பட்டார். அவரின் மேலிருக்கும் சேலையை களையப்பட்டிருந்தது. சிங்கள இராணுவ சிப்பாய் ஒருவன் அப்பெண்ணை வேறு அறைக்கு இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத் தினான். தன்னை விடச் சொல்லியும் அங்கு நடப்பதை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்றும் அப்பெண் கெஞ்சினார். ஆனால், மற்றொரு இராணுவ சிப்பாய் அப் பெண்ணின் தலையை வெட்டச் சொல்லி கட்டளையிட்டான். பின்னர் என் நிகழ்ந்திருக்கும் என எனக்கு தெரியவில்லை. ஆனால், கூச்சல் அடங்கி அமைதியானது. இராணுவத்தினர் அங்கிருந்து அகன்று சென்று விட்டனர்.

என்னால் அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. மனித வதைக்குள்ளான மக்களின் ஓலம் கேட்டுக் கொண்டே இருந்தது. என்ன செய்வது என்று நான் யோசனையில் இருந்தேன். அப்பொழுது இராணுவத்தினர் திரும்பவும் வந்து. ஓலமிடுவோரையும், மூச்சு விட்டுக் கொண்டிருந்தோரையும் தேடி, கத்தியால் குத்தி எந்தவொரு சப்தம் வராதவாறு பார்த்து கொண்டனர்.

பின்னர், அவர்கள் எண்ணெயோ அல்லது மண்ணெண்ணெயையோ அங்கு கிடந்தவர்கள் மீது ஊற்றி எரியூட்டினர். தீ என்னுடைய கால்களுக்கும் பாய்ந்தது. நான் அணைக்க முற்பட்டேன். ஆனால், முடியவில்லை. என்னால் எழுந்து நிற்கவோ, என்னுடைய கால்களை தூக்கவோ முடியவில்லை. என்னுடைய கைகளினால் என் தலையை உயர்த்தி பின்னர் தவழ்ந்து கொண்டே, அந்த பெண்ணை கொண்டு சென்ற அறைக்குள் தவழ்ந்து சென்றேன்.

எழுந்து அமர்ந்து சிறிது நேரம் சிந்தித்தேன். விமானச் சத்தங்கள் இப்பொழுது கேட்க முடிந்தது. பெண்ணின் சேலை தரையில் கிடந்ததைப் பார்த்தேன். அதை யெடுத்து இரண்டாய் கிழித்தேன். என்னுடைய தலையிலும், கழுத்திலும், முகத்தையும் மறைத்துக் கொண்டபடி இறுக கட்டிக் கொண்டேன். வெளியே என் தலைக்கு மேலே தீ எரிந்து கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும், கைகள், கால்கள் மற்றும் தலைகளாய் கிடந்தன. அவைகளைத் தாண்டி நகர்ந்து ஊர்ந்து வெளியே வந்து சேர்ந்தேன்”.

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.

குமரபுரம் குண்டுவீச்சு 10.10.2008

குமரபுரம் கிளிநொச்சி நகர மையத்திலிருந்து ஏழு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இதன்மீது 10 அக்டோபர் 2008 அன்று நிகழ்த்தப்பட்ட வான்குண்டு வீச்சு, சன அடர்த்தி மிக்க கிளிநொச்சி நகரமையம், மற்றும் அதனையண்டிய பகுதிகளில் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட வான்குண்டு வீச்சுக்களில் ஒன்றாகும். இக்காலம், இடம்பெயர்ந்த மக்களும், உள்ளூர்வாசிகளும், இக் குண்டு வீச்சுக்கள் காரணமாக மிகப்பெரிய அளவில் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த காலமாகும். மேற்குறிப்பிட்ட குண்டு வீச்சில் ஒரு பாடசாலை ஆசிரியை, அவரது பத்துவயது மகள், மேலுமோர் பெண் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஆசிரியையின் கணவன், அவரது மகன், மேலும் பல பொது மக்கள் படுகாயம் அடைந்தனர். காயமடைந்த கணவன் இத் துயர சம்பவத்தின் பின்னர் பின்வருமாறு கூறினார்:

“நான் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், உள்ளூராட்சி அமைப்பு ஊழியன். எமக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. நாம் எமது சொந்த ஊராகிய பச்சிலைப் பள்ளியிலிருந்து ஆகஸ்ட் 2006 இல் இடம் பெயர்ந்தோம். அப்போதிருந்து கிளிநொச்சி குமரபுரத்தில் ஒரு மண்வீட்டைக் கட்டி வாழ்ந்திருந்தோம். அந்த துர்ப்பாக்கிய நாளில் நானும் மனைவியும், அன்று வேலைக்குச் செல்லும் முன்பதாக காலை 6.25 மணியளவில் அன்றைய சமையலில் ஈடுபட்டிருந்தோம். அந்நேரம் குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டது. நாம் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பதுங்கு குழிக்கு ஓடினோம். எமது வீட்டைச் சுற்றி மூன்று குண்டுகள் வீழ்ந்தன. அவற்றில் ஒன்று எமது பதுங்கு குழிக்கு மிகவும் அண்மையில் விழுந்தது. எனது மனைவி தலத்திலேயே இறந்துவிட்டார். மகள் மூர்ச்சையாகிப் பின்னர் வைத்திய சாலையில் இறந்தாள். நானும் எனது மகனும் காயமடைந்ததுடன், குண்டு வெடித்தவுடன் மூச்சு விட சிரமப்பட்டோம். வெடிச்சத்தத்தினாலும், அதிர்ச்சியினாலும் எனது செவிப்புலன் பாதிக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் இடம் பெயர்ந்து இப்போது எனது உறவினருடன் வாழ்கின்றோம். இங்குதான் நாம் எனது மனைவி, மகள் இருவரினதும் ஈமச்சடங்கினை நிறைவேற்றினோம்”.

JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Free!
ESTIMATES
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com

அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203

The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

வல்லிபுரமும் நாகர்கோயிலும்
பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

வல்லிபுரம் யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் இன்று ஒரு சிறு கிராமமாகக் காட்சியளிக்கிறது. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மக்கள் குடியேற்றம் செறிந்த, பிரபலமான, ஓர் ஆரம்பகால கடற்கரை நகரமாக அது விளங்கியிருக்கிறது என்பதை நம்மில் எத்தனை பேர் அறிந்திருக்கிறோம்? இன்று புன்னாலையிலிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் வடக்குக் கடற்கரை வீதி வழியே சென்றால், வீதி முடிவிலிருந்து இரண்டு மைல்களுக்கு அப்பால் இக்கிராமம் இருக்கிறது. இப்போதைய வல்லிபுரம் கிராமம் கடற்கரையிலிருந்து சற்றுத் தொலைவில் இருக்கிறது.

இன்றைய வல்லிபுரம் கிராமத்திலிருந்து கடற்கரைவரை நீண்டு கிடக்கும் - நான்கு மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட மணற்குவியல் - அவ்விடத்தில் வாழ்ந்த பண்டைக் கால மக்களின் அடிச்சுவடுகளையும், குடியேற்ற எச்சங்களையும் தன்னிடத்தில் தாங்கி நிற்கிறது. அப்பகுதியில் நிலத்தை அகழ நேரிட்ட கிராமத்தவர்கள் கட்டடங்களின் அடித்தளங்களையும், செங்கற்களையும், மட்பாண்டங்களையும், நாணயங்களையும் கண்டெடுப்பதாக அடிக்கடி தெரிவிப்பார்கள். வடமேற்கிலிருந்து தென்கிழக்குத் திசையில் மூன்று மைல் தொலைவிற்கு நீண்டு கிடக்கும் மணல் குன்றின் உள்ளே புராதனக் கட்டடங்களின் சுண்ணாம்புக்கல் குவியல்கள் காணப்படுகின்றன. இந்த மணற்குன்றுகளினிடையே புராதனமான ஓர் ஆழ்வார் (மகாவிஷ்ணு) கோவில் - மீண்டும் மீண்டும் புனர்நிர்மாணம் பெற்று - கோபுரமும் கூடமுமாக எழுந்து நிற்கிறது. அக்கோயிலின் வளாகத்திலிருந்து கடற்கரைவரை ஒரு நீண்ட மதில் சுவரின் அழிபாடுகள் புதைந்து கிடக்கின்றன (Lewis, J.P. 1916-17: 96-97).

தொல்லியல் ஆய்வாளரும், அன்றைய யாழ்ப்பாண அரசாங்க அதிபருமான ஜே.பி. லூயிஸ், "ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் குறிப்பிட்ட நான்கு மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட மணல் மூடிய பகுதியே பண்டைய வல்லிபுர நகரமாகும். இப்பழைய நகரம் இன்றுவரை இலங்கை அரச தொல்லியல் துறையினரால் அகழ்வாய்வு செய்யப்படவில்லை என்பது வருந்தத்தக்க விடயம்" எனக் குறிப்பிட்டார்.

1900 ஆம் ஆண்டில் ஆழ்வார் ஆலயத்திலிருந்து வடகிழக்காக 50 யார் தொலைவில் மணலில் புதைக்கப்பட்டிருந்த ஒரு புத்தர் சிலை கோயில் பூசகர்களால் கண்டெடுக்கப்பட்டு கோயிலின் மரக்காலை அறையில் 1902 ஆம் ஆண்டுவரை வைக்கப்பட்டு, பின்னர் பிரித்தானிய அரச அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது. அவர்கள் அந்தப் புத்தரின் சிலையை யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நிறுத்தி வைத்தார்கள் (Lewis, J.P. 1916-17: 96-97).

1936 ஆம் ஆண்டில் புத்தரின் சிலை கண்டெடுக்கப்பட்ட இடத்தில் நிலத்தைத் தோண்ட நேரிட்டபோது பழைய தொல்பொருட்களினிடையே எழுத்துப் பொறிக்கப்பட்ட ஒரு பொற்சாசனம் கிடைத்தது. இலங்கை முழுவதிலும் இதுவரை காலமும் நடைபெற்று வந்த அகழ்வுகளில் இப்படியானதொரு பொற்சாசனம் கிடைத்தது இதுவே முதற் தடவையாகும். இது பற்றிப் பின்னர் விரிவாகப் பேசப்படும்.

போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டு 19 ஆம், 20 ஆம் ஆண்டுகளில் புனர்நிர்மாணம் பெற்ற ஆழ்வார் கோயில், அழிந்துபோன பண்டைய வல்லிபுர நகரத்தின் புகழ்தாங்கிய சான்றடையாளமாகும் (Vestige of a Glorious Past). ஐதீகக் கதைகளின்படி இந்த ஆலயம் 'பெரும்பாணாற்றுப்படை புகழ்' பல்லவ அரசன் தொண்டைமான் இளந்திரையனால் கட்டப்பட்டது (இது ஏற்கனவே 'நாகநாடும் நாகர்களும்' என்ற பகுதியில் கூறப்பட்டிருக்கிறது). தமிழ்ப் பௌத்த நூலான வீரசோழியம் தொண்டைமான் இளந்திரையன் விஷ்ணு, புத்த பகவான் இருவரினதும் பக்தன் எனக் கூறுகிறது. புத்த பிரானை விஷ்ணுவின் அவதாரம் எனக் கூறும் இந்துமத இதிகாச நூல்கள் உள்ளன.

கந்தரோடையைப் போன்று புத்த மதத்தைக் கடைப்பிடித்த மக்களும் வாழ்ந்த பூமி வல்லிபுரம். ஏற்கனவே கூறியதுபோல புத்த பிரான் விஷ்ணுவின் அவதாரம் என பல இந்துக்கள் நம்பினார்கள். இன்றுவரையும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் ஆதி மூலத்தில் வைத்து வணங்கப்படுவது திருமாலின் சக்கராயுதமே ஆகும். இதன் மாற்று வடிவமே பௌத்தர்களின் தர்மச் சக்கரம். வல்லிபுரத்து விஷ்ணு கோயிலை நாம் ஆழ்வார் ஆலயம் என்றே அழைக்கிறோம். தமிழர்கள் பேணிய பௌத்த மரபுரிமையில் (Buddhist Tradition) புத்த பிரானும் ஆழ்வார் என்ற பெயரினாலே அழைக்கப்படுகிறார் என பேரறிஞர் உ.வே. சாமிநாதய்யர் எடுத்துக்காட்டியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது (சாமிநாதையர், உ.வே. 1951: பக். 36).

வல்லிபுரம் ஆழ்வார் கோயில் 1990

Image Source - S. Sivathasan USA

வல்லிபுரம் ஆழ்வார் கோயிலின் இன்றைய தோற்றம்

Image Source - Elite Travels

சிங்களக் கவிதை நூலான கோகில சந்தேச போர்த்துக்கேயரால் அழிக்கப்படுவதற்கு முன்பிருந்த வல்லிபுர விஷ்ணு கோயிலைப் பற்றிக் கூறுகிறது. புராதன வல்லிபுர நகரம் பல்லவத்துறை என்ற பெயர் கொண்ட ஒரு துறைமுகத்தைக் கொண்டிருந்தது. இன்றைக்கும் அத்துறைமுகம் இருந்த கடற்கரைப் பகுதி பல்லப்பை என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. மகாவம்சம் இத்துறைமுகத்தை (பாளி மொழியில்) பல்லதித்த எனக் குறிப்பிடுகிறது. அநுராதபுர அரசியின் மேல் காதல் கொண்ட அபயநாகன், அது தெரிய வந்ததும் அரசனது வஞ்சத்திற்குப் பயந்து இந்தியாவிற்குப் பல்லதித்த துறையினூடாக தப்பி ஓடியதை மகாவம்சம் கூறுகிறது (Mahavamsa Ch. XXXVI: 43).

பெருங்கற் பண்பாட்டுப் புதையல்கள் நீள்கிடத்திய புதையல்

1848 ஆம் ஆண்டில் வல்லிபுரக் கடற்கரைப் பகுதியில் நிலத்திலிருந்து மூன்று அடி ஆழத்தில் நீளக்கிடத்தி, மேற்குக் - கிழக்குத் திசையை நோக்கிய வண்ணம் புதைக்கப்பட்டிருந்த ஒரு எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. அதன் இடது கரத்தில் தங்க மோதிரம் உட்பட பல வகையான தங்க ஆபரணங்களும் காணப்பட்டன. அந்த எலும்புக்கூட்டின் காலடியில் நீலமும் - வெண்ணிறத்திலுமான பளபளப்பான ஒரு சாடியினுள்ளே 7,000 புராதன நாணயங்கள் காணப்பட்டன (Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol. 1, No. 3, p. 156). இந்த விவரங்களிலிருந்து புதையுண்டிருப்பவர் ஒரு பெரிய செல்வந்தராகவோ அல்லது அரச வம்சத்தைச் சேர்ந்தவராகவோ இருந்திருப்பார் என எண்ணத் தோன்றுகிறது.



வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு புராதன நாணயம். நாணயத்தின் ஒரு பக்கத்தில் எழுந்து நிற்கும் எருதும், மறுபக்கத்தில் ஒரு போடீ வாளும் காணப்படுகின்றன.

Image Source - H.W. Codrington

புதைகிடங்கினுள் தாழிப்புதையல்

1972 ஆம் ஆண்டில் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் சமீபமாக இருந்த ஒரு மண்மேட்டை அகழ்ந்தபோது பெரிய கல் மேசையினால் மூடப்பட்டு, கற்களினால் சுவரமைக்கப்பட்ட ஒரு புதைகுழியும் அதனுள்ளே எலும்புகளைக் கொண்ட ஒரு தாழியும் (Urn in a Cist) காணப்பட்டது. இப்பெருங்கற் பண்பாட்டுப் புதையலில் கார்னிலியன் மற்றும் மதிப்புமிக்க கற்கள், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள், குடுவைகள், இரும்பு ஆணிகள், நாணயங்கள் என்பன காணப்பட்டன (இந்திரபாலா, கா. 1973).

மேற்காணப்படும் பெருங்கற் புதைகுழி போன்ற ஒரு குழியினுள்ளே 1972 ஆம் ஆண்டில் வல்லிபுரத்தில் முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது

வல்லிபுரப் புத்தர் சிலை

வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலையின் உருவ அமைப்பும் (Iconography) அதன் அமராவதி மூலமும் (பண்டைய ஆந்திர தேசத்திலிருந்த பௌத்த மையம்) அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபலமாகவிருந்த மகாயான பௌத்தப் பாரம்பரியத்தை விளங்கிக்கொள்வதற்கான முக்கியமான அம்சங்களுள் ஒன்றாகும். 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16-18 ஆந் திகதிகளில் பின்லாந்தில் நடைபெற்ற மதம் சம்பந்தமான கருத்தரங்கில், சுவீடன் உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷாக் வல்லிபுரப் புத்தர் சிலை பற்றிக் கூறிய கருத்துகள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில், வட இலங்கையின் வடமராட்சிப் பகுதியில், அழியுண்டிருந்த பெருமாள் கோயில் திரும்பக் கட்டப்பட்ட பொழுதில், அக்கோயில் வளாகத்திலிருந்து வடகிழக்கே 50 யார் தள்ளி மணலில் புதையுண்டிருந்த புத்தர் சிலை வெளிக்கொண்டுவரப்பட்டது. கோயிலின் மரக்காலை அறையில் வைக்கப்பட்டிருந்த இப்புத்தர் சிலை பிரித்தானிய அரச அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு 1902 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் ஓர் அரசமரத்தின் கீழ் ஒரு நில மேடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 1906 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆளுநராகவிருந்த (Governor) ஸேர் ஹென்றி பிளேக்கினால் சியாம் நாட்டு (இன்றைய தாய்லாந்து) அரசருக்கு இச்சிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இது புத்த பிரானின் ஆரம்பகாலச் சிலைகளில் ஒன்றாக

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அரச மரத்தோடு நிலை மேடையில் நிறுத்தப்பட்டிருந்த வல்லிபுரம் புத்தர் சிலை. 1902
Image Source - Amazing Lanka.com

தாய்லந்தில் பாங்கொக்கிலுள்ள 'வாற் பெஞ்சா' ஆலயத்திலுள்ள வல்லிபுரம் புத்தர் சிலை
Image Source - Prof. Peter Schalk

தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக்கிலுள்ள வாற் பெஞ்சா பௌத்த கோயில்
Image Source - Wikipedia

இருந்தபடியினால் சியாம் நாட்டு அரசர் அதைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம்கொண்டிருந்தார் (The Ceylon Antiquary and Literary Register, 1916-17, Vol. 2, Part 2, p.96-97).

இச்சம்பவம் அதன் பின்னர் அடுத்த 90 ஆண்டுகளுக்கு மக்களின் நினைவுகளிலிருந்து மறந்துபோய்விட்டது. 1906 ஆம் ஆண்டின் பின் பிறந்த இலங்கை மக்கள், தாய்லாந்திற்கு பயணம் செய்திருந்தாலொழிய இப்புத்தர் சிலையைப் பார்த்திருக்கமாட்டார்கள்.

வல்லிபுரப் பொற்சாசனம் இவ்விடத்தில் ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்ட செய்தியைப் பதிவு செய்திருக்கிறது. அந்த விகாரை இருந்த இடமெதுவும் இன்று வெளியே தெரியவில்லை. இந்தப் புத்தர் சிலை ஒன்றுதான் அந்த விகாரையின் எஞ்சியிருக்கும் பகுதிகளில் ஒன்றாக இருக்கும். இம்மாதிரியான பெரிய புத்தர் சிலைகள் விகாரைகளில்தான் காணப்படும். ஓரிடத்தில் ஒரு புத்தர் சிலை காணப்பட்டால் அங்கே ஒரு விகாரை இருக்கிறது அல்லது இருந்தது என்றுதான் அர்த்தம். வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்துப்பதிவு அப்புத்தர் சிலை வல்லிபுரத்தில் கட்டப்பட்ட பௌத்த நிறுவனத்திற்கு உரியது என்பதை உறுதிப்படுத்துகிறது (Schalk, Peter 1994).

ஜனவரி 1994 இல் பீற்றர் ஷாக் தாய்லாந்தில் பாங்கொக்கிற்கு விஜயம் செய்தபோது 'வாற் பெஞ்சா' என்ற பௌத்த ஆலயத்திலிருந்த வல்லிபுரப் புத்தர் சிலையை இனங்கண்டு கொண்டார். பாங்கொக்கிலுள்ள இந்தப் பிரபல மத்திய பௌத்த ஆலயம் 'பளிங்குக் கோயில்' (Marble Temple) என அழைக்கப்படுகிறது.



1941ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட வல்லிபுரப் பொற்சாசனத்தின் மூலப்படம்
Image Source - Epigraphia Zeylanica 1941

இந்த ஆலயத்தில் வல்லிபுரப் புத்தர்சிலைக்கு கோயில் மண்டபத்தினுள் இடமேதும் கொடுக்கப்படவில்லை. கோயிலின் பின் பக்கத்தில் ஒரு மூலையில், ஓர் இரும்புக் கிராதியின் பின்னால் வைக்கப்பட்டிருக்கும் இச்சிலையை மக்களால் இலகுவில் கவனிக்க இயலாது (Schalk, Peter 1994).

அக்கோயிலில் பணிபுரியும் காவலர்களுக்கோ, சுற்றுலாப் பயணிகளின் வழிகாட்டிகளுக்கோ, ஒரு வாழ்நாட்காலம் அங்கே சேவை புரியும் குருமார்களுக்கோ அச்சிலையின் பூர்வீகமோ, அதன் பெயரோ, அது இலங்கையில் வல்லிபுரத்திலிருந்து அங்கே வந்தது என்ற தகவலோ எதுவுமே தெரியாது (Schalk, Peter 1994).

பேராசிரியர் பீற்றர் ஷாக்கின் பாங்கொக்கில் கண்ட வல்லிபுரப் புத்தர் சிலையின் மனக்கிளர்ச்சி உண்டாக்கக்கூடிய விரிவுரை இதுவாகும்.

"கல்லிலே செதுக்கப்பட்ட இயற்கை வடிவளவான சிலை இது. புத்தர் நிற்கும் நிலையில் இது செதுக்கப்பட்டிருக்கிறது. மூலச் சிலையில் உடைந்திருந்த வலதுகையில் புதிய கரம் கொடுக் கப்பட்டிருக்கிறது. இடது கையில் நான்கு விரல்கள் புதிதாக திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. தலைமுடி சிறிய சுருள்களாகக் காணப்படுகிறது. முகம் வட்ட வடிவாகவும், மிகுதி உடலைப் போலவும் சதைப்பிடிப்பாகக் காணப்படுகிறது. உயர்ந்த புருவங்கள் கொண்ட முக அமைப்பு. விழித்திரை தெளிவாக இல்லை. நாசி பெரியதாக அகன்றும், உதடுகள் தடித்தும் காணப்படுகின்றன. உதட்டில் மெல்லிய புன்சிரிப்பு. காதுகள் கழுத்தின் அடிப்பாகம் வரை நீண்டிருக்கின்றன. காதுகளின் அடிப்பகுதி கணுக்கள் நிரம்பிய மடல்களாகக் காட்சியளிக்கின்றன".

"மேலே அணிந்திருக்கும் அங்கவஸ்திரமான 'உத்தரசங்கவின்' (Upper Garment) கீழே வேறு கீழ் ஆடையான 'அந்தரவாசக' (Lower Garment) எதுவும் காணப்படவில்லை. மேல் அங்கவஸ்திரம் நீண்ட தடித்த தளர்வான மடிப்புகளாக உள்ளது. வலது கரத்தில் (அது திருத்த முன்னர்) முதலில் இருந்தது 'அபய முத்திரையாக' (Fearlessness Gesture) இருந்திருக்கலாம். அதைத் திருத்தி அமைத்தவர்கள் புதிய கரத்தை நேர்த்தியாக அமைக்கவில்லை. புதிய கரத்தில் காணப்படும் 'அஸிஸ முத்திரை' (Blessing Gesture) சரியாக அமைக்கப்படவில்லை. இப்படியான அமைப்பு 5-7 ஆம் நூற்றாண்டிற்குரிய 'சிங்கள பௌத்த உருவ அமைப்பில்' மட்டுமே காணப்படுகிறது. அமராவதியில் தயாரிக்கப்பட்ட, நிற்கும் புத்தசிலைகள் அனைத்திலும் அபய முத்திரை காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இடதுகரம் மேல் அங்கவஸ்திரத்தின் முழு நீளத்தையும் தாங்கி நிற்கிறது. அங்கவஸ்திரம் காலடி வரையும், கால் விரல்கள் மட்டும் தெரியும் வண்ணம் நீண்டிருக்கிறது. குறுகிய இடுப்பும், அகன்ற மார்பும் உடல்வலிமை நிறைந்த தோற்றத்தைக் கொடுக்கிறது" (Schalk, Peter 1994).



வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் எழுத்துக்களின் பிரதியாக்கம்.
Image Source - Siva Thiagarajah 2016

இந்த மாதிரியான உருவ அமைப்புக்கொண்ட புத்தர் சிலைகள் ஆந்திராவில் சத்வாகன அரசவம்ச ஆட்சிக்காலத்திலும் (கி.பி. 200-232), அவர்களைத் தொடர்ந்த இக்ஷ்வாகு அரசர்களின் ஆட்சிக்காலத்திலும் (கி.பி. 249-440) தயாரிக்கப்பட்டன. இவர்களின் ஆட்சிக்காலத்தில், கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதிப் பகுதியில், இலங்கையின் பௌத்த குருமாருக்குரிய - சிகள விகாரை பற்றிய (சிங்கள குருமாருக்கு அல்ல) - சிகள என்ற தீவிலிருந்து வந்த குருமார் தங்குவதற்கான விகாரை பற்றிய தகவல் தரும் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திர கலைப் பாணியில் உருவாக்கப்பட்ட ஒரு புத்தர் சிலை வல்லிபுரத்தில் அமைவதற்கான காலமும் நேரமும் இக்காலப் பண்பாட்டுச் சூழலில் கைகூடி வந்திருக்கிறது (Schalk, Peter 1994).

அமராவதி – அநுராதபுர பௌத்த கலைப் பள்ளிகள்

அக்காலத்தில் ஆந்திர நாட்டின் அமராவதியிலிருந்த பௌத்த கலைப்பள்ளியில் உருவாக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட பௌத்தமதக் கலைச்சின்னங்களின் திராவிடக் கலைப்பண்புகள் இலங்கையிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. தூரகிழக்கு நாடுகளுக்கும், இலங்கைக்கும் வியாபித்திருந்த தமிழகத்தின் வர்த்தக நடவடிக்கைகள், சங்ககாலத் தமிழகத்தில் இந்நாடுகளுக்கிடையிலான கலாசாரப் பரிமாறல்களுக்கும் ஏதுவாக இருந்தன. உதாரணமாக கந்தரோடையிலும், வல்லிபுரத்திலும் காணப்பட்ட புத்தரின் சிலைகள் ஆந்திராவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான கலாசார உறவின் இயக்க விளைவுகளைக் காட்டுவதாக இருந்தன.

அக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட சுண்ணாம்புக் கற்களினாலான பௌத்த சிலைகளினதும், கல்வெட்டு உருவங்களினதும் பண்புகளை ஆராய்ந்த ஜேர்மனிய சிற்பவியல் வல்லுனரான கலாநிதி உல்றிச் வொன் ஷ்ரோடர் (Dr Ulrich von Schroeder) இவை அனைத்தும் அமராவதி பௌத்தக் கலைப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட சிற்பங்கள் எனக் கூறிச் சென்றிருக்கிறார்: Imported Sculptures from Early Amaravati School and Imported Sculptures from Late Amravati (Nagarjunakonda) (Schroeder, U.V. 1990).

மேற்குறிப்பிட்டுள்ள உல்றிச் வொன் ஷ்ரேடரின் ஆய்வுகளிலிருந்தும், பிரித்தானிய பேராசிரியர் ஆஷ்லி தொம்ஸனின் ஆய்வுகளிலிருந்தும், ஆந்திராவில் அமராவதியிலும், நாகர்ஜுனா கொண்டவிலுமிருந்த கலைஞர் சபைகள் (Artist Guilds) இலங்கைக்கும் மற்றும் தூரகிழக்கு நாடுகளுக்கும் பெருவாரியான பௌத்த சிற்பங்களை விநியோகம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. சமயக் கோட்பாடுகள், பண்டைய வர்த்தக சமூகங்களுக்கான தனித்துவத்திற்கும், ஒருங்கிணைவுக்கும் ஏதுவான இறுக்கமான உந்துதலைக் கொண்டிருந்தபடியினால், இவர்கள் மூலமாகவே இலங்கைக்கு பௌத்த சிற்பங்கள் வந்தடைந்தன.

வரலாற்று ரீதியாக இப்பௌத்த சிற்பங்களின் வருகையைக் கற்பது முக்கியமானது. வல்லிபுரம் புத்தர் சிலையின் உருவாக்கம், அமராவதிக் கலைப்பண்பின் வெளிப்பாடாகும். இதன் வருகை, ஈழத்தில் பௌத்தத்தின் வருகையையும், அநுராதபுரக் கலைப்பள்ளியில் அமராவதிக் கலைப்பாணியின் தாக்கம் வெளிப்பட்ட காலத்தையும் பதிவு செய்கிறது. இதன் முதலாவது கட்டம் அமராவதி, அநுராதபுரம், வல்லிபுரம் ஆகிய மையங்களுக்கிடையே இடம்பெற்ற முக்கோணக் கலாசார தொடர்புகளையும் எடுத்துரைக்கும் காலப்பகுதியாகும் (Peter Schalk 1994).

இது நடைபெற்ற காலப்பகுதியில், இலங்கையில் பரவியிருந்த பௌத்த மதம், உலகளாவிய பௌத்த மதமாகப் பார்க்கப்பட்டதே தவிர, சிங்கள பௌத்தமாக இனங்காணப்படவில்லை. இந்தப் புத்த சிலையை கந்தரோடையில் கண்டெடுத்த புத்தரின் சிலைகளோடு ஒப்பு நோக்கினால் ஆந்திர பௌத்தம் ஈழ பௌத்தத்தில்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு
நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை
தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

கொண்டிருந்த பாரிய தாக்கவிளைவை உணர முடியும் (Peter Schalk 1994).

வல்லிபுரப் புத்தர் சிலையின் தோற்றம், ஆந்திராவின் கலாசாரத் திறனைக் கொண்ட திராவிட மையங்களான அமராவதி, பத்திப் புரோலு, யக்கையபேட்டை, கண்டசாலா, கோலி, நாகர்ஜுன கொண்ட ஆகியவற்றின் கலைப் பண்பாட்டுப் பரிமாணமாகக் கருதப்படுகிறது. இம்மையங்களின் புதிதாக ஆக்கும் திறன் கொண்ட பௌத்தக் கலைகளின் வளர்ச்சி கி.பி. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் சத்வாகன, இஷ்வாகு அரசுகளால் பராமரிக்கப்பட்டது.

இந்தக் கலாசார மையங்களில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து புத்தரின் சிலைகள் தோற்றம் பெற்றன. அதுவரை காலமும் மக்கள் வணங்கி வந்த புத்தபாத பீடிகைகளையும், மற்றும் புத்த பகவானின் சின்னங்களையும், புத்தரின் சிலைகள் பதிலமர்த்தின. இச்சிலைகளின் படிமுறை வளர்ச்சியில் கி.பி. மூன்றாம் - நான்காம் நூற்றாண்டுகளில் தனித்துவமான அமராவதிப் பாணி புத்தர் சிலைகள் உருவாக்கப்பட்டன. வல்லிபுரப் புத்தர் சிலை இந்த அமராவதிக் கலைப்பாணியில் அமைந்த சிலையாகும். இவ்வகையான புத்த படிமங்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியா, இலங்கை, தென்கிழக்காசிய நாடுகளைச் சென்றடைந்தன (Peter Schalk 1994).

இந்தச் சந்தர்ப்பத்தில் உபயோகிக்கப்படும் 'அநுராதபுரக் கலைப் பள்ளி' என்ற சொல்லமைப்பு, அக்காலத்தில் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த, புத்த சிலைகளை உருவாக்கும் ஒரு சிங்களப் பள்ளி இருந்ததை உணர்த்தி நிற்கிறது. அதனைத் தொடர்ந்து வல்லிபுரப் புத்தர் சிலையில் அநுராதபுரக் கலைப் பள்ளியின் தாக்கங்கள் இருப்பதாகவும் சிலரால் கூறப்படுகிறது. 'அநுராதபுரக் கலைப்பள்ளி' என்றால் என்ன? இதை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். இதன் முதல் பகுதி தாதுசேன அரசனின் கி.பி. 459 ஆம் ஆண்டு வரையிலான பகுதி. அடுத்த பகுதி கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரம் கைவிடப்பட்ட காலம் வரையிலான பகுதி. இதன் முதல் பகுதியின் புத்தர் சிலைகள் அமராவதி கலைப் பாணியையே காட்டிநிற்கின்றன. இவற்றில் மிகப் பழையதான, அநுராதபுர மாவட்டத்திலுள்ள மஹா இலுப்பலமவிலுள்ள ஆறு அடி உயரமான, வெண்ணிறப் பளிங்குக் கல்லில் (Marble) அமைந்த புத்தர் சிலை அமராவதிக் கலைப் பாணியிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பளிங்குக் கல் ஆந்திராவிலுள்ள வேங்கி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. மதவாச்சியில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. நான்கம் நூற்றாண்டிற்கான 46 செ.மீ. உயரமான வெண்கலப் புத்தர் சிலையும் அமராவதிக் கலைப் பாணியிலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது (Peter Schalk 1994).

அநுராதபுரக் கலைப்பள்ளியின் இரண்டாவது பகுதியில்தான் 'சிங்கள பௌத்தத்திற்குரிய' தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. முதலாவது பகுதியான அநுராதபுரத்திலும், இலங்கையின் வட பகுதியிலும், தென்னிந்தியாவிலும், தென்கிழக்காசியாவிலும் காணப்படும் புத்த சிற்பங்கள் அனைத்தும், அமராவதிக் கலைப்பாணியிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. வல்லிபுரப் புத்தர் சிலை அமராவதிக் கலைப்பாணியில் கி.பி. 3 ஆம், 4 ஆம் நூற்றாண்டு காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது (Peter Schalk 1994).

"1906 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்த இலங்கைத் தமிழர் எவரும், தாய்லாந்தில் பாங்கொக்கிலுள்ள வாற் பெஞ்சா ஆலயத்திற்குச் சென்றிருந்தால் ஒழிய வல்லிபுரப் புத்தர் சிலையைக் கண்டிருக்க முடியாது. அதைப் பற்றி தமிழ் மக்களுக்கு இப்போது எடுத்துக்கூறுகிறேன்:

"திராவிடக் கலைப்பண்பாட்டின் மரபுரிமையான இந்த தலைசிறந்த படைப்பை பார்த்து வியக்க வேண்டுமானால் நீங்கள் வாற் பெஞ்சா ஆலயத்திற்குப் போக வேண்டும். வருங்காலத்தில் ஒருநாள், தாய்லாந்து அரசரிடமிருந்து தமிழ் மக்கள் இதை மீண்டும் பெற்றுக்கொள்ள நேரிடலாம். அரசியல் நலங்களுக்காக சிங்களவர்களால் உருவாக்கப்பட்ட இச்சிலையின் பிரதியை மௌனமாகப் புறக்கணித்துவிடலாம். அப்படி மூலச்சிலை கிடைக்குமானால் அதைப் பெயர்த்தெடுத்த யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் மீண்டும் அச்சிலையை நிறுத்தி வைக்கலாம். அங்கிருந்து இலங்காதீபத்தின் சகல தீங்கான நோக்குகளையும் அது ஒழித்துவிடக்கூடும்." - பேராசிரியர் பீற்றர் ஷாக்.

வல்லிபுரப் பொற்சாசனம்

யாழ்ப்பாணத்தில் வல்லிபுரத்திலிருக்கும் ஆழ்வார் கோயிலுக்குச் சமீபமாக இருந்த பௌத்த கோயிலின் அழிபாடுகளைப் பற்றி அப்பகுதி மக்கள் பல தலைமுறைகளாக அறிந்திருந்தார்கள். 1916 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக இருந்த ஜே.பி. லூயிஸ் வல்லிபுரத்தைப் பார்வையிடச் சென்ற சமயம் ஆழ்வார் கோயிலின் பூசகர் அப்பகுதியிலிருந்த பௌத்த கோயிலின் அழிபாடுகளை அரசாங்க அதிபரைக் கூட்டிச் சென்று காண்பித்தார் (Lewis, J.P. 1916).

இதைத் தொடர்ந்து 1936 ஆம் ஆண்டில் பௌத்த கோயிலின் அழிபாடுகள் இருந்த இடத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய ஆந்திர இக்ஷ்வாகு வகைப் பிராமி எழுத்துக் கல்வெட்டு.
Image Source - Archaeological Survey of India

கொழும்பு அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் வல்லிபுரப் பொற்சாசனம்மூலம் அல்ல. அதன் ஒரு பிரதியே
Image Source - National Museum, Colombo

பட்டன. இந்த அகழ்வுகளின் போது புராதன பௌத்த விகாரத் தின் அஸ்திவாரத்தின் கீழ் புதைக்கப்பட்டிருந்த ஒரு கற்பேழை யில் வல்லிபுரப் பொற்சாசனம் கண்டெடுக்கப்பட்டது. 39.16 அங் குல நீளமும், ஓர் அங்குல அகலமும், 69.5 கிரெய்ன் நிறையும் கொண்ட இப் பொற்தகடு கற்பேழையினுள் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது (Paranavitana,S.1941).

வல்லிபுரப் பொற்தகட்டின் நடுவில் பிராமி எழுத்துகளால் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்த வாசகம் அச்சமயம் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் ஆணையாளராக இருந்த செனரத் பரணவிதான அவர்களால் பொருள் விளக்கம் கூறப்பட்டு, ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு 'எப்பிகிராபியா சிலனிகா' என்ற ஆங்கில அரச கல்வெட்டுச் சாசன நூலில் பிரசுரிக்கப்பட்டது (Epigraphia Zeylanica, Vol. IV, 1934-1941: pp 229-237). அது பிரசுரிக்கப்பட்ட நாட்களிலிருந்தே அச்சாசனத்தின் பொருள் விளக்கமும், பகுப்பாய்வும், மொழி மாற்றமும், முடிபுகளும் ஏகப்பட்ட கற்கை மரபான வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் அதைச் சற்று விவரமாகப் பார்க்க வேண்டியிருக்கிறது.

அவரது ஆய்வறிக்கையில் அச்சாசனத்தில் காணப்படும் எழுத்துகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய இலங்கையின் பிராமி எழுத்துகள் என்றும், இலங்கையின் பல பாகங்களிலுள்ள கல்வெட்டுகளில் காணப்படும் பிராமி எழுத்துகளை அது ஒத்திருப்பதாகவும் கூறியிருந்தார். அச்சாசனத்தில் காணப்படும் அ, ற, உ, ல ஆகிய எழுத்துகளின் கீழ்ப்பகுதிகள் நீண்டு கீழே இடப்பக்கமாக வளைந்திருப்பதற்கான காரணம், அவை 'கல்லில் எழுதப்படாமல் வளைந்து கொடுக்கக்கூடிய ஒரு உலோகத் தகட்டில் எழுதப்பட்டிருப்பதே' எனவும் கூறியிருந்தார். மேலும், அச்சாசனம் எழுதப்பட்ட மொழி பழைய சிங்கள மொழி எனவும், அக்காலத்தைய ஆவணங்களின் இலக்கணத் தரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதாகவும் பதிவு செய்திருந்தார்.

பெற்சாசனத்தின் உரைமூலம்

பொற்சாசனத்தில் உள்ள பிராகிருத உரை இது:
1. சித்த மகரஜ வஹயஹ ரஜெஹி அமெதெ
2. இஸிகிரய நகதிவ புஜமெனி
3. படகரஅதநெஹி பியகுகதிஸ
4. விஹர கரிதே

சித்த - சித்தி கிடைக்கட்டும் (சாசனத்தின் ஆரம்பத்திலுள்ள மங்கலச் சொல்).

மொழிபெயர்ப்பும் முடிவுகளும்

பேராசிரியர் பரணவிதானவின் பொற்சாசன மொழிபெயர்ப்பும், விளக்கமும், முடிவுகளும் இவை:
1. மகாராஜரான வஹவின் ஆட்சிக்காலத்தில் அவரது பிரதிநிதியான
2. இஸிகிரய நாகதீவை நிர்வாகம் செய்யும் போது
3. படகர அத்தனாவில் பியகுக திஸ்ஸ
4. விகாரையைக் கட்டுவித்தான் (விகாரை கட்டப்பட்டது).

இந்தச் சிறிய வாசகத்தைக்கொண்டு செனரத் பரணவிதான மிகப்பரந்த வரையறையற்ற முடிவுகளுக்கு வந்திருந்தார்.

1. இந்தச் சாசனம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த அரசன் வசபனின் மந்திரியான இசிகிரயன் என்பவனால் நாகதீப நிர்வாகிக்கப்பட்டது என்பதை எடுத்துரைக்கிறது.

2. இச்சாசனத்தின் பிராமி எழுத்துகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரிய இலங்கையின் பிராமி எழுத்துகள்.

3. பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டிருக்கும் இச்சாசனத்தின் மொழி பழைய சிங்கள மொழி (Paranavitan, S. 1934-41: 229).

இச்சாசனத்தை ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதான இதில் காணப்படும் எழுத்துகள் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இலங்கையின் பெருநிலப்பரப்பில் காணப்பட்ட சாசனங்களை ஒத்திருப்பதாகக் கூறி, இதில் காணப்படும் 'வஹ' என்ற பதம் கி.பி. 124-168 ஆண்டுக்காலத்தில் அநுராதபுரத்திலிருந்து ஆட்சிபுரிந்த வசபனைக் குறிப்பிடுவதாகத் தீர்மானித்தார். இதன் பிரகாரம் நாகதீபம் அநுராதபுர அரசனின் மந்திரியால் நிர்வாகிக்கப்பட்டது என்றும் முடிவெடுத்தார்.

இலங்கையில் காணப்படும் எல்லாப் பிராகிருதக் கல்வெட்டுகளிலும் 'வஸப' என்றும், பாளி மொழியில் 'வஹப' என அழைக்கப்படும் அரசன் வசபனின் பெயர் எந்தக் கல்வெட்டிலும் 'வஹ' என எழுதப்படவில்லை. இலங்கையிலுள்ள புராதன சாசனங்கள் யாவற்றிலும் 'வஸப' என எழுதப்பட்ட வசபனின் பெயர் வல்லிபுரச் சாசனத்தில் 'வஹ' என எழுதப்பட்டதற்கு பரணவிதான தரும் விளக்கம் நமக்குப் பூச்சுற்றுவதாகவே இருக்கிறது.

இந்த எழுத்து வடிவத்தின் மூலத்தை விளக்க சிக்கலான ஒரு கருத்தை முன்வைக்கிறார். வடமொழியில் 'விருஷப' என்றால் எருது அல்லது மேன்மையான பொருள் என அர்த்தம். வடமொழியில் 'விருஷப' என்ற சொற்பதம் சில சமயங்களில் 'விருஷ' அல்லது 'ருஷ' என சுருக்கப்பட்டது போல 'வஹப' என்பது 'வஹ' என சுருக்கப்பட்டிருக்கிறது என்கிறார்.

இலங்கையின் மற்றைய பகுதிகளில் இந்த மன்னனின் பெயரைப் பதிவு செய்த பிராகிருதம், வடமொழி தெரிந்த பௌத்தர்கள் ஏன் இந்த மன்னனின் பெயரை 'வஹ' எனச் சுருக்கவில்லை என்பதற்கு எந்த விளக்கத்தையும் அவர் தரவில்லை. மேலும், மூன்று எழுத்துகள் மட்டுமே கொண்ட ஒரு மன்னனின் பெயரை இந்தச் சாசனத்தில் மட்டும் இரண்டு எழுத்தாகச் சுருக்க வேண்டிய ஒரு தேவை இல்லை.

இந்தச் சாசனத்தை எழுதியவர் கல்வியறிவுள்ள பிராகிருத மொழியில் பயிற்சி பெற்ற ஒரு பௌத்த பிக்குவாகவே இருந்திருக்க வேண்டும். அவருக்கு தனது நாட்டை ஆட்சிபுரிந்த மன்னனது பெயரைச் சரியாகப் பதிவு செய்யத் தெரியவில்லை என்பது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்.

மேலும், வசபனின் ஆட்சி வடபகுதியை உள்ளடக்கியிருந்தது என மகாவம்சமோ, சூளவம்சமோ உரைக்கவில்லை. இலங்கை முழுவதும் அநுராதபுரத்தின் ஒற்றை ஆட்சியின்கீழ் ஆட்சி செய்யப்பட்டது என்பதைக் கூறுவதில் மிக அக்கறை கொண்ட பாளி இலக்கியங்கள், வடபகுதி வரை வசபனின் ஆட்சி நீடித்திருந்தால், அப்பகுதியில் அவன் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கும்.

இன்னும், வசபனின் கல்வெட்டுகள் எதிலும் வடபகுதியில் அவன் ஆட்சி பரவியிருந்தது பற்றி எதுவிதமான தகவலும் இல்லை. இவற்றை நோக்குமிடத்து வல்லிபுரப் பொற்சாசனத்தில் காணப்படும் 'வஹ' என்ற பதம் வசபனைக் குறிப்பதாகப் பரணவிதான எடுத்த முடிவு அவரது கற்பனை என்றே கருத வேண்டி உள்ளது. 'வஹ' என்ற பெயர் கொண்ட அரசன் ஏன் கந்தரோடையிலிருந்து நாகதீபத்தை ஆண்ட அரசனாகவும், இசிகிராயன் அவனது பிரதிநிதியாகவும் இருக்கக்கூடாது?

இச்சாசனம் எழுதப்பட்டிருக்கும் பிராகிருத மொழியை நாட்டின் பிற இடங்களில் காணப்படுவது போன்ற 'பழைய சிங்கள மொழி' எனக் கூறிய பேராசிரியர் பரணவிதான இச்சாசனத்திலிருக்கும் சொற்களுக்கு 'சிங்கள மொழி மூலங்களையும்' எடுத்துரைத்தார். அவர் சிங்கள மொழி மூலங்கள் என எடுத்துக் காட்டிய பதங்கள் சமஸ்கிருதமும், பிராகிருதமுமே!

அப்படியிருந்தும் அவரால் 'இஸிகிரய' என்ற பெயருக்கு வடமொழிகளிலிருந்தோ, சிங்களத்திலிருந்தோ மூலத்தைக் கண்டுபிடிக்க முடியாமையால், இப்பெயர் இந்நாட்டிற்குப் புறம்பானதொரு பெயர் என முடிவெடுத்தார். 'இஸிகிரய' என்ற பெயர் 'ராயன்' என்ற பதத்திலிருந்து பெறப்பட்டிருக்கலாம் எனக் கருதிய பேராசிரியருக்கு இது ஒரு தமிழ்ப்பெயர் என்பது ஏனோ புலப்படவில்லை. தமிழில் ராயன் என்பது ஒரு குழுத்தலைவனைக் குறிப்பிடும் பெயராகும். முடிநாகராயன், மழவராயன், பல்லவராயன், வசந்தராயன், காத்தவராயன் என்பன தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் பெயர்களாகும். இசிகிராயன் (இசிகிரய) என்ற தலைவன் வல்லிபுரத்திலிருந்து நாகநாட்டின் வடகிழக்கை நிர்வகித்த கந்தரோடை அரசனின் பிரதிநிதியாக இருக்கலாம்.

நன்றி: எழுநா - சிவ. தியாகராஜா

இவ்விடத்திற்கு நாகர்கோயில் என்னும் பெயரை வழங்கிய ஆலயம் இருந்த இடத்தில் பிற்காலத்தில் கட்டப்பட்ட நாகதம்பிரான் கோயில்
Image Source - Tourismnorth

நாகர் கோயில் தீர்த்தக்கேணி
Image Source - Tourismnorth

நாகர் கோயில் சுற்றாடலில் உள்ள மற்றொரு கேணி
Image Source - Tourismnorth

இலத்தீன் அமெரிக்காவைச் சூழும் போர் மேகம்:
வெனிசுவேலாவை கவிழ்க்க அமெரிக்கா முயற்சி!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

23.09.2025

2003 ஆம் ஆண்டு, அமெரிக்கா தலைமையிலான ஈராக் மீதான படையெடுப்பில், ஈராக் அரசாங்கத்திடம் மக்களை அழிக்கும் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக பிரமாண்டமான பொய்யை அது கட்டவிழ்த்துவிட்டது. தற்போது வெனிசுவேலாவுக்கு (Venezuela) எதிரான அதன் குற்றச்சாட்டு என்னவென்றால், அது ஒரு மறைமுக போதைப்பொருள் கும்பலால் ஆளப்படுகிறது என்பதாகும். ஆனால், இதைப் பற்றி எந்தத் தகவலையும் வழங்காத வாஷிங்டன் அரசு, கடுமையான நடவடிக்கைகள் மூலம் அந்த அரசை கவிழ்க்க விரும்புகிறது.

வெனிசுவேலா அருகே போர் கப்பல்கள்:

வெனிசுவேலாவுக்கு அருகில் கரீபியன் கடல் பகுதியில் அமெரிக்காவின் போர் கப்பல்கள் நிலை நிறுத்தப்பட்டு வருவதால் அங்கு பதற்றம் நிலவுகிறது.

வெனிசுவேலா அரசை கவிழ்க்கும் திட்டத்தில், வெனிசுவேலா அரசு போதைப் பொருள் கடத்துகிறது என்ற பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி மதுரோ தலைமையிலான ஆளும் இடதுசாரி அரசை கவிழ்க்க அந்நாட்டு கடற்பகுதியில் போர் கப்பல்களை நிறுத்தி வைத்துள்ளது அமெரிக்க அரசு.

இந்த ஒரு மாதத்தில் வெனிசுவேலா கப்பல்கள் மீது 2ஆவது முறையாக தாக்குதலை அமெரிக்க இராணுவம் நடத்தியதால், பலர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுவேலாவில், மூன்றாவது முறையாக நிகோலஸ் மதுரோ அதிபராக உள்ளார். இவரை உலகின் மிகப் பெரிய போதைப் பொருள் கடத்தல்காரர்களில் ஒருவராக செயல்படுவதாகவும், போதைப் பொருள் கும்பல்களுடன் இணைந்து அமெரிக்காவுக்குள் போதைப் பொருட்களை சப்ளை செய்வதாகவும், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறி வருகிறார்.

மதுரோவை கைது செய்தால் வழங்கப்படும் பரிசுத் தொகையை, ஐம்பது மில்லயன் டாலராக, இரண்டு மடங்காக உயர்த்தி, அமெரிக்கா சமீபத்தில் அறிவித்தது.

அமெரிக்க பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்:

வெனிசுவேலா அதிபர் நிக்கோலஸ் மதுரோவுடன் தொடர்புடைய போதைப் பொருள் பயங்கரவாதிகள் அமெரிக்காவுக்குள் போதைப் பொருட்களை கடத்தியதால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இந்த தாக்குதல் அவசியம். நீங்கள் அமெரிக்கர்களை கொல்லக்கூடிய போதைப்பொருட்களை சப்ளை செய்வதால், நாங்கள் உங்களை வேட்டையாடுகிறோம்.

போதைப்பொருட்கள் சப்ளை மூலம் பல ஆண்டுகளாக மில்லியன் கணக்கான அமெரிக்கர்களை கொன்றுள்ளனர். இனி நாங்கள் அதனை பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

வெனிசுவேலாவை குறிவைக்கும் அமெரிக்கா:

அண்மையில் வெனிசுவேலாவை குறிவைத்து அமெரிக்கா தனது இராணுவப் படைகளை பெரிய அளவில் நகர்த்தி வருவதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கரீபியன் கடலில் அதிநவீன போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் கு 35 போர் விமானங்களை வெனிசுவேலாவை நோக்கி அமெரிக்க நகர்த்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளன. இதனால் வெனிசுவேலா எந்த நேரத்திலும் அமெரிக்க இராணுவத்தால் தாக்கப்படலாம் என்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

வெனிசுவேலாவிலிருந்து போதைப்பொருள் கும்பல்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதாகவும், இந்த இராணுவ நடவடிக்கை அவற்றை அடக்க மேற்கொள்ளப்பட்டுள்ளதாக டிரம்ப் நிர்வாகம் கூறியுள்ளது.

மேலும் வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு இந்த போதைப்பொருள் கும்பலுடன் நேரடி தொடர்பு இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார்.

அத்துடன் மதுரோ அரசாங்கத்தின் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன என்று டிரம்ப் சமீபத்தில் சமூக ஊடகங்களில் நேரடியாக எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வெனிசுவேலா அதிபருடன் முறுகல்:

அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது முதல் பதவி காலத்திலேயே வெனிசுவேலா அதிபர் நிக்கோலஸ் மதுராவுடன் (Nicolas Maduro) மோதல் போக்கை கடைபிடித்து வந்தார். வெனிசுவேலா அதிபர் மதுராவை போதைப்பொருள் பயங்கரவாதி என குற்றஞ்சாட்டியுள்ள டிரம்ப் அரசு, 2020 ஆம் ஆண்டு அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

வெனிசுவேலா மீது பொருளாதார தடை விதித்துள்ள அமெரிக்கா, அந்த அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை சொத்துக்களை அமெரிக்காவில் முடக்கியுள்ளது.

அமெரிக்காவில் போதைப்பொருள் நுழைவதை தடுக்க, அமெரிக்காவின் அனைத்து வளங்களையும் பயன்படுத்த டிரம்ப் அரசு தயாராக உள்ளது. டிரம்ப் நிர்வாகத்தின் பார்வையில் மதுரோ சட்டபூர்வ அதிபர் இல்லை, அமெரிக்காவில் போதைப்பொருள் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட கும்பலின் தலைவர் என வெள்ளை மாளிகை ஊடக செயலாளர் கரோலின் தெரிவித்துள்ளார்.

விரையும் அமெரிக்க போர் கப்பல்கள்:

இந்நிலையில், யுஎஸ்எஸ் சான் அன்டோனியோ(USS San Antonio), யுஎஸ்எஸ் இவோ ஜிமா(USS Iwo Jima) மற்றும் யுஎஸ்எஸ் ஃபோர்ட் லாடர்டேல்(USS Fort Lauderdale) ஆகிய 3 ஏவுகணை எதிர்ப்பு போர் கப்பல்களை வெனிசுவேலா கடற்பரப்பு நோக்கி அமெரிக்கா அனுப்பியுள்ளது.

2,200 கடற்படையினர் உட்பட 4,500 அமெரிக்கா வீரர்களை ஏற்றி செல்லும் இந்த கப்பல்கள் வெனிசுவேலா கடற்பகுதி



முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

உலக நாடுகள் இடையே போர்களை நிறுத்தி வருவதாக கூறும் டிரம்ப். இலத்தீன் அமெரிக்காவில் போர் கப்பல்களை நகர்த்துவதன் மூலம் போதைப்பொருள் ஒழிப்பு நடடிக்கை என்ற பெயரில் வெனிசு-வேலா மீது தாக்குதல் நடத்த உள்ளாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அமெரிக்க அரசாங்கமானது, மீண்டும் பாரிய பொய்களை கட்ட-விழ்த்துவிடும் வழிமுறையை நாடுவதுடன், மறுக்க முடியாத அளவுக்கு பாரிய ளெய்களைச் சொல்லி போருக்கான ஒரு திட்டத்தை உருவாக்க முயல்கிறது.

நோக்கி வந்துள்ளன.

இந்நிலையில், 4.5 மில்லியன் வீரர்களுடன் முழு நாட்டையையும் பாதுகாக்கும் சிறப்பு திட்டத்தை செயல்படுத்துவேன் என நிக்கோலஸ் மதுரா தெரிவித்துள்ளார். வெனிசுவேலாவில் ட்ரோன் பறப்பதற்கும் தடை விதித்துள்ளார். இது கடல் தாக்குதலை விட வான் தாக்குதலை எதிர்பார்ப்பதற்கான அறிகுறியாக கருதப்படுகிறது.

சூரியர்களின் கூட்டு:

சூரியர்களின் கூட்டு என்பது, ஒரு அரசாங்கமாக மாறுவேடத்தில் செயற்பட்டுவரும் ஒரு குற்றவியல் அமைப்பாகும். மதுரோ ஆட்சி ஒரு அரசாங்கம் அல்ல. அது ஒரு சட்டபூர்வமான அரசாங்கம் அல்ல. அதை நாங்கள் ஒருபோதும் அப்படி அங்கீகரிக்கவில்லை. அவர்கள் ஒரு தேசிய பிரதேசத்தை, ஒரு நாட்டின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்ட ஒரு குற்றவியல் நிறுவனம் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோவின் அச்சுறுத்தலாக கூறியுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் பல் இருந்த போதிலும், அமெரிக்க அரசாங்கம் "சூரியர்களின் கூட்டு" என்ற அமைப்பின் போதைப்பொருள் கடத்தல் குறித்து நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்ட எந்த ஆதாரத்தையும் இதுவரை வழங்கவில்லை. அல்லது அப்படி ஒரு அமைப்பு இருப்பது கூட நிரூபிக்கவும் இல்லை.

அவர்கள் மதுரோ மற்றும் ஆளும் வெனிசுவேலாவின் ஐக்கிய சோசலிஸ்ட் கட்சியின் (PSUV) துணைத் தலைவரும் உள்துறை அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் டியோஸ்டாடோ கபெல்லோவை மட்டுமே இந்த கும்பலின் தலைவர்கள் என்று பெயரிட்டுள்ளனர்.

இவ்வாறு அமெரிக்க அரசாங்கமானது, மீண்டும் பாரிய பொய்களை கட்டவிழ்த்துவிடும் வழிமுறையை நாடுவதுடன், மறுக்க முடியாத அளவுக்கு பாரிய பொய்களைச் சொல்லி போருக்கான ஒரு திட்டத்தை உருவாக்க முயல்கிறது.

வெனிசுவேலா போராட தயார்:

வெனிசுவேலா அரசு சூரியர்களின் கூட்டு என்ற அமைப்பு ஒன்று இருப்பதையே மறுத்துள்ளதுடன், அதற்கு எதிராக விடுக்கப்பட்ட போலி அமெரிக்க அச்சுறுத்தல்களையும் கண்டித்துள்ளது. வெனிசுவேலா கடற்கரையில் அமெரிக்க நாசகாரி கப்பல்களை நிலைநிறுத்தியதற்கு மதுரோ தனது அரசாங்கத்திற்கு விசுவாசமான மக்கள் போராளிகள் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தோடு நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கும் தீவிர வலதுசாரி தீவிரவாதிகளின் பயங்கரவாத செயல்களைத் தூண்டுவதற்காக இந்த நடவடிக்கை ஒரு கொடூரமான உளவியல் போர்ப் பிரச்சாரம் என்று வெனிசுவேலா உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

மதுரோவுக்கு முன்பு பதவியிலிருந்த ஹயூகோ சாவேஸ்க்கு எதிராக, 2002இல் அமெரிக்க ஆதரவிலான தோல்வியுற்றது. அப்போது ஆட்சிக்கவிழ்ப்பு சதி போன்ற நிகழ்வுகளை அமெரிக்க அரசு வெளிப்படையாக நடத்தியது.

அந்நாட்டின் பொதுமக்கள்-இராணுவம்-பொலிஸ் கூட்டணி மீண்டும் ஒருமுறை அமெரிக்க அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகிறது.

www.sangathamil.ca

நானுமே சாட்சியாய்:

- பவித்திரா ராகவன் -

கடந்த ஒரு மாத காலமாக எனது நாட்கள் பரபரப்பும் பதட்டங்களும் நிறைந்தனவாய், நிற்கக் கூட நேரமின்றி சுழன்று கொண்டிருந்தன. காலைநேர பரபரப்பு என்பது எனக்கொன்றும் புதிதல்ல. நீதிமன்ற வளாகத்தில் காலை 9 மணிக்கு எப்படியேனும் கால் வைத்துவிட வேண்டும். நான் வசிப்பதோ மல்லாகத்தில். எனது சட்ட அலுவலகமோ வேம்படி பாடசாலைக் கருகில். நான் வழக்காட வேண்டியதோ பெருவாரியாக யாழ்ப்பாண நீதிமன்றத்தில் .

அப்படியென்றால் காலை நேர பரபரப்பு தேவையானதே. ஆரம்பத்தில் நான்தான வண்டியை ஓட்டிச்செல்வேன். இப்போதெல்லாம் வேலைப்பளு அதிகம் என்பதால் ராதாக்கிருஷ்ணனை வண்டி ஓட்டுனராக வைத்துக் கொண்டேன். ராதாக்கிருஷ்ணனும் மல்லாகத்தை சேர்ந்தவன்தான். எங்கள் வீட்டிற்கருகே வசிக்கிறான். ஏழ்மையான குடும்பம். பெற்றோரை இளம் வயதிலயே இழந்தவன். பாட்டியால் வளக்கப்பட்டவன். எவ்வளவோ முயன்றும் படிப்பு அவனுக்கு ஏறவே இல்லை. ஆனாலும் பண்பானவன் நேர்மையானவன் அவனது பாட்டி வீடு எங்கள் அம்மம்மாவின் வீட்டுக்கு அருகில்தான்.

அவனது பாட்டி,

“தம்பி, இவனை உனக்கு உதவியாளனாக வைத்துக்கொள்வாயா?” எனக் கேட்ட போது எவ்வித தயக்கமும் இன்றி ஏற்றுக் கொண்டேன்.

1996ம் ஆண்டு காலப்பகுதியல் எப்போதெல்லாம் பாட்டியின் வீட்டிற்கு செல்வேனோ, அப்போதெல்லாம் இவனது எட்டு வயது அக்காவுடன் விளையாடுவதுண்டு. அவள் பெயர் சுமதி. பார்ப்பதற்கு அழகாய் இருப்பாள். எப்போதும் இரண்டு சடை பின்னி, கனகாம்பரம் பூ அணிந்திருப்பாள். நான் “சுள்ளக்கா” “சுள்ளக்கா” என்றழைப்பேன். அப்போது எனக்கு வயது நான்கிருக்கும்.

ராதாக்கிருஷ்ணனோ பிறந்து ஐந்து மாதக் குழந்தை. ஏணையில் உறங்கும் அவனை நானும் சுள்ளக்காவும் கிள்ளி விட்டு ஓடுவதுண்டு. குறும்பை பொறுக்கி தேர் செய்து விளையாடுவதுண்டு. பக்கத்துக் காணிகளில் மேயும் மாடுகளுக்கு குறுணிக் கற்களை ஏறிந்து விட்டு ஓடுவதுண்டு. நான் மட்டுமல்ல. என் தங்கையும் எங்கள் கூட்டணியில் இணைந்து கொள்வாள். இன்று போல் பகைமைக் கண்ணோடோ, அச்சத்தோட அயலவர் ஒருவரையொருவர் பார்த்ததில்லை.

கோவிட் காலங்களில் கதவுகளை அடைத்து, உதவிக்கரம் நீட்ட அஞ்சி, பகைவர் போல் வாழ்ந்ததுமில்லை. எவ்வாறேனும் திடீரென சுள்ளக்கா எம்முடன் விளையாட வருவதில்லை அவள் எங்கேயெனக் கேட்ட போது பாட்டி,

“சுமதி இனி வர மாட்டாள்” என்றாள்.

பல நாட்கள் சுமதியின் வீட்டருகே ஊரார் கூடுவர். சிலவேளை அவள் அம்மாவின் அழுங்குரலோசை பெரும் சத்தமாய்க் கேட்கும். ராதாக்கிருஷ்ணன் பகல்பொழுதுகளில் எங்கள் வீட்டில் வரவேற்பறையில் இருப்பான். நானும் தங்கையும் அவனருகே காவலுக்கு இருப்போம். அப்போதும் ஏணையில் உறங்கும் அவனைக் கிள்ள சுள்ளக்கா வரவில்லை. எங்கள் வீட்டிலிருந்து. பெரிய தட்டில் மதிய சாப்பாடு போகும்.

ஒரு நாள், திடீரென , ஊரே சுள்ளக்கா வீட்டில் கூடியது. அழுகுரலோசைகள் ஒயவில்லை. தோரணம் கட்டியிருந்தார்கள். அன்றும் ராதாக்கிருஷ்ணன் எங்கள் வீட்டில்தான் விளையாடிக் கொண்டிருந்தான். அம்மா என்னையோ, தங்கையையோ சுள்ளக்கா வீட்டிற்கு அழைத்துச் செல்லவில்லை.

கொஞ்ச நாட்கள் கழித்து சுள்ளக்கா வீட்டிற்குச் சென்ற போதும், அன்றும் அவள் எம்முடன் விளையாடவரவில்லை. அவள் அம்மாவின் படம் சுவரில் மாட்டப்பட்டு மாலை போடப்பட்டிருந்தது. அவள் பாட்டி மட்டும் அம்மாவிற்கு ஏதோ சொல்லிக் கொண்டிருநதாள். அவள் அப்பாவும் அங்கிருக்கவில்லை. அந்த வயதில் எவ்விதப் புரிதலும் எனக்கு இருக்கவில்லை.

வளர்ந்த பிறகு, சுள்ளக்கா ஒரு நாள் திடீரென காணாமற் போனாள் என்றும், ஊரார் திரண்டு பாடசாலை முதற்கொண்டு எங்கெல்லாம் தேடியும் அவள் கிடைக்கவில்லையென்றும், அவளைக் காணவில்லை என பொலிஸில் முறையிடச் சென்ற அப்பாவும் திரும்பி வரவேயில்லை என்றும் எனது பதின்நான்கு வயதில் அம்மா சொல்லிக் கேட்டேன்.

இன்று வரை என்னால் சுள்ளக்காவை மறக்க முடிவில்லை. இறுதியாக ஒருநாள் பாடசாலை விட்ட நேரம் பூப்போட்ட மஞ்சள் சட்டையில் மதிய நேரம் பார்த்த ஞாபகம்.

“சேர், இன்றைக்கு யாழ்ப்பாண நீதிமன்றிற்கா? ராதாக்கிருஷ்ணன் குரல் கேட்டு சுதாகரித்துக் கொண்டேன்.

“ராதா, எத்தனை தடவை சொல்வது. என்னை சேர் என்று கூப்பிடக்கூடாதென்று. அண்ணா என்று கூப்பிடு. இல்லா விட்டால் பெயர் சொல்லிக் கூப்பிடு”

“இல் சேர், கோட்டில், clients முன்னால் அப்படிக் கூப்பிட்டால் நல்லாயிருக்காது…,”

“சரி விடு. நேற்றைக்கு ஏதோ கதைக்க வேணுமென்றாய், என்ன சொல்லு”

“அம்மம்மா உங்களோட கதைக்க வேணுமாம். அக்காவிடையும் அப்பாவிடையும் விசயம் பற்றி….. செம்மணிக் குழி தோண்டத் தொடங்கி, பல காணாமற் போனவர்கள் கிடைத்திருக்கிறார்கள். ஒரு வேளை அக்காவும் …”

“ராதா இரவுக்கு வீட்டிற்கு வாரன்…”

மற்றவர்களைப் பொறுத்தவரைதான் நான் சட்டத்தரணி. ராதாக்கிருஷண்ணுக்கும் சுள்ளக்காவிற்கும் அவர்கள் சகோதரன். ஆனால் சொல்லப்போனால் சுள்ளக்காவிற்கும் அப்பாவிற்கும் நடந்த விடயங்கள் பற்றி அம்மா பகிர்ந்த விடயங்களைத் தாண்டி யாரிடமும் எதுவும் கேட்டதில்லை.

ராதாக்கிருஷ்ணன் பத்து வருடங்களாக என்னுடன் வேலை செய்கிறான். அவனிடம் கூட கேட்டதில்லை. சென்ற வாரம் கூட ராதாவின் அம்மம்மா இந்த தள்ளாடும் வயதிலும் மல்லாதத்திலிருந்து செம்மணியில் நடந்த கவனியீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டாள் என ராதா சொல்லிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அன்று மட்டுமல்ல, எங்கெல்லாம் காணமற் போனோரின் உறவுகள் கூடி, தங்கள் ஆதங்கத்தை போராட்டமாகவோ, கவனயீர்ப்பாகவோ, முறைப்பாடாகவோ சொல்கிறார்களோ அங்கெல்லாம் சுள்ளாக்காவின் அம்மம்மா இருப்பாள்.

“ஐயோ -- ராசா என்ட பேர்த்திக்கும் மருமகனுக்கும் என்னாச்சு…..” என்ற அவள் ஓலத்தை தொலைக்காட்சிகளும், தனியார் ஊடகங்களும் வெளியிடத் தவறவில்லை.

யதார்த்தத்தில் அவர்களுக்கு என்ன நடந்தது என்று எனக்கும் புந்திருந்தது. சுள்ளக்காவின் அம்மம்மாவின் கேள்விக்கோ, தேடலுக்கோ விடை கிடைக்கப் போவதில்லை என்பதை நான் மட்டுமல்ல, அந்த மூதாட்டியும். நன்கே அறிந்திருந்தாள். இன்று இரவு நான் ராதாவின் வீட்டிற்கு வருவதாய் சொன்னதும் அவளை ஆறுகல் படுத்தவே. இன்னும் சொல்லப் போனால் என் சுள்ளக்காவிற்கு என்னதான் நடந்தது என தெரிந்து கொள்ள வேண்டும். என்ற ஏக்கம் என் மனதில் பல நாட்களாகவே இருக்கிறது.

இரவு 7 மணியிருக்கும்

இன்றும் ராதாவின் வீட்டில் அவன் அம்மாவின் படத்திற்கு மட்டுமே மாலை போடப்பட்டிருந்தது. மூதாட்டியின் நம்பிக்கை இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டேன்.

“பாட்டி சொல்லுங்க….. நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்”.

“தம்பீ, உனக்கு சுமதியை ஞாபகம் இருக்கிறதா?….”

எப்படி மறப்பேன். அவளைப் கடைசியாக மஞ்சள் பூ போட்ட சட்டையுடன் பார்த்த நாள் இன்னும் என் கண் முன்தான் இருக்கிறது, என்று வார்த்தை வந்தாலும்…..”…ம் பாட்டி” என்று மௌனம்” காத்தேன்.

“ராதா, அக்காவோட அந்த பொருட்களை எடுத்து வா!” . என்றாள்.

ராதாவும் ஒரு பெட்டியை எடுத்து வந்து கொடுத்தான்.

“தம்பி இந்த சட்டைதான் கடைசியாக சுமதி அணிந்திருந்தாள். அன்று அவளுக்கு பிறந்த நாள். ஸ்கூலுக்கு சீருடை போடல.. புதுச் சட்டை போட்டிருந்தாள். Chitchat சொக்கலேட் Box இரண்டு வாங்கிக் கொடுத்தனாங்க. இந்த ஒரு சப்பாத்து மட்டும் தான் கிடைத்தது. மற்ற சப்பாத்துக் கூட கிடைக்கவில்லை” என்று கூறியவள் இந்தப் பெட்டியை என்னிடம் கொடுத்தாள்.

அந்த பெட்டியைத் திறந்து பார்த்த எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஸ்தம்பித்து நின்றேன். ஆம் அதே மஞ்சள் பூப்போட்ட சட்டை. அவர் எனக்குக் கொடுத்த Chitchat Chocolate…….

அப்படியென்றால் ….அன்று……….

”டேய் சுகு… - இந்தா Chitchat நான் இன்றைக்கு உன்னோட விளையாட வர மாட்டேன். மூன்று அண்ணாக்களும் எனக்கு பெரிய Gift தரப்போராங்களாம்.. நான் Giftய வாங்கிட்டு வாரன். அம்மா கேட்டா சொல்லாத… இந்த 5 Extra Chocolate.... Byee.....TaTa……”

இப்போதுதான் எனக்கு சகலமும் புரிந்தது. அன்று எனக்கு அறியாத வயது தான். புரியாத விடயம்தான்.. ஆனாலும் 5 Extra Chocolates நான் விலை போகாது இருந்திருந்தால்? அவள் அம்மாவிடம் போய் சொல்லியிருந்தால்? ஒருவேளை என் சுள்ளக்கா உயிரோடு இருந்திருப்பாள். இன்று அவளுமில்லை. அவள் அப்பாவுமில்லை. பார்த்த இறுதி சாட்டியாய் நான்…

“இந்தாங்க சேர், உங்களுக்குப் பிடித்த Chitchat அக்காவிக்கு நியாயம் கிடைக்குமா?..” ராதாவின் கேள்விக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் அவனைப் பார்க்கிறேன் 5 Extra Chocolates க்கு விலைபோன என்னைப்போல் சாட்டிகளும் சாட்டியங்களும்” மௌனம் காக்கும் வரை காணமற் போனவர்கள் காணாமற் போனவர்களே.

விஜய்; கமல்; போராளிகள்; தேர்தல்?

27.09.2025

நடிகர் விஜய் தொடங்கியிருக்கும் கட்சி தொடர்பாக அண்மையில் நடிகர் கமலஹாசன் ஒரு கருத்துத் தெரிவித்திருந்தார். கூட்டத்துக்கு வருபவர்கள் எல்லாரும் வாக்குப்போட மாட்டார்கள் என்ற பொருள்பட அக்கருத்து அமைந்திருந்தது. அது விஜய்க்கு மட்டுமல்ல தனக்கும் பொருந்தும் என்று கமலஹாசன் கூறியிருக்கிறார். சமூகத்தில் வெவ்வேறு துறைகளின் மூலம் தாங்கள் பெற்ற பிரபல்யத்தை, செல்வாக்கை தேர்தலில் முதலீடு செய்வது என்பது தேர்தல்மைய அரசியலில் ஒரு பிரதான போக்கு. ஆனால் அதற்காக ரசிகர்கள் எல்லாருமே வாக்களிப்பார்கள் என்று இல்லை.மாணவர்கள் எல்லாருமே ஆசிரியருக்கு வாக்கு போடுவார்கள் என்று இல்லை. சமூகத்துக்காக தியாகம் செய்தவர்கள் எல்லாரும் தேர்தலில் வெல்வார்கள் என்று இல்லை.

உதாரணமாக, தமிழ்த் தேசிய அரசியலில் ஆசிரியர்கள் வரதராஜன், ஐங்கரநேசன், அருந்தவபாலன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். குறிப்பாக வரதராஜன் தேர்தல் கேட்ட பொழுது மற்றொரு ஆசிரியர் என்னிடம் சொன்னார் “அவருடைய மாணவர்கள் வாக்களித்தாலே அவர் நாடாளுமன்ற உறுப்பினராக வந்து விடுவார். ஆனால் மாணவர்களாக இருப்பது வேறு வாக்காளர்களாக இருப்பது வேறு. எல்லா மாணவர்களும் ஆசிரியருக்கு வாக்களிப்பார்கள் என்று இல்லை” என்று.

அப்படித்தான் இந்தியாவில் மணிப்பூரில் இரோம் ஷர்மிலா என்ற பெண் செயற்பாட்டாளர் அங்கு அமுலில் இருந்த சிறப்பு ஆயுதப்படைச் சட்டத்தை திரும்பப் பெறக் கோரி 15 ஆண்டுகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவரை மணிப்பூரின் “இரும்புப் பெண்மணி” என்று அழைப்பார்கள். பின்னர் அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு 2017ஆம் ஆண்டு மணிப்பூர் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் எந்த மக்களுக்காக அவர் 15 ஆண்டுகள் உண்ணாமல் போராடினாரோ, அதே மக்கள் அவரைக் குரூரமாக நிராகரித்தார்கள். அவருக்கு 100 வாக்குகள்கூட கிடைக்கவில்லை. கட்டுப் பணமும் இல்லை.

தமிழ் தேசியப் பரப்பில், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட பலரும் பின்னர் தேர்தல் கேட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருகிறார்கள். எனினும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நீண்ட காலம் ஈடுபட்ட அமைப்பாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாருமே கடந்த 16 ஆண்டுகளிலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வெற்றிகளை பெற்றதில்லை. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெற்றபின் கட்சிகளைத் தொடங்கியவர்களும் வெற்றி பெறவில்லை. ஏனைய கட்சிகளில் இணைந்து போட்டியிட்டவர்களுக்கும் வெற்றிபெறவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், ஒரு பெண், போரில் காலை இழந்தவர், வன்னியில் போட்டியிட்டார். அவரை வெற்றிபெற வைப்பதற்காக அவருடைய நண்பர்கள் ஆயிரக்கணக்கான வீடுகளுக்குப் போய் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அவருக்கு கிடைத்தது இரண்டு ஆயிரத்துச் சொச்சம் வாக்குகள்தான்.

தமிழ்த் தேசியப் பரப்பில் ஏனைய கட்சிகள் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எல்லாப் போராட்டங்களிலும் பொன் மாஸ்டர் காணப்படுவார். அவர் முன்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தவர். அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தல் கேட்டிருக்கிறார். ஆனால் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக வரத் தேவையான வாக்குகளைக் கூட மக்கள் அவருக்குக் கொடுக்கவில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தன்னை கொள்கையில் விட்டுக் கொடுப்பற்ற ஒரு கட்சியாகக் கூறிக் கொள்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் லட்சியத்தை விட்டுக் கொடுப்பின்றி பின்பற்றும் ஒரு கட்சியாகவும் அது தன்னைக் காட்டிக் கொள்கிறது. அப்படியென்றால் ஒவ்வொரு மாவீரர் நாளின் போதும் துயிலுமில்லங்களில் சிந்தப்படும் கண்ணீர் யாவும் அந்தக் கட்சிக்குத்தானே வாக்குகளாகத் திரள வேண்டும்? ஏன் அப்படி நடக்கவில்லை?

முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்கத்தவர்களால் ஏன் தேர்தல்களில் பெரு வெற்றி பெற முடியவில்லை? அவர்களுக்கு தேர்தல் மொழியில் பேசத் தெரியவில்லையா? அல்லது அவர்களைச் சமூகம் போர்க்களத்துக்கு மட்டும் உரியவர்களாகப் பார்க்கின்றதா? தேர்தல் களத்துக்கு உரியவர்கள் அல்ல என்று கருதுகின்றதா?

இதே கேள்விகளைச் சிங்கள வாக்காளர்களை நோக்கியும் கேட்கலாம். ஏனென்றால் சில ஆண்டுகளுக்கு முன்பு தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் அடித்தளமாக இருந்தவர்கள் என்று கருதப்படுகின்ற அமைப்புகளில் ஒரு பகுதி ஒன்றாகத் திரண்டு குடைச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டன. ஆனால் அவர்களுக்கு அற்பசொற்ப வாக்குகள் தான் கிடைத்தன. நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தம் 11 ஆயிரம் வாக்குகள் ஜனாதிபதி தேர்தலில் கிட்டத்தட்ட 30,000 வாக்குகள். அதேசமயம் போராட்டங்களின் விளைவுகளை தேர்தல் மொழியில் கவர்ச்சியாக மொழிபெயர்த்த ஜேவிபி மூன்றில் இரண்டு பெரும்பான்மையப் பெற்று இப்பொழுது நாட்டை ஆட்சி செய்கின்றது.

அப்படியென்றால் சிங்கள மக்கள் தங்களுக்காக வீதியில் இறங்கிப் போராடியவர்களை அல்லது அந்தப் போராட்டங்களைப் பின்னிருந்து ஊக்குவித்தவர்களை ஏன் தோற்கடித்தார்கள் ?

போராளிகள் வேறு அரசியல்வாதிகள் வேறு என்று மக்கள் கருதுகின்றார்களா? போராளிகள் அரசியல்வாதிகளாக மாறுவதை சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லையா ? அல்லது போராளிகளுக்கு தங்கள் போராட்டத்தை தேர்தல் மொழியில் மொழிபெயர்க்கத் தெரியவில் லையா? அல்லது உண் மையான அர்ப்பணிப்புக் கும் நேர்மைக்கும் விசுவாசத்திற்கும் தியாகத்துக்கும் தேர்தல் அகராதியில் இடமில்லையா ?

ஆனால் ஜேவிபியும் முன்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டதையும் குரூரமாக நசுக்கப்பட்டதையும் சுட்டிக் காட்ட வேண்டும். கடந்த அரை நூற்றாண்டு காலப் பகுதிக்குள் அவர்கள் தேர்தல் மொழியை நன்கு கற்றுத் தேர்ந்து விட்டதனால்தான் இம்முறை ஆளுங்கட்சியாக வர முடிந்திருக்கின்றது. ஜேவிபி தன்னை எம்பிபியாக உருமாற்றிக் கொண்டது. அதன் விளைவாகத்தான் இப்பொழுது நாட்டை ஆழ்கின்றது.

ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தியாகங்கள், இரோம் சர்மிளா போன்றவர்களின் தியாகம் என்பவற்றோடு நடிகர் விஜயின் செல்வாக்கை ஒப்பிட முடியாது. ஆனால் இங்கு இந்த கட்டுரையின் குவிமையம் என்னவென்றால் தேர்தல் அரசியலில் வெற்றி பெறுவதற்கான தகமைகள் எவை எவை என்ற கேள்வி தான். மிக உயர்வான தகமைகள் என்று கருதப்படும் தியாகம், அர்ப்பணிப்பு, நேர்மை போன்றவற்றைத் தேர்தல் மொழியில் மொழிபெயர்க்கத் தெரியாத போராளிகள் தொடர்ந்து தோற்கடிக்கப்படுகிறார்கள். அரசியலில் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பவர்கள் தொடர்ந்து பின்தள்ளப்படுவார்கள். மாறாக அரசியலை ஒரு பிழைப்பாக முன்னெடுப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்.

தமிழகத்தில் நல்லகண்ணு என்று ஓர் இடதுசாரி இருக்கிறார். நேர்மையானவர், கண்ணியமானவர், ஒரு சன்னியாசியைப் போன்றவர், அர்ப்பணிப்பு மிக்கவர். ஆனால் அவர் தேர்தலில் வென்றதில்லை. இது தேர்தல் ஜனநாயகத்தில் உள்ள அடிப்படைப் பலவீனம்.

வாக்காளர்களின் நாடித்துடிப்பை நன்கு அறிந்தவர்கள், தேர்தல் அரசியலின் கள்ளத்தனங்களை விளங்கிக் கொண்டவர்கள் வெற்றி பெறுகிறார்கள். இங்கு வெற்றியைத் தீர்மானிப்பது வாக்காளர்களின் அறியாமையா? அல்லது அறிவா? அல்லது விழிப்பற்ற பொதுப் புத்தியா ?அல்லது குறிப்பிட்ட வேட்பாளரின் அதிர்ஷ்டமா? ரஷ்யாவில் பிறந்து அமெரிக்காவில் குடியேறிய, அரசியல் செயற்பாட்டாளராகிய எம்மா கோல்ட்மன் கூறுவதுபோல, “வாக்களிப்பு எதையாவது மாற்றுமாக இருந்தால், அவர்கள் தேர்தலைச் சட்டவிரோதமாக்கி விடுவார்கள்” என்பதுதான் சரியா ?

நன்றி: நிலாந்தன்

முல்லைத்தீவில் எல்லைக் கிராமத் தமிழ் மக்களின் விவசாய நடவடிக்கைக்கு இடையூறு; தடைகளை உடைத்து பயிர்ச் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

18.09.2025

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணிஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் தமது பூர்வீக மானாவாரி விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடும்போது வனவளத்திணைக்களம் மற்றும் பொலிஸ்விசேட அதிரடிப்படையினர் தடுத்துவருகின்றனர்.

இந்நிலையில் குறித்த எல்லைக்கிராம மக்களின் விவசாய நடவடிக்கைக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தொடர்ந்தும் தடைகள் ஏற்படுத்தப்பட்டால் தடைகளை உடைத்தெறிந்து விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

குறித்த எல்லைக்கிராமத் தமிழ் மக்களின் அழைப்பையேற்று குறித்த பகுதிக்கு 18.09.2025இன்று நேரடியாகச் சென்று நிலமைகளை ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச்சேர்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களிலிருந்து இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறாக குறித்த எல்லைக்கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களை அவர்களுடைய பூர்வீக வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றிவிட்டு, உடனடியாக அப்பகுதித் தமிழ்மக்கள் பயன்படுத்திவந்த நீர்ப்பாசனக்குளங்கள் மற்றும் குறித்த குளங்களின் கீழான விவசாயநிலங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழலில் இவ்வாறு வெளியேற்றப்பட்ட குறித்த ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த எல்லைக்கிராமமக்கள் யுத்தம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு கடந்த 2011ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே தமது பூர்வீக வாழிடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்ட பிற்பாடு அந்தமக்கள் தாம் பூர்வீகமாக நெற்செய்கையில் ஈடுபட்டுவந்த முந்திரிகைக்குளம், ஆமையன்குளம், சாம்பான்குளம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டபோது தாம் நெற்செய்கைக்குப் பயன்படுத்தி வந்த குளங்கள் மற்றும் அக்குளங்களின் கீழான வயல் நிலங்களை பெரும்பான்மை இனத்தவர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர்.

இந்நிலையில் பெரும்பான்மையினத்தவர்களால் அபகரிக்கப்பட்டிருந்த தமது பூர்வீக விவசாயக் குளங்களையும், அவற்றின் கீழான வயல்நிலங்களையும் விடுவிக்குமாறு கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி தமிழ்மக்கள் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரால் தொடர்ந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதும் குறித்த காணிகள் விடுவிக்கப்படவில்லை.

குறித்த நீர்ப்பாசனக்குளங்களின் கீழான வயல்நிலங்கள் பலவற்றுக்கு தமிழ் மக்களிடம் ஆவணங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த நீர்ப்பாசன வயல் காணிகளை ஆக்கிரமித்துள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு கடந்த 2013ஆம் ஆண்டுகாலப்பகுதியில் அப்போதைய அரசால் மகாவலி அதிகாரசபையின் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக தமது பூர்வீக நீர்ப்பாசனக்குளங்களையும், அவற்றின் கீழான நீர்ப்பாசன வயல் நிலங்களையும் இழந்துள்ள குறித்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணிப் பகுதி எல்லைக்கிராமத் தமிழ் மக்கள் மானாவாரி நிலங்களிலேயே தற்போது தமது நெற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இத்தகையசூழலில் குறித்த மானாவாரி விவசாய நிலங்களில் தமிழ்மக்கள் நெற்செய்கை மேற்கொள்ளும்போது வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை என்பன தொடர்ச்சியாக இடையூறுகளை ஏற்படுத்திவருகின்றன.

தமிழ் மக்களுக்குரிய குறித்த மானாவாரி விவசாயக் காணிகளை பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமிக்கவும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இத்தகைய பல்வேறு இடயூறுகளுக்கு மத்தியிலேயே கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் தமது மானவாரி விவசாய நிலங்களில் நெற்பயிற்செய்கை மேற்கொண்டுவருகின்றனர்.

அந்தவகையில் மாரியாமுனை, கன்னாட்டி, எரிஞ்சகாடு, மேல்காட்டுவெளி, கீழ்காட்டுவெளி, பாலங்காடு, நாயடிச்சமுறிப்பு, சூரியனாறு, பூமடுகண்டல், சிவந்தாமுறிப்பு, வெள்ளைக்கல்லடி உள்ளிட்ட தமது பூர்வீக மானாவரி விவசாய நிலங்களில் தமிழ் மக்கள் இம்முறையும் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களை முன்னெடுத்திருந்தனர்.

இவ்வாறு பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கான தயார்ப்படுத்தல் வேலைகளில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களை வனவளத்திணைக்களத்தினரும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து தடுத்துவருவதாக அப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக கடந்த 29.08.2025 அன்று இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும்இவ்விடயம் தொடர்பாக அப்பகுதி விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் அவர்களுடைய விவசாய நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு வனவளத் திணைக்களம் உள்ளிட்ட எவரும் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாதெனவும் அக்கூட்டத்தில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இருப்பினும் தொடர்ந்தும் வனளவத்திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தொடர்ந்தும் தமக்கு நெற்செய்கை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தல் வேலைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்திவருவதாக அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இந்தவிடயம் தொடர்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு முறையீடு செய்துமிருந்தனர்.

இந்நிலையில் குறித்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய எல்லைக்கிராம மக்களின் முறைப்பாட்டையடுத்து வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் 18.09.2025இன்று கொக்குத்தொடுவாய் கமநல சேவை நாலயத்திற்குச் சென்று, கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தருடன் கலந்துரையாடியிருந்தார்.

அதனைத்தொடர்ந்து குறித்த விவசாயநிலங்களுக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நிலமைகளைப் பார்வையிட்டதுடன், பிரச்சினைகள் தொடர்பில் மக்களிடம் கேட்டறிந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி உள்ளிட்ட எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களின் நீர்ப்பாசனக் குளங்களும் அவற்றின்கீழான நீர்ப்பாசன விவசாய நிலங்களும் ஏற்கனவே பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்த எல்லைக்கிராமங்களைச் சேர்ந்த எமது தமிழ் மக்கள் மானாவாரி விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கையை மாத்திரமே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் எமது மக்கள் மானாவரி விவசாய நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வதற்கும் வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், பொலிஸ்விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட தரப்பினரால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாக மக்கள் முறையிடுகின்றனர்.

இது தொடர்பில் கடந்தமாதம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பேசப்பட்டது. எமது மக்களின் நெற்செய்கை நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தக்கூடாதெனவும் தீர்மானமும் எட்டப்பட்டது.

இவ்வாறிருக்கு தொடர்ந்தும் எமது மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறகேளை ஏற்படுத்துவது பொருத்தமான விடயமில்லை.

இவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்தினால் இந்தமக்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்படும். எனவே எமது மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றவகையில் செயற்படும் திணைக்களங்களின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தொடர்ந்தும் எமது மக்களுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் அந்த தடைகளை உடைத்து எமது மக்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

www.sangathamil.ca

உலக வணிகம் ULAGA VANIKAM

2026



LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.

தொடர்புகளுக்கு 437.345.4203

மேற்குலகில் குடியேற்ற எதிர்ப்பு நிலை:
ஆஸி, பிரித்தானியாவில் வலதுசாரி இனவாதம்?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

19.09.2025

அண்மையில் அவுஸ்திரேலியாவிலும், இலண்டனில் நடைபெற்ற குடியேற்ற எதிர்ப்புப் போராட்டங்கள், அங்கு வாழும் புலம்பெயர்ந்தோர், குறிப்பாக தென் கிழக்காசிய சமூகத்தினரிடையே பெரும் கவலையையும் விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

இலண்டனில் தீவிர வலதுசாரிகள் பேரணி, பல தசாப்தங்களில் பிரிட்டன் கண்டிராத வகையில், புலம்பெயர்ந்தோருக்கு எதிரான மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாக மாறியது. 2025 செப்டம்பர் 13ஆம் திகதி ஒன்றறை இலட்சம் பேர் பேரணியில் பங்கேற்றதால் மொத்த நகரமே குலுங்கியது. தீவிர வலதுசாரி ஆதரவாளரான டாமி ராபின்சன் தலைமையில் “யுனைட் தி கிங்டம் (Unite The Kingdom) என்ற பெயரில் இந்த பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இதற்கு முன்பாக அவுஸ்திரேலியா நாடு முழுவதும் பல முக்கிய நகராங்களில் ஆகஸ்ட் 31 ஆம் திகதி ‘மார்ச் ஃபார் அவுஸ்திரேலியா’ (March for Australia) என்ற குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அதிகப்படியான வெளிநாட்டினர் குடியேற்றத்தால் வளங்கள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு பாதிக்கப்படுவதாக பேரணியில் குற்றம் சாட்டினர். இந்த போராட்டங்கள், சிட்னி, மெல்போர்ன், பிரிஸ்பேன் மற்றும் கான்பெரா போன்ற முக்கிய நகரங்களில் நடைபெற்றன.

இலண்டன் குடியேற்ற எதிர்ப்பு பேரணி:

அதிகரிக்கும் குடியேற்றம் மீதான கோபம் மற்றும் நாட்டின் எல்லைகளில் அரசாங்கம் கட்டுப்பாட்டை இழந்துவிட்டது என்ற கருத் தின் மீதான நம்பிக்கையால், லண்டனில் பெருமளவில் மக்கள் திரண்டனர். பல ஆர்ப்பாட்டக்காரர்கள், சட்டவிரோத குடியேற்றத்தை தடுத்து, அகதிகளுக்கு தஞ்சமளிக்கும் விதிகளை கடுமையாக்குவதன் மூலம், பிரிட்டன் தனது கட்டுப்பாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்றும் கூறினர்.

பிரித்தானிய கலாசாரம் அழிந்து வருவதாகவும், அதைப் பாதுகாக்கவே தாங்கள் இப் பேரணியில் வந்ததாகவும் தெரிவித்தனர். மேலும் பேச்சு சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன. குடியேற்றத்திற்கு எதிராகப் பேசும் சாதாரண மக்களுக்கு பேச்சு சுதந்திரம் இல்லை என்று பலரும் குறிப்பிட்டனர்.

இதற்கு முன்பாகவும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுகளில் வெளிநாட்டினர் குடியேறுவதை தடுக்க பல போராட்டங்கள், பேரணிகள் நடத்தப்பட்டன. இப்பேரணிகளில் இனவெறி கருத்துகளையும் பரவலாகப் பார்க்க முடிந்தது.

ஆனால் பிரிட்டனில் சமீப காலத்தில் நடந்த மிகப் பெரிய போராட்டமாக இது இருக்கிறது. புலம்பெயர்ந்தோர் மற்றும் இஸ்லாமியர்கள் நாட்டை விட்டு வெளியேற வலியுறுத்தி மத்திய லண்டன் போராட்டம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதனிடையே மறுபக்கம் இனவெறிக்கு எதிராக நில்லுங்கள் என்ற முழக்கத்துடன் புலம்பெயர்ந்தோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சிலர் பாதுகாப்பை மீறி புலம்பெயர்ந்த போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால், போலீசார் மற்றும் குடியேற்ற எதிர்ப்பு போராட்டக்காரர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

ஆட்சி மாற்றம் கோரும் எலான் மஸ்க்:

உலகின் மிக பெரிய பணக்காரரும், தீவிர வலதுசாரி ஆதரவாளருமான எலான் மஸ்கும் அமெரிக்காவில் இருந்தபடி வீடியோ மூலம் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார். பிரிட்டிஷ் நாட்டின் குடிமகனாக இருப்பதில் எப்போதும் ஒரு சிறப்பு உள்ளது. ஆனால், இப்போது இங்கு நடப்பதை நான் பிரிட்டனின் அழிவாகப் பார்க்கிறேன். மேலும், கீர் ஸ்டார்மர் அரசை உடனடியாக கலைக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

மேலும் இடதுசாரி கட்சிகளை கடுமையாக சாடினார். வன்முறை உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. பிரிட்டன் மெதுவாக அழிந்து கொண்டிருக்கிறது. நீங்கள் போராட வேண்டும் அல்லது உயிரிழக்க வேண்டும். உடனடியாக பாராளுமன்றை கலைத்து விட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும். பிரிட்டனில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

அவுஸ்திரேலியாவில் குடியேற்ற எதிர்ப்பு பேரணி:

மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியாவிலும் தீவிர வலதுசாரி குழுக்களால் பரப்பப்படும் குடியேற்ற எதிர்ப்பு மனநிலை, சமூக நல்லிணக்கத்துக்கு ஒரு சவாலாக உள்ளது. இந்நிலை தொடர்வதை தடுக்க புலம்பெயர்ந்த சமூகங்கள் தங்கள் அடையாளத்தையும், பங்களிப்பையும் மேற்கத்திய நாடுகளில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

ஆஸியில் குடியேற்ற எதிர்ப்புப் போராட்டங்களின் உச்சமாக "March for Australia" போன்ற நிகழ்வுகள் வெளிநாட்டினர் குடியேற்றத்தை எதிர்ப்பதோடு, அவுஸ்திரேலியாவின் பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுக்க வேண்டும் என்றும் கோஷங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த எதிர்ப்பு போராட்டங்கள் வலதுசாரி மற்றும் நவ-நாஜிக் அமைப்புகளால் ஆதரிக்கப்பட்டன. வெளிநாட்டினர் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது, அவுஸ்திரேலியாவின் பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுப்பது என்ற அடிப்படையில் நவ-நாஜி மற்றும் வலதுசாரி அமைப்புகள் இந்த போராட்டங்களை ஆதரித்தன. மேலும் இந்தியனே வெளியேறு போன்ற இனவாதக் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இது அவுஸ்திரேலியாவின் பல்லின கலாச்சார அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிரானது என்று விமர்சிக்கப்பட்டது. இத்தகைய இனவாத போராட்டங்கள் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்துவதாகவும், சமூகப் பாதுகாப்பு மற்றும் சகவாழ்வுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும் ஆஸி உள்நாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் வலதுசாரி பேரணி:

பாரிய குடியேற்றத்தை (Mass Migration) முடிவுக்குக் கொண்டு வரவும், அவுஸ்திரேலியாவின் அடையாளத்தை மீட்டெடுக்கவும் அழைப்பு விடுத்து, March for Australia போராட்டங்கள் அவுஸ்திரேலிய புலம் பெயர் குடிமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளன. இந்த போராட்டங்களை முன்னெடுப்பவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யுமாறு உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் உள்துறை அமைச்சர் டோனி பேர்க் இந்த பேரணியை அவுஸ்திரேலிய அரசியல் கலாச்சார முறைக்கு மாறானது என்றும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இரண்டில் ஒருவர் வெளிநாட்டில் பிறந்தவராக அல்லது அவரது பெற்றோர் வெளிநாட்டில் பிறந்தவராக உள்ளனர். இதற்கு நவநாஜி மற்றும் வலதுசாரி அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவுக்கான பேரணி என்ற பெயரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிட்னி நகரில் சுமார் எட்டாயிரம் பேர் தேசியக் கொடியேந்தியபடி பங்கேற்றனர். இந்தப் போராட்டத்துக்கு ஆளும் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த போராட்டத்துக்கு எதிராக அகதிகள் நடவடிக்கை கூட்டமைப்பு பேரணி நடத்தியது. இதுகுறித்து அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், அவுஸ்திரேலியாவுக்கான பேரணி, தீவிர வலதுசாரி அமைப்பினரின் வெறுப்பு மற்றும் கோபத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என கூறப்பட்டுள்ளது.

இந்த போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கை, அவுஸ்திரேலியாவில் குடியேற்றத்தின் அளவை கட்டுப்படுத்த வேண்டும் என்பதாகும். அவர்கள் குடியிருப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வளங்கள் மீது அழுத்தம் அதிகரித்துள்ளதாகவும், வீடுகளின் வாடகை உயர்ந்துள்ளதாகவும் வாதிடுகின்றனர்.

இந்த போராட்டங்களில் கலந்துகொண்ட சிலர், ஆங்கிலேயர்களால் ஆங்கிலேயர்களுக்காக கட்டப்பட்ட நாடு என்றும், புலம் பெயர்ந்தோர் வெளியேற வேண்டும் என்றும் கடுமையாக கருத்து தெரிவித்துள்ளனர்.

மெல்பேர்னில் குடியேற்ற எதிர்ப்பு பேரணி:

மெல்பேர்ணில் பூர்வக்குடி மக்களின் போராட்ட முகாம்மீது தீவிர வலதுசாரி போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அங்கிருந்தவர்கள் மீது நவநாஜிகள் குழு கொடூரமாக தாக்குதல் நடத்தும் காணொளி வெளியாகியுள்ளது. இச்சம்பவத்தை விக்டோரியா மாநில அரசும் கண்டித்துள்ளது.

பூர்வக்குடி மக்களின் கொடிகளை, கறுப்பு ஆடை அணிந்த கும்பல் மிதித்துள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் இந்த போராட்டங்களுக்கு பின்னால் உள்ள இனவெறி உணர்வை வெளிப்படுத்துவதாக கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர்ந்தோர் சமூகங்களில், இந்தியர்கள் இரண்டாவது பெரிய குழுவாக உள்ளனர். இதுவே, இந்த போராட்டங்களின் முக்கிய இலக்காக இந்தியர்கள் மாறுவதற்கு காரணமாக பார்க்கப்படுகிறது. இந்தியர்கள் தொழில்நுட்ப வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்கள் போன்ற உயர் பணிகளில் அதிக அளவில் ஈடுபடுகின்றனர். ஆனால், சில குழுக்கள், இந்தியர்களின் குடியேற்றம் உள்ளூர் வேலைவாய்ப்பையும் சமூக அமைப்பையும் பாதிக்கிறது என்று தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர்.

பிரிட்டனில் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான உணர்வு:

2021-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பிரிட்டனில் தெற்காசிய மக்கள் இரண்டாவது பெரிய இனக்குழுவாக உள்ளனர். இதில் இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், வங்கதேசத்தவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர், தமிழர்களும் நேபாளிகளும் குறிப்பிட்ட அளவில் உள்ளனர்.

பிரிட்டனில் கடுமையான எல்லைக் கட்டுப்பாடு மற்றும் அகதிகளுக்கு தஞ்சமளிக்கும் கொள்கைகள் இருந்தாலும், பல தலைமுறைகளாக பிரிட்டனில் வாழும் இந்த தெற்காசிய சமூகங்கள் தாக்கத்தை உணர்கின்றன. தற்போது இஸ்லாம் மற்றும் சீக்கிய சமூகங்களுக்கு எதிரான வெறுப்பு பிரசாரங்கள் அதிகரித்து வருகின்றன.

புலம்பெயர்ந்தோர் நீண்ட காலமாக பிரிட்டனின் மக்கள் தொகை, கலாசாரம் மற்றும் பொருளாதார அடையாளத்தை தக்கவைத்து வருகின்றனர். ஆனால், பிரெக்ஸிட்க்குப் பிறகு, தீவிர வலதுசாரி குழுக்கள் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான விரோதப் போக்கை அதிகரித்துள்ளன.

வளங்களின் பங்கீடு மற்றும் பொது பாதுகாப்பு குறித்த கவலைகளை தூண்டியுள்ள தவறான தகவல்கள், குடியேற்ற எதிர்ப்பு மற்றும் இஸ்லாமிய எதிர்ப்பு பிரசாரங்களை மேலும் தீவிரமாக்கியுள்ளன. லண்டன், பர்மிங்காம் போன்ற முக்கிய நகரங்களில் உள்ள மக்கள் தொகையில், கிட்டத்தட்ட நாற்பது வீதமான புலம்பெயர்ந்தவர்கள் உள்ளனர். இதனால், அவர்கள் வாய்ப்புகளையும் வளங்களையும் கைப்பற்றுவதாக ஒரு உணர்வு பரவியுள்ளது.

தீவிர வலதுசாரிகள் இதனை பிரிட்டன் நாடு முற்றுகையில் இருப்பதற்கான அடையாளமாக சித்தரிக்கின்றனர். அதே நேரம், பொருளாதார அழுத்தங்கள், அதிகரிக்கும் செலவுகள், வீடுகள் பற்றாக்குறை, அரசியல் நிலையற்ற தன்மை ஆகியவை குடியேற்றத்தை எளிதாக குற்றம் சாட்டக்கூடிய இலக்காக மாற்றியுள்ளன.

இனவெறியை கட்டுப்படுத்தும் ஆஸி அரசு:

ஆஸி அரசு இந்த போராட்டங்களை கடுமையாக கண்டித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் பலம் அதன் பன்முகத் தன்மையிலும், அனைவரையும் உள்ளடக்கிய சமூக அமைப்பிலுமே உள்ளது என்று அரசு அதிகாரிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். இனவெறி மற்றும் பாகுபாட்டை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் அரசு கூறியுள்ளது.

சமூக ஊடகங்கள் மற்றும் சில தீவிர வலதுசாரி குழுக்களால் பரப்பப்படும் குடியேற்ற எதிர்ப்பு மனநிலை, சமூக நல்லிணக்கத்துக்கு ஒரு சவாலாக உள்ளது. இத்தகைய நிகழ்வுகள், புலம்பெயர்ந்த சமூகங்கள் தங்கள் அடையாளத்தையும், பங்களிப்பையும் அவுஸ்திரேலியாவில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

இதுபோன்ற போராட்டங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, அரசு மற்றும் சமூகத் தலைவர்கள் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம். இந்த உறுதியான நிலைப்பாடு, அவுஸ்திரேலியாவில் வாழும் இந்திய சமூகத்தினருக்கும், மற்ற புலம்பெயர்ந்தோருக்கும் ஓரளவு நிம்மதியை அளித்துள்ளது.

திலீபன் வானிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பது எதனை?

21.09.2025

திலீபனின் நாட்களில் யுத்த களத்தில் வெற்றிகள் கிட்டும் என்ற ஒரு நம்பிக்கை ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த காலங்களில் இருந்தது. அவருடைய நினைவு நாள் ஒன்றில் யாழ் கோட்டை வெற்றி கொள்ளப்பட்டதிலிருந்து அந்த நம்பிக்கை தோன்றியது. திலீபனின் பசிக்கும் தாகத்துக்கும் அவ்வாறு அபரிதமான சக்தி உண்டு என்ற ஒரு நம்பிக்கை.

ஆனால் 2009க்கு பின்னர் திலீபனின் நாட்களில் திலீபன் யாருக்கு சொந்தம்? அல்லது திலீபனை யார் யார் நினைவு கூரலாம்? என்று கேட்டு மோதும் நிலைமை காணப்படுகிறது.

கடந்த 16 ஆண்டுகளிலும் நினைவு கூர்தலை அரசாங்கம் தடுக்கும் போதெல்லாம் தமிழ்க் கட்சிகள் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றுபட்டு அவற்றை அனுஷ்டிப்பதுண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திலீபனின் ஒளிப்படம் தாங்கிய ஊர்தியை நகர்த்திய பொழுது திருகோணமலையில் அந்த வாகனம் தாக்கப்பட்டது. அந்தச் சம்பவம் தமிழ்த் தேசியக் கட்சிகளை கட்சி கடந்து ஒன்றாக்கியது. ஆனால் அரசாங்கம் நினைவு கூர்தலை தடுக்காது தளர்வாக நடந்து கொள்ளும் போதெல்லாம் குறிப்பாக திலீபனின் நாட்களில் திலீபன் யாருக்கு சொந்தம்? நினைவுத் தூபியில் யார் யார் நினைவு கூரலாம்? என்று கேட்டு மோதல்கள் வெடிக்கின்றன. சில சமயம் இந்த மோதல்கள் ஊடகச் சந்திப்புகள் வரை வருகின்றன.

திலீபன் உண்ணாவிரதம் இருந்தது நல்லூர் வளாகத்துக்குள். ஆனால் அது ஒரு கோயில் வளாகம் என்பதனால் அங்கே நினைவுத் தூபியை வைக்க அனுமதிக்கப்படாத காரணத்தால் அது நல்லூர் வளாகத்துக்கு வெளியே இப்போது இருக்கும் இடத்திற்கு கொண்டுவரப்பட்டது. அது திலீபன் உயிர் நீத்த இடம் அல்ல. எனவே திலீபனை நினைவு கூர முற்படுபவர்கள் அந்த இடத்துக்குத்தான் வரவேண்டும் என்று இல்லை. அந்தச் சூழலில் பல காணிகள் உண்டு மண்டபங்கள் உண்டு. அதனால் திலீபனை மெய்யாக விசுவாசமாக நினைவுகூர வேண்டும் என்று கருதும் கட்சியோ செயற்பாட்டாளர்களோ இடத்துக்காக அடிபடத் தேவையில்லை. இங்கு இடம் ஒரு பிரச்சினையே அல்ல. திலீபனை எப்படி நினைவு கூரலாம்? அதன்மூலம் அவருடைய நினைவுகளை எப்படி மக்கள் மயப்படுத்தலாம்? அதன் மூலம் அவருடைய தியாகத்தின் ஆன்ம பலத்தை எப்படி நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உந்து சக்தியாக மாற்றலாம்? என்று சிந்திப்பதுதான் இங்கு முக்கியம்.

திலீபனின் நினைவு நாளில் அவருடைய ஒளிப்படம் ஏந்திய வாகனத்தை வடக்கு கிழக்காக நகர்த்துவது ஒரு நல்ல ஏற்பாடு. நல்லூரில் அவருடைய நினைவுகளை பகிரும் ஒளிப்படக் காட்சியை வைப்பதும் ஒரு நல்ல ஏற்பாடு. குருதிக் கொடையும் நல்லது. இவற்றைவிட புதிதாகவும் யோசிக்கலாம். இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது தமிழ் மக்களின் கவனத்தையும் குறிப்பாக ரிக்ரொக் தலைமுறையின் கவனத்தை, கொழும்பின் கவனத்தை, உலகத்தின் கவனத்தை ஈர்க்கத்தக்க படைப்புத்திறன் மிக்க அறவழிப் போராட்ட வடிவங்கள்தான்.

கடந்த 15ஆம் திகதி திலீபனின் நினைவு நாளுக்கு முன்னதாக கொழும்பில் சிங்களப் படைப்பாளியான சந்தரசி சுதுசிங்க எழுதிய நூல் ஒன்று வெளியிடப்பட்டது. திலீபன் என்று பெயரிடப்பட்ட அந்த நூலில், இரண்டு அத்தியாயங்கள் திலீபனை மையமாக வைத்து எழுதப்பட்ட படைப்புகளைக் கொண்டுள்ளன. தமிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியே வேறு இனங்களும் திலீபனைக் கொண்டாடுவது திலீபனுக்கு மகிமையே. தமிழ் மக்களின் போராட்டத்துக்கு மகிமையே. அமைச்சர் சந்திரசேகரன் திலீபனின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்துவது திலீபனுக்கு மகிமையே. திரைப்படக் கலைஞர் சோமிதரன் முகநூலில் கூறியது போல "அஞ்சலி செலுத்த வந்தவரும் ஓர் அரசியலைச் செய்ய வருகிறார். அவரைத் தடுத்து நிறுத்தியவர்களும் தங்களுக்கான அரசியலைச் செய்கிறார்கள்" என்பதே உண்மை.

திலீபன் ஓர் ஆயுதப் போராளி. ஆனால் அவர் உயிர் நீத்தது ஓர் அறவழிப் போராட்டத்தில். அவருடைய வழியை விசுவாசமாகப் பின் தொடர்கிறவர்கள்தான் அவரை அஞ்சலிக்கலாம் என்றால், கடந்த 16 ஆண்டுகளாக அவரைப் போல சாகும்வரை உண்ணாமல் இருக்க எத்தனை பேர் தயாராக இருந்திருக்கிறார்கள்? உணவோ நீரோ இன்றி எத்தனை நாள் இருக்கலாம் என்பது உபவாசம் இருந்தவர்களுக்குத்தான் தெரியும். அதிலிருந்து தப்பினாலும் அதனால் உடல் உறுப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களில் இருந்து தப்ப முடியாது.

கடந்த 16 ஆண்டுகளாக குறிப்பாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் பெற்றோர் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். எனினும் அப்போராட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டன. அது சரி. ஏனென்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்கள்தான் திரும்பத்திரும்ப தியாகம் செய்ய வேண்டும் என்றில்லை. கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான் அவர்களுக்காகப் போராட வேண்டும்.

திலீபனைப்போல உயிர் பிரியும் வரை உண்ணாமலும் துளி நீரும் அருந்தாமலும் போராட எத்தனை பேரால் முடியும்? கடந்த 16 ஆண்டுகளாகத் தாங்கள் செய்ய முடியாத அல்லது தாங்கள் செய்யத் தயாரில்லாத தியாகங்களுக்கு உரிமை கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தாங்கள் செய்யத் தயாராக இல்லாத ஒரு தியாகத்துக்கு உரிமை கோருபவர்களால்தான் உண்மையான தியாகம் கொச்சைப்படுத்தப்படுகிறது. தியாகம் செய்ய வேண்டிய காலங்களில் தப்பிப் பிழைத்தவர்கள் எல்லாம் இப்பொழுது தியாகத்தைப்பற்றி வகுப்பெடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்தக் கட்டுரை யாரையும் சாகச் சொல்லிக் கேட்கவில்லை. யாரும் சாகவும் வேண்டாம். செத்தது போதும். ஆனால் செய்யத் தயாராக இல்லாத தியாகங்களுக்கு உரிமை கோரக்கூடாது. மாறாக அந்தத் தியாகங்களின் மகிமையை, நினைவுகளை எப்படி மக்கள் மயப்படுத்தலாம் என்று சிந்திக்கலாம். அதிலாவது உண்மையாக இருக்கலாம். தியாகிகளை அஞ்சலிக்கும் போது விளக்கு கொளுத்துவது மலர்களை வைப்பது போன்றவை வழமையான வழிகள். வாகன ஊர்தி, ஒளிப்படக் காட்சி, குருதிக் கொடை போன்றன ஒப்பீட்டளவில் வித்தியாசமானவை. ஆனால் இவற்றுக்கும் அப்பால் புதிய படைப்புத்திறன் மிக்க வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

உதாரணமாக தியாகியின் நாட்களில் ஊர் ஊராக அவருடைய நினைவுகளைப் பரவலாக்கும் விதத்தில் என்ன செய்யலாம் என்று சிந்திக்கலாம். நினைவுகளை தலைமுறைகள் தோறும் கடத்துவதிலும் மக்கள் மயப்படுத்துவதிலும் கலை பண்பாட்டுச் செயற்பாடுகள் பெரிய பங்காற்ற முடியும். எனவே புதிய கலை வடிவங்களைப் பற்றிச் சிந்திக்கலாம். தியாகிகளின் நாட்களில் இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குப்படுத்தி இசை அஞ்சலிகளை இசை வேள்விகளைச் செய்யலாம். அந்த இசை வேள்விகளுக்குப் பிராந்திய, அனைத்துலகக் கலைஞர்களைக் கொண்டு வரலாம். இது ஒரு வழி.

இரண்டாவது வழி, தியாகியின் பெயரால் போட்டிகளை ஒழுங்குபடுத்தலாம். கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, நாடகப் போட்டி, விவாதப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள்…

மூன்றாவது வழி, தியாகிகளின் நாட்களில் அரசியல் கருத்தரங்குகளை வைத்து அந்த தியாகத்துக்கு பின்னால் இருக்கும் அரசியலை ஆழமாக ஆராயலாம்.

நாலாவதுவழி, தியாகிகளின் பெயரால் தொண்டு செய்யலாம். ஊர் ஊராக சிரமதானங்களைச் செய்யலாம். ஊர்க் குளத்தை, நீரோடும் வாய்க்கால்களைத் தூர் வாரலாம். ஊரைத் துப்புரவாக்கலாம். மரம் நடலாம். இப்படித் தியாகியின் பெயரால் பசுமைத் திட்டங்களை முன்னெடுக்கலாம்.

ஐந்தாவது வழி, தியாகிகளின் பெயரால் இலவச மருத்துவ முகாம்களை ஒழுங்குபடுத்தலாம். மருத்துவத் துறை ஒரு இண்டஸ்ட்ரியாக மாறி ஏழைகளுக்குத் தூரமாகப் போய்க் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், இலவச மருத்துவ முகாம்களை தியாகிகளின் பெயரால் ஒழுங்கமைக்கலாம். உதாரணமாக அரச பொது மருத்துவமனைகளில் குறிப்பிட்ட சில சத்திர சிகிச்சைகளுக்காகக் காத்திருப்பவர்களின் தொகை ஆயிரக்கணக்கானது என்று கூறப்படுகிறது. அவ்வாறான சத்திர சிகிச்சைகளை இலவசமாக தியாகிகளின் பெயரால் செய்யலாம்.

அதாவது தியாகிகளை நினைவு கூர்வது என்பது தொண்டு செய்வது; தன்னாலியன்ற தியாகத்தைச் செய்வது. இவ்வாறு தியாகிகளை நினைவு கூரும் விடயத்தில் படைப்புத்திறனோடும் தியாக சிந்தையோடும் சிந்தித்தால் புதிய வழிகள் திறக்கும். அவ்வாறு புதிய கற்பனைகள் தோன்றும்போது நினைவு கூர்தல் ஒரு சடங்காக மாறுவது தடுக்கப்படும். எங்கே நினைவு கூர்தல் ஒரு சடங்காக மாறுகிறதோ அங்கே நினைவுகூர யாருக்கு உரிமை அதிகம் என்று கேட்டுச் சண்டைகளும் அதிகரிக்கும்…!

நன்றி: நிலாந்தன்

காந்தி: பொபிசான்ட்ஸ்: திலீபன்

சுதந்திர விடியலுக்காக அகிம்சை வேள்வி!

– நவீனன் –

23.09.2025

சுதந்திர விடியலுக்கான அகிம்சை வேள்வியின் இன்னோர் அடையாளமே பொபி சான்ட்ஸ். ஐரிஷ் குடியரசு இராணுவத் தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி இவர்கள் தமது உண்ணாநோன்பு இருந்தவர்.

ஐரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்:

இவர் உண்ணாநோன்பிருந்த காலத்தில் சிறையில் இருந் தவாரே ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ்(Robert Gerard Sands, 'பொபி சான்ட்ஸ்' (Bobby Sands, மார்ச் 9, 1954 – மே 5, 1981). அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்.



வட அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.

அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்து பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர்.

பொபி சான்ட்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் ஆதரவாக பலத்த குரலெழுப்பப்பட்டன. இப் போராட்டம் 66 நாட்களில் முடி வுக்கு வந்தது, ஆம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.

உண்ணாவிரத போரில் பொபி சான்ட்ஸ்:

பிரிட்டன் வட அயர்லாந்து என்ற பகுதியை காலனிப் படுத்தி வைத்திருப்பதையும், IRA யின் போராட்டம் பிரிட்டிஷ் அரசுக்கு சவாலாக வளர்ந்து விட்டதையும் வட அயர்லாந்து பிரச்சினை யில், அப்போதய பிரதமர் மார்க்கரெட் தாட்சர் ஆக்கிரமிப்பாளர்



களான ஆங்கிலேய குடியேறிகளை ஆதரித்தார். விடுதலைக் காக போராடிய ஐரிஷ் மக்களை அடக்குவதில் குறியாக இருந் தார்.

விடுதலைக்காக போராடும் ஐரிஷ் சிறுபான்மை இனத்தை ஒடுக்கும், பிரிட்டிஷ் கொடுங்கோன்மையை உலகம் அறியச் செய்த போராட்டம் அது. இந்த உண்ணாவிரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் மத்தியில் பேச்சு பொருளானது, இந்த நேரத்தில் 1981 இல் ஐக்கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே ஐரீஸ் குடியரசு இயக்கம் (Irish Republican Movement) சார்பில் நின்று தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்ற உறுப்பினரானார்.

உண்ணாவிரதமிருந்து மரணத்தை தழுவிக் கொண்ட பொபி சான்ட்சின் மரண ஊர்வலத்தில், பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்த செய்தி சர்வதேச ஊடகங் களின் கவனத்தை ஈர்த்து, உலகம் முழுவதும் பேசப்பட்டது. அது தாட்சர் அரசுக்கு, சர்வதேச மட்டத்தில் தலைக்குனிவை ஏற்படுத்தியது.

அதே போன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொபி சான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம் மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பது தான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டது.

ஒப்பிலா அறவழிப் போராளி திலீபன்:

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன் என தன்னுடலுக்கு துரோகமும் தன்னினத்திற்கு தன்னையும் தந்த ஒப்பிலா அறவழிப் போராளி திலீபனின் இறுதி வார்த் தைகளே இவையாகும்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத் தெறிந்த ஒரு சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும் என்ற விடுதலைக் கனலை விழியிலேந்திய பார்த்திபன் இரா சையா என்னும் இயற்பெயர்கொண்டவர் திலீபன்.

காந்தியின் அகிம்சை வழியில் தன் விடுதலையை பெற்றெடுத் ததாக கூறும் இந்தியா, உலகெங்கிலும் அகிம்சை குறித்து அறி வுரை கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, அகிம்சை போராட் டத்தை கையிலெடுத்த திலீபனுக்கு அளித்த பரிசு இது தான்.

உண்மையில் அகிம்சை மூலமாக இந்தியா விடுதலைப் பெற் றது என்பதே இந்திய விடுதலையை ஒட்டி எழுப்பபட்ட மிகைப் படுத்தப்பட்ட பிம்பம் தானே தவிர அகிம்சை மட்டுமே இந்தியா வின் விடுதலைக்கு காரணமாக அமைந்து விடவில்லை. இந்திய விடுதலை அகிம்சையினால் நிகழ்ந்தது என்றால் அதனைவிட ஆயுதமேந்தி போராடிய இந்திய வீரர்களை மறந்துவிட முடியாது.

காந்தியின் அகிம்சையும் திலீபனின் உயிர்க்கொடையையும் ஒரே தட்டில் ஒப்பிட முடியாது. திலீபனுக்கும், காந்திக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. திலீபன் காந்தீய வழியில் தன் போராட்டத்தை முயன்றார். ஆனால் காந்தி போல உயிர் வாழ முயலவில்லை. திலீபன் தன் உயிரை ஒரு பொருட்டாக கருத வில்லை. தியாகத்தின் உச்சத்திற்கே திலீபன் சென்றார்.

திலீபனின் கோரிக்கைகள்:

1987இல் இலங்கை – இந்திய ஒப்பந்தம் முறையாகச் செயல் படுத்தப்படாது மட்டுமல்ல, எதிர் மறையான விடயங்கள் அமு லாக்கப்பட்டுக் கொண்டிருந்த காலகட்டம். சிறீலங்கா அரசிடம் சாத்வீக முறையில் நீதி கேட்டுப் போராட முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள்.

தமிழீழ இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் கை யளிக்கப்பட வேண்டும். தமிழீழப் பிரதேசத்தில், சிறீலங்கா அரசு பொலிஸ் நிலையங்களை அமைத்தல் நிறுத்தப்பட வேண்டும்.

புனர்வாழ்வு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற சிங் களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடு தலை செய்ய வேண்டும். ஊர்காவல் படையினரிடம் உள்ள ஆயுதங்கள் பறிக்கப்படுவதுடன், தமிழ்க் கிராமங்கள், பாட சாலைகள் ஆகியவற்றில் உள்ள இராணுவ முகாம்கள் மூடப்பட வேண்டும்.

ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, செப்டம்பர் மாதம் 15ம் திகதி 1987ம் ஆண்டு, திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

திலீபன் இந்தியாவிடம் நீதிகேட்டு தன் அகிம்சைப் போராட் டத்தைத் தொடங்கினார். இந்த ஐந்து கோரிக்கைகள் புதி தானவை அல்ல. ஏற்கனவே இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையான விடயங்கள் தாம் அவை.

இவற்றை நிறைவேற்றுவதற்காக உண்ணாவிரதப் போராட் டத்தில் இறங்கிய தியாதி திலீபனின் மன உறுதி பற்றிக் கட் டாயம் குறிப்பிட்டேயாக வேண்டும். உறுதி என்றால் எப்படிப்பட்ட உறுதி உள்ளவராக திலீபன் விளங்கினார். எடுத்த காரியத்திற் காக இறுதி மூச்சு உள்ளவரை, உறுதியோடு போராடுகின்ற, உளவலிமையுள்ள இலட்சிய உறுதியில் திலீபன் இருந்தார்.

சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்தபோது, ஒரு சொட்டுத் தண்ணீரையும் உட்கொள்ளாமல், உண்ணா விரதத்தை மேற்கொள்ள வேண்டும் என்று திலீபன் முடிவெடுத் தார். அந்த முடிவில் அவன் உறுதியாக இருந்து ஈழ விடுதலைப் போராட்டத்தில் புதிய வரலாற்றைப் படைத்தார்.



விடுதலைப் போராட்டத்தை எப்படி முன்னெடுப்பது?

– மு. திருநாவுக்கரசு –

24.09.2025

" உன்னை நீ கைவிட்டு விட்டால் உன்னைக் கடவுளாலும் காப் பாற்ற முடியாது" என்று ஒரு பிரெஞ்சு பழமொழியுண்டு". உன்னை நோக்கி பிறரைத் திரும்பிப் பார்க்கச் செய்ய வேண்டு மேயாயினும் கூட நீ சத்தமிட வேண்டும். ஒரு பச்சைக் குழந் தைகூட தன்னருகே யாரும் துணை இல்லையேல் என்றால் அழுது, கத்தி யாரையும் தன்பால் ஈர்த்துவிடும்.

இனப்படுகொலைக்குள்ளான ஈழத் தமிழர்கள் கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாய் போராடாதிருக்கும் நிலையில் உரிய வனும் பாரான்; அடுத்தவனும் பாரான்; அண்டை நாடும் பாராது; வெளிநாடுகளும் பாராது. உனக்கு யாரும் கை கொடுக்க வேண்டுமாயின் நீ கை தூக்க வேண்டும். ஆதலாற் களத்தில் போராடுவதன் மூலம் மட்டுமே உள்ளும், புறமும் கவ னத்தை ஈர்த்துப் போர் கொடியைச் சர்வதேசத் தளத்தில் நிறுத்த முடியும்.

“Only the fittest will survive” அதாவது “தக்கன மட்டுமே உயிர் வாழும்” அதாவது இங்கு காணப்படும் சூழல் என்பது ஒன்று. அந்தச் சூழலையும், தன்னையும் இணைத்துத் தனக் குப் பொருத்தமாகக் கையாள தெரிந்தவைத்தான் உயிர் வாழும் என்பதே இதன் முழுமுதற் பொருள்.

இந்த உயிரியல் டார்வினிசத்தைச் சமூக அல்லது அரசியல் டார்வினிசமாகக் கையாளும் போது அதை அதிகம் தலைமைத் துவப் பண்புடன் கூடிய வகையிற் கையாள வேண்டும். அதா வது உயிரியல் டார்வினிசத்தில் அந்த உயிருக்குச் சுயநல உயிரியல் மரபணு (Selfish Gene) இயல்பாக இயற்கைத் தேர்வின் படி தத்துவத்தை வழங்குகிறது.

மனிதனும் உயிர் என்ற வகையிற் சுயநல மரபணுவைக் கொண்டவனேயானாலும் ஒரு சமூகமாகும் போது அங்கு மேலதிகமாகத் தலைமைத்துவ ஆளுமை தேவைப்படுகிறது. இந்த வகையில் உயிரியல் டார்வினிசத்திலிருந்து சமூகவியல் டார்வினிசம் குறிப்பிடக்கூடிய அளவுக்குத் தெளிவான ஆளு மைப் பரிமாண வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

சமூகப் பரிமாணத்தைக் கட்டமைப்புச் செய்து முன்னெடுக்கும் விதத்தில் தவறுகள் இழைக்கப்பட்டால் அந்தச் சமூகம் தக்க தேர்வுவின்றித் தேய்ந்து போய் அல்லது அழிந்து போய்விடும். அதாவது உயிரிகளில் காணப்படும் வரையறுக்கப்பட்ட உயிர் களின் தலைமைத்து வத்திற்கப்பால் மனிதச் சமூகத்தில் நுண் ணறிவும், முன்னறிவும் கொண்ட அளவாற் பெரிய ஓரினம் (சிங்கள இனம்) அளவாற் சிறிய இனங்களின் மீது அதிக தலை மைத்துவ ஆதிக்கத்தைச் செலுத்துவதன் மூலம் சிறிய இனங் களின் தெரிவு சுருங்கும், பாதிப்புக்குள்ளாகும். சீரழிவுக்குள் ளாகும். இந்த வகையில் ஈழத் தமிழர்கள் அதிகம் தலைமைத் துவப் பண்புடனும், முனைப்புடனும் செயல்பட்டால் மட்டுமே காணப்படும் சமூக சூழல் யதார்த்தத்தில் தம்மைத் தக்க வைக்க முடியும்.

மனிதனும் ஏனைய பிராணிகள் போல ஓர் உயிர் என்பதால் உயிரியல் டார்வினிசத்திலுள்ள பொதுத்தன்மைகள் மனிதனுக் கும் உண்டேயானாலும், உயிரினங்களில் அதிக நுண்ணறிவு கொண்டு மனிதன் சமூகமாகத் தன்னைக் கட்டமைப்பதில் வேறுபட்ட ஆளுமை அளவுகளைப் பிரயோகிக்க முடிகிறது.

அரசுள்ள அளவாற் பெரிய சிங்கள சமூகத் தோடு அரசற்ற அள வாற் சிறிய தமிழ்ச் சமூகம் தலைமைத்துவ ஆளுமையில் தக்க முனைப்பைக் காட்டத்தவறினால் அந்தச் சமூகம் தன் வாழ் நிலையை இழந்துபோக நேரும் .

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தம்மை தமிழர் என்ற உட்சமூக ரீதியாகவும், இலங்கை என்ற உள்நாட்டு ரீதியாகவும், அண்டை நாடு, வெளிநாடுகள், சர்வதேச சமூகம், உலகளா விய அரசியல் நிலை போன்ற காணப்படும் அனைத்துப் புற நிலை யதார்த்தத்திற்கும் பொருத்தமாக தமக்கான தலைமைத் துவத்தை முன்னெடுக்க வேண்டும்.

அந்தவகையில் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான கடந்த ஒன் றரை தசாப்தங்களுக்கு மேலான அரசியற் சூழலில் ஈழத்தமிழர் நிலையானது கூழ்முட்டை (Rotten Egg) நிலையையே கொண் டுள்ளது. மேற்படி நடப்புநிலை உளளூர், உள்நாட்டு, வெளி நாட்டு, உலகளாவிய யதார்த்தத்தை உள்வாங்கி இப்போது ஒரு புதிய வகையில் தமிழ்த் தலைமைத்துவத்தை முன்னெடுக்க வேண்டுமென்று இக்கட்டுரை வேண்டி நிற்கின்றது.

ஏறக்குறைய 1970 களின் பிற்பகுதியளவில் ஒற்றை உள்ளூர்த் துப்பாக்கியுடன் ஆரம்பமான ஆயுதப் போராட்டம் தரைப்படை, கடற்படை, பீரங்கிப்படை, விமானப்படை, சர்வதேச சரக்கு



கப்பல் அணியென வளர்ந்த நிலையில் கோட்டை கொத்தளங் களெல்லாம் அழிந்தவாறு குண்டூசிகூட இல்லாத நிலையை ஆயுதப் போராட்டம் அடைந்துள்ளது.

ஆனால் 1979 ஆண்டு 10 ஆயிரத்துக்குட்பட்ட படையினருடன் ஒரு பிரிகேடியரைத் தலைமைத் தளபதியாகக் கொண்டிருந்த இலங்கை இராணுவம் இன்று அதிநவீன ஆயுதங்களுடன் கூடிய வகையில் 3 இலட்சத்து 46 ஆயிரம் படையினருடன் காணப்படுகிறது.

நாடாளுமன்ற அரசியலில் 21 உறுப்பினர்களைக் கொண்டி ருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இன்று சிதைந்து, சுக்கு நூறாகி தமிழரசுக் கட்சி எட்டு உறுப்பினர்களையும், சனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு உறுப்பினரையும், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஒரு உறுப்பினரையும் பாதிக்குமேல்ச் சுருங்கி கிடக்கிறது. மேலும் சனநாயகப் பண்பற்றுச் சீரழிந்து சின்னாபின்னமாகி கிடக்கிறது.

2001 ஆம் ஆண்டு அமெரிக்க இரட்டைக் கோபுரத்தின் மீதான தாக்குதல் உலகெங்கும் ஆயுதப் போராட்ட அமைப்புக்களின் முதுகெலும்பை உடைக்க வழிவகுத்த போதிலும் அதுவே உல கெங்கும் மக்கள் போராட்ட அலைகள் எழும்புவதற்கு ஏது வாகவும் அமைந்தது.

எனவே மக்கள் போராட்ட அலையெனும் ஓராயுதம் உலக ரங்கில் முதன்மை பெறத்தொடங்கியது. பறிக்கப்பட்ட வெடி குண்டு, துப்பாக்கி ஆயுதத்துக்குப் பதிலாக மக்கள் திரளெனும் ஓராயுதம் மக்கள் சனநாயகக் கிளர்ச்சியாய் வடிவம் பெற்றது.

முள்ளிவாய்க்காலில் இராணுவம் அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்ததோடு முடிந்து போகவில்லை. அங்கு அரச இராணுவம் தனது இராணுவச் சூளையில் இனப்படுகொலை யென்னும் மிகக் கூரியதோர் ஆயுதத்தை உற்பத்தி செய்தது. எனவே முள்ளிவாய்க்காலில் பறிபோன துப்பாக்கி-வெடிகுண்டு ஆயுதங்களுக்குப் பதிலாக மக்கள் காட்டுமிராண்டித் தனமாக கொல்லப்பட்டதன் வாயிலாக இனப்படுகொலையென்னும் ஆயு தம் தமிழ் மக்கள் கைக்குக்கிடைத்தது. இந்த வகையில் இனப் படுகொலை என்ற ஆயுதத்தை முதலீடாகக் கொண்டு தமிழ் மக்கள் தமது அரசியற் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டு மென்று 2016 ஆம் ஆண்டு இக்கட்டுரையாசிரியரால் எழுதப் பட்ட “ டொனமூர் முதல் சிறிசேன வரையான உத்தேச அரசியல் யாப்பு” என்ற நூலில் தெளிவாக எழுதப் பட்டிருந்தது. அந்நூல் வெளியிட்டு விழாவில் தமிழரசு, தமிழ்க் கொங்கிரஸ் கட்சி களின் முன்னணித் தலைவர்கள் உட்பட பல்வேறு அரசியற் தலைவர்களும், பல்கலைக்கழக அறிஞர்களும், ஊடகவிய லாளர்களும், உரையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது ஈழத் தமிழர்களின் குறைந்தபட்ச உரிமைக்கான போராட்டங்களைக் கூட இந்த இடத்திலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டியுள்ளது. முதலாவதாக இலங்கையில் நடைமுறையி லுள்ள நாடாளுமன்ற மரபு அரசியற் பாதை இனப் பிரச்சனை யைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதை வளர்க்கவே உதவியுள்ளது என்பதை 1833 அண்டு நடைமுறைக்குவந்த கோல்புறூக் யாப்பு நடைமுறையிலிருந்து இன்றைய (2025) ஆட்சியா ளர்களின் யாப்பு நடைமுறை வரை வெள்ளிடை மலையெனத் தெரிகிறது.

தமிழ்த் தலைவர்கள் குறிப்பாக சோல்பரி அரசியல் யாப்பை ஒட்டிய காலத்தில் 14 மணி நேரம் மூச்சு விடாமற் பேசியும் பய னில்லை. தற்போது நாடாளுமன்றத்தில் திரைப்படப் பாணியில் 14 நிமிடங்கள் அங்கிங்குமாய் காலை, கையை உயர்த்தி, முதுகை வளைத்து, கண்ணை உருட்டி சொண்டைப் பிதுக்கிப் பேசியும் எந்த பயனுமில்லை.

நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தமக்கான மக்கள் ஆதரவை உள்ளும், புறமும் நிரூபிப்பது சரி. நாடாளுமன்றத் தில் பேச்சுப்போட்டி நடத்தி எதனையும் சாதிக்க முடியாது. மாறாக நாடாளுமன்றத்தை உள்ளும், புறமும் போர்க்களமாக மாற்றவல்ல திட்டங்களையும், வியூகங்களையும் வகுத்து அதற் கூடாக போராட்டத்தை நாடாளுமன்றத்துக்குள்ளும், புறமும், உலக அரங்கிலும் எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கான வியூ கங்கள் வகுக்கப் பல வழிகளுண்டு. இதற்கான வியூகங்களைப் பின் பொருனிக் கட்டுரையில் ஆராய்வோம். இப்போது போராட் டத்துக்கான முதற் திட்டத்தை வரையறை செய்வோம். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளும், புறமும் தடை செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை, இந்தியா தவிர மேலும் 31 நாடுகளில் அந்த தடை பட்டியல் நீண்டுள்ளது. ஆயுதப் போராட்டம் என்ற பேச்சுக்கே உள்ளும், புறமும் இட மில்லை. ஆனால் இனப்படுகொலைக்கெதிரான குரலை மனித நேயத்தினடிப்படையில் உலகெங்கும் முன்னெடுக்க முடியும்.

அதனைத் தமிழகத்திலும் முன்னெடுக்கலாம், முழு இந்தியா விலும் முன்னெடுக்கலாம், அமெரிக்காவிலும் முன்னெடுக் கலாம், ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் முன்னெடுக்கலாம், உலகின் ஏனைய நாடுகளிலும் முன்னெடுக்கலாம். அது எதிரிக் கும், தமிழர் உரிமைகளை எதிர்க்கவல்ல வேறு சக்திகளுக்கும் எதிரான ஒரு பலம் வாய்ந்த ஆயுதம்.

செம்மணி புதைகுழியும் இதற்கு அரணமைக்கிறது. குறிப்பாக 1958 ஆம் ஆண்டிலிருந்து கறுப்பு யூலை வரையும் அதன் பின் பும் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான அனைத்து மனிதப் படு கொலைகளும் தொடர்பான நீதி நிர்வாக நடவடிக்கைகளும் இவற்றுக்கு அணிசேர்க்கின்றன.

முதலாவதாக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை, இசைப் பிரியா மீதான பாலியல் வன்முறை, படுகொலை, சிறுவன் பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட் டமை என்பனவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி அதற் கான போராட்டத்தை உள்நாட்டு அரங்கிலும், தமிழகத்திலும், இந்தியாவிலும், உலக அரங்கிலும் முன்னெடுக்க வேண்டும். இதற்கு வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் தள மாகக் கொண்டிருக்க வேண்டியதில்லை. தமிழ்ச் சமூகம் ஒன்று திரண்டு நடைபெற்ற அநீதிகளுக்கு நீதி கோரிப் போராடு வதற்கான ஒரு பொதுச் ஒரு செயற்குழுவை உருவாக்க வேண் டும். இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குவகிக்கலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர் களும் பங்குவகிக்கலாம். சிவில் சமூக உறுப்பினர்கள், அறி ஞர்கள், ஊடகவியலாளர்கள், ஓய்வு பெற்ற அதிகாரிகள், மூத்த குடிமக்கள் உள்ளடக்கிய 30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழுவை உருவாக்கி பிரச்சனை கையாளுவதற்கு அதற்கு அனைத்து அதிகாரங்களையும் தமிழ் மக்கள் வழங்க வேண்டும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதுவே தமிழ் மக்களால் உள்ளும், புறமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப் பாக இருக்க வேண்டும். அதுவே எம் மத்தியில் ஏற்பட்டுள்ள உள் உடைவுகளைச் சரி செய்யும் புதிய செயல்பூர்வ மான ஒரு பாதையை வடிவமைக்கவும் வழி கோலும்.

“ An idle mind is the devil’s workshop” “வெறும் மனம் பிசாசின் பட்டறை” என்பதற்கிணங்க போராடாது தேங்கி வரண்டு கிடக் கும் ஒரு சமூகத்தின் மனதில் பிசாசுகள் குடிகொண்டு அதனை தங்கள் பட்டறையாக மாற்றிவிடும். இப்போது தமிழினத்தின் அரசியலும் அப்படித்தான் உள்ளது.

எனவே இனப்படுகொலை என்ற ஆயுதத்தைக் கையிலேந்தி அதற்காகப் போராட வல்ல ஒரு அமைப்பைச் சனநாயக பூர்வ மாக வடிவமைத்து வெற்றிடங்களில் நிரப்பிப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். சர்வதேச நாடுகளும் தமிழரின் தலையில் கொண்டையும் கட்டி, கொண்டையிற் பூவும் கட்டி, அதற்கப்பால் தலையில் குருவி கூடும் கட்டி செல்லும்.

உலகெங்கும் சிதறி வாழும் ஈழத் தமிழர்களே! ஈழத்தமிழ் மண் இந்து மாகடலின் மையத்தில் இந்தியாவின் வாசற்படியாக இருக்க வல்ல அதன் கேந்திர அமைவிடத்தின் நிமித்தம் அது உலகப் பெரும் வல்லரசுகளையெல்லாம் ஈர்க்கவல்ல புள்ளியி லுள்ளது. சர்வதேச கவனத்தை ஈர்க்கக்கூடிய புள்ளியிலுள் ளதால் அதனை ஒரு முதலீடாக் கொண்டு அறிவாற்ற லுடனும், தமிழ் தலைவர்கள் செயல் பட வேண்டும்.

www.sangathamil.ca

(ஈழத் தமிழரின் மரபு வழித் தாயகம்)
தமிழீழம்
தமிழீழத் தலைநகர் - திருகோணமலை
தமிழீழ மாவட்டங்கள்
01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி
03. முல்லைத்தீவு
04. வவுனியா
05. மன்னார்
06. திருகோணமலை
07. மட்டக்களப்பு
08. அம்பாறை
தமிழீழ நிர்வாக வலயங்களும் நகரங்களும்
01. நல்லூர் - நல்லூர்
02. வரணி - கொடிகாமம்
03. கரைச்சி - கிளிநொச்சி
04. பூநகரி - பூநகரி
05. முல்லைத்தீவு - தண்ணீரூற்று
06. மாங்குளம் - மாங்குளம்
07. மாந்தை - உயிலங்குளம்
08. மடு - மடுறோட்
09. வவுனியா - ஓமந்தை
10. குச்சவெளி - திரியாய்
11. திருகோணமலை - திருகோணமலை
12. மூதூர் - கிளிவெட்டி
13. வாகரை - மாங்கேணி
14. வெல்லாவெளி - பேறாறு
15. மட்டக்களப்பு - கரடியனாறு
16. அக்கரைப்பற்று - பாலமுனை
17. பொத்துவில் - பொத்துவில்
18. அறுவாக்காடு - பொம்பரிப்பு
19. புத்தளம் - புத்தளம்
20. சிலாபம் - சிலாபம்
தமிழீழத் தேசியச் சின்னங்கள்
வட மண்டலம்
வன்னி மண்டலம்
மேல்மண்டலம்
நடு மண்டலம்
முத்து மண்டலம்
சிங்களநாடு
கிழக்கு மண்டலம்
தென் மண்டலம்
TAMIL EELAM
வெளியீட்டுப் பிரிவு
அனைத்துலகத் தொடர்பகம்

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் அக்டோபர் 10

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவின் முதலாவது பயிற்சி முகாம் 1985 ஆவணி 18 அன்று அதிகாரபூர்வமாகக் கொடியேற்றித் தொடங்கிவைக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை பல்லாயிரம் பெண்கள் தம்மைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டுள்ளதோடு வீரச்சாவடைந்துமுள்ளனர். தமிழர் சமூகத்தில் வேரூன்றியிருந்த, பெண் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும். பெண்ணானவள் இப்படித்தான் இருப் பாள். இதற்கு மேல் அவளால் முடியாது. ஆணைவிட பெண் ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்துக்களை - 2ஆம் லெப். மாலதி 38 ஆண்டுகளுக்கு முன் பொய்யாக்கினாள்.

அக்டோபர் 10 தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும் 2 ஆம் லெப் டினன் மாலதியின் நினைவு நாளும் ஆகும். அடக்கி ஒடுக்கப்பட் டிருந்த தமிழீழப் பெண்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறனர். தீரத்தினாலும், தியாகத்தினாலும், விவேகத்தினாலும் உலகப் பெண்களுக்கு வழிகாட்டியாக உயர்ந்து நிற்கின்றனர் என்பதை அனைவரும் ஏற்றுள்ளனர்.

ஆக்கிரமிப்புக்கும் கொடிய போருக்கும் தமிழீழப் பெண்கள் முகம் கொடுத்து தமது நுண்ணிய ஆற்றலினால் அனைத்து தடைகளையும் அறுத்தெறிந்து வருகிறார்கள். தலைவர் பிரபா கரனின் காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தம்மை வளர்த்தது மட்டுமன்றி தமிழ்த்தேசத்தின் விடுதலைக் காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்தும் வருகிறார்கள். தமிழ்த்தேசிய உணர்வுகளை கட்டியெழுப்பி புதிய பெண் ணெழுச்சிக்கு வித்திட்டுள்ளார்கள்.

அதிகாரப் போக்கினாலும், ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுத வெறி யினாலும், தமிழர்களின் ஜனநாயக உரிமை நசுங்கியது. ஆனால் இளைய பெண் தலைமுறை சுதந்திர வேட்கை கொண்டு விடுதலைக்காக ஆயுதக் கருவிகளை கையிலேந்தி தீர்த்த தீரமான வேட்டுக்களாலே இன்று ஜனநாயகம் மலர்ந்தது மட்டுமல்ல, பெண்ணினத்தின் விடுதலையும் முழுமை பெற் றது. ஆண் பெண் சமநிலை புத்துயிர் பெற்றுள்ளது.

தமிழீழத் தேசயத்தலைவரின் எண்ணக்கருத்துக்கு வலுச்சேர்க் கும் வகையில் பெண்ணினால் எல்லாம் முடியும் என்று செய்து காட்டினாள் 2ஆம் லெப். மாலதி. அந்நிய ஆக்கிரமிப்பில் தமிழர் தேசம் துவண்டிருந்த போது வீறு கொண்டெழுந்தாள். தாய்நாட் டின் விடுதலையோடு பெண்ணினத்தின் விடுதலையையும் கருத்தில் கொண்டு ஆயுதம் தூக்கியவள் 2ஆம் லெப். மாலதி, அந்த இலட்சியக் கனவோடே வீரச்சாவை தழுவிக் கொண்டாள்.

2ஆம் லெப். மாலதி 38 ஆண்டுகளுக்கு முன் அந்த இலட்சியக் கனவோடுதான் வீரச்சாவை தழுவிக் கொண்டாள். அந்த நடு ராத்திரியில் வல்லாதிக்க இந்திய இராணுவத்தை எதிர்கொள்ள கோப்பாய் கிறேசர் வீதியில் காத்திருந்தாள். இந்திய இராணுவம் தமிழ் பெண்களுக்கு இழைத்த அநீதி இன்னமும் தமிழர் மனங் களில் ஆறாத காயமாகவுள்ளது. 1987 அக்டோபர் 10 ஆம் திகதி நள்ளிரவு 1 மணியளவில் இந்திய வல்லாதிக்க இராணுவம் மீது அவளது எம்-16 ரக துப்பாக்கியில் குண்டுகள் சீறிப்பாய்ந்தன. அந்த தாக்குதல் 2ஆம் லெப் மாலதியின் இறுதி தாக்குதல். புலிகள் போராட்ட வரலாற்றில் முதல் பெண் போராளி 2 ஆம் லெப். மாலதி வித்தாகி வீழ்ந்தாள். அதுவே தமிழீழப் பெண் களின் எழுச்சிக்கு வித்தாக அமைந்தது. அந்நாளே தமிழீழ பெண்கள் எழுச்சி நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆணாதிக்கத்தின் பிடியிலும், சமுகத்தின் பிடியிலும் சிக்குண் டிருந்த தமிழீழ பெண்களிடம் பேரெழுச்சியை தோற்றுவித் திருந்தது. இப் பேரெழுச்சயானது பெண்கள் தம்மை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக்கொள்ள ஓர் ஊன்று கோளாக அமைந்திருந்தது. போராட்டத்தில் இணைந்து கொண்ட பெண்கள் களத்தில் ஆண் போராளிகளுக்கு நிக ராகவும் சமுதாயத்தில் பெண் விடுதலைக்காகவும் போராடி வாகை சூடினார்கள்.

ஈழத்தமிழர் வரலாறு வீரவரலாறாகப் படைக்கப்பட்டு கொண டிருக்கின்றது. இந்த வரலாற்றில் தமிழீழப் பெண்களின் வீர மும், தியாகமும், பங்களிப்பும் பெருமைப்பட வேண்டிய விடயம். அந்தப் பெருமைக்கு வழிகாட்டியாக அடிமை விலங்குகளால் கட்டுண்டு கிடந்த பெண்கள் சமூகத்துக்கு சமத்துவ நிலை வழங்கிய பெருமை தேசியத் தலைவர் அவர்களைச் சாரும்.

தமிழ் பெண்களின் வாழ்க்கை சமய ரீதியிலான கட்டுப்பாடுக ளுக்குள் உட்படுபவை. பாரம்பரிய நடைமுறை என்ற கண் ணோட்டத்தில் பெண்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்து வருவ தால் அவர்களது சுதந்திரம் கட்டுப்பட்டு அடிமை நிலைப்படுத் தப்பட்ட சமூகமாக இருந்து வந்த நிலையில் தேசியத் தலைவர் அவர்கள் அளித்த சமத்துவ நிலை அவர்களின் அடிமைத் தனத்தை தகர்த்தெறிந்து. ஆண்களுக்கு நிகரான ஆற்றல் கொண்டவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டினர்.

இந்த ஆற்றலை வீரத்தை வெளிப்படுத்தி எதிர்காலப் பெண் களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் தான் 2ஆம் லெப். மாலதி ஆவார். மன்னார் ஆட்காட்டிவெளியைச் சேர்ந்த பேதுறு சகாய சீலி என்ற பெண் தமிழீழ தேச விடுதலைப் போராட்டத்தில் சிறு வயதில் இணைந்து கொண்டவர். இவ்வாறு இணைந்து கொண்ட 2ஆம் லெப். மாலதி அவர்கள் கடந்த 10.10.1987ஆம் திகதி அன்று யாழ் கோப்பாய் பகுதியில் நடந்த இந்திய இரா ணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார். 2ஆம். லெப். மாலதி காட்டிய முன்னுதாரணமான வீர வரலாறு தான் அதன் பின்னரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆயிரமாயிரம் பெண்கள் இணைவதற்கு வழிகோலியது.

அடுப்பங்கரையும், அகப்பையுமாக சமையல் கட்டுக்குள் முடங் கிக் கிடந்த பெண்கள் இயந்திரத் துப்பாக்கிகளைத் தூக்கி எதி ரியை சுட்டு வீழ்த்துகின்ற, எதிரிகளுடன் கள முனைகளில் நின்று சமர் புரிகின்ற, கடலில் சென்று எதிரியின் விசைப்படகை முற்றுகையிட்டு தாக்கும் மனோ உறுதியை தேசிய விடுதலைப் போராட்டம் களமமைத்துக் கொடுத்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறித்து தேசியத் தலைவர் அவர்கள் அன்று சொன்ன கருத்துப் பகிர்வு சிந்திக்க வேண்டிய விடயம்.

எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசிய போராட் டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்து தான் எமது விடுதலை இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத் தியது. பெண்களை அரசியலில் மையப்படுத்தி போராட்டத்திற்கு அவர்களை அணிதிரட்டியது. இவ்வகையில் தமிழீழ சமூகம் மத்தியில் ஒரு புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கின்றது.

காலம் காலமாக அடுக்களையில் அடங்கிப் போயிருந்த தமிழீ ழப் பெண் இனம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கின்றது. சீருடை தரித்து நிற்கின்றது. காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண் ணினம் இன்று விழிப்படைந்து எமது போராட்டத்தின் புரட்சிகர சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கிறது. வீரத்திலும், தியாகத் திலும், விடுதலை உணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்களல்ல என்பதை எமது பெண் போராளிகள் தமது வீரசாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர் என்றார் தேசியத் தலைவர் அவர்கள்.

அந்த வீர சாதனைகளின் உச்சமாக நெஞ்சிலே வெடி குண்டு களைச் சுமந்து சென்று எதிரிகளை அல்லது எதிரிகளின் இலக் குகளை அழித்து விடுதலைப் போராட்டத்தில் ஏற்படுகின்ற தடைகளை தகர்த்தெறிந்து சாதனை படைத்துள்ளார்கள் என் றால் தமிழீழப் பெண்கள் பெருமைக்குரியவர்கள் என்பதில் மறு பேச்சுக்கு இடமில்லை. சிங்கள அரசின் தமிழின அழிப்பு நட வடிக்கை என்பது ஒரு உளவியல் ரீதியான போராட்டமாக நாம் கருத வேண்டியுள்ளது. ஏனெனில் தமிழ் மக்களை கொன் றழிப்பது, வீடுகளை நாசம் செய்வது, கிபீர் விமானத் தாக்குதல், பல்குழல் பீரங்கித் தாக்குதல், ஆட்லறி எறிகணைத் தாக்கு தல்களை தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலம் மக்க ளிடையே உளவியல் ரீதியான பாதிப்பினை ஏற்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகவுள்ளது.

இவ்வாறான பாதிப்புக்களால் தமிழினம் சோர்ந்து விடக் கூடாது. ஒரு விடுதலைப் போராட்டத்தில் சாவும், அழிவும், துன்பமும், துயரமும் தவிர்க்க முடியாதவை. பெரிய தியாகங்கள் அர்ப் பணிப்புக்கள் புரிந்து தான் நாம் எமது விடுதலையை வென் றெடுக்க வேண்டும் என தேசியத் தலைவர் கூறியிருக்கிறார்.

2ஆம் லெப். மாலதி அவர்கள் அன்று இந்திய வல்லாதிக்க இரா ணுவத்துடன் நேரடி மோதலில் ஈடுபட்டு வீரச்சாவடைந்தார். இந்த வீரமரணம் தான் 2ஆம் லெப். மாலதியை நினைவு கூருவதற்கு வழி வகுத்திருக்கின்றது. அதுமாத்திரமின்றி ஆயிர மாயிரம் பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைவதற் கும் பெண்கள் பற்றி பெருமை கொள்வதற்கும் வழிவகுத் துள்ளது. எனவே இன்றைய சூழலில் கூடப் பெண்கள் தேசிய எழுச்சி பெற்று விடுதலைப் போராட்டத்திற்கு தங்களுடைய முழு மையான பங்களிப்பை வழங்க வேண்டும். அடுப்பூதும் பெண்கள் எல்லோரும் ஆயுதங்கள் தூக்கி களமுனைகளில் நின்று எதிரியைத் தாக்கி அழிக்கும் ஆற்றல் கொண்டவர்களாக மாறுகின்ற போது எதிரியின் பல்குழல் பீரங்கியும் கவச வாக னமும் எமது தாயக பூமிக்குள் கால் வைக்க முடியாது என்பதை எதிர்காலத்தில் நிஜமாக்க வேண்டிய பொறுப்பு தமிழீழத் தாயகப் பெண்களின் வரலாற்று கடைமையாகும்.



தமிழர் தாயகம் மீது ஏற்படுத்தியிருக்கும் அவலங்கள் நிரந்தர மானவை அல்ல. அவை தற்காலிகமானவை என்ற உறுதிப் பாட்டுடன் தமிழீழப் பெண்கள் விழித்ததெழுந்தார்கள். மன் னார் அடம்பனில் சிங்கள இராணுவத்தின் மீதான தாக்குதலின் பின்னர் பெண்புலிகளின் தாக்குதல் வரலாறு தொடங்கியது. அன்றிலிருந்து தீச்சுவாலை வரையான பல களங்களில் பெண் புலிகளின் பங்களிப்பு வெளிப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவானது விடுதலைப் புலிகளின் சகல வேலைத் திட்டங்களிலும் பல படையணிக ளிலும் பெண்களும் இடம்பெற்றிருந்தனர். கடல் மற்றும் தரைக் கரும்புலிகளாகவும் பெண்புலிகள் பலர் தீரத்தை வெளிப்படுத் தினர். யுத்தத்தை எதிர்கொள்வதிலும் சண்டை செய்வதிலும் எல்லோரும் சம அளவில் உழைக்க வேண்டியிருந்தது. இதில், பெண்களுக்கு ஒப்பீட்டளவில் நிறையச் சிக்கல்கள் உள்ளன. எனினும் போர்க்களத்தில் அத்தனைச் சிக்கல்களையும் எதிர் கொண்டுதான் அவர்களாற் சாதிக்க முடிந்தது.

ஜெயசிக்குறு ஓராண்டு வெற்றி நாளுக்கு களமுனைக்குச் சென்ற பொதுமக்களுக்கு அவர்கள் படும் சிரமங்கள் தெரிந்தன. ஜெயசிக்குறு எதிர்ச்சமர் ஏறத்தாள ஒன்றரை வருடங்கள் நடை பெற்றது. அனைத்துக் கால நிலைகளிலும் சண்டை நடந்தது. மழைக்காலத்தில் பதுங்குகுழிகளுக்குள் வெள்ளம். மழை பொழியப்பொழிய சண்டை. நெஞ்சு முட்டும் தண்ணீருக்குள் நாள் முழுவதும் நின்று சண்டைசெய்திருந்தார்கள். அனைத் துப் பதுங்குகுழிகளும் அவர்களே வெட்டினார்கள்.

ஜெயசிக்குறு எதிர்ச்சமரின்போது உடலுளைப்பு மிகமிகக் கடின மாயிருந்தது. பதுங்குகுழி அமைப்பதும் அணைகள் அமைப் பதும் காப்பரண்கள் அமைப்பதும் மிகக்கடுமையான வேலைகள். தமக்குரிய அனைத்து வேலைகளையும் அவர் களேதான் செய்தார்கள். பின்வாங்கி வரவர புதிய காப்பரண்கள் அமைக்கவேண்டும். தங்களுக்கான சகல நிர்வாக வேலை களைக்கூட அவர்களேதான் செய்தார்கள். மருத்துவர்களாக வும் சாரதிகளாகவும் பெண்களே இருந்தார்கள். களமுனைக் கட்டளைத் தளபதிகளாகவும் அவர்கள் இருந்து வழிநடத் தினார்கள்.

முன்பு ஆண் போராளிகளின் அணிகளுடன் பெண் போராளின் அணிகளும் கலந்து தாக்குதல் மேற்கொண்ட நிலை, ஒரு கட்டத்தில் தனித்துத் தாக்குதல் நடத்தும் நிலைக்கு வளர்ச்சி யடைந்தது. முக்கிய மரபுவழி எதிர்ப்புச் சமர்களில் அவரவர் பகுதிகளை அவரவரே தனித்துப் பாதுகாத்துச் சண்டை செய் தனர். எதிரியின் பிரதேசத்துக்குள் ஆழ ஊடுருவி நடத்தப்பட்ட தாக்குதல்கள் கூட பெண் புலிகளால் தனித்துச் செய்யப்பட்டன. முக்கியமாக தரைக்கரும்புலித் தாக்குதல்கள் சில அவ்வாறு நிகழ்த்தப்பட்டன.

தீச்சுவலை முறியடிப்புச் சமரில் பெண் புலிகளின் பங்களிப்பு அளப்பரியது. தளபதி பிரிகேடியர் பால்ராஜின் கூற்றுப்படி, முறி யடிப்புச் சமரிற் பங்குபற்றி அந்நடடிக்கையை முறயடித்தவர் கிளில் 60 வீதமானவர்கள் பெண் போராளிகளே. தமக்கென சிறப்புப் படையணிகளையும் கனரக ஆயுதப்படையணிகளை யும் கொண்டிருந்த மகளிர் படையணி, கடலிலும் தன் பங்கைச் சரிவரச் செய்துள்ளது. ஆட்லறிகள் வரை சகல கனரக ஆயு தங்களையும் பயன்படுத்தும் மகளிர் அணிகள் உருவாக்கப்பட் டிருந்தன.

தமிழீழ தேசியத் தலைவரின் தீர்க்க தரிசன சிந்தனையுடன் உருவாக்கப்பட்ட மகளிர் படையணிகள் தமிழர்களுக்கு சர்வ தேச முகவரியைப் பெற்றுக்கொடுத்தன. தமிழீழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சி நடைபெற்றபோது அனைத்துலகப் பெண்கள் எழுச்சி நாள் மிகவும் உணர்வெழுச்சியாக நடை பெற்றது. இதில் பெண் போராளிகளும் பங்கெடுத்திருந்தனர்.

சங்க கால இலக்கியமோ, தமிழீழ போர்க்கால இலக்கியமும் காட்டாத ஒரு மேன்மையான தியாகச் செயலின் உச்சத்தை இறுதிபோரின் சமர்களத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவத் தில் காணலாம். தமிழீழ விடுதலைப் போராட்ட வலராற்றில் விடுதலைப் புலிகளின் ஓர்மத்துக்கும், விடாமுயற்சியையும் காட் டிநின்ற ஆனந்தபுர பெரும் சமருக்கு மகளிர் படையணிகள் சார்பாக தலைமை தாங்கிய மாலதி படையணியின் சிறப்புத் தளபதி பிரிகேடியர் விதுசா, சோதியா படையணி சிறப்புத் தளபதி பிரிகேடியர் துர்க்கா அவர்களுடன் போர்க்களத்திற்கு சென்ற மாலதி படையணித் தளபதி கேணல் தமிழ்ச்செல்வி அவர்கள் தனது சிறு குழந்தையை போராளியான தனது கணவர் பூவண்ணனிடம் விட்டுவிடு போர்க்களத்துக்குச் சென்றார். இதில் பல நூறு பெண் போராளிகளின் வீர வலராறு பற்றி ஆனந்தபுர சமர் வரலாற்றுப்பதிவுகள் பதிவிடுகின்றன.

‘04.04.2009ல் அதிகாலையில் இடம்பெற்ற பெரும் உடைப்புச் சமரில் பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்கா உள்ளிட்ட பெரும் தளபதிகள் வீரமரணமடைய அன்றைய தினம் இரவே எஞ்சிய போராளிகள் அனைவரையும் ஒருங்கிணைத்துக் கொண்டு மீண்டும் ஒரு உடைப்புச் சமரை மேற்கொள்ள தளபதிகளும் போராளிகளும் தயாராகினர். அந்த உடைப்புச் சமருக்கு எஞ்சிய மகளிர் போராளிகளையெல்லாம் ஒருங்கிணைத்துக்கொண்டு தமிழ்ச்செல்வி களம் இறங்கினாள். எப்படியாவது பெட்டி முற்று கைக்குள் இருக்கும் போராளிகளைக் காப்பாற்றி முற்றுகையை உடைத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவள் மனதில் இருந்தது. இறுதியாக ஒரேயொரு வார்த்தை ‘என்ர பிள்ளையைப் பத்திரமாகப் பாருங்கோ…’ அது தான் அவளது கடைசித் தொடர்பாடலாக இருந்தது.

அந்த உடைப்புச்சமர் உக்கிரமாய் நடந்து பச்சைப்புல்மோட் டைக் கடல் நீரேரியூடாக ஒரு உடைப்பொன்றை ஏற்படுத்தி போராளிகள் நகர்ந்து கொண்டிருக்கும் போதுதான் தற்துணி வும் விடாமுயற்சியும், வைராக்கியமும் கொண்ட தமிழ்ச்செல்வி என்கின்ற பெருமலை எதிரியின் குண்டேந்தி அந்த இடத் திலேயே சரித்திரமாய் வீரவரலாற்றின் பக்கங்களில் இடம் பிடித்துக்கொண்டாள்.’

இவ்வாறாக வீரம்நிறைந்த பெண்கள் தமிழீழத்தில் வாழ்ந் தார்கள் என்பது உலகே கண்டு வியந்த உண்மை என்பதுடன் அவர்கள் தமது அக உணர்வுகளை போர்க்கால இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுத்தவும் பூரண சுதந்திரம் வழங்கப்பட் டிருந்தது. இதற்கெல்லாம் காரணம் அப்பெண்களுக்கான சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் வழங்கிய தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் ஆழ்ந்த சிந்தனையே ஆகும் .

தமிழ்த்தேச விடுதலையின் முக்கியமான ஒரு கால கட்டத்தில் நிற்கின்றோம். இந்தக் கால கட்டத்தில் தமிழீழப் பெண்களின் எழுச்சி நாள் மற்றும் 2ஆம் லெப் மாலதி அவர்களின் 38வது ஆண்டு நினைவு நாளையும் நினைவு கூறும் இத்தருணத்தில் தமிழீழப் பெண்கள் தீர்க்கமான சில வழிமுறைகளை மேற் கொள்ள வேண்டியது காலத்திற்கு அவசியமானது.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்சி இல்லாமற் போன பின்னர் தமிழீழத்தில் பெண்களுக்கு எதிரான வன் முறைகள் அதிகரித்துள்ளன. பெண்களின் நலன்களைக் கவனிக்கக்கூடிய எந்தக் கட்டமைப்பும் உறுதியாக இல்லை. எமது தமிழ்ச் சமூகத்தில் தனியே பெண் போராளிகளுக்கு மட்டும் பொருந்திய பாரிய மாற்றம் தொடர்ச்சியாக சமூகத்தில் பின்பற்றப்படாததுதான் பெண்கள் தற்போது எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு காரணம். தலைவரின் சிந்தனைகளுக்கு ஏற்ப பெண் சமூகக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தினால் மட்டுமே பெண்களின் வாழ்வில் மாற்றம் ஏற்படும்.



தமிழீழ விடுதலைப்புலிகளினால் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட காலத்தின் பின்னர் அதாவது 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் தமிழீழ பெண்கள் சொல்லெனா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இவற்றிக்கெல்லாம் ஒரே தீர்வு தமிழீழமாகும். காலமிட்ட கட்டளைப்படி வரலாறிட்ட வழியில் தமிழீழம் வெல் லும் வரை போராடுவோமென தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளான இன்று தமிழாழ் இணைந்து நாம் உறுதியெடுத்துக் கொள்வோம்.

நாம் தமிழீழப் பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கின்றது.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

கட்டமைப்புத் தேசியவாதமும் தமிழீழத் தேசிய ஒருமைப்பாடும்

- மு. திருநாவுக்கரசு -

18.09.2025

கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்குப் பதில் கட்டமைப்புத் தமிழீழத் தேசிய எழுச்சியாகும். தேசியமென்பது சிதறு தேங்காயடி விளையாட்டல்ல. தேசியமென்பது ஐக்கியம், ஒருமைப்பாடு, கூட்டுச்சேரல், அணிசேரல் என்ற அணுவிலிருந்து அண்டம் வரையான ஒருமைப் பாட்டைக் குறிக்கிறது.

ஒரு மக்களினத்தை அழிப்பதற்கு முதலில் அவர்களின் பண்பாட்டையழித்தல் அத்துடன் கூடவே அவர்களின் தேசியத் தன்மையை அழித்து விடவேண்டுமென்ற உணர்வுக்குள்ளுள்ள நிலைப் பாட்டின் கீழ்த்தான் காலனி ஆதிக்கம் ஆசியா, ஆபிரிக்க நாடுகளில் தமது கொள்ளைக்கார, கொலைகார அரசியலை நடத்தியதாக விடுதலை வீரனும், சிந்தனையாளருமான அமில்கார் கப்ரால் (Amílcar Cabral) கூறினார். கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை ஆதிக்கமானது இதனை உணர்வுபூர்வமாக பல்பரிமாணத்துடன் கையாளுகிறது.

ஆதிக்க சக்திகளுக்கெதிரான பலம் பொருந்திய ஆயுதம் தேசியம். அது மக்களைத் திரளாக்கி, மக்களை எதிரிக்கெதிரான பலம் பொருந்திய ஆயுதமாய் நிலைநிறுத்தி விடுகிறது. அது மக்களை, மக்களுக்கு அரணாக்குகிறது. அந்தத் தேசியத்தினடித்தளம் பண்பாடும், வாழ்க்கை முறையும், ஒருமைப்பாடும், சனநாயக முறைமையு மாகும்.

தேசியமும், தேசிய ஐக்கியமும், தேசிய ஒருமைப்பாடும் இல்லையேல் மக்களுக்கென்று பாதுகாப்பொன்றுமில்லை. ஆதலால் தேசியம் எப்போதும் முதல் நிலையில் மக்களுக்கான பாதுகாப்பரணும், பாதுகாப்புக் கவசமும், கூடவே எதிரிக்கெதிரான ஈட்டியுமாகும்.

தமிழ்த் தேசியத்தைச் சிதறு தேங்காயாக்கும் பணியை எதிரியின் சார்பில் தமிழ்த் தலைவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். களத்திலும், புலத்திலுமுள்ள தமிழ் அரசியற் செயற்பாட்டாளர்களும், பண்பாட்டாளர்களும் இப்பிரச்சினையை உணர்வு பூர்வமாகப் புரிந்து, தமிழ்த் தேசியத்தைப் புதிய சிந்தனையுடன் கட்டமைப்புச் செய்ய வேண்டும்.

தேசியத்தில் மக்கள், நிலம், மொழி, பண்பாடு, வரலாறு என்பன எவ்வாறு முக்கியமான அம்சங்களோ அவ்வாறே அத்தேசியத்திற்கான கட்டமைப்பும் முக்கியமான அம்சமாகும். காணப்படும் யதார்த்த பூர்வமான களநிலைக்குப் பொருத்தமாக, உலகளாவிய உள்நாட்டு, வெளி நாட்டு அரசியலுக்குப் பொருத்தமாகத் தேசியம் எப்பொழுதும் இடையறாது கட்டமைப்புரீதியாகப் புதுப்பிக்கப்பட்டு கொண்டேயிருக்கவேண்டும்.

தற்போது ஈழத் தமிழர்கள் மத்தியிலுள்ள துயரகரமான நிலைமையென்னவெனில் தமிழ்த் தேசியத்தைச் சிதறடிப்பதையே தேசிய அரசியலாகத்தமிழ்த் தலைவர்கள் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் தமிழ்த் தேசியமானது தற்போது சிதறடித்தல் என்கின்ற பரிமாணத்தைப் பெற்றிருக்கிறது. இதனை அரசியற் கோட்பாட்டு ரீதியாகத் தேசிய நாசகாரச் செயல், அரசியல் நாசகாரம் (Political Vandalism) என்றழைக்கலாம்.

இத்தகைய நாசகார அரசியலுக்குப் பதிலாக தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டரசியலை முன்னெடுக்க வேண்டியது ஒவ்வொரு ஈழத் தமிழரினதும் கடமையாகும். எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும் ஒவ்வொரு சனநாயகவாதியினரும் பொறுப்பும், கடமையும், பணியுமாகும்.

யாரையும் திட்டிக்கொண்டிருப்பதையும், வசைபாடிக் கொண்டிருப்பதையும், இலட்சிய மாகக்கொண்டிருக்க முடியாது. திட்டுவதையும், சேற்றை வாரிவீசிக் கொண்டிருப்பதையும் தேசிய வாதமாக்கிவிடக்கூடாது. சிதறு தேங்காயடித் தலையும், சேற்றைவாரி வீசலையும் தேசிய மாக்கி விட்ட ஒரு காலகட்டத்தில் ஈழத் தமிழர்கள் சேற்றுப் புழுக்களாய் நெழியுமொரு காலகட்டத்தில் வாழ்கிறோமென்ற துயர்தோய்ந்த இன்றைய வரலாற்றுக் கட்டத்தைப் புறந்தள்ளமுடியாது. எனவே இன்றைய நிலையிற் புதிய பரிமாணத்துடன், புதிய சிந்தனையுடன் புதிய கட்டமைப்புச் செய்ய வேண்டும்.

இதற்கு உலகளாவிய இன்றைய உடனடி யதார்த்தத்தையும், சர்வதேச அரசியலையும், உள்நாட்டு, வெளிநாட்டு அரசியலையும் ஈழத் தமிழரின் உள்ளக அரசியலைத் தாயகம், புலம் பெயர் தேசமென இரு பரிமாணங்களிலும் யதார்த்தபூர்வமாகக் கணக்கிலெடுத்துச் செயற்பட வேண்டும். ஈழ மண்ணில் ஈழ நிலமும், அதன் கடல் சார்ந்த பிரதேசத்தையும் உள்ளடக்கிய சிந்தனையுடன் அகத்திலும், புலம்பெயர் தேசத்தில் ஒரு புதிய கட்டமைப்பு வாதத்தையுருவாக்க வேண் டும்.

முதலாவதாக ஈழத் தமிழரின் அரசியலை அறிவியல் மயப்படுத்த வேண்டும். எழுமாத்திர அரசியலையும், தான்தோன்றித்தனமான அரசியலையும் புறந்தள்ளி, முற்றிலும் புத்திபூர்வமான, அறிவார்ந்த திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும். இதற்குத் தமிழ் அரசியலை அறிவியல் மயப்படுத்துதலென்கின்ற கோசம் முதலில் முன்னெடுக்க வேண்டும். இதற்கு இரண்டு விடயங்கள் மிகவும் அடிப்படையானவை.

முதலில் தமிழரரசியலை சனநாயக மயப்படுத்தப்பட வேண்டியுள்ளது. தமிழ்க் கட்சிகள் முதலாவதாக தம்மை சனநாயக மயப்படுத்த முயற்சிக்க வேண்டும். சனநாயக அம்சங்களையும், நடைமுறைகளையும் இவர்கள் பின் பற்ற வேண்டும். சனநாயகத்தின் கூரிய முதுகெலும்பு வெற்றிக்கும், தோல்விக்கும் பொறுப்பேற்றலாகும்.

தோல்விக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலகலைத் தலைவர்கள் ஒரு சனநாயக நடை முறையாகக் கொள்வதன் மூலம் தகுதியான புதியவர்களின் வருகையையும், சனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கான பாதையையும் திறக்கலாம்.

இந்தியாவின் முன்னாள் பிரதமராயிருந்த திருமதி இந்திரா காந்தி குறிப்பாக 1970களின் மத்தியில் மேற்கொண்ட அவசர காலச் சட்டத்தின் கீழான ஆட்சியில் இழைக்கப்பட்ட தவறுகளை

www.sangathamil.ca

யும், அரசு மேற்கொண்ட கட்டாயக் கருச்சிதைப்பில் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகளையும், பெருந்தவறாகப் பொறுப் பேற்று அதற்காக 1979 டிசம்பர் பொதுத் தேர்தலில் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினார். அவரை மன்னித்து 1980 ஆம் ஆண்டு சனவரியில் அவரை மீண்டும் பிரதமராகப் பதவி ஏற்கச் செய்தனர். தமிழினத் தலைவர்களும் தங்கள் தவறுகளை ஒப்புக் கொண்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரினால் ஈழத்தமிழ் மக்கள் நிச்சயம் மன்னிப்பார்கள். திருந்தி மன்னிப் புக் கோருதலும், மக்கள் அதனை மன்னித்தலும் ஒரு சனநாயக நடைமுறைதான்.

எப்படியோ தற்போது ஈழத் தமிழ் அரசியற் களத்தில் முற்றிலும் பல்வேறு வழிகளிலும் சனநாயக மயப்படுத்தப்பட வேண்டும். இது உடனடியான, இலகுவான காரியமல்ல என்பது வெள் ளிடை மலை. ஆயினும் அதனை நோக்கி முன்னேற இப்போது அவசரமான கட்டமைப்பு களையுருவாக்க வேண்டியதவசியம்.

முதலாவதாக எத்தகைய அரசியற் தீர்மானங்களையும் அறி வார்ந்த அறிக்கைகளுக்குட்படுத்த வேண்டும். ஈழத் தமிழர்கள் மத்தியில் அரசியற் தீர்மானங்களை ஒட்டி அறிக்கைகள் தயாரிப் பதற்கான ஒரு ஆய்வுக் குழுவை உருவாக்க வேண்டும். இவர்கள் கட்சி அரசியல்களுக்கு அப்பாற்பட்டு ஒரு விடயத்தை முற்றிலும் அறிவார்ந்த ஆய்வுகளினூடாக நேர்மையுடனும், விசுவாசமாகவும் முன்வைக்க வேண்டும். ஊடகங்கள் இவற் றைப் பொறுப்புணர்வுடன் மக்கள் மத்தியிலெடுத்துச் செல்ல வேண்டும்.

நமது அரசு கொண்டுவருமொரு அரசியற் தீர்மானமென்றால் அதனை ஆய்வுக்குட்படுத்தி அறிக்கை தயாரிக்க வேண்டும். அப்படிச் சமூகத்திலெழக்கூடிய அரசியல், பொருளாதாரம், மூல வளம், சாதி, மத, சமூகப் பிரச்சினைகள், இயற்கை அனர்த் தங்கள், கட்சிகளுக்கிடையே அல்லது உட்கட்சிக்குள்ளே நடக் கக்கூடிய பிரச்சினைகள், முரண்பாடுகளையும் அவ்வப்போது ஆய்வுக் குட்படுத்தி அறிக்கை தயாரிக்குமொரு மையக் குழு உருவாக்கப்பட வேண்டும். இது தமிழ் தேசியத்தைச் சரிவர இயக்குவதற்கேற்ற இருதய மான மைய விடயமாகும்.

இதில் அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் என் போரது கூட்டுப் பங்களிப்பு தலையாயது. இதனை முற்றிலும் செயற்பூர்வமான பொறிமுறை அமைப்புக்கேற்ப கட்டமைப்புச் செய்ய வேண்டும். இந்த ஆய்வறிக்கைக் குழுவு க்கு அனு சரணையாக மும்மொழி கொண்ட மொழிபெயர்ப்புக் குழு வொன்று உருவாக்கப்பட வேண்டும்.

இவையிரண்டுக்கும் அனுசரணையாக வொரு வெளியீட்டுக் குழு உருவாக்கப்பட வேண்டும். அந்த வெளியீட்டுக் குழுவே அச்சு வெளியீடுகளையும், ஊடகங்களைக் கையாளும் அதி காரம் கொண்டதாகவிருக்கவேண்டும். இவை மூன்றும் தனித் தனியே சுயாதீனமானவையும் கூட்டானவையுமாகவிருக்க வேண்டும்.

இப்படியே புலம்பெயர்ந்த நாடுகளில் குறிப்பாக மேற்குலகில் மேற்குலக நாடுகளைக் கையாளவல்ல ஒரு செயற்பாட்டுக்குழு உருவாக்கப்பட வேண்டும். அது ஆய்வு செய்தல், கொள்கை வகுத்தல் போன்ற பணிகளை முதற் தரமாகச் செய்ய வேண் டும். இவற்றை நடை முறைப்படுத்துவதற் கென ஒரு தாய், தந்தை அணியை உருவாக்க வேண்டும் .

இங்கு இரண்டு இராசதந்திர அணிகள் உருவாக்கப்பட வேண் டும். ஒன்று குறிப்பாக மேற்குலக நாடுகளையும் ஏனைய நாடு களையும் கையாள்வது. இரண்டு இந்தியாவையும், தமிழகத் தையும் கையாள்வது.
மேற்குலக நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 நாடுகளும், வட அமெரிக்காவில் இரண்டு நாடுகளுமென முப்பது நாடு களின் தடை பட்டியலில் புலிகள் இணைக்கப்பட்டுள்ளார்கள். வெறுமனே புலிகளுக்கெதிரான தடைமட்டுமல்ல. கூடவே அது போராட்டத்திற்கெதிரான தடையும், மக்களின் தேசிய வளர்ச் சியை முன்னெடுப்பதற் கெதிரான தடையுமாகும்.

ஆசியாவில் மூன்று நாடுகளில் புலிகள் முற்றாகத் தடை செய் யப்பட்டுள்ள இயக்கமாகும். அவை இலங்கை, இந்தியா, மலே சியா. இவற்றை வெறும் கற்பனையில் அல்லது எழுமாத்திரத் தில், அல்லது முற்கற்பிதத்தில் கையாள முடியாது. விஞ்ஞான பூர்வமான சர்வதேச அரசியல் நடுவர்களுக்கூடாகச் சாத்தியக் கூறுகளை ஒருங்கு திரட்டிக் கையாள வேண்டும். இவற்றிக்கு அரசியலறிவும் பாண்டித்தியமும் அவசியம். குரல்கள் எதி ரிகளை உருவாக்குமே தவிர நண்பர்களை உருவாக்காது. அழிவைத் தருமே தவிர மாற்றத்தையோ ஆக்கத்தையோ தராது . எல்லா வற்றிற்கும் உரமூட்டக் கூடிய வகையிற் சிறப் பான தகவல் மையத்தையுருவாக்க வேண்டும். அந்தத் தகவல் மையம் அல்ஜசீரா போன்ற ஒரு நம்பகரமான, திறமையான ஊடகமாகச் சுயாதீனமாக நடத்தப்படவேண்டும். இத்தகைய உயிரோட்டமானவற்றைச் செய்யாமல் மேற்கொள்ளப்படும் எத்தகைய ஆர்ப்பரிப்புகளும், ஆரவாரங்களும் பயனற்றுப் போகும்.



தியாகங்களை உயிரோட்டத்தோடு மக்கள் மையப்படுத்தாது விட்டால் வெறும் கல்லறைக் கொண்டாட்டங்களாக மட்டும் வைத்திருந்தால் அவை கல்லறைக்குள் முடங்கி ஆளப் புதைந்து போய்விடும். தியாகங்களைக் கல்லறைப் பண்டங் களாகவல்லாமல் தியாகங்களுக்கு உயிரோட்ட வேண்டுமென் றால் மக்கள் மயப்பட்ட அரசியல் உணர்வுகளினாலும், அதற் கான அரசியல் முன்னெடுப்புகளினாலுமே சாத்தியம். தியா கங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அரசியல் வெற்றிகளி னாலும் முன்னெடுப்புகளினாலும் அவை உயிரூட்டப்பட வேண்டும். வெறும் கல்லறை கொண்டாட்டங்களாலல்ல.

இங்கு தியாகம் என்று சொல்வது போராளிகளை மட்டுமல்ல; கூடவே படுகொலைக்குள்ளான மக்களின் வாழ்விழப்பையும், அவர்களின் சந்ததியினர் படும் துயரங்களையுமாகும். மரணம் இறந்தவரோடு போய் விடலாம், ஆனால் அவரது மரணத்தைச் சுமக்கும் உயிரோடுள்ள அன்புக்குரியவர்களின், உறவினர் களின் ஒரு துயரமும் பெருந்தியாகம் தான் அதாவது பொதுவாக வாழ்வில் இறந்தவரின் பொறுப்பு அவரது மரணத்தோடு முடி வடைந்து விடுகிறது. இறந்தவரின் கடமைகளையும், பணி களையும் சுமக்க வேண்டிய பொறுப்பு அவரின் வாரிசுக ளுக்குண்டு. இறந்தவர்களோடு தியாகம் முடிவடைந்து விடுவ தில்லை; அதை சுமப்பவர்களோடு தியாகம் நீள்கிறது. இந் நிலையிற் மிகுந்த பொறுப்புணர்வுடன் கல்லறைகளுக் குள் ளிருக்கும் தியாகிகளையும், அவர்களின் நீட்சியான மக்களின் தியாகங்களையும் ஒருங்கு சேர முன்னெடுக்கவல்ல அரசியற் சிந்தனை வேண்டும்.

குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளிற் காணப்படக்கூடிய சன நாயகச் சூழல் இவற்றை விரைவாகப் பெரிதாக முன்னெடுக்க அவர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

இந்நிலையிற் தமிழ்த் தேசியச் சிதைவுக்கான கோழிச் சண் டைகளைக் கடந்து தமிழ்த் தேசியத்தைத் தூக்கி நிறுத்துவதற் கான கட்டமைப்புகளையுருவாக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் ஜே.வி.பி.யிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டி யுண்டு. அவர்கள் 1971 ஆம் ஆண்டு ஓர் ஆயுதப் போராட் டத்தை நடத்தி 14, 000 - 20, 000 இளைஞர் யுவதிகளை இழந்தார்கள். பின்பு 1987 - 89 ஆம் ஆண்டுகளில் 1,00, 000 - 1,20, 000 இளைஞர் யுவதிகளை இழந்து இரண்டு ஆயுதப் போராட்டங்களிலும் படுதோல்வியடைந்தனர்.

1971 ஆம் ஆண்டு ஜேவிபி யினர் கடல் கடந்து வடகொரியா விருந்து கப்பல் வழியாக ஆயுதம் கடத்துவதற்கெடுத்த முயற்சி தோல்வி முடிந்தது. ஒரு தீவுக்கு ஆயுதப் போராட்டம் அதிகம் பொருத்தமுடையதல்ல என்பதை நடைமுறையில் முதற் தர மாக அவர்கள் கண்டு கொண்டாலும் இரண்டாம் தரமும் ஏற் பட்ட தோல்வியின் பின்பு அவர்கள் ஆயுதப் போராட்டம் சாத்திய மற்றது என்ற முடிவுக்கு வந்து ஆயுதங்களுக்குப் பதிலாக இன வாதத்தைக் கையிலெடுத்து ஆட்சியைக் கைப்பெற்றும் கலை யில் வெற்றி பெற்றார்கள். சிங்கள மக்களை இனவாதத்தால் அணி திரட்டி ஆட்சியைக் கைப்பற்றுதல் என்கின்ற வித்தையை அவர்கள் புரிந்து கொண்டார்கள். மேலும் சிங்கள இன வாதத்தை முன்னெடுப்பதன் மூலம் மக்களை தெளிவாக அணி திரட்டலாமென்ற முயற்சியில் அவர்கள் முன்னணியிலுள் ளார்கள்.

கச்சதீவுக்கு எந்தவொரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியற் பரிமாணத்துடன் வாழ்நாளில் பயணித்தது கிடையாது. ஆனால் அண்மையில் இலங்கை சனாதிபதி கச்சதீவுக்கு. ஒரு சாகசப் பயணத்தை மேற்கொண்டு கடல் எல்லையையும், வானெல்லையும், தரை எல்லையையும் பாதுகாக்கப் போவ தாக சிங்கள இன வாதத்தின் பெயரால் குரல் எழுப்பி சிங்கள இனவாதத்தின் கதாநாயகனாய் சிங்கள மக்களின் மனங் களிலொரு தேசியக் கதாநாயகனாய் நிலை நிறுத்தப்படுகிறார்.

ஒடுக்கும் இனவாதம் அதுவும் ஈழத் தமிழரின் கச்சதீவு மண் ணில் நின்று தன்னை நுணுக்கமாகக் கட்டமைக்கிறது. ஆனால் ஒடுக் கப்படும் தமிழ் தேசிய இனம் தமக்கு வாய்ப்பு கிடைக்கும் நேரமெல்லாம் தம்மை சிதறு தேங்காய் அடிக்கிறது.

இத்தகைய இழிநிலையிருந்து மீண்டெழுந்து தமிழீழத் தேசி யத்தை இன்றைய புதிய சூழலுக்குப் பொருத்தமாக புதிய வகை யில் கட்டி எழுப்பத் தொடங்க வேண்டும். அதற்கு உள்ளும், புறமும் புதிய கட்டமைப்புக்களை முற்றிலும் அறிவார்ந்த வகை யில் வடிவமைக்க வேண்டும்.

எமது மொழியில், எமது கலைகளில், எமது பண்பாட்டில்,
எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும், நேசமும்
தேசியப் பற்றுணர்வாகப் பரிணாமம் பெறுகின்றன.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

பொய்யும் புனைக்கதையும் பொழுதாகிப் போனதே...!

கவிஞர் மட்டுவில் ஞானகுமாரன்

தேனீர் கோப்பைக்குள்
சக தோழர்களின் இரத்தம் சேர்த்துக் கொண்டான்

கம்யூனிசம் பற்றி சொல்லியபடியே
முசோலினி வர்க்கத்தோடு விருந்துண்டான்

உண்மை பேசிய
நிமலராஜனின் உடலில் துப்பாக்கியால் கோலம் போட்டவன்

எழுத்து யாகம் செய்த அற்புதனின் இதயத்தை நிறுத்தினான்

குரல்களுக்கெல்லாம் ராஜனாகி நின்ற ராஜ குயிலின் குரலினைத் தின்றவன்

இவன்
மரக்கறி தின்னும்
மனித வேட்டையன்

இவன்
தாடி வைத்ததால்
தாகூர் அல்ல
எதிர்த்தவரை முழுங்கி விடும் ஆபிரிக்க அனக்கொண்டான்

நாடு காக்க உலாவிய போராளிகள் மாத்தியிலே பாராளுமன்றம் செல்லவே பயிற்சி எடுத்தவன்

செம்மணிக்கும் சந்திரிக்கா அம்மணிக்கும் பாலமாக நின்றவன்

பதவி வேண்டுமெனில்
எந்த கட்சியோடும் கூட்டு வைப்பான்
அதற்க்காக எவனுக்கும் வேட்டு வைப்பான்

கொள்கை மாறுவதற்காக
குட்டிக் கரணம் போடுவான்
அதிலும் அவன் மூணாம் பிறை கமலையே வென்று விடுவான்

சூளை மேட்டையே சாம்பல் மேடாக்கியனுக்கு
யாழ்பணத்தை
அரக்கரின் கூழ் பானமாக்கத் தெரியாதா என்ன

செம்மணியில் எண்ணப்படும் ஒவ்வொரு எலும்பிலும் இவன் பெயர் இருக்கும்

கடவுள் வந்தாலும் உண்மைகள் வாராது
செத்துப் பேனவன் எழும்பி வந்து சொன்னாலே ஒளிய.

செம்மணியில் மலர் தூவினீர்கள்..! ஐநா வில் மண் தூவாதீர்கள்..!

– அம்பிளாந்துறையூர் அரியம் –

செம்மணியில் மலர் தூவினீர்கள்..!
ஐநா வில் மண் தூவாதீர்கள்..!

செம்மணியில் மலர் தூவினீர்கள்..!
ஐநா வில் மண் தூவாதீர்கள்..!
செத்த உடலமெல்லாம் தமிழர்கள்..!
மெத்தப்படித்த நீங்கள் உணர்வீர்கள்..!
மொத்த எலும்புக்கூடுகளும் ஆதாரம்..!

இனப்படுகொலை ஈழத்தில் நடந்தது..!
இதைவிடவா ஆதாரங்கள் தேவை..!
உள்நாட்டு பொறிமுறை என்று..!
உள்ளநாள் எல்லாம் ஏமாந்தோம்.!
உலகநீதி ஒன்றே உண்மை சொல்லும்..!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்..!
பணிந்து உங்களையே கேட்கிறோம்..!
துணிந்து சொல்லுங்கள் ஒரு தடவை..!
விரைந்து சர்வதேச நீதி தேவை என..!
உறைத்து உலகத்துக்கே கூறுங்கள்..!

பதினாறு ஆண்டுகளாய் பரிதவிக்கிறோம்..!
பன்னாட்டு நீதிகேட்டு போராடுகிறோம்..!
உள்நாட்டு பொறிமுறையை நிராகரித்தோம்..!
உருப்படியாய் நீதியே கிடைக்கவில்லை.!
முறைப்படியாய் முழு தேசமே உதவுங்கள்..!



www.sangathamil.ca

தமிழீழ விடுதலை வரலாற்றில் அக்டோபர்

மாவீரன் பண்டாரவன்னியன் நினைவுக்கல் – 31.10.1803

ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து இறுதிவரை போராடி வீரச்சாவடைந்த வன்னிக் குறுநில மன்னன் பண்டாரவன்னியனுக்கு ஆங்கிலேத் தளதபியே இறுதி மரியாதை செலுத்தி உள்ளான். கப்டன் வொன் றிபேக் என்ற தளபதி பண்டாரவன்னியனைத் தோற்கடித்த நிகழ்சியினை இந்நடுகல் நாட்டுகின்றது. இவ் நடுகல் கற்சிலைமடுவில் உள்ளது. தற்போது சிங்ள படைகளால் உடைத்து அழிக்கப்பட்டுள்ளது.

சிங்கள இராணுவத்தின் மீதான முதல் தாக்குதல்

15.10.1981 அன்று யாழ். காங்கேசன்துறை வீதியில் வைத்து சிறீலங்காத் தரைப்படை மீது முதல் முதலாக விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின்போது இரு சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான லெப். கேணல் விக்டர் அவர்களின் 39ஆவது ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான லெப். கேணல் விக்டர் (மருசலீன் பியூஸ்லஸ், பனங்கட்டிக்கொட்டு - மன்னார், பிறப்பு: 24.11.1963). இயக்கத்தின் தலைசிந்த போர்த் தளபதிகளில் ஒருவராவார், மன்னார் பிராந்திய தளபதியகாக பணியாற்றிய அவர், அடம்பனில் சிறீலங்கா சிங்களப் படையினருடன் ஒரு வரலாற்றுச் சண்டையின் போது 12.10.1986 அன்று வீரச்சாவடைந்தார்.

இந்தியா – சிறீலங்கா கூட்டுச் சதியில் பன்னிரு வேங்கைகள் வீரச்சாவு

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், நிராயுத பாணிகளாக தமிழீழத்தின் வடகடற் பிராந்தியத்தில் பயணம் செய்த யாழ். மாவட்டத்த தளபதி லெப். கேணல் குமரப்பா (பாலசுதந்தரம் இரத்தினபாலன், வல்வெட்டித்துறை, பிறப்பு: 27.05.1957), திருமலை மாவட்டத் தளபதி லெப். கேணல் புலநேந்திரன் (குணநாயகம் தருமராஜா, திருகோணமலை, பிறப்பு: 07.06.1961), மேஜர் அப்துல்லா, கப்டன் நளன், கப்டன் மிரேஸ், கப்டன் பழனி, கப்டன் கரன், கப்டன் ரகு, லெப்டினன்ட் அன்பழகன், லெப்டினன்ட் தவக்குமார், 2ம் லெப்டினன்ட் ஆனந்தகுமார், 2ம் லெப்டினன்ட் ரெஜினோல்ட் உட்பட 12 வேங்கைகளை 03.10.1987 அன்று சிறீலங்காக் கடற்படை கோழைத் தனமான வகையில் கைது செய்தது. ஒப்பந்தத்திற்கு முரணாக சிங்கள அரசு இந்திய அரசின் ஒத்துழைப்போடு இவர்களை விசாரணை செய்ய முற்பட்ட வேளையில் 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரகாவியம் படைத்தனர்.

இந்திய இராணுவத்திற்கெதிரான புலிகளின் முதற் தாக்குதல்

தமது ஆதிக்க நலன்களுக்காக ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திய அரசு சிறீலங்கா அரசுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழீழத்தினை ஆக்கிரமித்த இந்தியப்படைகளின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் 10.10.1987 அன்று முதற் தாக்குதலைத் தொடுத்தனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதி அவர்கள் வீரச்சாவு – 10.10.1987

இந்திய இராணுவத்தை எதிர்த்து கோப்பாயில் இடம்பெற்ற சமரின் போது 2ஆம் லெப். மாலதி (சகாயசீலி பேதுரு, ஆட்காட்டிவெளி - மன்னார், பிறப்பு: 01.01.1967) வீரச்சாவடைந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தல் முதன் முதல் வீரச்சாவடைந்த பெண்புலி இவராவார். இவரது நினைவு நாள் 10.10.1987 ஆகும்.

இந்தியப் படைகளினால் கொக்குவில் பிரம்படிப் படுகொலை

ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டத்தில் கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 12.10.1987 அன்று தரை இறங்கிய இந்திய இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து பொது மக்களை சுட்டும் யுத்த ராங்கியினால் ஏற்றியும் படுகொலை செய்தனர். இதில் 40 பொது மக்கள் பலியாகினர்.

இந்திய அதிகாரி கேணல் பிரார் மேற்பார்வையில் யாழ். போதனா வைத்திய சாலைப் படுகொலை

ஜே. ஆர். ஜெயர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர்கள், தாதிமார்கள், பணியாளர்கள் மற்றும் நோயாளர்கள் இந்திய அமைதிப் படையால் 21 - 22.10.1987 ஆகிய திகதிகளில் கண்மூடித்தனமாக சுடப்பட்டனர். இந்திய அமைதிப்படைகளின் கேணல் பிரார் என்ற இந்திய அதிகாரியின் மேற்பார்வையில் இப் படுகொலை நடந்தது. இதில் ஊழியர்கள் உட்பட 68 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் சாவகச்சேரிப் புதிய சந்தைப் படுகொலை:

ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரிப் பகுதியில் 27.10.1987 அன்று இந்திய அமைதிப்படையால் யுத்த உலங்குவானூர்திகளில் சாவகச்சேரி புதிய சந்தைப் பகுதிக்குச் சென்று அங்கு கூடியிருந்த அப்பாவி தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதில் முப்பதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப் பட்டனர். 76ற்கு மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் சாவகச்சேரி படுகொலை:

ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் சாவகச்சேரிப் பகுதியில் 28.10.1987 அன்று சிறிய பேருந்து ஒன்றில் பயணம் செய்த பொதுமக்கள் மீது இந்திய இராணுவம் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டை நடத்தியது. இதில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 16 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

லெப். கேணல் சந்தோசம் அவர்களின் 38ஆம் ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான லெப். கேணல் சந்தோசம் மாஸ்டர் (கணபதிப்பிள்ளை உமைநேசன், அரியாலை - யாழ்., பிறப்பு: 04.01.1959), திருகோணமலை பிராந்தியத் தளபதியாகப் பணியாற்றினார். திருகோணமலையில் புலிகள் இயக்கம் வேரூன்றி வளர மூல காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர். கோண்டாவில் பகுதியில் இந்தியப் படைக்கொதிரான சண்டையின் போது 21.10.1987 அன்று வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் நாதன் மற்றும் கப்டன் கஜன் பிரான்ஸ் நாட்டில் சிறீலங்கா அரசு சூழ்ச்சியால் படுகொலை

லெப். கேணல் நாதன் (கந்தையா பேரின்பநாதன், அரியாலை - யாழ்., பிறப்பு: 17.11.1964) எமது விடுதலை இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவராவர். நேர்மையும், கண்ணியமும் மிக்க இவர், விடுதலை இலட்சியத்தில் அசையாத உறுதி கொண்டவர். நீண்டகாலமாக அனைத்துலக நிதிதிரட்டும் பெரும் பொறுப்பைச் சுமந்து உலகெங்கும் உழைத்தார். சிறீலங்கா ஆட்சியாளரின் சூழ்ச்சியால் அரச பயங்கரவாத அரூபகரங்களின் செயலால் பாரிசில் “ஈழமுரசு” பத்திரிகை ஆசிரியர் கப்டன் கஜனும் இவரும் 26.10.1994 அன்று வீரச்சாவடைந்தனர்.

கடற் கரும்புலிகளான மேஜர் அருமை, கப்டன் தணிகை ஆகிய மாவீரர்களின் 30ஆம் ஆண்டு வீரவணக்கம்

02.10.1995 அன்று மூன்று தரையிறங்கு கப்பல்கள், மூன்று "டோறா" அதிவேக பீரங்கிப் படகுகள் ஆகியவற்றின் துணையுடன் சிங்களக் கடற்படை மேற்கொண்ட விநியோக நட வடிக்கை மீது தாக்குதல் மேற்கொண்டனர் கடற்கரும்புலிகள். இத்தாக்குதலின் போது "டோறா" அதிவேக பீரங்கிப் படகொன்றினை மூழ்கடித்து மேஜர் அருமை (செல்லத்துரை விஜயானந்தன், கிளிநொச்சி, பிறப்பு: 23.12. 1972), கப்டன் தணிகை (கணபதிப்பிள்ளை வதனா, சுண்டுக்குழி - யாழ், பிறப்பு: 13.07.1976) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

லெப். கேணல் ஜீவன் [ஆசிம்] அவர்களின் 30ஆம் ஆண்டு வீரவணக்கம்

03.10.1995 அன்று விடுதலைப்புலிகளின் முதன்நிலை உறுப்பினர்களில் ஒருவரான மருத்துவத் துறைப் பொறுப்பில் சிறப்பாக பணியாற்றியவர் லெப். கேணல் ஜீவன் (அருளப்பு ஜேம்ஸ் குருஸ், பெரியபண்டிவிரிச்சான, வங்காலை - மன்னார், பிறப்பு: 09.11.1965) வலிகாமம் மேற்கில், சிங் களப் படையினரின் இடிமுழக்கம் தாக்குதலுக்கு எதிரான தாக்குதல் அச்சுவேலிப் பகுதியில் முன்னகர்ந்து நிலைகொண்டிருந்த சிறீலங்காப் படையினர் மீதான ஊடறுப்புத் தாக்குதலின் போது 03.10.1995 அன்று வீரச் சாவடைந்தார்.

தமிழர்களக்கு எதிரான சிங்கள இராணுவத்தின் சூரியக்கதிர் நடவடிக்கை ஆரம்பநாள் – 17.10.1995

தமிழர்களக்கு எதிரான சிங்கள இராணுவத்தின் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் ஆரம்பநாள் (17.10.1995) யாழ். நகரைக் கைப்பற்றும் இலக்கைக் கொண்ட இந்த நடவடிக் கையின் போது வலிகிழக்கில் உக்கிரமான பெரும் சமரில் (70 சிறீலங்காப் படையினர் பலி, 7 அதிகாரிகள் உட்பட 150 பேர் காயம். ஒரு டாங்கி, இரண்டு கவச வாகனங்கள் அழிப்பு).

திருகோணமலை துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல்

சிங்களக் கடற்படைக்கு பெரும் பலமாக விளங்கிய போர்க் கப் பல்கள் உச்சப்பாதுகாப்புடன் விளங்கும் திருகோணமலை துறைமுகத்தில் வைத்து 17.10.1995 அன்று கடற்கரும் புலிகளால் சிதறடிக்கப்பட்டன. மேஜர் சிவசுந்தர் (சித்திரவேல் இராமச்சந்திரன், உப்புவெளி - திருமலை, பிறப்பு: 12.12.1974) டோறாப் படகினையும், கப்டன் ரூபன் (சுப்பிரமணியம் சுதர்சன், செங்கலடி - மட்டு, பிறப்பு:09.07.1973) தரையிறக்கும் கப்பலையும், கப்டன் சிவகாமி (இராஜகுமாரி சண்முகலிங்கம், மயிலிட்டி - யாழ்., பிறப்பு: 01.01.1975) அதிவேக துரப்புக்காவி கப்பலையும் ஒரே நேரத்தில் மூழ்கடித்து ஒரு பெரும் தடை நீக்கி வீரவரலாறாகினர்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இனுவில் படுகொலை

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ். மாவட்டத்தின் இணுவில் பகுதியில் இடம்பெயர்ந்து முகாம்களில் இருந்த பொதுமக்கள் 18.10.1995 அன்று சிறீலங்கா இராணுவத்தின் விமானக் குண்டுவீச்சுக்கு அஞ்சி பதுங்கு குழியில் தஞ்சம் அடைந்திருந்த வேளை இராணுவத்தின் புக்காரா விமானம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 09 சிறுவர்கள் உட்பட 11 பேர் பதுங்கு குழியிலேயே பலியாகினர்.

லெப். கேணல் சந்திரகாந்தன் அவர்களின் 28ஆம் ஆண்டு வீரவணக்கம்

தமிழீழம் மீதான பெரும் படையெடுப்பான ஜெயசிக்குறு சமர்களத்தில் எதிரிக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த லெப். கேணல் சந்திரகாந்தன் (அழகிப்போடி, சிவா, அரசடித்தீவு, கொக்கொட்டிச்சோலை - மட்டக்களப்பு, பிறப்பு: 22.05.1971), சமரின் ஆரம்பகாலம் தொட்டு புலிகள் சேனையில் சிறந்த தள பதியாகக் களத்தில் செயலாற்றினார். 13.10.1997 அன்று பெரியமடுப் பகுதியில் ஜெயசிக்குறு நட வடிக்கையில் சிறீலங்கா படையினரால் அமைக்கப்பட்டிருந்த படை முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார்.



சிறீலங்கா கொழும்பு கொலன்னாவ எண்ணெய் குதம் மீது தாக்குதல் – 25.10.1995

சிறீலங்காவின் கொலன்னாவ எண்ணெய் குதங்களில் கொழும்பை திகிலூட்டிய பெரும் தீ. 10 விமானப் படையினர் உட்பட 2 ஆயுதப் படையினர் பலியாகினர்.

14.10.1999 அன்று கொக்கிளாய் கடற்பரப்பில் சிங்களக் கடற்படையினருடனான மோதலின்போது ஏற்பட்ட விபத்தில் கடற்கரும்புலி லெப். கேணல் அருந்தவன், கடற்கரும்புலி லெப். கேணல் புவனேஸ் உட்பட 6 கடற்கரும் புலிகளின் 26ஆவது ஆண்டு வீரவணக்கம்.

14.10.1999 அன்று கொக்கிளாய் கடற்பரப்பில் சிங்களக் கடற்படையினருடனான மோதலின்போது எற்பட்ட விபத்தில் கடற்கரும்புலி அருந்தவன் (கிருஸ்ணபிள்ளை உதயகுமார், பெண்டகள் சேனை, கிரான் - மட்டு, பிறப்பு: 09.11.1974), கடற்கரும்புலி லெப். கேணல் புவனேஸ் (ரெங்கையா யோகேந்திரன், பாவற்குளம் - வவுனியா, பிறப்பு: 10.08. 1971) உட்பட கடற்கரும்புலிகளான மேஜர் பரணி (சூரியயோகானந்தன் அமர்நாத், மயிலிட்டி – யாழ்., பிறப்பு: 14.11.1982), மேஜர் கலைமகள் (அரியகுட்டி கலைமதி, அச்சுவேலி தெற்கு - யாழ்,, பிறப்பு: 26.07. 1972), மேஜர் சூரியப்பிரபா (அல்போன்ராஜா ஜான்சிராணி, இளவாலை - யாழ்., பிறப்பு: 01.04. 1972), கப்டன் சுதாகரன் (இராசநாயகம் பிரசன்னா, முத்துவிநாயகர் வீதி, நல்லூர் - யாழ்., பிறப்பு: 28.01.1980) ஆகியோர் வீரச்சாவதைத் தழுவிக்கொண்டார்கள்.

புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையின் ரோறா அதிவேகப் பீரங்கிப்படகு மீதான கடற்கரும்புலித் தாக்குதல்

18.10.1999 அன்று புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையின் டோறா அதிவேகப் பீரங்கிப்படகு மீதான கடற்கரும்புலித் தாக்குதலினை மேற்கொண்டு மேஜர் திருமாறன்/சிறி (கணேசப்பிள்ளை ரவிச் சந்திரன், காரைநகர் - யாழ்., பிறப்பு: 05.09.1970) கப்டன் சின்னவன் (நந்தகோபலன் சுரேஸ், கொக்கு வில் கிழக்கு - யாழ்., பிறப்பு: 25.06.1979) ஆகிய கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர். மேஜர் திருமாறன் ஓர் போராளி கலைஞர் ஆவார். "ஒளி படைத்த கண்" என்னும் குறும்படத்தில் முக்கிய பத்திரம் ஏற்று நடித்தவர். நிதர்சனம் ஆவணப் பிரிவுப் பொறுப்பாளராகவும் பணியாற்றியவர்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் இனவெறிப் படுகொலை!

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் தென்னிலங்கையின் பண்டாரவளையில் அமைந்துள்ள பிந்துநுவேவ தடுப்பு முகாமினுள் 25.10.2000 அன்று கத்தி, பொல்லு, துப்பாக்கிகளுடன் நுழைந்த 1500 க்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் முகாமினுள் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களை அடித்தும், வெட்டியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் தாக்கினர். இதில் 29 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40 இளைஞர்கள் படுகாயம் அடைந்தனர்.

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் அரியாலைப் படுகொலை!

சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் யாழ் மாவட்டத்தின் அரியாலைப்பகுதியில் இராணுவத்தின் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த தமிழ்ப் பொதுமக்கள் மீது 26.10.1996 அன்று சிறீலங்கா விமானப்படையின் மிகை ஒலி வேக விமானங்கள் தாக்கியதில் 10 பொதுமக்கள் உயிரிழந்தனர். மேலும் அவர்களின் வீடுகள், உடமைகள் அழிக்கப்பட்டன.

ஈழ வரலாறு காணாத யாழ் இடப்பெயர்வு:

30.10.1995 அன்று யாழ் மாவட்டத்தின் வலிகாமப் பகுதியில் இருந்து தென்மராட்சி பகுதி நோக்கி பல இலட்சக்கணக்கான மக்கள் சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிற்கு அஞ்சி இரவு பகலாக உணவு, நீர் எதுவுமின்றி, தமது உடமைகள் சிலவற்றுடன் இடம்பெயர்ந்தனர். இவ்விடப்பெயர்வு ஈழத்தின் வரலாறு காணாத ஒன்றாகக் கருதப்படுகிறது.

29.10.1995 அன்று யாழ். அளவெட்டிப் பகுதியில் அமைந்திருந்த சிறீலங்கா படையினரின் ஆட்டிலறி ஏவுதளங்களை இலங்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது 11 தரைக் கரும்புலிகள் வீரச்சாவு

யாழ். அளவெட்டி பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஆட்டிலறி ஏவதளநினைகள் மீது ஊடுருவி நடத்திய கரும்புலித் தாக்குதலில் கப்டன் ஈழவன் (திருச்செல்வம் றொபேட்சன், நவாலி தெற்கு - யாழ்., பிறப்பு: 23.07.1973), கப்டன் தினகரன் (கணபதிப்பிள்ளை இராமணேஜ்வரன், திராய்மடுக்கொலனி - மட்டு, பிறப்பு: 01.01.1971), கப்டன் அகத்தி (இராமநாதன் நடராசா, கல் முனை - அம்பாறை, பிறப்பு: 25.10.1970), கப்டன் சிறைவாசன் (நாராயணப்பிள்ளை விக்கினேஸ்வரன், கொக்குவில் - மட்டு, பிறப்பு: 19.09.1974), லெப். கலைச்செல்வன் ஆறுமுகம் சந்திரகுமார், அவிசாவளை - மட்டு, பிறப்பு: 13.08.1974), லெப். வேணுதாஸ் (கந்தப்பொடி, தர்மன், கொக்கட்டிச்சோலை - மட்டு, பிறப்பு: 22.01.1973), லெப். நளினன் (திசநாயகம் உதயதாசன், தம்புலுவில் - அம்பாறை, பிறப்பு: 27.11.1976), லெப். தொண்டன் (இராசரத்தினம் கிருஷ்ணராஜ், சாவகச்சோரி - யாழ்., பிறப்பு: 16.04.1976), லெப். சசிக்குமாரன் (செல்வராசா றொபின்சன், ஆனந்தபுரம் - கிளிநொச்சி, பிறப்பு: 06.05.1977), லெப். தங்கத்துரை (விவரத்தினம் காந்தரூபன், வசாவிளான் - யாழ்., பிறப்பு: 02.08.1976), 2ஆம் லெப். இசைச் செல் வன் (நாகராசா சண்முக சீலன், பண்டத்தரிப்பு - யாழ்., பிறப்பு: 01.01.1978) உட்பட 11 கரும்புலிகள் வீரச்சாவடைந் தனர்.

திருகோணமலை துறைமுக நுழைவாயிலில் டோறா அதிவேகப் பீரங்கிப் படகு மூழ்கடிப்பு

25.10.1996 அன்று திருகோணமலைத் துறைமுகக் கடற்பரப்பின் நுழைவாயிலில் சிறீலங்கா கடற்படையின் டோறா அதிவேகப் பீரங்கிப் படகினை மூழ்கடித்து மேஜர் நளினன் (தெய்வேந்திரம் யோகேஸ் வரன், மூதூர் - திருமலை, பிறப்பு: 12.12.1975), கப்டன் ஜெயராஜ் (கந்தசாமி கோபாலகிருஷ்ணன், காரைநகர் - யாழ்., பிறப்பு: 07.04.1975) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

லெப். கேணல் அகிலா அவர்களின் 30ஆம் ஆண்டு வீரவணக்கம்

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் முதன்நிலை உறுப்பினர்களில் ஒருவரான லெப். கேணல் அகிலா (சோமசேகரம் சத்தியதேவி, கோப்பாய் - யாழ்., பிறப்பு: 25.12.1969). இயக்கப் புலனாய்வுத்துறையின் மகளிர்பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றினவர். சூரியக்கதிர் சிறீலங்காப் படையெடுப்புக்கெதிரான சமரில் பங் கேற்று நீர்வேலிச் சமர்முனையில் 30.10.1995 அன்று வீரச்சாவடைந்தார்.

கரும்புலி மேஜர் செங்கதிர்வாணன் அவர்களின் 26ஆம் ஆண்டு வீரவணக்கம்

29.10.1999 அன்று மணலாறுப் பகுதியில் சிறீலங்கா படையினருடான திடீர் நேரடி மோதலில் மேஜர் செங்கதிர்வாணன் (நடராசா நடேஸ்வரன், சிவபுரி - திருகோணமலை, பிறப்பு: 23.12.1973) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

கரும்புலி மேஜர் நிலவன் அவர்களின் 27ஆம் ஆண்டு வீரவணக்கம்

கடற்கரும்புலிகளின் வரலாற்றில் புதியதொரு இராணுவப் பரிமானத்தை வெளிக் காட்டிய கரும்புலி மேஜர் நிலவன் (சூரியகுமார் திலீபன், கோப்பாய் - யாழ்., பிறப்பு: 20.11.1976) தன் உள்ளத்து நெருப்பை நெருப்பு வார்த்தைகளால் கொட்டும் கவிஞனுமாவார். இவர் சீனங்குடா, ஆனையிறவுத் தளங்கள் மீதான கரும்புலித் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தியவர். ஆனையிறவுப் பகுதியில் இரா ணுவத்துடனான நேரடி மோதலின் போது 14.10.1998 அன்று வீரச் சாவடைந்தார்.

லெப். கேணல் அக்பர் அவர்களின் 19ஆவது ஆண்டு வீரவணக்கம்

லெப். கேணல் விக்டர் விசேட கவச எதிர்ப்புப் பிரிவின் தளபதியும், தமிழீழ தேசியத் துணைப்படையின் வடபோர்முனைக் கட்டளைத் தளபதியுமான லெப். கேணல் அக்பர் (அல்பா -1 குறியீட்டுப்பெயர்) (வீரபத்திரன் பேரின்பராசா, கதிரவெளி - மட்டு, பிறப்பு: 30.03.1973) அவர்கள் விடுதலைப் போராட்ட வரலாற்றில் எதிரியை அழிக்கும் பல தாக்குதல்களைத் தலைமை தாங்கி நடத்தியவர். எதிரியின் கவசப் படை யணியை உடைத்தெறியும் பணியில் பல சாதனைகள் படைத்தவர். 07.10.2006 அன்று வட போர்முனைப் பகுதியில் (முகமாலை) வீரச் சாவைத் தழுவிக்கொண்டார்.

22.10.2007 அன்று அநுராதபுரம் விமானத் தளம் மீதான எல்லாளன் நட வடிக்கை: முதல் வான், தரை இருமுனைத் தாக்குதல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் வான், தரைத் தாக்குதல் இது. சிறீலங்கா இராணுவத்தின் வடக்குப் படை நடவடிக்கைகளுக்கான பிரதான பின்தளமாக விளங்கிய அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீது சிறப்பு தரைக்கரும்புலிகள் அணியும், வான்புலிகளும் இணைந்து நடாத்திய இத் தாக்குதலில் 10 வான்கலங்கள் அழிக்கப்பட்டு, 16 வான்கலங்கள் சேதமாக்கப்பட்டன. 18ற்கு மேற் பட்ட வான்படையினர் கொல்லப்பட்டதோடு, 680 கோடி ரூபாய்களுக்கு மேல் பொருளாதார இழப்பு ஏற்பட்டு சிறீலங்கா படைத்துறைக்குப் பேரதிர்ச்சியையும், பேரழிவையும் ஏற்படுத்தியது.

இவ் வெற்றிகரத் தாக்குதலில் 21 சிறப்பு கரும்புலிகள்: லெப். கேணல் இளங்கோ (இராசதுரை பகீரதன், மீசாலை மேற்கு, சாவகச்சேரி), லெப்.கேணல் வீமன் (கோபாலபிள்ளை பிரதீபன், 5ஆம் வட்டாரம், சோலை, திரியாய், திருகோணமலை), மேஜர் மதிவதனன் (5ஆம் வட்டாரம், வேலணை-யாழ்.), மேஜர் சுபன் (கதிரவன் ஜீவகாந்தன், யாழ்ப்பாணம்), மேஜர் கனிக்கீதன் (இராசன் கந்தசாமி, மட்டு), மேஜர் இளம்புலி (துரைரத்தினம் கலைராஜ், யாழ்ப்பாணம்), மேஜர் காவலன் (சண்முகம் சத்தியன், 4ஆம் கட்டை, பூநகரி, கிளிநொச்சி), மேஜர் எழிலின்பன் (விமலநாதன் பிரபாகரன், யாழ்ப்பாணம்), கப்டன் தர்மினி / திருமகள் (கணேஸ் நிர்மலா, 3ஆம் வாய்க்கால், கிளிநொச்சி), கப்டன் புரட்சி (செல்வராசா தனுசன், யாழ்ப்பாணம்), கப்டன் கருவேந்தன் (மயில்வாகனம் சதீஸ்குமார், வட்டக்கச்சி, கிளிநொச்சி), கப்டன் புகழ்மணி (தர்மலிங்கம் புவனேஸ்வரன், யாழ்ப்பாணம்), கப்டன் புலிமன்னன் (கணபதி நந்தகுமார், யாழ்ப்பாணம்), கப்டன் அன்புக்கதிர் (வில்சன் திலீப்குமார், பெரியசாலம்பன், ஒட்டுசுட்டான்,முல்லைத்தீவு), கப்டன் சுபேசன் (நாகராசா மகாராஜ், முருங்கன் மன்னார்), கப்டன் செந்தூரன் (கணேசநாதன் தினேஸ், யாழ்ப்பாணம்), கப்டன் பஞ்சீலன் (சிவானந்தன் கஜேந்திரன், மட்டக்களப்பு), கப்டன் ஈழப்பிரியா (கந்தையா கீதாஞ்சலி, யாழ்ப்பாணம்), கப்டன் அருள்மலர் (சேவியர் உதயா, யாழ்ப்பாணம்), கப்டன் ஈழத்தேவன் (தங்கராசா மோசிகரன், யாழ்ப்பாணம்), லெப். அருண் (பத்மநாதன் திவாகரன், யாழ்ப்பாணம்) ஆகிய கரும்புலி மாவீரர்கள் வீரச்சாவடைத்தழுவிக்கொண்டனர்.

புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்கள் நான் பாராட்டுகின்றேன்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

கரும்புலி
லெப் கேணல் இளங்கோ

கரும்புலி
லெப் கேணல் விமன்

கரும்புலி
மேஜர் மதிவதனன்

கரும்புலி
மேஜர் சுபன்

கரும்புலி
மேஜர் இளம்புலி

கரும்புலி
மேஜர் கனிக்கீதன்

கரும்புலி
மேஜர் காவலன்

கரும்புலி
மேஜர் எழிலின்பன்

கரும்புலி
கப்டன் அன்புக்கதிர்

கரும்புலி
கப்டன் அறிவுமலர்

கரும்புலி
கப்டன் ஈழப்பிரியா

கரும்புலி
கப்டன் ஈழத்தேவன்

கரும்புலி
கப்டன் கருவேந்தன்

கரும்புலி
கப்டன் புகழ்மணி

கரும்புலி
கப்டன் புலிமன்னன்

கரும்புலி
கப்டன் செந்தூரன்

கரும்புலி
கப்டன் சுபேசன்

கரும்புலி
கப்டன் திருமகள்

கரும்புலி
கப்டன் பஞ்சீலன்

கரும்புலி
கப்டன் புரட்சி

கரும்புலி
லெப். அருண்

லெப். கேணல் அன்பரசன் அவர்களின் 17ஆம் ஆண்டு வீரவணக்கம்

மணலாறு மவாட்டப் பகுதியில் 13.10.2008 அன்று சிறீலங்கா படையினருடனான நேரடி மோதலில் வீரச் சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் அன்பரசன் (சின்னத்துரை விக்னேஸ்வரன், யாழ்ப்பாணம்) அவர்களின் 17ஆம் ஆண்டு வீரவணக்கம்.

எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையில் தொடர்ந்து போராடுவோம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். **மாலதி வீரவணக்க நாள் 10.10.2025**

தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்

10 அக்டோபர்



2ஆம் லெப்.
கஸ்தூரி

வீரவேங்கை
ரஞ்சினி

வீரவேங்கை
தயா

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

சங்கத்தமிழ்